# எருசலேமின் அலங்கமும் வாசல்களும்

TPM

"எழுந்து கட்டுவோம் வாருங்கள் ... பரலோகத்தின் தேவனானவர் ... காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்" (நெகே. 2 : 18 - 20).

1371

வெளியீடு எண் : C 11

# எருசலேமின்
# அலங்கமும் வாசல்களும்

First Edition : 2002
Reprint : 2005

All rights reserved.

**பிரதிகளுக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**
**பெந்தெகொஸ்தே சபை,**
ரோஜா தெரு, S.V. நகர் போஸ்ட்,
இரும்புலியூர், சென்னை - 63.
தொலைபேசி : (044) 2279 - 0079

Printed by
Pentecost Press Trust,
Roja St., S.V. Nagar Post,
Irumbuliyur, Chennai - 63.

# முகவுரை

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரினால் யூதா தேசத்திலிருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துச் செல்லப்பட்டவர்களின் பின்சந்ததியாரில் நெகேமியா ஒருவன் ஆவான். அவன் தேவ பக்தியுள்ளவனும் நீதிமானுமாயிருந்தான். அவன் நம்பிக்கைக்குப் பாத்திரனாயிருந்தமையால் சூசான் அரமனையில் பெர்சியா ராஜாவாகிய அர்தசஷ்டாவின் பானபாத்திரக்காரனாய் நியமிக்கப்பட்டிருந்தான். ராஜாவுக்கு அளிக்கப்படும் திராட்சரசத்தைச் சுவைத்துப் பரிசோதித்து, பின்பு அதை ராஜாவுக்குக் கொடுக்கும் உத்தரவாதமான வேலை அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. பண்டைக் காலத்தில், ராஜாவின் பானத்தில் எவ்வித விஷமோ, தரம் குறைந்த பொருளோ கலந்து கொடுக்கப்பட்டுவிடாதவாறு கண்காணிக்கும் இப்பணிக்கென்று, உண்மையுள்ளவர்களும் ராஜாவின் நம்பிக்கைக்குரியவர்களுமே நியமிக்கப்படுவது வழக்கம். இவ்வாறு அவன் ராஜாவின் தயவையும் அன்பையும் பெற்றவனாய், நன்மதிப்புடன் ராஜ அரமனையில் சுகபோகமாக வாழ்ந்துவந்த நாட்களில், ஒரு நாள் யூதா தேசத்திலிருந்து சிலர் அங்கு வந்தனர். அவர்களிடம் அவன் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும் எருசலேமின் செய்தியையும் விசாரித்தான். "சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது" என்று அவர்கள் அவனுக்குத் தெரிவித்தனர் (நெகே. 1 : 3). இதைக் கேள்வியுற்ற அவன், உள்ளத்தில் மிகுந்த வேதனையடைந்து, தன் தேவனை நோக்கி உபவாசத்துடன் ஜெபம்பண்ணினான். அப்போது அவர், தாம் அவனைக்கொண்டு செய்யத் தீர்மானித்திருந்தவைகளை அவனுக்கு வெளிப்படுத்தினார். அவர் அவனுடைய மனதிலே வைத்த பாரத்தின்படியே அவன் செயல்படத் துவங்கினான் (நெகே. 2 : 12). அந்தப் பெரிய வேலையைச் செய்யும்படி தேவன் அவனுக்குத் துணைநின்றபடியினால், அவன் அதை நிறைவேற்றும்படி ராஜாவின் கண்களிலும் அவனுக்குத் தயை கிடைத்தது. எருசலேமின் அலங்கத்தையும் அதன் வாசல்களையும் மீண்டும் கட்டியெழுப்புவதே தேவன் அவனைக்கொண்டு செய்ய நினைத்திருந்த அம்மாபெரும் பணியாகும்.

# பொருளடக்கம்


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| I | நெகேமியாக்கள் தேவை! | 1 |
| II | எருசலேமின் அலங்கம் | 5 |
| III | எருசலேமின் வாசல்கள் | 23 |
| IV | கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும் | 29 |
| V | வாசல் காவலாளர் | 35 |
| VI | எருசலேமின் பன்னிரு வாசல்கள் | 49 |
| | 1 ஆட்டு வாசல் | 53 |
| | 2 மீன் வாசல் | 60 |
| | 3 பழைய வாசல் | 68 |
| | 4 எப்பிராயீம் வாசல் | 76 |
| | 5 பள்ளத்தாக்கின் வாசல் | 97 |
| | 6 குப்பைமேட்டு வாசல் | 106 |
| | 7 ஊருணி வாசல் | 114 |
| | 8 தண்ணீர் வாசல் | 125 |
| | 9 காவல்வீட்டு வாசல் | 139 |
| | 10 குதிரை வாசல் | 154 |
| | 11 கிழக்கு வாசல் | 171 |
| | 12 மிப்காத் என்னும் வாசல் | 184 |
| VII | அலங்கப் பிரதிஷ்டை | 195 |
| VIII | புதிய எருசலேமின் மதிலும் வாசல்களும் | 202 |

## அதிகாரம் I

# நெகேமியாக்கள் தேவை!

'நெகேமியா' என்ற பதத்திற்கு, 'கர்த்தர் ஆறுதல்படுத்து கிறார்' என்று அர்த்தமாம். தேவன், சிறையிருப்பிலிருந்த தம்முடைய ஜனங்களைச் சந்திக்கும் வேளை வந்தபோது, அவர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸின் ஆவியை ஏவினதினாலே அவன் தன் முதலாம் வருஷத்தில், அதாவது கி.மு. 538 - இல், எருசலேமில் தேவ னுடைய ஆலயத்தைக் கட்டும்படி யூத ஜனங்களைச் செருபாபேலுடன் யூதா தேசத்திற்கு அனுப்பினான். அதன் பின்னர் கி. மு. 458 - இல் எஸ்றாவுடனே ஒரு கூட்டம் யூதர்களும், கி.மு. 444 - இல் நெகேமியா வுடனே மற்றொரு கூட்டம் யூதர்களும் பாபிலோனிலிருந்து யூதா தேசத்திற்கு அனுப்பப்பட்டனர். கி. மு. 605, 597, 586 - ஆம் ஆண்டுகளில் யூதர்கள் மூன்று பிரிவுகளாகப் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனது போலவே, மேற்கண்ட வருடங்களில் அவர்கள் மூன்று பிரிவு களாகத் தங்கள் சுயதேசத்திற்குத் திரும்பி வந்தனர். முதல் கூட்டத்தினர் செருபாபேலின் தலைமையின் கீழ், பல தடைகளின் மத்தியில் தேவனுடைய ஆலயத்தைக் கட்டினர். இடையிடையே அவ்வேலை நிறுத்திவைக்கப்பட்டு, தரியு ராஜாவின் ஆறாம் வருஷத்தில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இரண்டாவது பிரிவில் வந்த எஸ்றா, ஜனங்களுக்குள் சில முக்கியமான சீர்திருத்த வேலைகளைச் செய்து, தேவனோடு அவர்களை மீண்டும் உடன்படிக்கை பண்ணச் செய்தான். மூன்றாவது பிரிவில் வந்த நெகேமியா, எருசலேமின் அலங்கத்தையும் அதின் வாசல்களையும் புதுப்பித்துக் கட்டினான். தேவன் தங்களை மீண்டும் தங்கள் சுயதேசத்தில் நாட்டினபடியினால் ஜனங்கள் ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைந்தனர். சுமார் எழுபது வருடங்களாக அந்நிய தேசத்தில் சிறைப்பட்டுப் போயிருந்த தங்கள் சிறையிருப்பின் வேதனை யையும், தங்கள் தேசமும் ஆலயமும் புறஜாதியாரால் பாழாக்கப்

பட்டுக் கிடந்த அவல நிலையையும் மறந்து, தேவஜனங்கள் மீண்டும் தங்கள் தேசத்தில் கூடாரப் பண்டிகையை ஆசரித்து அகமகிழ்ந்தனர் (II நாளா. 36 : 21, 22 ; நெகே. 8 : 17). எருசலேமின் களிப்பு வெகுதூரத்தில் கேட்கப்பட்டது (நெகே. 12 : 43).

நகரம் கட்டப்பட்டு, யூதர்கள் மீண்டும் ஒரு தேசமாகத் தழைத்தோங்குவதற்கு அடிப்படைக் காரணமாயிருந்த நெகேமியா எடுத்துக்கொண்ட முயற்சிகள் அநேகம்! நகரத்தின் அலங்கமும் வாசல்களும் தகர்க்கப்பட்டுக் கிடக்கும் செய்தியைக் கேட்டவுடன் அவன் உட்கார்ந்து அழுது, சில நாட்களாகத் துக்கித்து, உபவாசித்து, ஜெபம்பண்ணி, பாவ அறிக்கை செய்தான்; அரமனையில் தனக்கிருந்த சுகவாழ்வை வெறுத்து, பாழடைந்து கிடக்கும் தன் சுயதேசத்திற்குச் சென்று பாடுபடத் தீர்மானித்தான்; தன் துக்கத்தை ராஜாவுக்குத் தெரிவித்து, தன் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி அனுமதி பெற்று யூதா தேசத்திற்குச் சென்றான்; தன் மனதில் அவ்வேலையைக் குறித்த பாரமுடையவனாய் இரவில் நகர சோதனை செய்தான்; தேவன் தன் மனதில் வைத்த பாரத்தை யூதா மனுஷருக்குத் தெரிவித்து, அதை நிறைவேற்றும்படி அவர்களை உற்சாகமூட்டி ஒன்றுசேர்த்தான்; பல எதிர்ப்புகளின் மத்தியிலும் மனம் தளராதிருந்து, தேவனால் தனக்கு அளிக்கப்பட்ட வேலையை அவருடைய மனதின்படியே நிறைவேற்றி முடித்தான்!

நெகேமியாவைப் போல கர்த்தருக்காக வைராக்கியமாகக் கிரியை செய்கிற தேவமனிதர்கள் இந்நாட்களிலும் எழும்ப வேண்டும். தங்கள் தனிப்பட்ட ஜீவியத்தின் நிலையைக் குறித்தும், சபையின் நிலையைக் குறித்தும் மனம் நொந்து, அவற்றைச் சீர்ப்படுத்தும்படி தேவனை நோக்கிக் கூப்பிடுகிற ஜெபமாந்தர் தேவை! இராக்காலத்தில் நகரப் பரிசோதனை நடத்திய அத்தேவதாசனைப் போல, தங்கள் நிலைமையை உள்ளபடி நிதானித்தறியும்படி தேவசமுகத்தில் தனித்திருந்து தங்களை ஆய்ந்துணர்வோர் தேவை! ஜீவியத்தில் இடிந்துகிடக்கும் உன்னத அனுபவங்கள், சோதனைகளாம் தீயினால் சுட்டெரிக்கப்பட்டு மாய்ந்து போன விலையேறப்பெற்ற சுபாவங்கள் போன்றவற்றைக் கண்டுணரும் உணர்வுள்ள உள்ளங்கள் தேவை! அத்துடன் வைராக்கியத்துடனும் தைரியத்துடனும் தேவ ஒத்தாசையுடனும் சீர்திருத்தப் பணியில் துணிந்து இறங்கும் 'வீர நெகேமியாக்கள்' எழும்ப வேண்டும்! தற்போது ஒன்றுமில்லாதிருந்தும், முந்தைய நாட்களில் தங்களுக்கு உண்டாயிருந்த ஆவிக்குரிய சீரைக் குறித்துப் பெருமைபாராட்டிக்கொண்டிருக்கும் நிலையிலிருந்து கீழே இறங்க மனமற்றிருப்போர் லவோதிக்கேய சபையாரைப் போன்றவர்களே. "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்

படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால் ... உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" என ஆவியானவர் அச்சபையாரை எச்சரிக்கிறார் (வெளி. 3 : 17, 18). இப்படிப்பட்டவர்கள் தங்கள் நிலையை ஒத்துக்கொள்வார்களாகில் – நிச்சயமாகவே அவர்களுடைய தற்போதைய நிர்ப்பந்தமான நிலை மாற்றப்பட்டு, அவர்களது ஆவிக்குரிய ஜீவியம் மீண்டும் தழைக்கும்! சபையில் ஆதிநூற்றாண்டின் அனுபவங்கள் மீண்டும் துளிர்க்கும்! தேவனுடைய சபையில் மீண்டும் மகிழ்ச்சியின் சத்தமும் ஆனந்தக் களிப்பும் உண்டாகும்! 'எருசலேமின்' களிப்பு வெகுதூரத்தில் கேட்கப்படும்!

இருதயம் நொறுங்கி ஜெபம்பண்ணின நெகேமியாவையே அலங்கத்தைக் கட்டும் திருப்பணிக்கு உகந்தவனாகத் தேவன் கண்டார். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அந்தத் தேவதாசனுக்கிருந்த வெளிப்படுத்தல்தான் என்ன? அது, "நான் பெரிய வேலையைச் செய்கிறேன்" என்பதே (நெகே. 6 : 3). சுவிசேஷ ஊழியம் செய்யும் அருமை நண்பனே! உனக்கு இந்த வெளிப்படுத்தல் உண்டா? இந்நாட்களில் கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவர்கள் அநேகர்! சுவிசேஷ ஊழியத்தை ஆதாயத் தொழிலாகப் பாவிப்போரும் பலர்! தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்கிறவர்களும் இல்லாமல் இல்லை ! ஆத்தும பாரமின்றி, அதைத் தங்கள் பிழைப்புக்கடுத்த அலுவலாகக் கொண்டிருப்போரும் உண்டு! இப்படிப் பலரும் பல விதங்களில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துவரும் இந்நாட்களில் நீ எவ்விதமாகக் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துகொண்டிருக்கிறாய் ? தான் நிறைவேற்ற வேண்டிய வேலையைக் குறித்த ஒரு தரிசனம் நெகேமியாவுக்கு இருந்தது. தேவனுடைய நகரத்தைக் குறித்துத் தேவன் தன்னுடைய மனதில் வைத்த பாரத்தை அவன் நன்கு விளங்கிக்கொண்டிருந்தான். அதை நிறைவேற்றி முடிக்கும் வரை அவன் தளர்ந்துபோகவில்லை. பல எதிர்ப்புகளின் மத்தியிலும், இந்தத் தரிசனமே அவனைத் தாங்கி நிலைநிறுத்தியது. ஒரு ராஜா ஒரு குடிமகனை அழைத்து ஒரு வேலையைச் செய்யும்படி அவனுக்குக் கட்டளை கொடுப்பானென்றால், அவ்வேலை எப்படிப்பட்டதாயிருப்பினும், அதை மிகுந்த கவனத்துடனும், ராஜா தனக்கு அளித்த உத்தரவாதம் என்ற பெருமிதத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் அவன் செய்து நிறைவேற்றுவான் அன்றோ! தன் ராஜாவின் பேரிலுள்ள அன்பினாலும் மதிப்பினாலும், அதைச் செய்யும்படி தன் உயிரையே பணயம் வைக்க வேண்டியதாயிருந்தாலும் அதற்கும் அவன் தயங்கமாட்டானே ! அப்படியானால், வானத்தையும் பூமியையும் படைத்த தேவாதி தேவனும்

ராஜாதி ராஜாவுமானவரிடத்திலிருந்து பெற்றிருக்கும் ஊழியத்தை நாம் எவ்வளவு அதிகமான கவனத்துடனும் பயபக்தியுடனும் அன்புடனும் பொறுப்புடனும் செய்து நிறைவேற்ற வேண்டும்! இந்த வெளிப்படுத்தலே நெகேமியாவைத் துணிவுடன், விடாமுயற்சியுடன் செயல்பட வைத்தது. இந்த வெளிப்படுத்தலைப் பெற்றிருந்ததினாலேயே அவன், தான் சந்தித்த எதிர்ப்புகளின் மத்தியில், "என்னைப்போன்ற மனிதன் ஓடிப்போவானோ ? என்னைப் போன்றவன் உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ? நான் போவதில்லை" என்கிறான் (நெகே. 6 : 11). அப். பவுலும் தன்னுடைய அழைப்பைக் குறித்துக் கூறுகையில், "நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" என்கிறார் (அப். 26 : 19). கிறிஸ்துவின் சிலுவையினிமித்தம் பல உபத்திரவங்களைச் சந்தித்த அவர், இன்னமும் தனக்குக் கட்டுகளும் உபத்திரவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிந்தபோது, "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன் ; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; ... நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்றே கூறுகிறார் (அப். 20 : 23, 24). தியாகத்தின் பாதையில் வீர நடைபோட்ட அப்பரிசுத்த வான், "நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவன மாயிருப்பாயாக" என்று கிறிஸ்துவுக்குள் தன் உடன் சகோதரன் ஒருவனையும் ஊக்குவிக்கிறார் (கொலோ. 4 : 17). நாமும் நெகேமியாவைப் போலவும், அப். பவுலைப் போலவும், நாம் கர்த்தருக்குச் செய்துவருகிற ஊழியம் கர்த்தரிடத்திலிருந்து பெற்ற பெரிய வேலை என்பதை உணர்ந்தவர்களாய், "நான் பெரிய வேலையைச் செய்கிறேன்" என்ற வெளிப்படுத்தலுடனும், 'என்ன கிரயம் செலுத்த வேண்டியதிருப்பினும் தேவகிருபையால் அதைச் செய்து நிறைவேற்றுவேன்' என்ற உறுதியான தீர்மானத்துடனும் மனத்தாழ்மையுடனும் நம் சேவையைத் தொடருவோமாக. நம்முடைய தனிப்பட்ட ஜீவியமும் சபையும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு வரும்வரை நாம் விடாமுயற்சியுடன் ஆவியானவரோடு இணைந்து செயல்படுவோமாக.

அதிகாரம் II

# எருசலேமின் அலங்கம்

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற நாம் ஒவ்வொருவரும் தனித்தனியேயும், மொத்தமாகச் சபையாயும் ஆவிக்குரிய எருசலேமாயிருக்கிறோம் (எபி. 12 : 22 ; கலா. 4 : 26). இந்த நகரத்திற்கு அலங்கமும் வாசல்களும் உள்ளன. "பெலனான நகரம் நமக்கு உண்டு; இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார். சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" என்றும், "உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்" என்றும் நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 26 : 1, 2 ; 60 : 18).

## இரட்சிப்பின் படிகள்:

'இரட்சிப்பு' நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் மதிலாக அல்லது அலங்கமாக இருக்கிறது. பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பைப் பெற்று நம் விசுவாசத்தைத் துவங்கியிருக்கிற நாம், நம் விசுவாசத்தின் முடிவாகிய ஆத்தும இரட்சிப்பை அல்லது சரீர மீட்பை அடையும் வரை (எபே. 1 : 7 ; I பேதுரு 1 : 5, 9) இரட்சிப்பின் படிகளில் தொடர்ந்து 'நிலைத்திருந்து' வளர்ந்துகொண்டேயிருக்க வேண்டும். இரட்சிப்பின் படிகள் பின்வருமாறு: (i) பாவமன்னிப்பு (லூக்கா 1 : 77); (ii) தண்ணீர் ஞானஸ்நானம் (மாற்கு 16 : 16); (iii) தெய்வீக சுகம் (யாக். 5 : 15); (iv) பரிசுத்த ஆவியின் அபிஷேகம் (தீத்து 3 : 5); (v) பாடுகளின் ஜீவியம் (பிலி. 1 : 28, 29); (vi) பரிசுத்தமாகுதல் (II தெச. 2 : 13, 14); (vii) சரீர மீட்புக்காக ஜெயஜீவியத்தில் காக்கப்படுதல் (ரோமர் 8 : 23 ; I பேதுரு 1 : 5) என்பவையே. இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் நாம் நிலைத்திருந்து, ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்துவருவதால் இரட்சிப்பு ஒரு பெரும் மதிலாக நம் ஜீவியத்தில் உயர்ந்துநிற்கிறது. இதையே அப். பவுல், "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப்

பிரயாசப்படுங்கள்" என்று பிலிப்பிய சபையாருக்கு எழுதுகிறார் (பிலி. 2 : 12). தேவன் கிருபையாக நம்மில் கட்டியெழுப்பியிருக்கிற இந்த ஆவிக்குரிய அனுபவங்களில் நிலைத்திராவிடில், நாம் 'அலங்கம் இடிக்கப்பட்ட பாழான பட்டணம்' போல காணப்படுவோம்.

அலங்கம் இன்றி ஒரு நகரத்திற்குப் பாதுகாப்பு இல்லை. அது, சத்துருக்கள் உட்பிரவேசித்து அதன் விலையேறப்பெற்ற பொக்கிஷங் களைக் கொள்ளையிடவும், ஜனங்களைக் கொல்லவும், சிறைபிடிக்கவும், தேசத்தைப் பாழாக்கவும் வழிவகுத்துவிடும். எனவேதான் கர்த்தரும், "சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்; அரணைக் காத்துக்கொள்" என்று தம் ஜனங்களை எச்சரிக்கிறார் (நாகூம் 2 : 1). ஒரு பட்டணத்தைச் சுற்றிலும் முற்றிகை போடும் சத்துருக்கள், முதலா வதாக அதன் அலங்கத்தை உடைத்துப்போடுகிறார்கள். பின்பு அவர்கள் எளிதாக அப்பட்டணத்தைக் கைப்பற்றுகிறார்கள். எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தபோது, பட்டணமும் அதிலிருந்த யாவும் (கர்த்தரின் ஆலயத்தின் பொக்கிஷத்தில் சேர்க்கப்படும்படியாகக் கர்த்தர் கற்பித்தவை தவிர) அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டன (யோசுவா 6 : 24). ஆகவே ஒரு பட்டணம் பாதுகாப்பாயிருக்க வேண்டுமானால், அதின் 'அரணா கிய' அலங்கம் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். நம் முடைய அரணாகிய 'இரட்சிப்பின் அனுபவங்களை' முடிவுபரியந்தம் நாம் காத்துக்கொள்வோமாக. அவற்றில் ஏதாயினும் சில பகுதிகள் இடிக்கப்பட்டுக் கிடக்குமாயின், அவற்றைக் கட்டியெழுப்பும்படி இன்றே நாம் உணர்ந்தெழும்புவோமாக.

தேவன் யூதா ஜனங்களைப் பலமுறை எச்சரித்தும் அவர்கள் செவிகொடாமற்போனபடியினால், அவர்களைச் சத்துருக்களின் கைகளில் அவர் ஒப்புக்கொடுத்தார். "அவர்கள் (சத்துருக்கள்) தேவனுடைய ஆல யத்தைத் தீக்கொளுத்தி, எருசலேமின் அலங்கத்தை இடித்து, அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த திவ்வியமான பணிமுட்டுகளையெல்லாம் அழித்தார்கள்" (II நாளா. 36 : 19). பூரண வடிவும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமான நகரம் மண்மேடாக மாறிப்போயிற்று ! அரணிப்பும் அலங்கமும் "முற்றிலும் பெலனற்றுக் கிடக்கிறது. அவள் வாசல்கள் தரையில் அமிழ்ந்திக்கிடக்கிறது; அவள் தாழ்ப்பாள்களை முறித்து உடைத்துப்போட்டார்" என இதைக் குறித்துத் தீர்க்கதரிசியாகிய எரேமியா புலம்புகிறான் (புல. 2 : 8, 9, 15). அதின் இன்பமான வாசஸ்தலங்களெல்லாம் பாதுகாப்பற்று, பாழும் வனாந்தரமு மாயின. ஏன் ? அவர்கள் கர்த்தரின் கற்பனைகளில் நிலைத்திராத தினாலேயே!

கர்த்தரின் கற்பனைகளில் நிலைத்திருப்பது என்றால் என்ன? அருமையானவர்களே! நாம் இரட்சிக்கப்பட்டுப் பல வருடங்கள் கடந்து சென்றிருக்கலாம். 'சரியான ஞானஸ்நானம் பெற்றோம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, உன்னதமான சபையில் விசுவாசிகளாயிருக்கிறோம்' என நாம் ஒருவேளை திருப்தியுடன் இருக்கக் கூடும். நாம் இந்த அனுபவங்களைப் பெற்று எத்தனை ஆண்டுகள் கடந்துவிட்டன என்பது அல்ல, அவ்வனுபவங்களில் இன்றும் நிலைத்திருக்கிறோமா என்பதே கேள்வி!

## 1. பாவமன்னிப்பு :

கல்வாரியண்டை வரும் எந்த மனிதனும் அடையும் முதல் அனுபவம் பாவ உணர்வு ஆகும் (அப். 2 : 37). அப்போது அவன் மெய்மனஸ்தாபத்துடனும் நொறுங்குண்ட இருதயத்துடனும், தான் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொள்கிறான். பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டிருந்த நம்முடைய இருதயம், இரட்சிப்பின் ஆரம்பப் படியாகிய மறுபடியும் பிறத்தலின் அனுபவத்தில், ஓர் உணர்வுள்ள இருதயமாக மாற்றப்படுகிறது. சிறு தவறு இழைத்தாலும் உடனடியாக அதை உணரக்கூடிய தன்மை அதற்கு உண்டு. ஆனால் இரட்சிக்கப் படுமுன் நமக்கிருந்த நம்முடைய விருத்தசேதனம்பண்ணப்படாத பழைய இருதயமோ எந்தக் குற்றத்தையும் உணரக்கூடாததும், தன்னைத் தான் நீதியுள்ளதென தீர்த்துக்கொள்ளுகிறதுமான கல்லைப் போன்ற கடினமான இருதயமாகும் (எபே. 4 : 18, 19). அருமை நண்பனே! உன் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில் உனக்கிருந்த மனஸ்தாபமுள்ள இருதயம் இப்போது உனக்கு உண்டா? நீ சிறு குற்றத்திற்கும் மனம் உடைந்து அழுத நாட்களை நினைத்துப் பார்! இன்றோ பெரும் பாதகங் களுக்குட்பட்டும், உணர்வற்று, பல நியாயங்களைச் சொல்லி, உன்னை நீயே நீதியுள்ளவனாகக் கணித்துக்கொண்டு, பிறரால் கண்டிக்கப்பட்டும் உணரக்கூடாத நிலையில் நீ இருக்கிறாயா? இந்த நிலைமையில் நீ திருப்தியடைந்திருப்பாயானால், உன் இரட்சிப்பாகிய மதில் இடிக்கப் பட்டுப்போயிருக்கிறது என்பதை அறிந்துகொள்வாயாக.

தாவீது சவுலினுடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்ட போது அவனுடைய மனது அவனை வாதித்தது (I சாமு. 24 : 5). ஆனால் பின்னாட்களில், தன் இராணுவத்தில் ஒருவனாயிருந்து தன் தேசத்துக் காகப் போராடிய உத்தம சேவகனாகிய உரியாவைத் தந்திரமாகப் போரில் மடியச் செய்து, அவனுடைய மனைவியை அபகரித்துக்கொள்ள அவன் மனம் அஞ்சவில்லை! முன்னாட்களில் தன்னிலிருந்த உணர்வுள்ள இருத யத்தை அச்சமயத்தில் அவன் இழந்துபோயிருந்தான். தீர்க்கதரிசி வந்து

அவனது பாவத்தை அவனுக்கு உணர்த்த வேண்டியதாயிற்று! தீர்க்க தரிசியின் மூலம் தாவீதை உணர்த்திய தேவன், பலவிதங்களில் உன் தவறுகளையும் உனக்கு உணர்த்துகிறார் என்பதை விளங்கிக்கொள்வா யாக. பின்பு மெய் மனஸ்தாபத்துடனும் உடைந்த உள்ளத்துடனும் தேவனிடம் திரும்பிய தாவீது, தன் ஜீவிய காலமெல்லாம் இந்த உணர் வுள்ள இருதயத்தைக் காத்துக்கொண்டான். "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டது மான இருதயத்தை நீர் புறக்கணியீர்" என அவன் தன் ஜெபத்தில் அறிக்கை செய்கிறான் (சங். 51 : 17). இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் தனக்குத் தந்தருள வேண்டுமென்று அவன் தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறான் (வச. 12). ஆகவே பாவமன்னிப்பாகிய இரட்சிப் பின் அனுபவம் நம்மில் காக்கப்படும்படி உணர்வுள்ள ஓர் இருதயத்தை எப்போதும் பாதுகாத்துக்கொள்ள நாம் எச்சரிக்கையாயிருப்போமாக. மேலும், நமக்கு விரோதமாய்ப் பிறர் செய்யும் தப்பிதங்களை நாம் மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், தேவனால் நமக்கு மன்னிக் கப்பட்ட பாவங்களும் மீண்டும் அவரால் நினைவுகூரப்படும் என்பதை யும் நாம் நினைவிற்கொள்வோமாக (மத். 18 : 35). நண்பனே! ஒரு காலத்தில் உயர்ந்து ஓங்கி நின்றுகொண்டிருந்த உன் இரட்சிப்பாகிய மதில் ஆங்காங்கே இடிபட்டுக் கிடக்குமாயின் அல்லது அதில் விரிசல் காணப்படுமாயின், அலங்கம் இடிபட்டுக் கிடப்பதைக் கேள்வியுற்ற நெகேமியா தேவசமுகத்தில் அழுது, துக்கித்து, உபவாசித்து, ஜெபம் பண்ணினது போல, உன் நிர்ப்பந்தமான நிலையினிமித்தம் நீயும் கர்த்தரின் பாதத்தில் விழுந்து கதறுவாயாக. அப்பொழுது அவர் உன்னை மீண்டும் சீர்ப்படுத்துவார்.

**2. தண்ணீர் ஞானஸ்நானம் :**

தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாம் அச்சத்திய உபதேசத் தில் நிலைத்திருக்கிறோமா என்பதை அவ்வப்போது நிதானித்தறிய வேண்டும். மனந்திரும்புதலில் நம் பழைய மனுஷன் கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் அவ ருடனேகூட மரித்து, அடக்கம்பண்ணப்படுகிறோம் (ரோமர் 6 : 6, 4). "முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு" என அப். பவுல் எழுதுகிறார் (எபே. 4 : 22 ; கொலோ. 3 : 9). நாம் ஞானஸ்நான சத்தியத் திற்குக் கீழ்ப்படிந்தது முதல் பழைய மனுஷனையும் அவனுடைய செய்கைகளையும் களைந்துபோட்டு, கிறிஸ்துவின் மரணத்தைத் தரித்துக் கொள்கிறோம். இது நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் தொடர்ச்சியாக நடை பெற வேண்டிய ஓர் அனுபவமாகும் (ரோமர் 6 : 11). ஞானஸ்நானத்தில்

பாவ சுபாவத்திற்கும் உலகத்திற்கும் உலக வழிபாடுகளுக்கும் மரித்து அடக்கம்பண்ணப்பட்ட நாம் இன்றும் அதே நிலையில் நம் ஓட்டத்தைத் தொடருகிறோமா ? அல்லது சிற்சில சமயங்களில் சில பாவ சுபாவங் களும் உலகத்திற்கொத்த வேஷமும், இவ்வுலக வாழ்க்கையில் நாம் முன்னேறுவதற்கு நமக்கு அவசியமாயிருக்கின்றன என்று கூறிக்கொண்டு, கிறிஸ்துவுடனே மரித்து அடக்கம்பண்ணப்பட்ட அனுபவத்தினின்று அவ்வப்போது வெளியே வந்துவிடுகிறோமா ? பாவமும் உலகமும் என்றும் நம் பார்வையில் நமக்குச் சத்துருக்களாகவே காணப்பட வேண்டும். சந்தர்ப்பங்களுக்கேற்ப நாம் அவைகளுடன் நட்புக்கொள்ளு வோமெனில், இரட்சிப்பின் இரண்டாம் படியாகிய மதில் நம் வாழ்வில் ஆங்காங்கே இடிக்கப்பட்டுப் போயிருக்கிறது என்பதே பொருள்.

இஸ்ரவேல் ஜனங்கள், தாங்கள் கானானைச் சுதந்தரிக்கும் முன்ன தாகப் பல ஜாதிகளை ஜெயிக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் எகிப்தி லிருந்து புறப்பட்டது முதல் கானானைச் சுதந்தரிக்கும் வரை தங்களுக்கு விரோதமாய் எழும்பிய அந்நிய ஜாதியார் யாவரையும் நிர்மூலமாக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருந்தது. இந்த ஜாதியார் கிறிஸ்துவின் திவ்ய சுபாவங்களுக்கு மாறானவையாகிய பழைய மனுஷனின் சுபாவங்களுக்கு நிழலாட்டமாயிருக்கின்றனர். இஸ்ரவேல் புத்திரரின் கானானை நோக்கிய பயணத்தில் அவர்களை எதிர்த்துவந்தவர் களில் 'அமலேக்கியர்' ஒரு ஜாதியாராவர். இவர்கள் அவர்களை வழி மறித்தபடியினால், இவர்களை நிர்மூலமாக்க வேண்டுமென்ற எண்ணம் தேவனுடைய மனதில் இருந்தது. எனவே அவர் சவுல் ராஜாவின் நாட்களில், அவன் அமலேக்கியரை முற்றிலும் நிர்மூலமாக்கி, அவர்கள் மேல் இரக்கம் வைக்காமல் அவர்களை அழித்துப்போட வேண்டுமென்று அவனுக்குக் கட்டளையிட்டார். அவனோ அமலேக்கியரை முறியடித்து, அவர்களுடையவைகளில் "நலமான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப்போட்டான்" (I சாமு. 15 : 9). இது கர்த்தருடைய பார்வையில் பொல்லாப்பானதாய் இருந்தது. இதினி மித்தம் அவன் ராஜாவாயிராதபடிக்குத் தேவனால் புறக்கணிக்கப்பட்டான். அருமையானவர்களே ! நம் ஜீவியத்தில் பழைய மனுஷனுக்குரிய சில சுபாவங்களை, 'இவை அவசியத்திற்கு உதவும்' என்ற எண்ணத்துடன் அவற்றிற்குக் கண்சாடையாயிருந்து, அவற்றை அழித்துப்போட மனதில் லாமல் நாம் தப்பவிட்டிருக்கிறோம் அல்லவா ? 'பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போடுங்கள்'; "இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் (பழைய மனுஷனின்) அவயவங்களை அழித்துப்போடுங்கள்" என்றெல்லாம் வேதாகமம் நம்மை எச்சரித்திருக்க

(கொலோ. 3 : 9, 5), அவற்றுள் சிலவற்றை நாம் தப்பவிட்டிருப்பது ஏன் ? நாம் அவற்றை அழித்துப்போடாவிடில், அவை நம்மை நிச்சயமாய் அழித்துவிடும் ! அமலேக்கியரை முற்றிலும் சங்காரம்பண்ணாத சவுல், முடிவிலே ஒரு அமலேக்கியனாலேயே வெட்டுண்டு மரித்தான் ! (II சாமு. 1 : 8 - 10). ஆவிக்குரிய பிரகாரமாக இது நமக்குச் சம்பவிக்காத படிக்கு, பழைய மனுஷனின் சுபாவங்களின் மேல் நாம் சற்றும் இரக்கம் வைக்காமல், அவற்றை முற்றும் சங்கரிப்போமாக !

ஆவிக்குரிய போராயுதங்களைக் கொண்டு மட்டுமே யுத்தம்பண்ண வேண்டிய நாம், சில சந்தர்ப்பங்களில் மாம்சத்தைப் புயபலமாக்கிக் கொண்டு, மாம்சத்துக்குரிய ஆயுதங்களை உபயோகிக்க முற்படுகிறோம் அன்றோ? பட்டயக்குத்து போன்ற வார்த்தைகள், புறங்கூறும்படி வில்லைப் போல் வளைக்கப்பட்ட நாவு, கோபம், மூர்க்கம், பொய், பெருமை போன்ற ஆயுதங்கள் நம் கைவசம் இருக்குமாயின், அவை நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் கருவிகளே என்பதை நம் நினைவிற்கொள்ளுவோமாக.

நாம் ஒருவேளை பாவக் கிரியைகளுக்கு நம் ஜீவியத்தில் இடங் கொடாமலிருக்கலாம். என்றாலும் அவற்றின் மேல் நம் மனதில் ஆர்வ மும் விருப்பமுங்கொண்டிருப்போமாயின் நம் இரட்சிப்பாகிய மதிற் சுவரில் விரிசல் உண்டாகியுள்ளது என்பதை நாம் விளங்கிக்கொள்வோ மாக. பிறர் முன்னிலையில் பிழையற்றவர்களாகத்தானே இருக்கிறோம் என்று அதைக் குறித்துக் கவலையற்று, அதைச் சீர்ப்படுத்திக்கொள்ளா மலேயே நாம் தொடர்ந்து சென்றுகொண்டிருப்போமேயாகில், நாளுக்கு நாள் அந்த விரிசல் அதிகமாகி, ஒரு நாள் மதில் தகர்ந்துபோய்விடும். பிறர் அறியாவிடினும் அந்தரங்கத்தில் ஏற்படும் விரிசல்களை நாம் உடனுக்குடன் தேவசமுகத்திற்குக் கொண்டுசென்று, அவற்றைச் சீர்ப் படுத்திக்கொள்ளக் கவனமாயிருக்க வேண்டும். நாம் சரியான ஞான ஸ்நானம் பெற்றிருந்தும், பாவ சுபாவத்திற்கு மரித்தவர்களாகவே இறுதி வரையும் நம் ஓட்டத்தைத் தொடரக் கவனமாயிராவிடில், நம்முடைய ஜீவியம் மதிலிடிந்த பாழான பட்டணம் போலாகிவிடும்.

### 3. தெய்வீக சுகம் :

தெய்வீக சுக சத்தியத்தில் நாம் நிலைத்திருப்பதின் மூலம் உயிர்த் தெழுதலின் நம்பிக்கை நமக்குள் பெருகுகிறது. "இயேசுவை மரித்தோரி லிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற

தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8 : 11). எப்போதும் பரிசுத்த ஆவியின் வல்லமை யினால் நம்முடைய சாவுக்கேதுவான சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அப்படியானால் கிறிஸ்துவின் வருகை யின் நாளிலே, "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3 : 21). ஆசா என்னும் யூதாவின் ராஜா தன் ராஜ்யபாரத்தின் ஆரம்ப நாட்களில் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்தி ருந்தது போல, தன் பின்னாட்களில் அவர்மேல் நம்பிக்கை வைத்து அவரைச் சார்ந்துகொள்ளவில்லை. அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான் என திருவசனம் கூறுகிறது (II நாளா. 16 : 12). "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ள வர்களாயிருப்போம்" என்று எபிரெய நிருபக்காரன் எழுதுகிறார் (எபி. 3 : 14). ஆகவே உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடன் தெய்வீக சுக சத்தியத்தில் நாம் நிலைத்திருந்து நம் இரட்சிப்பாகிய அலங்கத்தைக் காத்துக்கொள்வோமாக!

### 4. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் :

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் தேவ அன்பு நம் இருதயங் களில் பொழிந்தருளப்படுகிறது. தேவ அன்பின் அம்சங்களை நாம் I கொரிந்தியர் 13 - ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். நம் அனுதின ஜீவியத்தில் அவைகளில் நாம் வளருகிறவர்களாயிராவிடில் நம்முடைய இரட்சிப்பின் நான்காவது படியாகிய மதில் நாளுக்குநாள் ஆபத்தான நிலைக்குள்ளாகி, தகர்ந்துபோக ஏதுவுண்டாகும். இதையே அப். பவுலும், "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசை யிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனா யிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிரா விட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று எழுதுகிறார் (I கொரி. 13 : 1 - 3). ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்

ஆகியவையே (கலா. 5 : 22, 23). பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிற தேவபிள்ளைகளாகிய நாம் இந்நற்பண்புகளில் வளர்ந்துவருகிறோமா? "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (I யோவான் 4 : 20). எனவே நாம் வஞ்சிக்கப்பட்டுப்போகாதிருப்போமாக. சகோதரருக்கிடையே அன்பும் ஐக்கியமும் குறைவதினால் பிரிவினைகளாகிய விரிசல்கள் அதிகமாகி, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் சேதமடையாதபடி, நாம் 'எழுந்து கட்டுவோம் வாருங்கள்' என்று கூறிக்கொண்டு ஒருவரோடொருவர் ஒப்புரவாகி, இந்த நல்ல வேலைக்கு நம் கைகளைத் திடப்படுத்துவோமாக. நம்முடைய அலங்கம் முழுவதும் ஒன்றாக இணைந்து உயரும்படி, நாம் யாவரும் ஆவலுடன் ஒன்றாக இணைந்து செயல்படுவோமாக (நெகே. 2 : 17, 18 ; 4 : 6).

### 5. பாடுகளின் ஜீவியம் :

பாடுபடுகிற சிந்தையை நாம் எப்போதும் காத்துக்கொள்ள வேண்டும். "முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே" என்று எபிரெய நிருபக்காரன் எழுதுகிறார் (எபி. 10 : 32). "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே ? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்" (கலா. 4 : 15) என்று அப். பவுல் கலாத்திய சபையாரிடம் கூறுகிறார். "மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது; யுத்தத்திற்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது. ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்" (யோசுவா 14 : 11, 12) என்று காலேப் நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் சவால் விடுக்கிறான் ! 'முன்னொரு காலத்தில் நான் கர்த்தருக்காக இன்னின்ன கஷ்டங்களைச் சகித்தேன்' என்று அல்ல, 'இப்போதும் அதே சிந்தை எனக்கு உண்டு' என்று காலேபைப் போல நாமும் சாட்சி பகருகிறவர்களாய் இருப்போமாக. தேவனுடைய சித்தத்தின்படி நம்மைப் பாடுகளுக்கு ஒப்புக்கொடுப்பதின் மூலம் நாம் பாவங்களை விட்டோய்ந்திருக்கலாம்; அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளாவதால், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நாம் களிகூர்ந்து மகிழலாம் (I பேதுரு 4 : 1, 13).

**6. பரிசுத்தமாகுதல் :**

இரட்சிப்பின் மற்ற படிகளைப் போலவே பரிசுத்தமாகுதலும் அனுதினமும் நமக்குள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டிய ஒரு கிரியையாகும் (II கொரி. 7 : 1). "பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்த மாகட்டும்" என்பது வேதாகமத்தில் தேவன் அருளியிருக்கும் கடைசி ஆலோசனைகளுள் ஒன்றாகும் (வெளி. 22 : 11). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், தேவ வசனத்தினாலும், பரிசுத்த ஆவி யினாலும் அவர் நம்மைப் பரிசுத்தமாக்கும்படி தினமும் நம்மை நாம் ஒப்புக்கொடுப்போமாக (எபி. 13 : 12 ; யோவான் 17 : 17 ; ரோமர் 15 : 15). ஆவியானவர் தமக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கிறவர்களுக்குள் செய்யும் ஒரு நிலையான, நிதானமான, முழுமையான பரிசுத்தமாக்கு தலின் கிரியையை நமதாண்டவர் ஒரு உவமை மூலமாக விளக்குகிறார் : ஒரு ஸ்திரீ, கொஞ்சம் புளித்த மாவை எடுத்து, தன்னிடத்திலிருந்த மூன்றுபடி மாவு முழுவதும் புளிக்கும் வரைக்கும், அதை அதிலே அடக்கிவைத்தாள் (மத். 13 : 33). பரிசுத்த ஆவியானவர் நம் ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றை முற்றிலும் தேவசாயலாக மாற்றும் வரை நம்மை அவருக்கு அர்ப்பணித்து ஜீவிக்க வேண்டும் என்பதே இவ்வுவமையின் கருத்தாகும்.

பரிசுத்தம் என்பதற்கு 'வேறுபிரிதல்' என்று பொருள். இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் நாம் கர்த்தருக்கென்று நம்மை வேறுபிரித்துக் கொள்கிறோம். பாவமன்னிப்பாகிய இரட்சிப்பில் பாவக் கிரியைகளி லிருந்தும், தண்ணீர் ஞானஸ்நானத்தில் பாவ சுபாவத்திலிருந்தும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் சுயத்திலிருந்தும் நாம் வேறுபிரிக்கப்படு கிறோம். இவை தவிர, கர்த்தராகிய இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தது போல (எபி. 7 : 26), நாமும் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்ற வர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமா யிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் (பிலி. 2 : 15). பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட ஜனங்களை நோக்கி அப். பேதுரு, "மாறு பாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்று புத்தி சொன்னார் (அப். 2 : 40). நாம் ஜீவியத்திலும் உபதேசத்திலும் மாறுபாடுள்ளவர்களை விட்டு விலகி ஜீவிக்க வேண்டும். "அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்" என்று இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது (எண். 23 : 9). இது:வே அவர்களுடைய ஜெயத்தின் இரகசியமாயிருந்தது! அவ்வாறே நாமும் தேவனுக்கு அந்நியமான யாவற்றினின்றும் அனுதினமும் நம்மை வேறுபிரித்துக்கொண்டு, ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்று முன்செல்லு

வோமாக. "அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? ... நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடா திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (II கொரி. 6 : 15 - 17). "துன்மார்க்க ருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் ... தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என நாம் வாசிக்கிறோம் (சங். 1 : 1, 2). அந்நிய உபதேசங்களுக்கும், சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், அநியாயத்திற்கும், இச்சைகளுக்கும், புத்தியீனமான தர்க்கங்களுக்கும் விலகி ஜீவிக்கிறவர்கள், பரிசுத்தமாக்கப் பட்டவையும், கனத்துக்குரியவையுமான பாத்திரங்களாயிருப்பார்கள் என அப். பவுல் எழுதுகிறார் (II தீமோ. 2 : 16 - 23). இவ்விதமாகக் கர்த்தருக் கென்று படிப்படியாக வேறுபிரிந்து ஜீவித்து, பரிசுத்தமாகுதலில் வளருகிறவர்கள் முடிவிலே கிறிஸ்துவின் நாளில், 'அவருக்குச் சொந்த மானவர்களாக' அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் (எபே. 1 : 14). ஆகவே "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (II கொரி. 7 : 1).

## 7. சரீர மீட்புக்காக ஜெயஜீவியத்தில் காக்கப்படுதல் :

கடைசியாக, "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம் முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதா யிருக்கும்படி காக்கப்படுவதாக" என நாம் வாசிக்கிறோம் (I தெச. 5 : 23). இவ்வசனத்தில் 'காக்கப்படுவதாக' என்ற பதம் கவனிக்கப்படத்தக்கது. தேவன் நமக்குள் ஆரம்பித்த வேலையைப் படிப்படியாக நம்மில் நிறை வேற்றி, முடிவாக நம் ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றை முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில் கொண்டுவந்து, நம்முடைய மரணம் வரை அல்லது கர்த்தருடைய இரகசிய வருகை வரை 'முற்றிலும் தேறின' அனுபவத்தில் நம்மைப் பாதுகாக்கிறார். இதுவே ஜெயஜீவியத்தில் 'நிலைத்திருக்கிற' அல்லது 'காக்கப்படுகிற' அனுபவமாகும். கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் சரீர மீட்பாகிய கடைசி இரட்சிப்பை (I பேதுரு 1 : 5, 9) நாம் அடைந்துகொள்ளும் வரை அல்லது நம் மரணம் வரை இப்பூரணமாக்கப்பட்ட நிலையில் காக்கப்பட வேண்டும் என்பதே தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஒழுங்காகும். மாறாக, கர்த்தருடைய இரகசிய வருகையின்போதோ அல்லது நம் மரண நேரத்திலோ நாம் சடுதியாக ஒரு பூரண ஜெயஜீவியத்தை அடைந்துகொள்வது என்பது

சாத்தியமானதன்று. கர்த்தருடைய இரகசிய வருகையின் நாளில், அந்தக் கண்ணிமைப் பொழுதினில், பூரணமாக்கப்பட்டவர்களாய்க் காக்கப்பட்டு வருகிற பரிசுத்தவான்களின் 'மண்ணான சரீரம்' மறுரூபமாவதற்கு மட்டுமே தருணம் இருக்கும்.

நாம் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும் நம்முடைய எஜமான் வருவார். ஆகையால், எப்போதும் நம்முடைய ஜீவியத்தின் 'கணக்குகளை' நாம் சரியாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். பிறரோடு ஒப்புரவாகிக்கொள்வதற்கும் பிறரை மன்னிப்பதற்கும் நாம் காலம் கடத்திக்கொண்டிருப்போமாகில், பிற்பாடு நமக்குத் தருணம் கிடையாமற்போகலாம்! முன்னறிவிப்பின்றி மரணம் மானிடரைச் சந்திக்குமே! "நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்" (சங். 37 : 37). அவன் தன் கணக்குகளைச் சரிபார்ப்பதற்காகவும், பிறரோடு சமாதானமாகிக்கொள் வதற்காகவும் தன் மரண நேரம் வரும்வரை காத்திருப்பவனல்ல; அவன் ஏற்கனவே யாவரோடும் சமாதானமுள்ளவனாயிருந்து, தன் ஜீவியத்தைத் தேவனுக்கு முன்பாகத் துப்புரவானதாகக் காத்துக்கொண்டு, முடிவில் நித்திய சமாதானத்துக்குள், அதாவது நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறான் (ஏசாயா 57 : 2). ஆகவே, நம்முடைய முடிவு சமாதான மாயிருக்கும்படி, கர்த்தரின் இரகசிய வருகையோ, மரணமோ நம்மைச் சந்திக்கும் வரை நாம் ஜெயஜீவியத்தில் காக்கப்படுவோமாக.

இவ்வாறு நாம் இரட்சிப்பின் ஒவ்வொரு படியையும் அனுபவ மாக்கிக்கொள்வது மாத்திரமல்ல, அவற்றில் நிலைத்திருந்து வளருவோ மாகில், நம்முடைய அலங்கம் அசையாமல் ஸ்திரமாய் நிலைத்திருக்கும். அவற்றில் உள்ளாகப் பிளவுகளோ, விரிசல்களோ ஏற்பட்டிருக்குமாயின், அல்லது புறம்பாகச் சில பகுதிகள் தகர்க்கப்பட்டுக் கிடக்குமாயின், நாம் அவற்றைப் பார்வையிட்டுச் செப்பனிட வேண்டிய ஏற்ற காலம் இதுவே!

நம்மில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்து வின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார் (பிலி. 1 : 5). ஆகவே, நாம் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களு மாய்க் காக்கப்படும்படி அவர் நம்மில் செய்யும் இந்தத் தொடர்ச்சியான இரட்சிப்பின் வேலைக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக.

**மதில் சூழ்ந்த பட்டணம் :**

ஒரு பட்டணத்தின் மதிலானது அதன் நாற்புறமும் சூழ்ந்து நிற்கும். மதில் சூழ்ந்த பட்டணங்களைக் குறித்து நாம் உபாகமம் 9 : 1 - இல்

வாசிக்கிறோம். ஒரு மதிலானது தொடர்ச்சியாகக் கட்டி முடிக்கப்பட வேண்டிய ஒன்று. அதன் பெரும் பகுதி கட்டப்பட்டு, மீதிப் பகுதி கட்டப்படாமல் விட்டுவிடப்படுமாயின் அது ஒரு மதிலாகாது. அப்படி அரைகுறையாகக் கட்டப்பட்டு, பூர்த்திசெய்யப்படாமல் விடப்பட்டிருக்கும் ஒரு மதிலினால் அப்பட்டணத்திற்குப் பாதுகாப்பு இல்லை. நெகேமியா அலங்கத்தின் வேலையை ஆரம்பித்தது மட்டுமல்ல, அதில் திறப்பு (இடைவெளி) ஒன்றும் இல்லாதபடி அதைக் கவனமாய் முழுமையாகக் கட்டி முடித்தான் (நெகே. 6 : 1). நம்முடைய கர்த்தராகிய இயேசு ஆதியும் அந்தமும், அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமானவர். தாம் நம்மில் தொடங்கின இரட்சிப்பின் வேலையை நிறைவேற்றி முடிக்கும் வரை அவர் ஓய்வதில்லை. அவர் நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் (எபி. 7 : 25). நாமும் அவரோடிணைந்து நம் இரட்சிப்பு பூரணமடையும்படி ஒத்துழைக்க வேண்டும். அடிப்படை உபதேசங்களாகிய மனந்திரும்புதல், தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இவற்றோடு நாம் நின்றுவிடாமல், "பூரணராகும்படி கடந்துபோவோமாக" என அப். பவுல் கூறுகிறார் (எபி. 6 : 1, 2). கிறிஸ்தவ உலகில் பெரும்பான்மையினரும், இம்மூன்று அனுபவங்களோடு எல்லாம் நிறைவாயிற்று என்று எண்ணித் திருப்தியடைந்து விடுகிறார்கள். இவர்கள், அரைகுறையாகக் கட்டப்பட்டு, முற்றுப்பெறாமல் விட்டுவிடப்பட்டிருக்கும் மதிலையுடைய ஒரு பட்டணம் போன்றவர்களே. வேறு சிலர், தெய்வீக சுகம், பரிசுத்தமாகுதல் போன்ற மேன்மையான அனுபவங்களை அறிந்திருந்தும், அவற்றில் தொடர்ந்து நிலைத்திராதபடியினால் அவர்களுடைய இரட்சிப்பாகிய மதிலில் ஆங்காங்கே திறப்புகள் காணப்படுகின்றன. இவ்விரு வகுப்பினருமே பாதுகாக்கப்பட்டு, கிறிஸ்துவின் மகிமையுள்ள சந்நிதானத்தில் நிறுத்தப்பட இயலாது. மதிலில்லாத பட்டணத்திற்கு எவ்வாறு பாதுகாப்பு இல்லையோ அவ்வாறே ஆங்காங்கே இடிந்துபோன அல்லது அரைகுறையாகக் கட்டப்பட்ட மதிலுள்ள பட்டணத்திற்கும் பாதுகாப்பு இல்லை. எனவே பூரண உபதேசத்தின்படி நம் ஜீவியத்தை நாம் கட்டியெழுப்புவோமாக.

எருசலேமின் அலங்கத்தை இடித்துப்போட்ட சத்துருக்கள், அதன் ஒரு சிறுபகுதியை இடிக்காமல் விட்டிருந்தனர் (நெகே. 3 : 8). அதற்கு இரு காரணங்கள் இருந்திருக்கக் கூடும். ஒன்று, இப்படி ஒரு பகுதி மீந்திருப்பதினால் நகரத்திற்கு யாதொரு பயனுமில்லை என்று சத்துருக்கள் நன்கு அறிந்திருந்தமையால் அதை அப்படியே விட்டுக் கடந்து சென்றிருக்கக் கூடும். மற்றது, யூதர்கள் தங்கள் பட்டணத்துக்கு ஒரு காலத்தில் உண்டாயிருந்த உயர்ந்தோங்கிய மதிலை எண்ணி எண்ணி வேதனைப்படத்தக்கதாக – தங்களது மதிலை இடித்த சத்துருக்களின் கோரச் செயலை

அவர்கள் எப்போதும் நினைவுகூர்ந்து மனம் கொதிக்கத்தக்கதாக – அவர்களைப் பரிகசிக்கும் வகையில் அதன் ஒரு சிறு பகுதியை அவர்கள் இடிக்காமல் விட்டுச் சென்றிருக்கக் கூடும். எவ்வாறிருப்பினும், இச்சிறு பகுதி அவர்களுக்கு அதிகமான மனக்கிலேசத்தையே வருவித்தது. இரு பக்கங்களிலும் இடிக்கப்பட்டு மீந்திருக்கும் ஒரு மதிற்சுவர் பெலனற்றதும் பயனற்றதும் பரியாசத்துக்கு ஏதுவானதுமே. அவ்வாறே நம் இரட்சிப்பின் படிகளில் நாம் ஒன்றாக இணைந்து வளர்ந்து நிற்காவிடில், நம் ஜீவியம் 'பெலனான நகரம்' என அழைக்கப்பட இயலாது. "பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்" என நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 33 : 6). நண்பரே ! நம் ஜீவியத்தில் சத்துருவினால் தகர்க்கப்படாமல் விட்டுவைக்கப்பட்டிருக்கும் ஒன்றிரண்டு ஆவிக்குரிய அனுபவங்களில் நாம் திருப்தியாயிராமல், பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். "என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ ?" என தாவீது ஏங்குகிறான் (II சாமு. 23 : 5). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு இந்தப் பூரண இரட்சிப்பு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார் (எபி. 11 : 40). ஆகவே நாம் நமக்களிக்கப்பட்டுள்ள இம்மாபெரும் சிலாக்கியத்தை உணர்ந்தவர்களாய், இரட்சிப்பின் எல்லாப் படிகளிலும் வளர்ந்தோங்கி, நிலைத்திருப்போமாக !

**ஒன்றுபடுவோம் !**

எருசலேமின் இடிந்த அலங்கத்தைக் கட்டியெழுப்பும்படி சிறையிருப்பிலிருந்து வந்த தேவஜனங்கள் யாவரும் ஒருமனப்பட்டார்கள். அலங்கத்தைப் பழுதுபார்த்துக் கட்டும்படி ஆசாரியர்களும், தட்டாரும், மளிகைக்காரரும், தைலக்காரரும், பிரபுக்களும் அவர்கள் குமாரத்திகளும், லேவியரும், காவற்காரரும் — எந்தப் பாகுபாடுமின்றி ஒன்றுபட்டார்கள் (நெகே. 3 : 1, 8, 12, 17, 29, 32). அவர்கள் எஸ்றா, நெகேமியா போன்ற நடத்திப்புக்காரருடனும், சகரியா, மல்கியா போன்ற தீர்க்கதரிசிகளுடனும் சேர்ந்து நின்றார்கள். தேவஜனங்களாகிய நாமும் ஒருவரோடொருவர் இணைந்து, நடத்திப்புக்காரராகிய பரிசுத்தவான்களுடன் ஒன்றாய்ச் சேர்ந்து, நம் தனிப்பட்ட ஜீவியத்திலும் சபையிலும் இப்பெரிய வேலை நடந்தேறும்படி தோள் கொடுப்போமாக. அந்நாட்களில் தேவஜனங்களுக்கிடையில் ஒரே ஒரு சாரார் மாத்திரம் தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை என நெகேமியா 3 : 5 - இல் நாம் வாசிக்கிறோம். இவர்களைப் போல நம் மத்தியிலும்

சிலர் இருக்கக் கூடும். இவர்கள் எவ்வளவாக உணர்த்தப்பட்டாலும் தங்கள் ஜீவியத்தைச் சீர்ப்படுத்திக்கொள்வதில் ஆர்வமற்றவர்களா யிருப்பர். இப்படிப்பட்டவர்களைக் கண்டு நாம் சோர்வடையாமல், பரிசுத்தவான்களோடுகூட கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாகி, அவர்கள் நமக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குவோமாக. ஏனெனில் அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராயிருக்கிறார்கள் (பிலி. 3 : 17, 18). ஆதி அப்போஸ் தலர் காலம் முதற்கொண்டே இப்படிப்பட்டவர்களும் சபையில் இருந்து வருகிறார்கள். "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; ... நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்" என்றுரைத்த கர்த்தர் அவர வருக்குரிய பிரதிபலன்களோடு சீக்கிரம் வருகிறார்! (வெளி. 22 : 11, 12).

அலங்கத்தைக் கட்டினவர்கள் ஆவலோடும் அதிக உற்சாகத் தோடும் கட்டினது மாத்திரமல்ல, அவர்களில் சிலர் தாங்கள் கட்டின பகுதிகளை "வெகு ஜாக்கிரதையோடே" பழுதுபார்த்துக் கட்டினர் என திருவசனம் கூறுகிறது (நெகே. 3 : 20). தன்னிடத்திலிருந்த பத்து வெள்ளிக் காசுகளில் ஒன்றை இழந்துபோன ஒரு ஸ்திரீ அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் "ஜாக்கிரதையாய்த்" தேடினாள் என்று லூக்கா 15 : 8 - இல் நாம் காண்கிறோம். மேலும் அப். பேதுரு, "நீங்கள் அதிக ஜாக்கிரதை யுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத் தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சை யடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" என்று, ஒரு மதிற்சுவரை ஒன்றின் மேல் ஒன்றாகக் கற்களை வைத்துக் கட்டுவது போல, நம் ஆவிக்குரிய ஜீவியத்தை ஜாக்கிரதையாகக் கட்டியெழுப்பும்படி அறிவுறுத்துகிறார் (II பேதுரு 1 : 5 - 7). நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் இழந்து போன பகுதிகளைக் குறித்த மெய் மனஸ்தாபம், நம்மில் தேவனுக்கேற்ற துக்கத்தையும், அவைகளை மீண்டும் சீர்ப்படுத்தும்படியான மிகுந்த ஜாக்கிரதையையும் ஆவலையும் பக்திவைராக்கியத்தையும் கண்டிப்பை யும் உண்டாக்குகிறது (II கொரி. 7 : 11).

**சத்துருக்களின் மத்தியில் பந்தி:**

தேவஜனங்கள் உற்சாகத்துடன் அலங்கத்தை மீண்டும் கட்டத் துவங்கியபோது - நிந்தை, பரியாசம் (நெகே. 2 : 19 ; 4 : 1 - 3), யுத்தத்திற் கான தொடர்ச்சியான பயமுறுத்தல்கள் (4 : 7 - 12), கொலை செய்வதற்கான சதி ஆலோசனை (6 : 1, 2), பொய்க் குற்றச்சாட்டுக் கடிதங்கள் (6 : 5 - 9),

கள்ளத் தீர்க்கதரிசனம் (6 : 10, 12), மிரட்டல் கடிதங்கள் (6 : 19) - போன்ற பல ஏதுக்களைச் சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாகப் பிரயோகித்தனர். எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறது என்றும், இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டுவருகின்றன என்றும் யூதாவுக்கு இருந்த சத்துருக்கள் கேள்விப்பட்டபோது அவர்கள் மிகவும் எரிச்சலாகி, எருசலேமின் மேல் யுத்தம்பண்ண எல்லாரும் ஏகமாய் வரவும், வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடுபண்ணினார்கள் (நெகே. 4 : 7, 8). நாம் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை வெகு ஜாக்கிரதையோடே சீர்ப்படுத்தத் துவங்கும்போது, நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் நம்மைத் தடுக்கவும், நமக்கு விரோதமாய்த் தன் சேனையைத் திரட்டி நம்மோடு யுத்தம் பண்ணவும் புறப்படுகிறான். என்றாலும் சேனைகளின் கர்த்தர் நமக்குத் துணைநிற்கிறார். அவருடைய ஆலோசனையின்படியும், அவருடைய திருவுளச் சித்தத்தின்படியும், அவருடைய ஒத்தாசையுடனும் நாம் இவ்வேலையைச் செய்வதால் அவர் நமக்கு அபரிமிதமான ஜெயத்தைக் கட்டளையிடுவார் !

'பூரண பரிசுத்தமாகுதல், ஜெய ஜீவியம் போன்றவை அசாத்தியமானவை' என்று கூறி, ஆவிக்குரிய ஜீவியத்தில் முன் செல்ல விரும்புகிறவர்களை அதைரியப்படுத்துகிற சிலர் கிறிஸ்தவர்கள் மத்தியிலே இருக்கின்றனர். தாவீது சீயோன் கோட்டையைப் பிடிக்க முயற்சித்தபோது, எருசலேமில் குடியிருந்த எபூசியர், "நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை; குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள்" என்று கூறி, அவனை அதைரியப்படுத்த முயற்சித்தனர். என்றாலும், தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான் (II சாமு. 5 : 6, 7). ஆவிக்குரிய பிரகாரமாக, தாவீதின் பகைஞரான இக்குருடரும் சப்பாணிகளும், சீயோனின் ஜெய ஜீவியத்திற்கும் உன்னத அனுபவங்களுக்கும் மகா விரோதிகள் ஆவர். இவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் உன்னத தரிசனத்தை இழந்த குருடராகவும், தேவனுடைய வழிகளில் நடக்கமாட்டாத சப்பாணிகளாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தாங்களும் முன்னேற வழியின்றி, முன்னேற விரும்பும் மற்றவர்களையும் தடைபண்ணிக்கொண்டு, சீயோனுக்குச் செல்லும் வழியில் இடையூறாக, இடறலாக நிற்கும் கூட்டத்தாராவர்.

தாவீதின் சேனை சாலகத்தின் வழியாய் ஏறி, எபூசியரை முறியடித்து, சீயோன் கோட்டையைக் கைப்பற்ற வேண்டியதாயிருந்தது. சாலகம் (gutter) என்பது, ஆங்கில மொழிபெயர்ப்பின்படி நகரத்தின் கழிவுநீர் வெளியேற்றப்படும் வாய்க்காலைக் குறிப்பதாயிருந்தாலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சாலகம், பட்டணத்திற்கு வெளியே இருந்த கீகோன் என்னும் ஊற்றிலிருந்து பட்டணத்திற்குள் தண்ணீர் கொண்டுவரப்படும்படி

பாறைகளினூடே வெட்டப்பட்டிருந்த அந்தரங்கமான ஒரு வாய்க்கால் ஆகும். இது ஒரு வழுக்கலான பாதையே. நாம் உன்னத ஜீவியம் செய்ய முற்படும்போது, நம்மை இடறி விழப்பண்ணுவதற்கேதுவான சறுக்கலான பாதைகளை நாம் கடக்க வேண்டியதிருக்கும்; தாவீதின் சேனையைத் தங்கள் வார்த்தைகளால் அதைரியப்படுத்த முயன்ற எபூசியரைப் போல, நம்மைத் தளரப்பண்ணக்கூடிய பலருடைய நிந்தையான பேச்சுகளை நாம் கேட்க வேண்டியதிருக்கும். நெகேமியாவின் சத்துருக்களும் அவர்களுடைய வேலையைத் தடுக்கும்படி தங்களால் இயன்ற வரை நேரிடையாகவும் மறைமுகமாகவும் அயராது கிரியை செய்தனர். ஆனால் தாவீதோ, நெகேமியாவோ இவைகளிலெல்லாம் அசைக்கப் பட்டுப்போகவில்லை! தாங்கள் முன்வைத்த காலை அவர்கள் பின் வைக்கவில்லை. இவை யாவும் சீயோன் கோட்டையைக் கைப்பற்றி விடாதபடியான - எருசலேம் மீண்டுமோர் பட்டணமாகத் தழைத்தோங்கி விடாதபடியான - சத்துருவின் சதி ஆலோசனைகளே என்பதை முறையே தாவீதும் நெகேமியாவும் நன்கு விளங்கிக்கொண்டிருந்தனர்!

சீயோனுக்கும் புதிய எருசலேமுக்கும் விரோதமாகக் கிரியை செய்கிற பல ஆவிகள் உள்ளன. தேவன் எவ்வளவாக சீயோனுக்காகவும் எருசலேமுக்காகவும் கடும் வைராக்கியத்துடன் கிரியை செய்கிறாரோ, அதற்கு எதிராகச் சத்துருவானவனும் அவற்றுக்கு விரோதமாய் வைராக்கியத்துடனும் எரிச்சலுடனும் கிரியை செய்கிறான். நெகேமியாவின் சத்துருக்கள், அலங்கம் கட்டப்படுவதைக் கேள்வியுற்றபோது எரிச்சலடைந்தனர் (நெகே. 4 : 1). குறிப்பாக, சீயோனுக்கு விரோதமாகக் கிரியை செய்யும் விழுந்த ஆவிகள், தங்களுக்கு வடதிசையிலுள்ள அந்த உன்னதமான இடம் கிடைக்காதபடியினால் (சங். 48 : 2 ; ஏசாயா 14 : 13), அதில் பிரவேசிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள் மேல் கடும் எரிச்சலுடன், அவர்களுக்கு விரோதமாய்க் கிரியை செய்து, அவர்களை எப்படியாயினும் தடைசெய்யும்படியாக சீயோனின் பாதையில் காத்து நிற்கின்றன. தாவீது, நெகேமியா ஆகியோர் தங்கள் சாதனையில் முன்னேறுவதைத் தடை செய்ய முற்பட்டவர்களுங்கூட புறம்பேயிருந்தும் அவர்களோடு கூடவேயிருந்தும் அவர்களை அதைரியப்படுத்த முயற்சித்துக்கொண்டிருந்தனர். தேவபிள்ளையே, "சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள்" (மீகா 4 : 11). என்றாலும் "சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்" என்று கூறி கர்த்தர் உன்னைத் தைரியப்படுத்துகிறார் (வச. 13). அவருடைய அளவில்லாத

அபிஷேகத்தினாலும் பூரண கிருபையினாலும் நீ அந்த ஜாதிகளின் மேல் ஜெயம் பெறுவாய் (யோவான் 3 : 34 ; அப். 4 : 33). "தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப்போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார்" (மீகா 2 : 13). ஆம் ! தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று. அவன் அதிலே வாசம்பண்ணி, அதைச் சுற்றிலும் மதிலையும் கட்டினான். அவனைத் தடைபண்ணினவர்கள் இல்பொருளாயினர்! அவ்வாறே நெகேமியாவும் அலங்கத்தைக் கட்டி முடித்தான். கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசினவர்கள் வெட்கித் தலை குனிந்தனர் !

ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற முயன்று, உள்ளும் புறம்பு மாகப் பல எதிர்ப்புகளைச் சந்திக்கும் தேவபிள்ளையே ! நீ கலங்காதே, யுத்தம் கர்த்தருடையது. அவர் பயங்கரமான பராக்கிரமசாலியாக உன்னு டனே இருக்கிறார் (II நாளா. 20 : 15 ; எரே. 20 : 11). அவர் உன் வாழ்வில் செய்ய நினைத்தது தடைபடாது. பிசாசின் தந்திரங்களோடே எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவனாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை நீ தரித்துக்கொள். இந்த ஆவிக்குரிய யுத்தக்களத்தில் பிசாசின் சேனை களோடு உனக்குப் போராட்டம் உண்டு; என்றாலும் நீ அவைகளை எதிர்த்து, சகலத்தையும் செய்து முடிப்பாய் (எபே. 6 : 11 - 18). இக்கட்டத்தில் யூதா மனுஷர் செய்தது என்ன ? அவர்கள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, சத்துருக்களின் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தார்கள். வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் ஒரு கையினாலே வேலை செய்து, மறு கையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் களைந்துபோடாதிருந்தார்கள் (நெகே. 4 : 9, 17, 23). இது, சத்துருவுக்கு முகங்காட்டும்படி அவர்களுக்கிருந்த ஆயத்தத் தையும் விழிப்பையும் காண்பிக்கிறது. உன் ஆவிக்குரிய ஜீவியம் சீராகக் கட்டியெழுப்பப்படும்படி நீயும் எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி விழித்துக்கொண்டிரு ! தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள் ! உன் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கட்டும் (சங். 149 : 8). நீ விழித்துக்கொண்டு, தேவன் உனக்களித்த பரிசுத்த வஸ்திரங்களைக் காத்துக்கொள். நெகேமி யாவைப் போல நீ சத்துருவின் தந்திரங்களைப் பகுத்தறிந்துகொள் (நெகே. 6 : 11, 12 ; II கொரி. 2 : 11). அப்போது நிச்சயமாகவே ஜெயம் உன்னுடையதாயிருக்கும் !

யேகோவாநிசி தம் ஜனங்களுக்காக மகிமையாக வெற்றி சிறந்தார். அவர்கள் ஐம்பத்திரண்டு நாட்களுக்குள்ளே எருசலேமின் அலங்கத்தைக் கட்டி முடித்தனர்! (நெகே. 6 : 15). "எங்கள் பகைஞர் எல்லாரும் அதைக் கேட்டபோது ... மிகவும் முனையற்றுப்போய், இந்தக் கிரியை எங்கள் தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்தார்கள்" என நெகேமியா எழுது கிறான் (வச. 16). தேவன் அவர்கள் பட்சத்திலிருந்ததைச் சத்துருக் களும் அறிந்துகொண்டனர்! "சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடு களான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ, ... அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல் மதில் இடிந்து போகும்" (நெகே. 4 : 2, 3) என்றெல்லாம் அவர்களை நிந்தித்துப் பரிகசித்த சத்துருக்கள் இப்போது முனையற்றுப்போயினர். சத்துருக்களின் மத்தியில் தேவன் தம் பிள்ளைகளுக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துகிறார் ! அல்லேலூயா !

அதிகாரம் III

# எருசலேமின் வாசல்கள்

நெகேமியா, நகரத்தின் இடிந்துகிடந்த அலங்கத்தை மீண்டும் பழுதுபார்த்துக் கட்டினது மட்டுமல்ல, அக்கினியினால் சுட்டெரிக்கப் பட்டுப்போயிருந்த அதின் வாசல்களையும் பழுதுபார்த்துக் கட்டினான். வாசல்கள் குறிக்கும் பொதுவான சில ஆவிக்குரிய சத்தியங்களை இங்கு நாம் காண்போம். பொதுவாக, வாசல்கள் துதித்தலைக் குறிக்கின்றன. "உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்" என நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 60 : 18). சில தேவ பிள்ளைகளின் ஜீவியங்களில் இந்த வாசல்கள் சத்துருவின் தாக்குதலால் சுட்டெரிக்கப்பட்டுப்போயிருக்கின்றன. "என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்" என்று கூறிய தாவீதின் அனுபவம் (சங். 63 : 5), ஒரு காலத்தில் அவர்களது அனுபவமாயும் இருந்தது. அவர் களுடைய வாய் ஆனந்தக் களிப்புடன் கர்த்தரைத் துதிக்கத்தக்கதாக, அவர்களது இருதயம் நன்றியினால் பொங்கி, ஸ்தோத்திரங்கள் இருத யத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்டன. ஆரம்ப நாட்களில் கர்த்தரை மனப்பூர்வமாகத் துதித்து அவருக்கு உற்சாக பலிகளைச் செலுத்திக் கொண்டிருந்த தேவபிள்ளையே, இப்பொழுது உன் துதியின் வாசல் எந்நிலையிலுள்ளது? அவர்கள் "தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகி யிருக்கிறது" (மத். 15 : 8) என்று கர்த்தர் உன்னை நோக்கிக் கூறக்கூடிய நிலைக்கு நீ வந்திருக்கிறாயோ? உன் துதிகள் வெறும் உதட்டளவில் மாத்திரம் இருக்கின்றனவோ? நீ பெயரளவில் ஸ்தோத்திரம் செய்கிற படியினால் உன் துதி விலையற்றதாய், அர்த்தமற்றதாய்க் காணப்படு கிறதன்றோ? நீ அவரை உள்ளத்தினின்று ஸ்தோத்திரியாமலும் மகிமைப் படுத்தாமலும் இருப்பாயானால், உன் இருதயம் இருளடைந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொள்வாயாக (ரோமர் 1 : 21). பலவித அக்கினி சோதனைகள் உன் துதியின் வாசல்களைச் சுட்டெரித்துப்போட்டிருக்கு

மாயின், இப்போதே அவ்வாசல்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியது அவசியம். பரம சேனைகள் அனைத்தும் சேனைகளின் கர்த்தரைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருக்கின்றன. என்றாலும் கர்த்தர் சீயோனின் வாசல்களில் - அற்ப மனுஷராகிய நம்முடைய துதிகளில் - பிரிய மாயிருக்கிறார் ! (சங். 87 : 2). ஆகவே கர்த்தருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து, அவருடைய துதிகளையெல்லாம் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் நாம் விவரிப்போமாக (சங். 9 : 13). "நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன்" என சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 118 : 19).

நம்முடைய வாசல்கள் தேவனுக்குத் திறந்தவையாகவும் சத்துரு வுக்கு அடைக்கப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். நம்முடைய வாயில் கர்த்தரை உயர்த்தும் துதி உண்டாயிருக்குமாயின், மகிமையின் ராஜா நம் ஜீவியத்தில் உட்பிரவேசித்து, நமக்கு விரோதமாய் எழும்புகிற சத்துருக்களை முறியடிப்பார். "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா ? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்த ராமே" என்று தாவீது பாடுகிறான் (சங். 24 : 7, 8). பல சந்தர்ப்பங்களிலும் தேவன் நமக்காக நம் சத்துருக்களோடு யுத்தம்பண்ண வேண்டுமென்றும், அவர் நமக்காகக் கிரியை செய்து நம் காரியங்களை ஜெயமாக முடியப் பண்ண வேண்டுமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம். அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர் என்பது உண்மையே. என்றாலும் அவர் நமக்காக யுத்தம்பண்ணும்படி நம்முடைய தலைகளை உயர்த்தி நாம் கர்த்தரைத் துதிக்க வேண்டும். 'தலைகளை உயர்த்தித் துதித்தல்' என்பது, நம்முடைய பிரச்சினைகள், சோதனைகளுக்கப்பால் தூரத்தில் தேவன் நமக்கு வைத்திருக்கிற ஜெயத்தை நம் விசுவாசக் கண்களால் தரிசித்து, விசுவாசத்தினால் அதைச் சொந்தமாக்கிக்கொண்டு, அந்த மகத்துவமான ஜெயத்திற்காகக் கர்த்தரைத் துதிப்பதாகும். மாறாக, நம்முடைய பிரச்சினை களையும் அவைகளை எதிர்கொள்வதற்கான நம்முடைய பெலனின்மை யையுமே நாம் பார்த்துக்கொண்டிருப்போமாகில், துதித்தலுக்குப் பதிலாக முறுமுறுப்பும் சோர்வும் நம்மை மேற்கொள்ளும்; நம் சோதனைகளில் நாம் வெற்றிசிறக்க இயலாது. எனவே நாம் கடந்து செல்லுகிற எல்லாப் பாதைகளிலும் தூரப்பார்வையுடன் நம் தலைகளை உயர்த்திக் கர்த்தரை மனப்பூர்வமாய்த் துதிக்கக் கற்றுக்கொள்வோமாக; ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையை நாம் பெற்றுக்கொள்வோமாக. இப்படிப் பட்டவர்கள் தங்கள் ஜீவியத்தில், "நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவை களைக் கட்டி, பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து, தலைமுறை

தலைமுறையாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள்" (ஏசாயா 61 : 3, 4). அருமையானவர்களே! கர்த்தரைத் துதிக்கும்படி நம் வாசல்கள் எப்போதும் திறந்திருப்பதாக. "உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்" என நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 60 : 11). நாம் தேவனிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும்போது மாத்திரமல்ல, நம் வாழ்வில் தீமைபோல் தோன்றுகிறவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது வரும்போதும் - வெளிச்சமான பாதைகளிலும், அந்தகாரமான வேளைகளிலும் - எப்பொழுதும் கர்த்தரைத் துதிக்க வேண்டும். இதிலேதான் மாபெரும் ஜெயத்தின் இரகசியம் அடங்கியிருக்கிறது. யோசபாத் என்னும் யூதாவின் ராஜா தனக்கு விரோதமாய் வந்த மூன்று பெரும் சேனைகளின் முன்னிலையில், யுத்தக்களத்தில் - அந்த இக்கட்டான சூழ்நிலையில் - இந்தத் துதித்தலின் இரகசியத்தை உபயோகித்து மாபெரும் வெற்றியடைந்தான் (II நாளா. 20 : 22). இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்குச் சொல்லப்பட்டிருந்த தேவ ஆலோசனையின்படியே எரிகோவின் மதிலைச் சுற்றிவந்து ஆர்ப்பரித்தபோது அது இடிந்து விழுந்தது! ஜாதிகளின் பலத்த சேனைகளும் ராஜாக்களும் நமக்குக் கீழடங்க வேண்டுமானால் நாம் எப்பொழுதும் கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்று கர்த்தர் நமக்குக் கற்பிக்கிறார். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (I தெச. 5 : 18).

மறுபக்கத்தில், சத்துரு உட்புகாதவாறு, சத்துருவுக்கு நம்முடைய வாசல்கள் எப்பொழுதும் அடைக்கப்பட்டவையாய் இருக்க வேண்டும். சத்துருக்கள் உட்பிரவேசியாதபடிக்கு, "வெயில் ஏறுமட்டும் எருசலேமின் வாசல்கள் திறக்கப்படவேண்டாம்" என நெகேமியா தன் ஜனங்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருந்தான் (நெகே. 7 : 3). "கர்த்தாவே, நான் உமக்குப் புதுப்பாட்டைப் பாடுவேன்; ... சத்துரு உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் இராது" என்று தாவீது பாடுகிறான் (சங். 144 : 9, 14). இங்கு அவன் தன் வாசல்கள் தேவனுக்குத் திறந்தவையாயும் சத்துருவுக்கு அடைக்கப்பட்டவையாயும் இருப்பதை வெளிப்படுத்துகிறான். நாம் கர்த்தரைத் துதிக்கும்போது, சத்துரு நம் ஜீவியத்தில் பிரவேசிக்க வழி இல்லாமற்போகும். "வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்" (எபே. 5 : 4). ஸ்தோத்திரம் செய்யாவிடில் நம்மையறியாமலேயே தகாதவைகள் நம்மை மேற்கொண்டுவிடும். மேலும், நாம் சிந்தையில் வீணராகி, உணர்வில்லாதவர்களாய், இருதயத்தில் இருளடையவும் ஏதுவாகும் என நாம் ரோமர் 1 : 21 - இல் வாசிக்கிறோம். இந்நிலை நம்மில் நீடிக்குமாயின், இவ்வசனத்தைத் தொடர்ந்துள்ள வேத

பகுதியில் கூறப்பட்டிருக்கும் அருவருப்பான பாவங்களும் நம்மை ஆட்கொள்ள ஏதுவாகும். எனவே சத்துரு உட்புகாதவாறு நாம் கர்த்தரைத் துதிப்பதில் கவனமாயிருப்போமாக. மேலும் நாம் கர்த்தரால் உபயோகிக்கப்படும்போது அவரைத் தக்கபடி துதித்து, அவருக்கே உரியதான மகிமையை அவருக்குச் செலுத்தாமற்போவோமாயின், சுய மகிமையைத் தேடுகிறவர்களாய் மாறி, பெருமையின் ஆவி உட்பிரவேசிக்க இடங்கொடுக்கிறவர்களாவோம். ஏரோது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்து இறந்தான் (அப். 12 : 23). நேயரே ! கர்த்தருக்கு உரிய மகிமையைத் தாமதமின்றி அவ்வப்போது கர்த்தருக்கே செலுத்திவிட நாம் கவனமாயிருப்போமாக.

"மூடிக் கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்" என்று திருவசனம் கூறுகிறது (எண். 19 : 15). ஆம்! சத்துருவுக்கு அடைக்கப்பட்டிராமல் திறந்துவைக்கப்பட்டிருக்கும் ஒருவரின் ஜீவியம் தீட்டுப்பட்டுப்போகும். ஆகவேதான், "கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்" என சங்கீதக்காரன் வேண்டுகிறான் (சங். 141 : 3). நம்முடைய வாய் மாத்திரமல்ல, நம்முடைய கண், செவி போன்ற அவயவங்களும் தீட்டுகளுக்கு விலக்கிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். யோபு தன் கண்களோடு உடன்படிக்கைபண்ணி ஜீவித்ததாகவும், அதனால் யாதொரு மாசும் தன் ஜீவியத்தில் ஒட்டிக்கொள்ளாமல் தன்னைக் காத்துக்கொண்டதாகவும் தன்னைக் குறித்துச் சாட்சி பகருகிறான் (யோபு 31 : 1, 7). நம்முடைய கண்கள் அசுத்தமான ஒரு காட்சியைக் காணும்போது, அக்காட்சி கண்களின் வாயிலாக மனதினுள் சென்று பதிந்துவிடுகிறது. அது அங்கேயே தங்கியிருக்க நாம் அனுமதிப்போமென்றால், நாளடைவில் அது நம் கிரியைகளின் வாயிலாக வெளிப்பட்டு, நம் சரீரமும் தீட்டுப்பட ஏதுவாகும். இவ்வாறே நாம் செவிகளினால் கேட்பவைகளும், நாவினால் பிறருடைய குற்றங்களைத் தூற்றுதலும் சிறிது நாட்களுக்குள்ளாக நம்முடைய ஜீவியத்திலும் செயல்படுத்தப்பட்டுவிடக் கூடும். ஒருவனுடைய இருதயத்திற்குள்ளிருந்து புறப்படுகிற பாவங்கள் அவயவங்களின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு, அவனைத் தீட்டுப்படுத்துகின்றன என்று கர்த்தராகிய இயேசு உரைத்திருக்கிறார் (மாற்கு 7 : 21 - 23). பெரும்பான்மையான பாவங்கள் கண்களின் வாயிலாகவே ஒரு மனிதனுக்குள் பிரவேசித்து அவனைத் தீட்டுப்படுத்துகின்றன. எனவே நண்பனே, பாவத்தைத் தூண்டும் திரைப்படக் காட்சிகள், தொலைக்காட்சி, சுவரொட்டிகள், பத்திரிகைகள் போன்றவற்றுக்கு விலகி, நீ "உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" (I தீமோ. 5 : 22). "உன் கண்

உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என்று கர்த்தராகிய இயேசு எவ்வளவு கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்! (மாற்கு 9 : 47). மேலும், "என் தாசனையல்லாமல் குருடன் யார்? நான் அனுப்பிய தூதனையல்லாமல் செவிடன் யார்? ... நீ அநேக காரியங்களைக் கண்டும் கவனியாதிருக்கிறாய்; அவனுக்குச் செவிகளைத் திறந்தாலும் கேளாதே போகிறான்" என்று நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 42 : 19, 20). "அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், ... தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்" என்று கர்த்தருடைய பர்வதத்தில் அவரோடு தங்குகிறவனைக் குறித்துத் தாவீது எடுத்துரைக்கிறான் (சங். 15 : 3). இவ்வாறு சத்துரு உட்பிரவேசியாமல் நாம் நம்மைக் காத்துக்கொள்வோமாயின், குடியோடிப்போகுதலும் இராது - நாம் என்றென்றும் கர்த்தருடைய வீட்டில் நிலைத்திருப்போம். எனவே, பரிசுத்தமானவைகளை நடப்பிக்கும்படி நம் அவயவங்களை நீதியின் ஆயுதங்களாக நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுப்போமாக. நம் அவயவங்கள் அசுத்தத்திற்கும் அநீதிக்கும் மரித்திருக்கிறவைகளாயும், பரிசுத்தத்திற்கும் நீதிக்கும் பிழைத்திருக்கிறவைகளாயும் இருப்பதாக (ரோமர் 6 : 19). "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" என்று திருவசனம் கூறுகிறது (I கொரி. 6 : 20).

மணவாட்டி தன் ஆத்தும நேசரைத் திருப்திப்படுத்தக்கூடிய பலவித அருமையான கனிவகைகளைத் தன் வாசல்களண்டையில் வைத்துக் காத்திருப்பதாகக் கூறுகிறாள்: "நமது வாசல்களண்டையிலே புதியவைகளும் பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு; என் நேசரே! அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன்" (உன். 7 : 13). கர்த்தரைத் துதித்தலாகிய உதடுகளின் கனி மாத்திரமல்ல, மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள், நீதியின் கனிகள், ஆவியின் கனி, சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகள், பரத்திலிருந்து வரும் ஞானத்தினால் உண்டாகும் நற்கனிகள் போன்ற பல ஆவிக்குரிய கனிகளைப் பற்றி வேதாகமம் கூறுகிறது (எபி. 13 : 15 ; மத். 3 : 8 ; பிலி. 1 : 10 ; கலா. 5 : 22 ; கொலோ. 1 : 10 ; யாக். 3 : 17). நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் கர்த்தருக்காகக் கனி கொடுக்கிற அனுபவத்தில் நாளுக்கு நாள் வளர வேண்டும். மணவாட்டி தன் ஜீவியத்தில் கர்த்தருக்காகக் கனி கொடுக்கும் அனுபவத்தில் பெருகுகிறவளாயும், ஆரம்பத்தில் தன்னில் இருந்த

நற்கனிகளாகிய நற்சுபாவங்களைப் பாதுகாத்துக்கொள்கிறவளாயும் இருக்கிறாள். இதையே, 'புதியவைகளும் பழையவைகளுமான சகலவித அருமையான கனிகள்' என அவள் குறிப்பிடுகிறாள். ஆத்தும நேசர் அவளிடம் எப்போது வந்தாலும் அவருக்குக் கொடுக்கத்தக்கதாக, அக்கனிகள் வாசல்களண்டையிலேயே ஆயத்தமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. தேவபிள்ளையே ! கர்த்தராகிய இயேசு பசியுடன் உன் வாழ்வில் கனிகளைத் தேடி வரும்போது நீ அவரை உன் நற்கனிகளால் திருப்திப் படுத்துகிறாயா? அல்லது அவரை ஏமாற்றமடையச் செய்கிறாயா? நாம் சகலவித நற்கனிகளாலும் நிறைந்தவர்களாய், எந்த நேரத்திலும் நம் நேசரை வரவேற்க ஆவலுடனும் ஆயத்தத்துடனும் காத்திருப்போமாக! நம் வாசல்கள் எப்போதும் அவருக்குத் திறந்தவைகளும், அவரைத் திருப்திப்படுத்தி, சந்தோஷப்படுத்துகிறவைகளுமாயிருப்பதாக!

அருமையானவர்களே! நாம் எப்போதும் கர்த்தரை மனப்பூர்வமாய்த் துதிக்கிறவர்களாய், நம்முடைய அவயவங்களைப் பரிசுத்தமாகக் காத்துக்கொண்டு, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவருக்காகக் கனிகொடுக்கிறவர்களாயிருக்கக் கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக. மகிமையின் ராஜா நம் ஜீவியத்தில் பிரவேசித்து மகத்துவமானவைகளைச் செய்யும்படி அவருக்கு நம் வாசல்கள் எப்போதும் திறந்திருப்பதாக!

அதிகாரம் IV

# கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும்

ஒரு நகரம் மதிலையும் வாசல்களையும் உடையதாயிருப்பினும், அது பூட்டப்படாமல் திறந்திருக்குமாயின், சத்துருக்கள் அதற்கு விரோதமாய் வந்து அதை முற்றிகை போடும்போது, அவர்கள் அதற்குள் பிரவேசித்து, அதைச் சேதப்படுத்த வழியுண்டாகும். எனவே ஒரு நகரத்தின் பாதுகாப்புக்கு மதில்களும் வாசல்களும் மாத்திரமல்ல, வாசற்கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும் மிகவும் இன்றியமையாதவையாகும். நெகேமியா விடாமுயற்சியுடன் பிரயாசப்பட்டு, எருசலேமின் அலங்கத்தையும் அதின் வாசல்களையும் கட்டி முடித்தான். எனினும், சத்துருக்கள் இன்னும் அவனுக்கு விரோதமாய்க் கிரியை செய்வதில் ஓயவில்லை. அவன், வாசல்களுக்கு இன்னும் கதவு போடாதிருக்கையில், அவர்கள் தந்திரமாக அவனை அழைப்பித்து அவனுக்குப் பொல்லாப்புச் செய்ய எத்தனம்பண்ணினார்கள் (நெகே. 6 : 2). அவனோ தன் சத்துருக்களின் தந்திரங்களைக் குறித்த பகுத்தறிவும் விழிப்புமுள்ளவனாய் இருந்தமையால், அவர்களை நம்பி இணங்கிவிடவில்லை. அவன் தன் வேலையில் தொடர்ந்து முனைந்து நின்று, வாசல்களுக்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, நகரத்தின் அரணிப்பைப் பலப்படுத்தினான் (நெகே. 7 : 1 - 3). நகரத்துக்குப் பலத்த காவல் உண்டாயிருக்கும்பொருட்டு இக்கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும் வாசல்களில் பொருத்தப்பட்டன (நெகே. 3 : 3, 6, 13, 15).

**கதவுகள்:**

கதவு, **வேறுபிரிதலின் ஜீவியத்தைக்** குறிக்கிறது. நலமானவையும் தகுதியானவையும் உள்ளே ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், தகுதியற்றவை தவிர்க்கப்படுவதற்குமே கதவுகள் பயன்படுத்தப்படுகின்றன. "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" என்றும், "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப்

பிடித்துக்கொள்ளுங்கள்" என்றும் அப். பவுல் எழுதுகிறார் (I கொரி. 6 : 12 ; I தெச. 5 : 21). இவ்விரு வசனங்களிலும், 'எல்லாவற்றையும்' என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஒரு தேவபிள்ளை 'எல்லாவற்றிற்கும்' தன் ஜீவியத்தில் அனுமதியளிக்கலாகாது. நாம் கிறிஸ்துவுக்குள் காக்கப்படும் படியாக வேறுபிரிதலின் ஜீவியம் நமக்கு மிகவும் இன்றியமையாததாகும். மணவாட்டி, 'அடைக்கப்பட்ட தோட்டமும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக் கிறாள்' (உன். 4 : 12). அவள் தன் ஆத்தும நேசருக்கு மட்டுமே சொந்தமா யிருக்கும்படி மற்ற எல்லாவற்றினின்றும் தன்னை வேறுபிரித்துக்கொண்ட வளாயிருக்கிறாள். நாம் பாவங்களினின்றும் பாவிகளினின்றும் உலகத்துக் குரியவைகளினின்றும் வேறுபிரிந்தவர்களாய், கர்த்தருக்கு மாத்திரம் சொந்த மானவர்களாய் இருக்கும்படி அழைக்கப்பட்ட தேவஜனங்களாயிருக் கிறோம். "ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?... அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?... ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலி ருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (II கொரி. 6 : 14, 15, 17). மேலும் தேவ ஜனங்களைக் குறித்து, "இஸ்ரவேல் சுகமாய்த் தனித்து வாசம்பண்ணுவான்" என தேவமனுஷனாகிய மோசே கூறுகிறான் (உபா. 33 : 28). நாம் பாவமும் அசுத்தமும் நிறைந்த உலகத்தில் வசிக்கிறோம். என்றாலும் அவை நம்மைப் பற்றிக்கொள்ளாதிருக்கும்படி நமக்கு வேறுபிரிதலின் ஜீவியம் மிகவும் அவசியமாயிருக்கிறது. "அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை" என்று அப். யோவான் கர்த்த ராகிய இயேசுவைக் குறித்து எழுதுகிறார் (யோவான் 1 : 5). உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாமும், இருளிலே பிரகாசிக்கிறவர்களாயிருக்கும்படி அந்தகாரத்தின் கிரியைகளுக்கு விலகி, நம்மைக் காத்துக்கொள்வோமாக (ரோமர் 13 : 12 - 14). "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படி" நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம் (பிலி. 2 : 15). ஆகவேதான் அப். பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட தேவஜனங்களை நோக்கி, "மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறார் (அப். 2 : 40). தங்கள் ஜீவியங்களில் மாறுபாடுள்ளவர்களோடும், உபதேசங்களில் மாறுபாடுள்ளவர்களோடும் ஐக்கியம் வைத்துக்கொள்வோ மாயின் நாம் தீட்டுப்பட்டுப்போக நேரிடும். இதைக் குறித்தே அப். பவுலும், விசுவாசத்தில் தன் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு, "மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்த வானாகக் காத்துக்கொள்" என்றும், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவர்களைக் குறிப்பிட்டு, "இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு" என்றும் கண்டிப்பாகக் கூறுகிறார் (I தீமோ. 5 : 22 ; 6 : 3 - 5).

நாம் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டுப்போகாதவாறு மாறுபாடுள்ள உபதேசங்களையும் வழிகளையும் சரியாகப் பகுத்தறியக்கூடியவர்களா யிருக்க வேண்டியது அவசியமாகும். நம்முடைய ஜீவியத்தைக் குறித்த தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்ன தென்று பகுத்தறியத்தக்கதாக நம்முடைய மனம் அனுதினமும் புதிதாக்கப் பட வேண்டும் (ரோமர் 12 : 2). அப்படியானால் நாம் சத்துருவினால் வஞ்சிக்கப்பட்டுவிடாமல் காக்கப்படுவோம். இதற்காக, பரிசுத்தமுள்ள தற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும் உள்ள வித்தியாசத்தைச் சரியாகப் பகுத்துப் போதிக்கிற பரிசுத்தவான்களுடைய ஐக்கியம் நமக்கு இன்றியமையாததாகும் (லேவி. 10 : 8 - 11). அப்போஸ்தல ருடைய உபதேசங்களும் போதனைகளும் நம்முடைய ஜீவியத்தைப் பரிசுத்தத்தில் பாதுகாப்பதற்கென்றும் வளர்ப்பதற்கென்றும் தேவனால் அளிக்கப்பட்டவையாகும். மாறாக, மனுஷருடைய பிரமாணங்களும் போதனைகளுமோ உயரிய கருத்துக்களைக் கொண்டிருப்பினும், அவை ஜீவனை உண்டாக்கும் பிரமாணங்கள் அல்ல. அவற்றைக் கைக்கொள்ளத் தேவையான பெலனை அவை மனுஷருக்கு அளிக்கிறதில்லை. ஆனால் தேவனோ நாம் கைக்கொள்ள வேண்டிய சத்திய உபதேசங்களை நமக்கு அளித்திருப்பதுடன், அவற்றின்படி ஜீவிக்கத் தேவையான பெலனையும் கிருபையையும் அவ்வப்போது பகருகிறார். நாம் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களாயின், அவருடைய கற்பனைகள் நமக்குப் பாரமானவை யாயிரா (I யோவான் 5 : 3). “நாம் அவபக்தியையும் லௌகிக இச்சை களையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ள வர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி” கர்த்தரின் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி தேவகிருபை நமக்குப் போதிக்கிறது (தீத்து 2 : 11 - 13). போதனையளிக்கும் தேவகிருபையானது, அப்போதனை களை அனுபவமாக்கவும் நமக்கு உதவி செய்கிறது. ஆகவே நம் ஜீவியத்தில் தேவனுக்கு அந்நியமான எதுவும் பிரவேசியாதவாறு நம் வேறுபிரிதலின் அனுபவத்தை நாம் காத்துக்கொண்டு, சரியான பாதையில் நம்மை வழிநடத்துகிற உண்மையான பரிசுத்தவான்களோடு ஐக்கியங் கொள்வோமாக. பரிசுத்தவான்களின் போதனைகளில் நாம் நிலைத்திருப் போமாகில், நாம் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து நம் ஜீவியத்தைக் காத்துக் கொள்கிறவர்களாயும் இருப்போம்.

**பூட்டுகளும் தாழ்ப்பாள்களும்:**

நெகேமியா, வாசல்களுக்குப் போட்ட பூட்டுகளும் தாழ்ப்பாள் களும் நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்தில் நாம் தேவனோடு செய்கிற பரிசுத்தத்திற்கான உடன்படிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும்

நிழலாட்டமாய் இருக்கின்றன. "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" என்று ஞானி கூறுகிறான் (நீதி. 4 : 23). "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்" (நீதி. 25 : 28). நம் சிந்தனை மண்டலம் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் வேகமாகச் செயல்படக் கூடியது. ஆகவே ஒரு தேவ பிள்ளையைத் திசை திருப்பும்படியாகப் பிசாசானவன் முதலாவதாக அவனது மனதைத் தாக்க முயற்சிக்கிறான். "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ வென்று பயந்திருக்கிறேன்" என்று அப். பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதுகிறார் (II கொரி. 11 : 3). ஆகவே நம் சிந்தனை மண்டலத்தில் பிசாசானவன் பிரவேசியாதபடிக்கு, நாம் தேவசமுகத்தில் இருந்து பரிசுத்தத்திற்கான உடன்படிக்கைகளும் தீர்மானங்களும் செய்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் சத்தியத்தினால் நம்முடைய மனதின் அரை கட்டப்பட்டதாகவுமிருக்க வேண்டும் (எபே. 6 : 14).

**உடன்படிக்கை** என்பது இருவருக்கிடையேயுள்ள உறுதி ஆணை யாகும். "யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்த தினால், அவனும் இவனும் உடன்படிக்கைபண்ணிக்கொண்டார்கள்" (I சாமு. 18 : 3). கிறிஸ்துவுக்குச் சொந்தமாயிருக்கும்படி அவரால் மீட்கப் பட்டிருக்கிற நாமும் இவ்விதமாகவே அவருடன் ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்திருக்கிறோம். கிறிஸ்துவுக்கும் நமக்குமிடையேயுள்ள இந்த உடன்படிக்கையை ஒரு விவாக உடன்படிக்கைக்கு ஒப்பிட்டு அப். பவுல் எழுதுகிறார் (எபே. 5 : 32 ; ரோமர் 7 : 1 - 4). "நீங்கள்... கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்து வின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (ரோமர் 7 : 4). அவருடையவர்களாகிய நாம், அவரை நம் முழு இருத யத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழுப் பலத்தோடும் நேசிப்போம் என்று அவரோடு உடன்படிக்கைபண்ணி, அதில் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த உடன்படிக்கை நம்மை அவருக்கே உரியவர்களாகக் காத்துக்கொள்கிறது. "பலியினாலே என் னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங். 50 : 5) என அவர் தம்முடையவர்களைச் சொந்தம்பாராட்டி அழைக்கும் நாளில் நாமும் அவருக்கு எதிர்கொண்டு போகும்படி, அவரோடுள்ள நம் உடன்படிக்கைகளில் நம்மை உறுதிப் படுத்திக்கொள்வோமாக.

மேலும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் பாதுகாப்புக்குத் **தீர்மானங்கள்** இன்றியமையாதவையாயிருக்கின்றன. அந்நிய தேசமாகிய

எகிப்தில் இருந்த வாலிபனாகிய யோசேப்பு பரிசுத்தத்திற்கான உறுதியான தீர்மானமுடையவனாய், பாவத்திற்கு விலகியோடி தன்னைக் காத்துக் கொண்டான் (ஆதி. 39 : 9). அவ்வாறே அந்நிய தேசமாகிய பாபிலோனில் இருந்த நான்கு யூத வாலிபர்கள், சில ஆவிக்குரிய தீர்மானங்களைச் செய்து, அவற்றில் உறுதியாயிருந்து, தங்களைக் கர்த்தருக்குரியவர்களாகக் காத்துக்கொண்டனர். தானியேல், ராஜாவின் போஜனத்தினாலும் அவன் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகா தென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டான் (தானி. 1 : 8). மேலும், பின்னாட்களில் முப்பது நாளளவும் ராஜாவைத் தவிர வேறு யாரையாகிலும் நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறவன் சிங்கங்களின் கெபியில் போடப்படுவான் என்ற ஒரு மாறாத சட்டம் தேசத்தில் பிறந்தபோது, அவனோ தான் தினம் மூன்று வேளையும் செய்யும்படி தீர்மானித்திருந்த ஜெபத்தை நிறுத்தி வைக்கவில்லை ! (தானி. 6 : 10). இவ்வாறு தன் தீர்மானங்களில் உறுதியாயிருந்த தானியேலைச் சிங்கங்கள் சேதப்படுத்த முடியவில்லை ! அவன் ராஜாவினால் கனம்பண்ணப் பட்டான். அவனுடைய நண்பர்கள், தேவன் விடுவிக்காமற்போனாலும் ராஜா நிறுத்திய பொற்சிலையைத் தாங்கள் வணங்குவதில்லை என்ற உறுதியான தீர்மானமுள்ளவர்களாயிருந்தனர் (தானி. 3 : 18). அவர்கள் தங்கள் தீர்மானத்தில் உறுதியாயிருந்தமையால் ஏழு மடங்கு சூடாக்கப் பட்டிருந்த சூளையின் அக்கினி அவர்களைச் சுட்டெரிக்கக் கூடாமற் போயிற்று! அக்கினியின் மணமும் அவர்கள் மேல் வீசவில்லை ! நாமும் தேவனோடு செய்யும் உறுதியான உடன்படிக்கைகளினாலும் தீர்மானங் களினாலும் நம் ஜீவியத்தைக் காத்துக்கொள்வோமாக.

"சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்; அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல்பண்ணு, அரையைக் கெட்டியாய்க் கட்டிக் கொள், உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து" என்று கர்த்தர் உரைக்கிறார் (நாகூம் 2 : 1). நம் இரட்சிப்பின் அனுபவங்களைக் காத்துக்கொண்ட வர்களாய், கர்த்தரை எப்போதும் எல்லாவற்றுக்காகவும் துதிக்கிறவர்களாய், நம் அவயவங்களைப் பரிசுத்தத்தில் காத்துக்கொண்டு, பரிசுத்தவான்களின் உபதேசங்களில் நிலைத்திருந்து, சத்தியம் என்னும் கச்சையினால் நம் மனதின் அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு, பரிசுத்தத்திற்கான தீர்மானங்களிலும் உடன்படிக்கைகளிலும் உறுதியுள்ளவர்களாய் நாம் ஜீவிப்போமாயின், நம்முடைய ஜீவியமாகிய பட்டணமானது, மதில்களும் வாசல்களும் கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும் உள்ளதாய், சத்துரு உட்பிரவேசிக்கக் கூடாதவண்ணம் பலமாகப் பாதுகாக்கப்பட்டி ருக்கும். இல்லையேல், "நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிற ... தேசத்துக்கு விரோதமாய்ப் போவேன்; ...

அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை" (எசே. 38 : 12) என்று கூறிக்கொண்டு சத்துரு நம் ஜீவியத்திற்கு விரோதமாய் வந்து அதைப் பாழாக்கிப்போடுவான். ஆசா யூதாவின் ராஜாவானபோது, தன் தேசத்தின் பாதுகாப்பைக் குறித்து மிகுந்த கவனமுள்ளவனாய், யூதா ஜனங்களை நோக்கி, "தேசம் நமக்கு முன்பாக அமர்ந்திருக்கையில், நாம் இந்தப் பட்டணங்களைக் கட்டி, அவைகளுக்கு அலங்கங்கள், கோபுரங்கள், வாசல்கள் உண்டுபண்ணி, தாழ்ப்பாள் போட்டுப் பலப்படுத்துவோமாக ... என்றான்". அவர்கள் அப்படியே கட்டினார்கள் (II நாளா. 14 : 7). நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாகச் சத்துருவின் தாக்குதல்கள் அல்லது சோதனைகள் உண்டான பின்பு அல்ல, அதற்கு முன்னதாகவே நாம் அதன் பாதுகாப்பைக் குறித்துக் கவனமுள்ளவர்களாயிருந்து, சத்துருவுக்கு விரோதமாய் நம் காவலைப் பலப்படுத்திக் கொள்வோமாக. எல்லாக் காவலோடும் நாம் நம்மைக் காத்துக்கொள்வோமாக.

**அதிகாரம் V**

# வாசல் காவலாளர்

அலங்கத்தின் வேலை நடந்தேறிவந்த நாட்களில் நெகேமியா இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தான் என நாம் முன்பு கண்டோம். அலங்கமும் வாசல்களும் கட்டி முடிக்கப்பட்டு, கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும் அவற்றில் இணைக்கப்பட்ட பின்னரும் நெகேமியா எருசலேமின் காவல் விசாரணைக்கென்று சிலரைப் பிரத்தியேகமாக நியமித்தான். "நான் என் சகோதரனாகிய ஆனானியையும், அநேகரைப்பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்த அரமனைத்தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசாரணைக்கு ஏற்படுத்தினேன்" என அவன் கூறுகிறான் (நெகே. 7 : 2). அவர்களுடைய உத்தரவாதத்தின் கீழ், எருசலேமின் குடிகளில் வாசல் காவலாளராகச் சிலர் குறிக்கப்பட்டு, அதின் வாசல்களைக் காத்து வந்தனர் (வச. 3).

நெகேமியா, நகரத்தின் பாதுகாப்புக்கென்று தான் செய்து முடித்த வேலைகளில் மாத்திரம் திருப்தியடைந்துவிடாமல், நகரப் பாதுகாப்பில் மிகுந்த கவனமுள்ளவனாய், காவல் விசாரணைக்கென்று ஒரு கூட்டம் பேரை வேறுபிரித்து நியமித்தான். தேவ ஊழியர்கள் சபையின் பாதுகாப்பைக் குறித்து எவ்வளவு விழிப்பும் கவனமுமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதை இது காண்பிக்கிறது. வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் தனக்கு நேரிட்ட சோதனைகளோடும் கர்த்தரை உத்தமமாய்ச் சேவித்துவந்த அப். பவுல், ஆவியிலே கட்டுண்டவராய் எருசலேமுக்குச் செல்லும் வழியில், எபேசுவிலிருந்து சபையின் மூப்பரை அழைப்பித்து, இறுதியாகப் பல ஆலோசனைகளை அவர்களுக்குக் கூறினார். அவற்றில் குறிப்பாக அவர், "உங்களைக்குறித்தும், ... பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்றும், "விழித்திருங்கள்" என்றும் அவர்களை எச்சரித்தார் (அப். 20 : 28, 31). சபையைக்

கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தும் வரை அதைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அவர் அதிகக் கவனமும் வைராக் கியமும் உள்ளவராய் இருந்தார்.

**தேவ ஆலோசனைகளை அறிவித்தல்:**

சபை பாதுகாக்கப்படும்படி அதற்குக் 'காவலாளர்' அவசியமா யிருக்கின்றனர். "மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத் தாருக்குக் காவற்காரனாக வைத்தேன்; ஆகையால் நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக" என்று தேவன் தீர்க்கதரிசியாகிய எசேக்கியேலுக்குக் கற்பித்தார் (எசே. 33 : 7). தேவசமுகத்தில் காத்திருந்து, அவருடைய சத்தத்தைக் கேட்டு, தேவஜனங்களை எச்சரிப்பது சபையின் காவற்காரராகிய தேவ ஊழியர் களின் தலையாய கடமையாகும். அவர்கள் தேவனுடைய ஆலோசனை களில் ஒன்றையும் மறைத்துவைக்காமல், சத்தியத்தை முழுமையாக ஜனங்களுக்குப் போதிக்க வேண்டியவர்களாவர். அவர்கள் அவற்றில் சிலவற்றை மறைத்து, சொல்ல வேண்டியவற்றை முழுமையாகச் சொல்லாமற்போனால், தங்கள் கைகளில் ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தில் உண்மையற்றவர்களாயிருப்பதால், அவர்களே தேவனுக்குக் கணக்கொப்பு விக்க வேண்டியதாயிருக்கும். "காவற்காரன் பட்டயம் வருவதைக் கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும், பட்டயம் வந்து அவர்களில் யாதொருவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், ... அவன் இரத்தப்பழியைக் காவற்காரன் கையிலே கேட்பேன்" என்று தேவன் தம் ஊழியராகிய காவற்காரரை எச்சரிக்கிறார் (வச. 6). இன்று துப்புரவான பூரண சத்தியத்தை ஜனங்களுக்குப் போதியாமல், சிலவற்றை மறைத்தும் கலப்பாகவும் போதிக்கிற பலர் கிறிஸ்தவ உலகில் உண்டு. இவர்களைக் "கபடமுள்ள வேலையாட்கள்" என வேதாகமம் அழைக்கிறது (II கொரி. 11 : 13). தேவஜனங்களைச் சரியான உபதேசத்தில் பாதுகாத்து வளர்க்கும்படி அப். பவுல் தன் ஊழிய நாட்களெல்லாம் அரும் பாடுபட்டார். "தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறே(ன்)" என்று அவர் தன் ஊழியத்தின் கடைசி நாட்களை நெருங்குகையில் சாட்சி பகருகிறார் (அப். 20 : 26, 27). துர் உபதேசங்களால் ஜனங்கள் இழுப்புண்டுபோவதை அவரால் சகித்துக்கொள்ள இயல வில்லை. "பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியா திருங்கள்" என அவர் ஜனங்களைக் கண்டிப்பாக எச்சரித்துவந்தார் (எபி. 13 : 9). முடிவு வரை அவர் சபைக்குச் சிறந்ததோர் காவலாளனாகத்

திகழ்ந்தார். இக்கடைசி நாட்களில், தேவ ஆலோசனைகளை உள்ளபடி அவ்வப்போது தேவஜனங்களுக்கு அறிவித்து, சபையைப் பாதுகாக்கிற உண்மையான காவற்காரரைத் தேவன் எழுப்பும்படி நாம் வேண்டிக் கொள்வோமாக!

**விழித்திருத்தல்:**

ஒரு காவற்காரனின் முக்கியமான பண்பு 'விழிப்பு' ஆகும். முற்காலங்களில், மதில் சூழ்ந்த பட்டணங்களின் அலங்கத்தின் மேல், பல கோபுரங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன. அவை 'காவற் கோபுரங்கள்' (watch towers) என அழைக்கப்பட்டன. ஆசா ராஜாவும் தன் தேசத்துப் பட்டணங்களின் அலங்கங்களில் கோபுரங்களைக் கட்டினதாகச் சென்ற அதிகாரத்தில் நாம் கண்டோம் (II நாளா. 14 : 7). இவை காவற்காரர் தங்கியிருந்து தேசத்தைக் காவல் புரிவதற்கென்று கட்டப்பட்டவையாகும். ஒரு பட்டணத்தின் அலங்கத்தின் மீதுள்ள கோபுரத்தின் மேல் நிற்கிற காவற்காரன், சத்துரு சடுதியாக வந்து தன் தேசத்தைத் தாக்காமல் அதைக் காக்கும்படி இரவும் பகலும் விழிப்பாயிருக்க வேண்டும். அவன், தேசத்திற்கு விரோதமாய் வரும் சத்துருக்களைத் தூரத்திலேயே கண்டு, செய்தியை உடனடியாக ராஜா வுக்குத் தெரியப்படுத்தி, ஜனங்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்காக அவன் தூரதரிசனமுள்ளவனாயிருக்க வேண்டியதும் அவசியம். அவன் அசதியாயிருந்துவிட்டால் தேசத்திற்குப் பெரும் ஆபத்து நேரிடும். மேலும் அவன் இராக்காலங்களில், "இரவு எவ்வளவு சென்றது" என்பதையும் ஜனங்களுக்குத் தெரிவித்து உணர்த்த வேண்டும் (ஏசாயா 21 : 11, 12). ஆகவேதான் அவனைக் குறித்து, "கோபுரத்தின்மேல் **நிற்கிற** ஜாமக்காரன்" என எழுதப்பட்டுள்ளது (II இராஜா. 9 : 17). அவன் 'நின்று கொண்டிருப்பது', அவனுடைய விழிப்பையும், ஜாக்கிரதையையும், கவனமான கண்காணிப்பையும் வெளிப்படுத்துகிறது. தன் கவலை யீனத்தினால் பட்டணத்திற்கு வரும் எந்த ஆபத்திற்கும் இழப்பிற்கும் அவனே உத்தரவாதம்பண்ண வேண்டியவனாயிருப்பதால், அவன் மிகுந்த விழிப்போடு தன் கடமையை நிறைவேற்றுகிறான். ஏதோ ஓரிரு நாட்களுக்கு மாத்திரம் அல்ல, அவன் காவலாளனாயிருக்கும் கால மெல்லாம், எப்பொழுதும், என்றைக்கும் விழிப்புள்ளவனாயிருக்க வேண்டும். "எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல்முழுதும் இரா முழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடு கிறேன்" என்பது கர்த்தரின் வாக்குத்தத்தம் (ஏசாயா 62 : 6). இவர்கள், இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக் காரராவர் (சங். 134 : 1). இவர்கள் எப்போதும் ஜெபத்தில் விழித்திருக்

கிறார்கள்; ஜெபத்தில் போராடுகிறவர்களின் கைகளில்தான் தேவன் தம் சபையைப் பாதுகாக்கும் உத்தரவாதத்தைக் கொடுக்க இயலும். "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிற வர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், ... அவர்களுக்குக் கீழ்ப் படிந்து அடங்குங்கள்" என நாம் வாசிக்கிறோமே! (எபி. 13 : 17). நமக்காகத் திறப்பின் வாயிலே விழிப்புடன் நிற்கிற இப்படிப்பட்ட பரிசுத்தவான்களுக்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருப் போமாக.

கர்த்தராகிய இயேசு தாம் கூறிய உவமை ஒன்றில் இவ்விதமாகக் குறிப்பிடுகிறார்: "ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது, ... விழித்திருக்கும்படிக்குக் காவல் காக்கிறவனுக்குக் கற்பிப்பான். அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித் திருங்கள்" (மாற்கு 13 : 34 - 37). இவ்வேதபகுதியில், அவர் காவற்காரராகிய தேவ ஊழியர்களிடம் விழித்திருக்கும்படி கூறத் தொடங்கி, முடிவில், தேவபிள்ளைகள் அனைவரையுமே விழித்திருக்கும்படி எச்சரிக்கிறார். "ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்" (I தெச. 5 : 6). நாம் ஸ்தோத் திரத்துடனே ஜெபத்தில் விழித்திருப்போமாக (கொலோ. 4 : 2); நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் அசதியை உதறிவிட்டு எழும்புவோமாக. "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்" என திருவசனம் கூறுகிறது (எபே. 5 : 14). அசதியும் நிர்விசாரமும் நாளடைவில் கனநித்திரையாகி, பின்பு ஆவிக்குரிய மரணத்தில் முடிவடையும். ஆகவேதான், "நீ விழித்துக் கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து" என்று ஆவியானவர் சர்தை சபையை எச்சரிக்கிறார் (வெளி. 3 : 2). நம் ஆவிக் குரிய ஜீவியத்தில், நம்முடைய நிர்விசாரத்தினாலும் கவலையீனத்தி னாலும் நாளுக்குநாள் மரித்துப்போய்க்கொண்டிருக்கிற உன்னத அனு பவங்களை மீண்டும் உயிர்ப்பிக்கும்படி, நாம் விழித்துக்கொண்டு, தேவனை நோக்கிக் கெஞ்சுவோமாக. நாம் விழித்திராவிடில், அவர் திருடனைப் போல் வரும்போது, நம் ஜீவியத்தின் பரிசுத்த வஸ்திரங் களை இழந்தவர்களாய் அவர்முன் வெட்கப்பட்டுப்போக வேண்டிய தாகும் (வெளி. 16 : 15). ஆகவே தேவ ஊழியர்களாகிய 'சபையின்

காவற்காரர்' மாத்திரமல்ல, ஒவ்வொரு தேவபிள்ளையும் தன் தனிப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்தைக் குறித்து விழிப்பும் கவனமுமுள்ளவனாயிருக்க வேண்டியது அவசியமாகும்.

நாம் விழித்துக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இராமற் போனால், சத்துருவுக்கு இரையாக நேரிடும். ஆகவேதான், "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" என அப். பேதுரு நம்மை எச்சரிக்கிறார் (I பேதுரு 5 : 8). உலகப் பிரசித்தி பெற்ற பாபிலோனியப் பேரரசின் திடீர் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? அப்பேரரசின் கடைசி மன்னனான பெல்ஷாத்சார் ஓரிரவு தன் பேரரசின் அதிபதிகள், பிரபுக்கள், சேவகர் அனைவருடனும் ஒரு பெரும் விருந்து கொண்டாடி மகிழ்ந்துகொண்டிருந்தான். ராஜா முதல் வாயிற்காப்போன் வரை அனைவரும் மதுபானம் பண்ணி, மெய் மறந்து உல்லாசத்தில் மூழ்கியிருந்தனர். அலங்கத்தின் வாயிற்காவலரும் மற்றவர்களும் மதுபானத்தினால் மயங்கிக் களித்திருந்தமையால், அந்த இரவு பட்டணத்து அலங்க வாசலின் பெரிய வெண்கலக் கதவுகளைப் பூட்டத் தவறிவிட்டனர். சத்துருக்கள் இத்தருணத்தைப் பயன்படுத்தி, யுத்தம் ஏதுமின்றியே எளிதாகத் தேசத்தினுள் நுழைந்துவிட்டனர்! வன்மை மிக்க மன்னனும், மேன்மை வாய்ந்த அதிபதிகளும், வலிய இராணுவமும், ஒப்பற்ற அரசாங்கமும், பலத்த அலங்கங்களும், வாசல் காவலாளரும் - எல்லாம் இருந்தும் அந்த மாபெரும் வல்லரசு சற்று நேர இடைவெளியில் கவிழ்க்கப்பட்டுப் போயிற்று ! கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான் ! (தானி. 5 : 30). இச்சம்பவத்தைச் சிந்திக்குங்கால் நம் மெய் சிலிர்க்கிறதன்றோ? எத்தனையோ ஆண்டுகளாகத் தன் கடமையில் கவனமாயிருந்த வாயிற்காவலன், ஓரிரவு கவனமாயிருக்கத் தவறிவிட்டதால் தன் தேசம் முழுமைக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பை வருவித்துவிட்டான் ! ஓர் ஒப்புயர்வற்ற வல்லரசின் வீழ்ச்சிக்குக் காரணம் அவனுடைய சொற்பக் கவலையீனமாயிற்றே ! நண்பனே ! சத்துருவின் கண்ணிகளில் சிக்கிக்கொள்ளாதவாறு தெளிந்த புத்தியுள்ளவனாயிருந்து உன் ஆவிக்குரிய ஜீவியத்தைக் காத்துக்கொள். நிர்விசாரத்துடன் சுகபோகமாய் வாழ்கிறவர்களை அழிக்கும்படி சத்துருவானவன் திட்டமிட்டுக் கிரியை செய்கிறான் என்பதை மறந்துவிடாதே ! (எசே. 38 : 12). "சுகஜீவிகளே, நடுங்குங்கள்; நிர்விசாரிகளே, தத்தளியுங்கள்; ... அரையில் இரட்டைக் கட்டிக்கொள்ளுங்கள். ... அரமனை பாழாக விடப்படும், ஜனம் நிறைந்த நகரம் வெறுமையாகும், மேடும் துருக்கமும் என்றைக்கும்

கெபிகளாகும்" என தீர்க்கதரிசி உரைக்கிறான் (ஏசாயா 32 : 11, 14). "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" (I தீமோ. 5 : 6). ஆகவே நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஞானமுள்ளவர் களைப் போல கவனமாய் நடந்துகொள்வோமாக.

**பாக்கியவான்கள்:**

"என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்" என்றும், "எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம் பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்" என்றும் நாம் வாசிக்கிறோம் (நீதி. 8 : 34 ; 1 : 33). இது, தேவசமுகத்தில் காத்திருந்து, தேவ சத்தம் கேட்கிற ஒரு மனுஷனின் அனுபவமாகும். அவன் கடும் புயல்களின் மத்தியிலும் தன் மனதில் இளைப்பாறுதலுள்ளவனாயிருக் கிறான். கடும் சோதனைகளும் துன்பங்களும் அவனுடைய உள்ளான அமைதியை, அமரிக்கையைப் பாதிக்கிறதில்லை. உலக மனுஷரைப் பதறச் செய்யும் சூழ்நிலைகள், தேவசமுகத்தில் காத்திருக்கிற ஒரு தேவமனுஷனைச் சந்திக்கும்போது, அவை அவனைச் சற்றும் அசைக்க முடிகிறதில்லை. இதனாலேயே அவனைப் பாக்கியவான் என வேதாகமம் அழைக்கிறது. வாழ்க்கையில் பல போராட்டங்களையும் கொந்தளிப்பு களையும் சந்திக்கும் நண்பனே ! நீ அமைதியையும் இளைப்பாறுதலையும் நாடி வேறு எங்கும் அலைந்து திரிய வேண்டாம். உன் விகற்பமான சூழ்நிலைகளின் மத்தியிலேயே நீ இளைப்பாறக்கூடிய நல்லதோர் இடம் உனக்கு உண்டு. அதுவே தேவசமுகம் ! அவர் பாதத்தில் உனக்கு இளைப்பாறுதலும், பரிபூரண ஆனந்தமும், நித்திய பேரின்பமும் உண்டு. ஒருவராலும், ஒன்றினாலும் கலைக்கக்கூடாத மெய்யான இளைப்பாறு தலைப் பெற்றனுபவிக்கும்படி நித்தம் விழிப்புடன் அவர் சமுகத்தில் காத்திரு. அவர்தம் அமர்ந்த மெல்லிய சத்தமானது, துவண்டுபோயி ருக்கும் உன் ஆத்துமாவை உயிர்ப்பிக்கும். உன் ஆவிக்குரிய யாத்திரையைத் தொடர அது உன்னைப் பெலப்படுத்தும் !

ஒருமுறை யாக்கோபு தன் பெற்றோருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, தனிமையாகப் பிரயாணம்பண்ணிக்கொண்டிருந்தான். அவன் வழியில் ஓரிடத்தில் வந்தபோது, சூரியன் அஸ்தமித்து, இருள் அவனைச் சூழ்ந்துகொண்டது. அது வரை தன் பெற்றோருடன் எப்போதும் கூடாரத் திலேயே தங்கியிருந்த குணசாலியும் கூடாரவாசியுமான அவனுக்கு, இது முற்றிலும் புதியதொரு பாதையாகவே இருந்தது. வேட்டைக்கார னாகிய ஏசாவைப் போல அவனுக்கு வனங்களின் சூழலோடு யாதொரு பழக்கமும் இருக்கவில்லை. அவன் தன் பிரயாணத்தைத் தொடரக் கூடாதபடி எங்கும் காரிருள் சூழ்ந்துகொள்ளவே, அவன் அவ்விடத்துக்

கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின் கீழ் வைத்துப் படுத்துக் கொண்டான். அன்றிரவு சொப்பனத்தில் தேவன் அவனுக்குத் தரிசனமாகி, அவனோடு பேசினார். அவன் எழுந்திருந்து, "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் ... இது வானத்தின் வாசல்" என்றான் (ஆதி. 28 : 16, 17). நண்பனே ! உன் வாழ்க்கையில் சூரியன் அஸ்தமித்தது போல் தோன்றும்போது, இருளின் வல்லமைகள் உன்னோடு போராடும்போது, தன்னந்தனிமையாய்ப் புதிய பாதைகளைக் கடக்க வேண்டியது வரும்போது, நீ திகையாதே ! அப்பாதைகளில் உன்னைச் சந்தித்து உன்னைத் திடப்படுத்தும்படி உன் தேவன் உனக்கு முன்னதாகவே அங்கு சென்று உனக்காகக் காத்து நிற்கிறார். "நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்" (ஏசாயா 45 : 2) என்றுரைத்தவர் உனக்கு முன்னாகக் கடந்து சென்று, உனக்காகக் கிரியை செய்துகொண்டிருக்கிறார். யாக்கோபு கல்லைத் தலையணையாக்கிக்கொண்டது, சோதனைகளின் மத்தியில் கர்த்தருக்குள் இளைப்பாறும் அனுபவத்தைக் குறிக்கிறது. உன் சோதனைகளின் மத்தியில் நீ அவரது சமுகத்தில் காத்திருப்பாயாகில், அவர் உன்னைத் தைரியப்படுத்துவார். அப்போது, "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்" என்று யாக்கோபு உணர்ந்து அறிக்கையிட்டது போல, நீ கடந்து செல்லும் இந்தச் சூழ்நிலைகளின் மத்தியில் - இந்தப் பாதையில் - கர்த்தர் உன்னோடு இருக்கிறார் என்பதை நீ உணர்ந்துகொள்வாய். உன் தனிமையான, இருள் சூழ்ந்த பாதை, உனக்கு இளைப்பாறுதல் அளிக்கும் வானத்தின் வாசலாக மாறும் ! இப்புதிய, உள்ளான தரிசனத்தினிமித்தம் சந்தோஷத்துடனும் திட நம்பிக்கையுடனும் நீ உன் பயணத்தைத் தொடருவாய். ஆம் ! விபரீதமான சூழ்நிலைகளிலும் கர்த்தரின் வாசற்படியில் காத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள் ! இதை உணர்ந்த சங்கீதக்காரன், "ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" என்கிறான் (சங். 84 : 10). தேவவசனத்தினிமித்தம் நாடுகடத்தப்பட்டு, பத்மு தீவில் தனிமையாய் விடப்பட்டிருந்த அப்போஸ்தலனாகிய யோவானுங்கூட தேவசமுகத்தில் தரித்திருந்து, கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளாகி, மனுஷ உதவியற்ற அப்புதிய பாதையை வானத்தின் வாசலாக மாற்றிக்கொண்டார். வானம் திறக்கப்பட்டு, அவர் தேவதரிசனங்களைக் கண்டார். "இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்" என அவர் எழுதுகிறார் (வெளி. 4 : 1 ; 19 : 11). மனித சஞ்சாரமற்ற தீவினில் ஏகனாய்த் தங்கியிருந்தபோது அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தரிசித்தார்! பல மறைபொருள்கள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டன. நாமும் எல்லாச் சூழ்நிலைகளிலும் கர்த்தரின் பாதத்தில் விழிப்புடன் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவோமாக.

கர்த்தரின் வாசற்படியில் 'நித்தம்' விழித்திருந்து காத்திருக்கிற மனுஷர் பாக்கியவான்கள்! நாம் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் மாத்திரமல்ல, முடிவுபரியந்தம், நம் வாழ்நாளெல்லாம் விழிப்புடன் காத்திருக்கும் அனுபவம் நமக்கு இன்றியமையாததாகும். ஏனெனில், "நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று" (ரோமர் 13 : 11, 12). நீதியின் சூரியனாகிய நம் மணவாளன் வானில் தோன்றும் நேரம் சமீபமாயிற்று! ஆகவே நாம் நம்முடைய நித்திரையை விட்டு விழித்தெழும்புவோம்! "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தி யிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் இரண்டாம் ஜாமத் திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து, அவர்கள் அப்படியே இருக்கக்கண்டால், அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள்" (லூக்கா 12 : 37, 38). நாம் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வரும்போது, நாமும் இந்தப் 'பாக்கியவான்களின்' கூட்டத்தில் காணப்படுவோமா?

**கனம்பண்ணப்படுதல்:**

ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருந்த ஒருவன், ராஜா வுக்கு இரண்டாவதானவனாய் உயர்த்தப்பட்டதைக் குறித்த ஒரு சரித் திரத்தை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். அவன் பெயர் மொர்தெகாய் என்பதாகும். அவன் ராஜாவின் அரமனை வாசலிலிருந்த ராஜாவின் ஊழியக்காரரில் ஒருவனாயிருந்தான் என வேதபண்டிதர்கள் கூறுகின்றனர் (எஸ்தர் 2 : 5 ; 3 : 2, 3). அவன் ராஜ அரமனையின் வாசலில் இருந்ததாக எஸ்தரின் புஸ்தகத்தில் ஆறு முறை கூறப்பட்டுள்ளது. ராஜாவுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட சதி ஆலோசனையை அவன் ராஜாவுக்குத் தெரியப்படுத்தி, அவனைப் பாதுகாத்தான். இதற்காக அந்தச் சமயத்தில் அவனுக்கு எந்த மேன்மையும் செய்யப்படவில்லை. மாறாக, சத்துரு வாகிய ஆமான், அவன் தன்னைக் கனம்பண்ணவில்லை என்ற காரணத் தினால் அவனையும் அவன் நிமித்தமாக அவனுடைய குலத்தாரான யூதர்கள் அனைவரையும் கொல்லும்படி திட்டமிட்டு, ராஜாவின் பேரால் அதற்கான கட்டளையையும் பிறப்பித்தான். என்றாலும், ஏற்ற வேளையில் தேவன் செயல்பட்டார்! தேவன் குறித்திருந்த வேளை வந்தபோதோ, அச்சத்துருவைக் கொண்டே ராஜா அவனை உயர்த்தி, கனப்படுத் தினான். "தன் எஜமானைக் காக்கிறவன் கனமடைவான்" (நீதி. 27 : 18). அல்லேலூயா!

கர்த்தரின் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, அவருடைய கதவு நிலையருகே காத்திருக்கும் தேவபிள்ளையே! உன் ராஜாவாகிய இயேசு வின் நாமத்தினிமித்தம் நீ படுகிற பிரயாசங்களைத் தேவன் மறப்பதில்லை. "உங்கள் கிரியையையும், ... தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே" (எபி. 6 : 10). மொர்தெகாய் செய்த நற்கிரியை எண்ணப்படாமற்போனது போல தோன்றினும், என்றைக்கும் அது மறக்கப்பட்டிருக்கவில்லை! ஏற்றவேளையில் அது நினைவூட்டப்பட்டது! ஓரிரவு தேவன் ராஜாவுக்கு நித்திரையை அனுமதிக்கவில்லை. மொர்தெகாய்க்குக் கனமும் மேன்மை யும் செய்யப்படவில்லை என்பது ராஜாவுக்கு நினைவூட்டப்படும்படி தேவன் கிரியை செய்தார். மொர்தெகாயைத் தூக்கிலிட அனுமதி பெறும் படி, முன்னேற்பாடுகளுடன் அங்கு வந்திருந்த ஆமானுக்கு ராஜா ஓர் அவசரக் கட்டளை கொடுத்து அனுப்பினான்! ராஜா உடுத்திக்கொள்ளுகிற ராஜவஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும், அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்பட்டு, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்த பின், அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகர வீதியில் வலம்வரும்படி செய்து, "ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும்" என்று அவனுக்கு முன்பாகக் கூறப்பட வேண்டும். இதுவே ராஜ கட்டளை! 'ராஜா கனம்பண்ண விரும்புகிற' அந்த மனுஷன் யார்? ராஜா இக்கட்டளையை முன்னதாகக் கூறிவிட்டு, யார் அந்த மனிதன் என்பதைப் பின்பு நிதானமாகக் கூறுகிறான் - "ராஜ அரமனையின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்" என்று! (எஸ்தர் 6 : 10). ராஜ அரமனையின் வாசல்தான் அவனுடைய முகவரி!

மேற்கூறப்பட்ட "எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார்" என்ற ராஜாவின் ஆணை, உறுதியும் கண்டிப்புமுள்ளதாய் இருந்ததால் ஆமான் மறுமொழியொன்றும் பேச வழியின்றி, அவற்றில் ஒன்றும் தவறாமல் அப்படியே செய்து முடிக்க வேண்டியதாயிற்று. 'வாசலிலிருந்த' தேவ மனுஷன் ஏற்ற வேளையில் கனம்பண்ணப்பட்டான்! எப்போதும் கர்த்தரின் வாசற்படியில் காத்திருக்கிறவர்கள் அவரால் கனம்பண்ணப் படுவார்கள். அவர்கள் மனுஷரைப் பிரியப்படுத்தவோ, முகஸ்துதி செய்யவோ முன்வராதிருப்பதினால் பல போராட்டங்களைச் சந்திக்கக் கூடும். ராஜாதி ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷர், அவரால் கனம்பண்ணப்படுவதற்கு முன்னதாகத் தங்கள் வாழ்வில் கடும் எதிர்ப்பு களைச் சந்திக்க வேண்டியதிருக்கலாம்; சோதனைகளின் உச்சகட்டத்தை யும் அடையலாம்; தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையும் அவர் களுக்கு அற்றுப்போகலாம்; என்றாலும் அது முடிவு அல்ல! அது

ஜெயகரமான முடிவிற்கான ஒரு வழி மாத்திரமே என்பதை நாம் நினைவிற்கொள்ளுவோமாக ! இவ்வாறு, மொர்தெகாய் ராஜாவினால் கனம்பண்ணப்பட்ட பின்னர், "ஆமானோவென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப்போனான்" (எஸ்தர் 6 : 12). இவ்விதம் ஆமான் மொர்தெகாய்க்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டான். "அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்; அவன்மீதிலோ அவன் கிரீடம் பூக்கும்" (சங். 132 : 18) என்பது வாக்கு மாறாத தேவனின் அருள்மொழியன்றோ ! "மொர்தெகாய்க்கு முன்பாக நீர் தாழ்ந்துபோகத் தொடங்கினீர்; அவன் யூதகுலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவது நிச்சயம்" என ஆமானின் மனைவி அவனிடம் கூறுகிறாள்! (எஸ்தர் 6 : 13). 'யூதா' என்றால் துதி என்று பொருள் (ஆதி. 29 : 35). துதிக்கிற மனுஷருக்கு முன்பாகச் சத்துரு நிச்சயமாகவே தாழ்த்தப்பட்டுப்போவான். அவர்கள் ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்று முன்னேறுவார்கள். "ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ... எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதி ... இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" (சங். 149 : 6 - 9) என்னும் வேதவாக்கியம் மெய்யன்றோ !

மொர்தெகாய் ராஜாவினால் கனம்பண்ணப்பட்ட பின்னர், தன்னுடைய இடத்தை மாற்றிக்கொள்ளவில்லை. அவன் அரமனை வாசலுக்கே மீண்டும் திரும்பி வந்தான் (எஸ்தர் 6 : 12). கனத்திலும், கனவீனத்திலும் - துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும் - எப்போதும் தங்களைத் தேவ ஊழியக்காரராகவே விளங்கப்பண்ணுவதாக அப். பவுல் தன்னைக் குறித்தும், தன் உடன் ஊழியரைக் குறித்தும் கூறுகிறார் (II கொரி. 6 : 3, 8). மொர்தெகாயின் உத்தம இருதயத்தைக் கண்ட தேவன், மேலும் அவனுக்காகக் கிரியை செய்தார். மொர்தெகாய்க்காக ஆமான் செய்வித்திருந்த ஐம்பது முழ உயரமான தூக்கு மரத்தில் ஆமானையே தூக்கிப்போடக் கட்டளை பிறந்தது! (எஸ்தர் 7 : 9, 10). சத்துருக்களால் நிர்மூலமாக்கப்படும்படி நியமிக்கப்பட்டிருந்த யூதர்கள், தங்கள் சத்துருக்களை நிர்மூலமாக்கினார்கள்! இவ்வாறு "காரியம் மாறுதலாய் முடிந்தது" (எஸ்தர் 9 : 1). தேவன்தாமே இவை அனைத்திற்கும் பின்னணியில் இருந்து தம் தாசனுக்காகவும் தம் ஜனங்களுக்காகவும் கிரியை செய்தார் !

**சத்துருவின் படுதோல்வி:**

ராஜா ஆமானை மரத்திலே தூக்கிப்போடுவித்தான். இவ்விதமாக அன்று தேவஜனங்களுக்கு விரோதமாகக் கிரியை செய்தவன் நியாயந்தீர்க்கப்பட்டுப்போனான். அனைவரும் காணத்தக்கதாக ஐம்பது முழ

உயரமான மரத்தின் மேல் மொர்தெகாயைத் தூக்கிப்போடுவித்து, அனைவர் முன்னிலையிலும் அவனை அவமானப்படுத்திக் கொல்ல நினைத்திருந்த சத்துரு, இதோ, அதே மரத்தின்மேல் தூக்கிப்போடப்பட்டு, அனைவரின் முன்பாகவும் ராஜாவினால் அவமானப்படுத்தப்பட்ட வனாய்த் தொங்குகிறான் ! அவ்வளவு உயரத்தில் பரிதாபமாகத் தொங்கிக் கொண்டிருந்தமையால், அவனுடைய தண்டனை மறைவான ஒன்றாக அல்ல, அனைவரும் காணத்தக்கதாகப் பிரத்தியட்சமானதாய், வெளியரங் கமான ஒன்றாகவே இருந்தது. தேவபிள்ளைகளே ! நம்முடைய எதிராளி யாகிய பிசாசானவன் தன் சதித்திட்டங்களில் படுதோல்வியடைந்த கட்டத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள் ! தேவ ஜனங்களுக்கு மிகவும் முக்கியமானதொரு கட்டம் அது ! கர்த்தராகிய இயேசு "துரைத்தனங் களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்" (கொலோ. 2 : 15) என்று கல்வாரிச் சிலுவையில் நம் சத்துரு அடைந்த படுதோல்வி அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. ராஜாதி ராஜாவும் தேவாதி தேவனு மானவர் அவனை நியாயந்தீர்த்த வேளை அது! "இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்றும், "இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே" என்றும் கர்த்தராகிய இயேசு குறிப்பிட்ட சந்தர்ப்பம் இதுவே ! (யோவான் 12 : 31 ; 16 : 11). பாவம், சாபம், வியாதி போன்றவற்றால் நம்மை அடிமைப்படுத்தி, அழித்து, அவமானப்படுத்தத் திட்டமிட்டிருந்த சத்துருவாகிய பிசாசான வனின் அதிகாரமும் வல்லமையும் கல்வாரிச் சிலுவையில் உரிந்து போடப்பட்டன ! சிலுவையில் அவனுடைய தலை முற்றிலும் நசுக்கப் பட்டு, அவன் அடைந்த தோல்வி, சிலுவையை நோக்கிப் பார்க்கும் அனைவரும் காணத்தக்க வெளியரங்கமான கோலமாகக் காட்சியளிக் கிறது ! "இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்" என்ற வசனத்திற் கிணங்க (மத். 21 : 44), கல்வாரிச் சிலுவையில் நம் சத்துருவின் திட்டங் களும் சதி ஆலோசனைகளும் சிதைக்கப்பட்டுப்போயின! கொடுங்குற்றம் புரிந்த ஒருவனைத் தண்டிக்கத் துவங்குமுன் அவனுடைய மேல்வஸ்தி ரத்தைக் கழற்றி விடுவதுபோல, எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பைக் கல்வாரிச் சிலுவையில் சத்துருவின் மேல் கர்த்தர் செலுத்தினபோது, அவனுடைய வல்லமையை அவர் உரிந்துபோட்டு, அனைவரும் காணத்தக்கதாக அவனை வெளியரங்கமான வெட்கத்திற்குள்ளாக்கி, அவன்மேல் வெற்றி சிறந்தார். நமக்காகவே கர்த்தர் சிலுவையில் நம் சத்துருவின் மேல் வெற்றிசிறந்திருக்கிறார் ! கல்வாரியில் பிசாசானவன் அடைந்த படு தோல்வி, மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மையே ! நண்பனே ! பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய அவன் நம்மிடத்தில் தன்

படுதோல்வியை ஒத்துக்கொள்ள மனமற்றிருப்பினும், வெளியரங்கமான கோலமாக்கப்பட்டிருக்கும் அவனுடைய உண்மையான ரூபம் இதுவே! அவன் தோற்கடிக்கப்பட்ட சத்துரு! எனவே அவன் தன் பொய்யான வார்த்தைகளாலும் அடையாளங்களாலும் உன்னை வஞ்சிக்க இடங் கொடாதே. அவன்மீது கல்வாரியில் உனக்குக் கிடைத்திருக்கும் மாபெரும் ஜெயத்தை உரிமைபாராட்டிச் சொந்தமாக்கிக்கொள்வாயாக.

எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரர், எகிப்தியரால் ஒடுக்கப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்தபோது அவர்களுடைய பெருமூச்சைத் தேவன் கேட்டார். அவர்கள் பஸ்காவை ஆசரித்த அன்று இரவிலே தேவன் எகிப்தியர் மேலும் எகிப்தின் தேவர்கள் மேலும் நீதியைச் செலுத்தினார் (யாத். 12 : 12 ; உபா. 26 : 6 - 8). தேவஜனங்களை ஒடுக்கினவர்கள் தேவ னால் நியாயந்தீர்க்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுப்போயினர். ஒடுக்கப்படுகிற யாவருக்கும் கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார் (சங். 103 : 6). "ஒடுக்குகிறவன் இல்லாதேபோவான்" என்று நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 16 : 4). எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் புத்திரர் தேவனை நோக்கிக் கூப்பிட்டனர். அவ்வாறே சூசான் நகரத்தில், அழித்துக் கொன்று நிர்மூலமாக்கப்படும்படி விற்கப்பட்டிருந்த தேவஜனங்கள் உபவாசித்து ஜெபம்பண்ணினர் (எஸ்தர் 4 : 16 ; 7 : 4). தேவன் அவர்களைக் கேட்டரு ளினார். அவர்தாமே அவர்களுடைய சத்துருக்களுக்குச் சத்துருவாய் இருந்து, அச்சத்துருக்களோடே யுத்தம்பண்ணினார் ! தேவனுக்கு விரோத மாய்ப் போர் செய்து, அவரை ஜெயிக்கத் தக்கவன் யார் ? ஆகவே, நண்பனே, கல்வாரியில் கிறிஸ்து உனக்காகச் செய்து முடித்த கிரியையில் உன் அனைத்து ஜெயங்களும் அடங்கியிருக்கின்றன என்பதை விசு வாசித்து முன்னேறுவாயாக.

ஆமான் தூக்கிலிடப்பட்டபின், வாசலிலிருந்த மொர்தெகாய் உயர்த்தப்பட்டான். அவன் ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக வைக்கப்பட்டான். அவன் "இளநீலமும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும் இரத்தாம்பரமும் அணிந்தவனாய் ராஜா வினிடத்திலிருந்து புறப்பட்டான்" ; "மொர்தெகாய் ராஜாவின் அரமனை யில் பெரியவனாயிருந்தான்; அவனுடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று; இந்த மொர்தெகாய் என்பவன் மேன்மேலும் பெரிய வனானான்" ; 'யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனும், தன் திரளான சகோத ரருக்குப் பிரியமானவனுமாயிருந்தான்' (எஸ்தர் 8 : 2, 15 ; 9 : 4 ; 10 : 3). அதுவரை 'வாசலிலிருக்கிற மொர்தெகாய்' என்றே அறியப்பட்டிருந்த அவன், இப்போது 'ராஜா பெரியவனாக்கின மொர்தெகாய்' என்ற புதிய

பெயரால் அழைக்கப்படுகிறான்! (எஸ்தர் 10 : 2). "தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; ... எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்" (I நாளா. 29 : 12) என்ற வேதவசனம் மொர்தெகாய்க்குச் சாலப் பொருந்தும்.

அருமையானவர்களே ! இப்பொழுது இவ்வுலகம் "பொல்லாங்கனுக்குள்" கிடக்கிறது. பிசாசானவன் "உலகத்தின் அதிபதி" என்று அழைக்கப்படுகிறான். என்றாலும் அதிசீக்கிரத்தில் - கர்த்தரின் இரகசிய வருகைக்குப் பின் - இவ்வுலகம் 'பரிசுத்தவான்களின் ராஜ்யமாக' மாறும். மொர்தெகாய் ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக வைக்கப்பட்டது போல, ஆயிர வருட அரசாட்சியில் நாம் கர்த்தருடனே இப்பூமியை அரசாளுவோம்! (ஏசாயா 32 : 1). மேலும், அரமனை வாசலிலிருந்த மொர்தெகாயைப் போல, இன்று பல சிறுமைகளையும் துன்பங்களையும் சகித்துக்கொண்டிருக்கிற நாம், வெகு விரைவில் வாசல்கள் வழியாய் நித்திய நகரத்திற்குள் பிரவேசித்து, ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவோம் (வெளி. 22 : 14). மறுமையில் நம் ராஜாவினால் நாம் பல கிரீடங்கள் சூட்டப்பட்டு, அவரால் கனப்படுத்தப்பட்டு, அவருடைய அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவர்களாய் அவருடைய சிங்காசனத்தில் அவருடனேகூட வீற்றிருந்து, ராஜாவுக்கு அடுத்தவர்களாய், அவருடனே என்றென்றும் அரசாளுவோம் (வெளி. 12 : 5). இரவும் பகலும் தேவனுக்கு முன்பாகச் சகோதரர் மேல் குற்றஞ்சாட்டினவன் தாழத் தள்ளப்பட்டுப்போவான் (வச. 10). நாம் நித்திய நித்தியமாகக் கர்த்தரால் கனப்படுத்தப்படுவோம். அல்லேலூயா !

அதிகாரம் VI


# எருசலேமின் பன்னிரு வாசல்கள்

இது வரை எருசலேமின் அலங்கமும், அதின் வாசல்களும், கதவுகளும் பூட்டுகளும் தாழ்ப்பாள்களும், வாசல் காவலாளரும் எவைகளைக் குறிக்கின்றன என்று நாம் தியானித்தோம். வாசல்கள் குறிக்கும் பொதுவான சில ஆவிக்குரிய சத்தியங்களை நாம் முன்பு கண்டோம். நெகேமியா எருசலேமின் அலங்கத்தில் இருந்த பன்னிரண்டு வாசல்களைப் புதுப்பித்துக் கட்டினான். நெகேமியாவின் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தப் பன்னிரு வாசல்களின் ஆவிக்குரிய கருத்துக்களை இங்கே நாம் தியானிப்போம்.

**நெகேமியா பழுதுபார்த்துக் கட்டின எருசலேமின் பன்னிரு வாசல்களாவன:**

1. ஆட்டு வாசல் (நெகே. 3 : 1)
2. மீன் வாசல் (நெகே. 3 : 3)
3. பழைய வாசல் (நெகே. 3 : 6)
4. எப்பிராயீம் வாசல் (நெகே. 12 : 39)
5. பள்ளத்தாக்கின் வாசல் (நெகே. 3 : 13)
6. குப்பைமேட்டு வாசல் (நெகே. 3 : 14)
7. ஊருணி வாசல் (நெகே. 3 : 15)
8. தண்ணீர் வாசல் (நெகே. 3 : 26)
9. காவல்வீட்டு வாசல் (நெகே. 3 : 25 ; 12 : 39)
10. குதிரை வாசல் (நெகே. 3 : 28)
11. கிழக்கு வாசல் (நெகே. 3 : 29)
12. மிப்காத் என்னும் வாசல் (நெகே. 3 : 31)

# எருசலேமின் பன்னிரு வாசல்கள்
(கி. மு. 445)



நெகேமியாவும் யூதா மனுஷரும் எருசலேமின் அலங்கத்தை, ஆட்டு வாசல் முதல் கட்டத் தொடங்கினார்கள். ஆட்டு வாசல், அலங்கத்தின் வடகிழக்கு முனையிலுள்ளது. அதுமுதல் அலங்கமானது மேற்கு நோக்கிக் கட்டப்பட்டுவந்தது. ஆட்டு வாசலைத் தொடர்ந்து, மீன் வாசலும், பழைய வாசலும் கட்டி முடிக்கப்பட்டன. பழைய வாசல் அலங்கத்தின் வடமேற்குப் பகுதியில் அமையப்பெற்றிருந்தது. அங்கிருந்து நகரத்தின் எல்லை தெற்கு நோக்கிச் செல்கிறது. நகரத்தின் வடமேற்குப் பகுதியில், பழைய வாசலை அடுத்திருந்த அலங்கத்தின் ஒரு பகுதி, அகலமான மதில் (Broad Wall) என்றழைக்கப்பட்டது. ஏனெனில், இப்பகுதியிலிருந்த மதிற்சுவர் சுமார் 21 முதல் 24 அடி வரை அகலமுள்ளதாயிருந்தது. அதையடுத்து, எருசலேமின் வடக்கேயிருந்த எப்பிராயீமின் எல்லைக்கு அல்லது சமாரியாவுக்குச் செல்லும் வழியாக 'எப்பிராயீம் வாசல்' கட்டப்பட்டிருந்தது. அது நான்காவதாகப் பழுதுபார்த்துக் கட்டப்பட்ட வாசலாகும். அது 'நடுவாசல்' என்றும் அழைக்கப்பட்டது (எரே. 39 : 3). அதைத் தொடர்ந்து சூளைகளின் கொம்மையும், அதற்குத் தெற்காகப் பள்ளத்தாக்கின் வாசலும் அமையப்பெற்றிருந்தன. பள்ளத்தாக்கின் வாசல் முதற்கொண்டு, நகரத்தின் தென்மேற்கு எல்லை ஆரம்பமாகிறது. பள்ளத்தாக்கின் வாசலிலிருந்து ஆயிரம் முழ இடைவெளிக்குப் பின் இருந்த குப்பைமேட்டு வாசல், நகரத்தின் தென்முனையில் அமையப்பெற்றிருந்தது. அதற்குப் பின் இருந்த ஊருணி வாசல் நகரத்தின் தென்கிழக்குக் கோடியில் இருந்தது. அதுமுதல், நகரத்தின் எல்லை மேல்நோக்கிச் செல்லுகிறது. அலங்கத்தின் தென் கிழக்குப் பகுதியில், ஊருணி வாசலுக்கு மேலே தண்ணீர் வாசலும், அதற்கு மேல் காவல் வீட்டு வாசலும், இன்னும் மேலே வடகிழக்குப் பகுதியில் குதிரை வாசலும், கிழக்கு வாசலும், மிப்காத் என்னும் வாசலும் வரிசையாக அமையப்பெற்றிருந்தன. இவ்வாறு நெகேமியாவின் நாட்களில், ஆட்டு வாசல் முதல் மிப்காத் என்னும் வாசல் வரை எருசலேமின் அலங்கத்தில் பன்னிரு வாசல்கள் பழுதுபார்த்துக் கட்டப்பட்டன (நெகே. 3 : 1, 31).

நெகேமியாவின் புஸ்தகத்தைத் தவிர வேதாகமத்தின் இதர புஸ்தகங்களில் நாம் வாசிக்கும்போது, இப்பன்னிரு பெயர்களல்லாத வேறு பல வாசல்களின் பெயர்களை நாம் காணலாம். எருசலேமின் அலங்கத்தைப் போல, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற பல பட்டணங்களுக்கும் அலங்கங்களும் வாசல்களும் இருந்திருக்கின்றன. ஒவ்வொரு பட்டணத்திலும், ஜாமக்காரன் நிற்பதற்கென்று உயர்ந்த கோபுரத்தைக்

கொண்ட ஒரு வாசல் இருந்திருக்கிறது. அது பொதுவாக, ஒலிமுக வாசல் அல்லது கெவுனி வாசல் என அழைக்கப்பட்டது. மேலும், எருசலேமின் அலங்கத்தினுள் காணப்பட்ட தேவாலயத்திற்கும் கிழக்கு வாசல், வடக்கு வாசல், புதிய வாசல் போன்ற பல வாசல்கள் இருந்ததாகப் பழைய ஏற்பாட்டிலும், அலங்கார வாசல் என்ற ஒரு வாசல் இருந்ததாகப் புதிய ஏற்பாட்டிலும் நாம் வாசிக்கிறோம் (எசே. 44 : 1 - 4 ; 47 : 1, 2 ; எரே. 26 : 10 ; அப். 3 : 2). இவற்றுக்கும், எருசலேமின் அலங்கத்திலிருந்த வாசல்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. எருசலேம் எபூசியரின் பட்டணமாக இருந்த நாட்களிலும், தாவீதின் ராஜ்யபார நாட்களிலும், அதற்குப் பின்பு சாலொமோனின் ராஜ்யபார நாட்களிலும், எசேக்கியா, மனாசே என்னும் ராஜாக்களின் நாட்களிலும், அதன் பரப்பளவும், அலங்கத்தின் சுற்றளவும், அவற்றில் இருந்த வாசல்களின் எண்ணிக்கைகளும் வித்தியாசமானவையாயிருந்தன. எருசலேமின் அலங்கத்தில் இருந்த சில வாசல்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களை உடையவையாயும் இருந்திருக்கின்றன. வேதாகமத்தின் இதர புஸ்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாசல்களுள் சில பின்வருமாறு - ஒலிமுக வாசல் (நியா. 5 : 11), கெவுனி வாசல் (II சாமு. 18 : 24), அஸ்திபார வாசல் அதாவது சூர் என்னும் வாசல் (II நாளா. 23 : 5 ; II இராஜா. 11 : 6), பென்யமீன் வாசல் (எரே. 37 : 13), இரண்டு மதில்களுக்கு நடுவான வாசல் (எரே. 39 : 4), மூலை வாசல் அல்லது முதல் வாசலென்கிற கோடி வாசல் (II இராஜா. 14 : 13 ; சக. 14 : 10), நடு வாசல் (எரே. 39 : 3) போன்றவையே. எருசலேமிலிருந்து பென்யமீன் எல்லைக்குச் செல்லும் வாசல், பென்யமீன் வாசல் எனப்பட்டது. இது, நகரத்தின் வடகிழக்குப் பகுதியிலிருந்தது. நெகேமியா பழுதுபார்த்துக் கட்டின அலங்கத்தின் வடகிழக்குப் பகுதியில், ஒன்றுக்கும் மேற்பட்ட வாசல்கள் இடம் பெற்றுள்ளன. வேத ஆராய்ச்சியாளர்கள், மேற்கூறியவற்றில் பல வாசல்கள் நெகேமியா கட்டின அலங்கத்திலிருந்த வாசல்களின் பிரதிப் பெயர்களாக இருந்திருக்க வேண்டும் என்றும், ஒரு அலங்கத்தில் மிகவும் அதிக அளவில் திறப்புகள் இருப்பது நகரத்திற்குப் பாதுகாப்பு அல்ல என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு வேதாகமத்தில் காணப்படுகிற பல வாசல்களைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவிவருகின்றன. இருப்பினும், நெகேமியாவின் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பன்னிரு வாசல்களைப் பற்றியும், அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களைப் பற்றியுமே நாம் இந்நூலில் ஆராய்கிறோம். வேதாகமத்தின் இதரப் பகுதிகளில் அவற்றுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பிரதிப்பெயர்களும் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலில் இடம்பெறும் சரித்திரக் குறிப்புகளும், எபிரெய, கிரேக்கப் பதங்களின் பொருள்களும் கீழ்க்காணும் புத்தகங்களினின்று எடுத்தாளப் பட்டவையாகும்:

1. The International Standard Bible Encyclopaedia - Vol. 1-4, by G.W. Bromiley.

2. Young's Analytical Concordance to the Bible.

3. Encyclopaedia Britannica (William Beuton) - Vol. 12.

4. Harper's Bible Dictionary.

5. The King James Study Bible (Nelson).

1

# ஆட்டு வாசல்
## (SHEEP GATE)

*"பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டு வாசலைக் கட்டினார்கள்"* (நெகே. 3 : 1).

எருசலேம் நகரத்தின் அலங்கத்திலிருந்த பன்னிரண்டு வாசல்களைக் குறித்து நெகேமியாவின் புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம். நகரத்தின் ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கட்டப்பட்டு, உபயோகிக்கப்பட்டுவந்தது. பாபிலோனின் ராஜா அந் நகரத்தைக் கைப்பற்றியபோது, அவை அவனுடைய சேனையினால் சுட்டெரிக்கப்பட்டுப்போயின. என்றாலும், தேவன் தம் ஜனங்களைச் சந்திக்கும் வேளை வந்தபோது, சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த நெகேமியாவும் யூத ஜனங்களும் சேர்ந்து அவற்றைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவற்றுள் முதலாவதாகக் கட்டப்பட்ட வாசல், 'ஆட்டு வாசல்' ஆகும். இது பட்டணத்தின் வடகிழக்கு முனையிலுள்ளது. இவ் வாசலிலிருந்துதான் நெகேமியா நகரத்தின் அலங்கத்தைப் பழுதுபார்த்துக் கட்டத் துவங்கினான். தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பலி செலுத்தப் படும்படி கொண்டுவரப்படும் ஆடுகள், இவ்வாசலின் வழியாகவே எருச லேமிலிருந்த தேவாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இவ்வாசலினருகே பெதஸ்தா என்னும் ஒரு குளம் இருந்தது (யோவான் 5 : 2). அக்குளம் முன்னாட்களில் ஆடுகளைக் குளிப்பாட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. பின்னாட்களில் - கர்த்தராகிய இயேசுவின் நாட்களிலுங்கூட - அக்குளம் அற்புத சுகமளிக்கும் இடமாகக் கருதப்பட்டது. அதற்கு ஐந்து மண்டபங்கள் இருந்தன. அவற்றில் குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்போது கலங்கும் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருப் பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, அதின் தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு அதிலே முதலாவதாக இறங்குகிறவன், எப்படிப்பட்ட வியாதியுள்ள வனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.

**(i) சாந்தகுணம்:**

ஆட்டு வாசல், தேவாட்டுக்குட்டியாகிய இயேசுவின் சாந்த குணத்தை நமக்கு நினைவூட்டுகிறது. அவர், "நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்றார் (மத். 11 : 29). சாந்தம் ஒரு ஆட்டுக் குட்டியின் சுபாவமாகும். பலி செலுத்தப்படும்படி ஆட்டு வாசலின் வழியே கொண்டுசெல்லப்படும்போது, அது தன் மேய்ப்பனை எதிர்ப்பதுமில்லை, பின்வாங்குவதுமில்லை. தன்னை நடத்திச் செல்லுகிறவனின் சித்தத்திற்கு அது தன்னை முற்றிலும் ஒப்படைத்துச் செல்லுகிறது. சுய விருப்பங்களும், தெரிந்துகொள்ளும் உரிமையும் அதற்கு இல்லை. "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" என்று கர்த்தராகிய இயேசுவைக் குறித்துத் தீர்க்கதரிசி கூறுகிறான் (ஏசாயா 53 : 7 ; அப். 8 : 32, 35). பிதாவானவர் தம் ஒரே பேறான குமாரனை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினபோது, அவர் 'ஏன்' என்று கேள்வி கேட்கவில்லை. "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்" என்று அவர் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் (எபி. 10 : 7). பலியாக்கப்படும்படி ஆட்டு வாசலினூடே கொண்டுசெல்லப்படும் ஒரு ஆட்டைப் போல அவர் அமைதியாகத் தம்மைப் பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்தார். பல எதிர்ப்புகளையும் உபத்திரவங்களையும் சந்தித்த எரேமியாவும், "நான் அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப்போல இருந்தேன்" என்று கூறுகிறான் (எரே. 11 : 19).

தேவபிள்ளையே ! உன் வாழ்க்கையில் இந்த ஆட்டு வாசல் சுட்டெரிக்கப்பட்டுப் போயிருக்கிறதோ? தேவன் உன்னைப் பலவிதமான பாடுகளின் பாதைகள் வழியாக நடத்திச் செல்லும்போது, எவ்விதக் கேள்வியும் நிபந்தனையுமின்றி நீ அப்பாதைகளுக்கெல்லாம் உன்னை ஒப்புக்கொடுக்கிறாயா? "கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை. அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடை களையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" என ஏசாயா தன் தீர்க்கதரிசன வாக்கியங் களில் எடுத்துரைக்கிறான் (ஏசாயா 50 : 5, 6). இவை ஆட்டுக்குட்டி யானவரைக் குறித்து உரைக்கப்பட்ட வார்த்தைகளாகும். இப்படிப்பட்ட தாங்கொணா வேதனைகளினூடே நடத்தப்படும்போது இத்தகைய சாந்த

குணத்தை வெளிப்படுத்துவது எப்படி? இச்சந்தர்ப்பங்களில் மனுஷர் பதறிப் பேசுவதும், பிறரைக் குறைகூறுவதும், ஆத்திரமடைவதும் இயல்பே. என்றாலும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றிச் செல்லுகிற தேவபிள்ளைகளுக்கு அவர், "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கற்பிக்கிறார். அவர் இத்தகைய தாங்கொணா வேதனைகளினூடே கடந்து சென்றபோது எவ்விதம் ஜெயம் பெற்று, சாந்தகுணத்தை வெளிப்படுத்தக் கூடியவராயிருந்தார் என்பதை ஏசாயா மேற்காணும் தீர்க்கதரிசன வாக்கியங்களின் ஆரம்பத்தில் கூறுகிறான்: "கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார்". நம்முடைய செவிகள் தேவனுடைய சத்தத்திற்குத் திறந்திருக்குமாயின், நாமும் இப்பாதைகளில் எளிதாக ஜெயம் பெறலாம். நண்பனே ! நீ கடுமையான சோதனைகளினூடே செல்லும்போது, மனுஷருடைய ஆலோசனையை, ஆதரவை, ஆறுதலை, உதவியை நாடிச் செல்லாதே. அவை உன்னைத் தவறான திசையில் வழிநடத்திவிடக் கூடும். நீ தேவசமுகத்திற்குச் சென்று, அவருடைய சத்தத்தைக் கேட்கும்படி அவருடைய பாதத்தில் காத்திரு. அவர் பேசும்போது - உன் மனதில் இளைப்பாறுதல் உண்டாகும்; நீ எளிதாக உன் சோதனைகளில் ஜெயம் பெறுவாய். உன் செவிகள் கர்த்தரின் சத்தத்திற்கு எப்போதும் திறந்திருக்கட்டும்; அப்போது நீ அவரால் செம்மையான வழியில் நடத்தப்படுவாய். இளைஞனான யோசேப்பு தன் தகப்பனை நேசித்து, தன்னை முழுவதுமாகத் தகப்பனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தான். ஆகவேதான், தன் சகோதரர் தன்னைப் பகைக்கிறவர்கள் என்றும், தன்மேல் பொறாமைகொள்ளுகிறவர்கள் என்றும் அவன் நன்கு அறிந்திருந்தும், "உன்னை அவர்களிடத்துக்கு அனுப்பப்போகிறேன், வா" என்று தகப்பன் அவனை அழைத்தபோது, அவன் யாதொரு மறுப்பும் தெரிவிக்காமல், "இதோ, போகிறேன்" என்று தன்னை ஒப்புக்கொடுத்தான் (ஆதி. 37 : 4, 5, 8, 11, 13). அதினிமித்தம் அவன் தன் இளவயதில் அதிகமான பாடுகளினூடே செல்ல வேண்டியதாயிருந்தது. என்றாலும் முடிவிலே அவன் எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டான். ஆம்! "கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார்" (சங். 147 : 6); "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (மத். 5 : 5).

நாம் சாந்தமும் அமைதலுமாயிருக்கும்போது கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (எண். 12 : 3). அவன் இப்படிப்பட்ட சாட்சியைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் காரணம் என்ன ? மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசியபோது, 'மோசே அதைக் கேட்டான்' என்றோ, 'மோசே அதற்குப் பதிலாகத் தன்

பட்சத்தில் நியாயங்களை எடுத்துரைத்தான்' என்றோ அங்கு கூறப்பட வில்லை. "கர்த்தர் அதைக் கேட்டார்" என்றே திருவசனம் கூறுகிறது (வச. 2). தனக்காக மோசே போராடவோ, வாக்குவாதம் பண்ணவோ செல்லவில்லை. அவன் அமைதியாயிருந்ததைக் கண்ணுற்ற தேவன்தாமே மேகத்தூணில் இறங்கி, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டு, அவர்களைக் கடிந்து கொண்டார்; மிரியாம் தேவனால் சிட்சிக்கப்பட்டாள். நாம் நமக்கு நியாயஞ்செய்கிற தேவனிடத்திலேயே நம் காரியங்களைச் சாட்டிவிட்டு, அவருடைய வேளைக்காகக் காத்திருப்போமாக. கர்த்தர் "சாந்தகுண முள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங். 25 : 9); "சாந்தகுணமுள்ளவர்கள் ... மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்" (சங். 37 : 11).

அருமையானவர்களே! "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷ ருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (பிலி. 4 : 5) என்றும், "எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்" என்றும் வேதாகமம் சொல்லு கிறது (I தெச. 5 : 14). எல்லாரிடத்திலும் - முரட்டு குணமுள்ளவர்களிடத் திலும், அடங்காதவர்களிடத்திலுங்கூட - சாந்தகுணத்தை வெளிப்படுத்தக் கர்த்தர் தாமே நமக்கு உதவி புரிவாராக. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. அதுவே ஒரு தேவபிள்ளையின் அழியாத அலங்கரிப்பாயிருக்கிறது (I பேதுரு 3 : 4). ஆகவே, ஆரம்பத்தில் உன்னிலிருந்த சாந்தகுணத்தை நாளடைவில் நீ இழந்துபோயிருப்பா யென்றால், உன் வாழ்க்கையில் சுட்டெரிக்கப்பட்டுப்போயிருக்கும் இந்த ஆட்டு வாசலை மீண்டும் கட்டியெழுப்பும்படி இன்றே எழும்பிக் கிரியை செய்வாயாக.

### (ii) *பலியின் சிந்தை:*

ஆட்டு வாசலானது சாந்தகுணத்தை மாத்திரமல்ல, 'பலியின் சிந்தையையும்' நமக்கு நினைவூட்டுகிறது. பலிசெலுத்தப்படும்படி கொண்டு வரப்படும் ஆடுகள் இவ்வாசலின் வழியே தேவாலயத்திற்குள் நடத்திச் செல்லப்பட்டன. ஒரு பலி மிருகமானது, சுகமாக வாழ்வதற்காக அல்ல, தன் ஜீவனை இழப்பதற்காகவும் தான் ஒன்றுமில்லாமற்போவதற்காகவுமே குறிக்கப்பட்ட ஒன்றாகும். "நான் அநுதினமும் சாகிறேன்" (I கொரி. 15 : 31) என்று அப். பவுல் கூறுகிறார். "தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்த மாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளு வான்" என்பவை நமதாண்டவரின் வார்த்தைகளாகும் (மாற்கு 8 : 35).

பொதுவாக இவ்வுலக மனிதர்கள் இலாபமடையவும், பலவற்றை ஆதாயப்படுத்திக்கொள்ளவும், ஆஸ்திகளைப் பெருக்கிக்கொள்ளவும், உலகத்தின் பாவ இன்பங்களை அனுபவிக்கவுமே வாழ்கின்றனர். இப்படிப்பட்டவர்களைக் குறித்து, "கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன், அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான்" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 37 : 35). அட்டையைப் போல, 'வேண்டும், வேண்டும்' என்பதே அவர்களுடைய இடைவிடாத ஏக்கமாயிருக்கிறது. அவர்கள் எவ்வளவு சேகரித்து வைத்தாலும் திருப்தியடைவதில்லை. "அவர்கள் செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்கி, ஒரு க்ஷணப்பொழுதிலே பாதாளத்தில் இறங்குகிறார்கள்" (யோபு 21 : 13). ஆனால் ஒரு உண்மையான தேவபிள்ளையோ, தனக்கு இலாபமாயிருக்கிறவைகளைக் கிறிஸ்துவின் நிமித்தம் நஷ்டமென்று விடவும், கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படி எல்லாவற்றையும் இழந்துபோகவும், குறைவுபடவும், செலவுபண்ணவும், தன் ஆத்தும நேசருக்காகத் துன்பங்களை அனுபவிக்கவுமே தன் வாழ்நாட்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறான். ஏனெனில், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் பழுதற்ற பலியாகத் தம்மை அர்ப்பணித்த மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவையே அவன் தனக்கு முன்மாதிரியாகக் கொண்டிருக்கிறான். அநேகருக்கு இரட்சிப்பாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் திகழும்படியாக, நம் அருமை இரட்சகர் தம்மைத்தாமே அநேகரை மீட்கும் பொருளாகவும், காணிக்கையாகவும் பலியாகவும் அன்பினால் ஒப்புக்கொடுத்தது, அவரது இணையற்ற தியாக மனப்பான்மையை அல்லது பலியின் சிந்தையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நாம் பூமிக்கு உப்பாகவும், உலகத்துக்கு வெளிச்சமாகவும் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத். 5 : 13, 14). உணவில் கரைந்துபோய் மறைந்து நிற்கும் உப்பைப் போல - எரிந்து பிரகாசித்து உருகிப்போகிற ஒரு மெழுகுவர்த்தியைப் போல - நாம் கரைந்து, குறைந்து, மறைந்துபோவதின் மூலம் மட்டுமே கிறிஸ்துவின் ருசியையும் அவரது வெளிச்சத்தையும் உலகிற்கு வெளிப்படுத்த இயலும். "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்று கூறிய யோவான் ஸ்நானன் மெய்யாகவே எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் (யோவான் 3 : 30 ; 5 : 35). அவ்வாறே நாமும் உலகிற்கு வெளிச்சமாய்த் திகழும்படி நம் பலியின் சிந்தையைப் புதுப்பித்துக்கொள்வோமாக. ஒரு விதையானது செத்துவிடுவதின் மூலமாகவே தன்னைப் போன்ற அநேகம் மணிகளைக்கொண்ட கதிர்களைப் பிறப்பிக்கிறது. கிறிஸ்துவின் மரணமே நாம் பரிபூரண ஜீவன் அடைவதற்கு வித்திட்டது ! அவ்வாறே நாம் கிறிஸ்துவின் நிமித்தம் நஷ்டமடைவதும், குறைவுபடுவதும், இல்லாமற்

போவதும் நமக்கு ஓர் இழப்பல்ல, நித்திய நித்தியமான ஆதாயமே! எனவே பலியின் சிந்தையோடும் சாந்தகுணத்தோடும் நாம் நமது ஓட்டத்தைத் தொடருவோமாக!

**ஆட்டு வாசலைக் கட்டியவர்கள்:**

"*பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டுவாசலைக் கட்டினார்கள்*" (நெகே. 3 : 1).

ஆட்டு வாசலைப் பழுதுபார்த்துக் கட்டியவர்கள் ***ஆசாரியர்களே.*** எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்படி தேவன் தன் மனதில் வைத்த பாரத்தை நெகேமியா யூதா தேசத்திலிருந்த தேவஜனங்களோடு பகிர்ந்து கொண்டபோது, முதலாவதாக, ஆசாரியர்களே மன உற்சாகமடைந்து, செயல்படும்படி முன்வந்தனர். அவர்கள் தங்கள் ஆவியில் எழுப்புதலடைந்து, செயல்படும்படி முன்வந்ததையே இவ்வசனத்திலுள்ள 'எழுந்து' (rose up) என்ற பதம் சுட்டிக்காட்டுகிறது. பிரதிஷ்டையுள்ள ஊழியர்களும் அபிஷேகம் பெற்ற விசுவாசிகளும் சேர்ந்து சபையின் ஆட்டு வாசலைப் பழுதுபார்த்துக் கட்டுவதற்கு முன்வர வேண்டும். ஏற்கனவே செருபாபேலினால் எருசலேமில் தேவாலயம் கட்டப்பட்டிருந்தது. என்றாலும் அதின் பலிபீடத்தின்மேல் பலி செலுத்துவதற்கான பலி மிருகங்கள் கொண்டு வரப்படுவதற்கான வழியாக, முன்பு உபயோகிக்கப்பட்டுவந்த இவ்வாசல் சுட்டெரிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. எனவே, பட்டணத்தின் மற்ற எந்த வாசலையும் செப்பனிடுமுன்னதாக, ஆசாரியர்கள் முதலாவதாக ஆட்டு வாசலைச் செப்பனிடுவதின் அத்தியாவசியத்தை உணர்ந்தவர்களாய், அதில் கவனம் செலுத்தினர். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பாக ஆசாரியராயிருக்கிறோம் (வெளி. 1 : 6). நம்முடைய ஜீவியத்தில் நாம் பலியின் சிந்தையை அல்லது தியாக மனப்பான்மையை இழந்து, சுயநலமுள்ளவர்களாக மாறியிருப்போமாயின், மீண்டும் அந்தத் தெய்வீக குணசீலத்தைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கர்த்தரின் உதவியை நாடுவோமாக.

'***எலியாசீப்***' என்னும் பதத்திற்கு, 'தேவன் திரும்பத் தருகிறார்' என்று அர்த்தமாம். நம்மில் குறைவுபட்டிருக்கிற சாந்தம், தியாக சிந்தை போன்ற திவ்ய சுபாவங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி, 'தேவன் அவற்றைத் திரும்பத் தருவார்' என்ற விசுவாசத்துடன் நாம் கிரியை செய்ய வேண்டும். நாம் இழந்துபோன எந்த ஆவிக்குரிய அனுபவத்தையும், நம்முடைய சொந்த முயற்சிகளினால் அல்ல, தேவனுடைய இரக்கத்தினாலும் ஒத்தாசையினாலும் மாத்திரமே நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடும். இதனாலேயே, "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல,

இரங்குகிற தேவனாலேயாம்” என எழுதப்பட்டுள்ளது (ரோமர் 9 : 16). தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலி. 2 : 13). நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற நல்ல விருப்பத்தை நம்மில் உண்டாக்குகிறவரும், அவ்விருப்பத்தை நம்மில் செயல்படுத்துகிறவரும் அவரே. “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” என்று நமதாண்டவர் கேட்கிறார் (மத். 7 : 11). “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்” (வச. 7, 8). “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை” (யாக். 1 : 17). ஆகவே, நம் ஜீவியத்தின் ‘ஆட்டு வாசல்’ பழுதடைந்திருக்குமாயின், நாம் இழந்திருப்பவைகளைத் தேவன் நிச்சயமாகத் ‘திரும்பத் தருவார்’ என்ற விசுவாசத்துடன், அதைக் கட்டியெழுப்பும்படி எழுந்து செயல்படுவோமாக.

2

# மீன் வாசல்

## (FISH GATE)

*"மீன்வாசலை அசெனாவின் குமாரர் கட்டினார்கள்; அதற்கு உத்தரம் பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்"* (நெகே. 3 : 3).

எருசலேமின் அலங்கத்தில் நெகேமியாவினால் இரண்டாவதாகப் பழுதுபார்த்துக் கட்டப்பட்ட வாசல், 'மீன் வாசல்' ஆகும். இது அலங்கத்தின் வடபகுதியில் இருந்தது. கலிலேயாக் கடலிலிருந்தும், யோர்தான் நதியிலிருந்தும் பிடிக்கப்பட்ட மீன்களை நகரத்தினுள் கொண்டுவருவதற்கு இவ்வாசல் உபயோகிக்கப்பட்டுவந்தது. இதினிமித்தம் இவ்வாசல் 'மீன் வாசல்' என்று அழைக்கப்பட்டுவந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வாசல், கர்த்தருக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதைக் காண்பிக்கிறது. கர்த்தராகிய இயேசு மீன் பிடிக்கிறவர்களாயிருந்த பேதுருவையும் அந்திரேயாவையும் நோக்கி, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார் (மாற்கு 1 : 17). தேவனுடைய ஊழியர்களுக்கு மாத்திரமல்ல, விசுவாசிகள் யாவருக்குங்கூட ஆத்தும ஆதாயம் செய்யும் கடமையைத் தேவன் நியமித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுவின் அன்பை அறியாத மக்களுக்கு அவரை அறிவிப்பதும், பாவ வழியில் சமாதானமின்றி உழலும் ஆத்துமாக்களைக் கல்வாரியண்டை வழிநடத்துவதும், அழிவுக்கு நேராக விரைந்து போய்க் கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக ஜெபத்தில் போராடுவதும், வியாதிப் படுக்கைகளிலும் சிறைச்சாலைகளிலும் கட்டுண்டிருக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதும் நம் ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமையாகும்.

கர்த்தராகிய இயேசு, "பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது" என்று கூறி, தேவனுடைய ராஜ்யத்தை 'மீன்பிடிக்கும் ஒரு வலைக்கு' ஒப்பிடுகிறார் (மத். 13 : 47). ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகம்

முழுவதிலும், மனுஷர் யாவருக்கும் அறிவிக்கப்பட வேண்டும். அதை ஏற்றுக்கொள்பவர்கள் நீதிமான்களாகக் கணிக்கப்பட்டு, உலகத்தின் முடிவிலே பரலோக ராஜ்யத்தில் பங்கடைவர். அதை விசுவாசியாத வர்களோ பொல்லாதவர்களாயிருந்து, முடிவிலே நித்திய நரகத்தில் பங்கடைவர் (வச. 49, 50). மனந்திரும்ப வேண்டுமென்ற தேவனுடைய கட்டளை உலகமெங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் அறிவிக்கப்பட வேண்டும் (அப். 17 : 30). "அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு" என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் (எசே. 2 : 7). அப். பவுலும், "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு" என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (II தீமோ. 4 : 2).

**நற்செய்தி அறிவித்தல்:**

சீரியரின் இராணுவம் சமாரியாவை முற்றிகை போட்டிருக்கையில், தேசத்தில் கொடும் பஞ்சம் உண்டாயிற்று. அப்போது தேவன் அற்புத மாகக் கிரியை செய்து, சீரியரின் இராணுவத்திற்கு மகா இரைச்சலைக் கேட்கப்பண்ணி, அவர்களைச் சமாரியாவை விட்டுத் துரத்திவிட்டார். சமாரியாவின் ஒலிமுக வாசலிலிருந்த நான்கு குஷ்டரோகிகள் நடந்ததை அறியாமல், பசியாற்ற வழி தேடி, சீரியரின் பாளயத்துக்குச் சென்றபோது, அவர்கள் ஓடிப்போய்விட்டதைக் கண்டு, அவர்களுடைய கூடாரங் களுக்குள் பிரவேசித்து, தாங்கள் திருப்தியாகப் புசித்துக் குடித்து, தங் களுக்குக் கொள்ளைப் பொருட்களையும் சேகரித்துக்கொண்டனர். தேசத்தி லிருந்த மக்களோ இன்னும் கொடிய பஞ்சத்தினால் தவித்துக்கொண்டி ருந்தார்கள். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்" என்றார்கள் (II இராஜா. 7 : 9). அப்படியே அவர்கள் அந்நற்செய்தியைத் தங்கள் தேசத்திற்கு அறிவித்ததினால் தேசம் பஞ்சத்தினின்று காக்கப்பட்டது. மக்கள் பெரும் அழிவினின்று தப்பினர். தேவபிள்ளையே, நற்செய்தியாம் சுவிசேஷத்தை அறிந்து, அனுபவித்துக் கொண்டிருக்கிற நீ இன்று என்ன செய்துகொண்டிருக்கிறாய்? நீ அறிந்த நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கிறாயா? அல்லது சுயநலமுள்ளவனாக, உனக்காகவும் உன் குடும்பத்திற்காகவுமே ஜீவித்துக்கொண்டிருக்கிறாயா? முன் நாட்களில் உனக்கிருந்த ஆத்தும பாரம் இப்போது உனக்கு உண்டா? தேவபிள்ளைகளாகிய நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் ! கர்த்தரின் இரகசிய

வருகையில் குற்றமற்றவர்களாய் அவர்முன் நிறுத்தப்பட வேண்டிய நாம், இந்நாட்களில் கர்த்தருக்காகக் கிரியை செய்யாமல் மவுனமாயிருப்போமாயின், அன்று குற்றவாளிகளாய்த் தீர்க்கப்படுவோம். பிதாவுக்கடுத்தவைகளில் அலுவலாயிருக்கும்படியாகவே நமக்கு நாட்கள் தவணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நம்முடைய நினைவிற் கொள்ளுவோமாக.

***விண்ணப்பம் செய்தல்:***

எஸ்தர் ராஜாத்திக்குச் சொல்லப்பட்டது என்ன? "நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்" என்பதே (எஸ்தர் 4 : 14). அவள் இந்த எச்சரிப்பை ஏற்றுக்கொண்டு, தன் ஜனங்களுக்காக உபவாசித்து, ராஜாவினிடத்தில் அவர்களுக்காகப் பரிந்து பேசினதினிமித்தம் அவளுடைய ஜனங்கள் மாபெரும் அழிவினின்று காக்கப்பட்டார்கள்; அவளும் காக்கப்பட்டாள். நம்முடைய தேசத்திற்காகவும், அழிவிற்கு நேராக விரைந்துகொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காகவும் நாம் தேவசந்நிதியில் திறப்பின் வாயிலே நிற்போமாக. "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார் (II நாளா. 7 : 14). மறுபக்கத்திலே, நாம் அவ்வாறு விண்ணப்பம்பண்ணாமற்போவோமாகில், தேசத்திற்கு ஆபத்தும் அழிவும் நேரிடும் என்பதே இவ்வசனத்தின் கருத்தாகும்.

மணவாட்டியின் கண்களை எஸ்போனின் 'மீன் குளங்களுக்கு' மணவாளன் ஒப்பிடுகிறார்: "உன் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப் (fish pools - Eng.) போல ... இருக்கிறது" (உன். 7 : 4). எஸ்போனில் பத்ரபீம் வாசலின் இரு பக்கங்களிலும் இரு மீன் குளங்கள் இருந்தன. மணவாட்டியும், அக்குளங்களைப் போன்ற நீர் ததும்பும் கண்களுடையவளாய், ஆத்தும பாரத்துடன் ஆத்துமாக்களுக்காக ஜெபம்பண்ணுகிறவளாயிருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன்" என்று தீர்க்கதரிசி கூறுகிறான் (எரே. 9 : 1). இப்படி ஜெபம்பண்ணுகிறவர்கள் ஆத்துமாக்களைத் தேடி அலையத் தேவையில்லை. மாறாக, ஆத்துமாக்கள் அவர்

களை நாடி வருவார்கள்! "என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங். 2 : 8) என்றுரைத்த தேவன் உண்மையுள்ளவரன்றோ !

அருமையானவர்களே ! எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (I தீமோ. 2 : 4). நாம் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும் (வச. 1). நாம் மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக ஜெபம்பண்ணாதவாறு பிசாசானவன் நம்முடைய பிரச்சினைகளையும் பெலவீனங்களையுமே நம் ஜெபவேளைகளில் நம் முன் கொண்டுவருவான். நம் காரியங்களை நாம் கர்த்தரின் கரத்தில் ஒப்படைத்துவிட்டு, பிசாசை மேற்கொண்டு, மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்வோமாக. யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது கர்த்தர் அவனுடைய சிறையிருப்பை மாற்றி, அவன் இரட்டிப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி செய்தாரே !

**கீழ்ப்படிதல்:**

பேதுரு ஒருமுறை மீன்பிடிக்கச் சென்றான். அவன் அக்கலையில் கைதேர்ந்தவன். மீனவரின் குடும்பத்திலேயே பிறந்து வளர்ந்த அவனுக்கு, கடலும் படவும் வலையும் அவனது வாழ்வின் ஒரு பகுதியாகவே அமைந்துவிட்டிருந்தன. என்றாலும் இச்சந்தர்ப்பத்தில், இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் அவனுக்கு ஒன்றும் அகப்படவில்லை. அதினிமித்தம் அவன் சோர்ந்துபோய், தன் பிரயாசங்களின் முடிவுக்கு வந்துவிட்ட கட்டத்தில்தான் கர்த்தராகிய இயேசு அவனைச் சந்தித்தார். அவர் அவனை நோக்கி, "ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்றார் (லூக்கா 5 : 4). அவன், "உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்" என்று கூறி, அவருக்குக் கீழ்ப்படிந்தான். அப்போது 'வலைகிழிந்துபோகத் தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்' (வச. 5, 6). இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது என்ன ? நம்முடைய வருடக்கணக்கான அனுபவங்களிலோ திறமைகளிலோ சார்ந்து நாம் ஆத்தும ஆதாயம் செய்ய முற்படுவோமாயின், நம் பிரயாசங்களின் முடிவில் தோல்வியையே சந்திப்போம். மாறாக, கர்த்தரின் வார்த்தையின்படி அவருடைய ஊழியத்தை நாம் செய்வோமாகில், நம் ஊழியத்தில் மகத்தான ஜெயத்தைக் கண்டடைவோம்.

நினிவே பட்டணத்திற்கு வரவிருந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து அப்பட்டணத்து ஜனங்களை எச்சரிக்கும்படி தேவன் யோனாவை அங்கு

அனுப்பச் சித்தமாயிருந்தார். அவனோ, அதற்கு மாறாகத் தர்ஷீசுக்குப் போகப் பிரயாசப்பட்டான். தேவசித்தத்திற்கு மாறாக அவன் சென்றதி னிமித்தம் அவன் வழியில் பட்ட பாடுகளை நாம் அறிவோம்! அவன் நிமித்தமாகக் கப்பலும் அதிலிருந்த அனைவரும் ஆபத்தான நிலைக் குள்ளாயினர். இறுதியில் அவன் மீனின் வயிற்றிலிருந்துகொண்டு தன் தவற்றை அறிக்கையிட வேண்டியதாயிற்று. எனவே தேவனுக்குக் கீழ்ப் படிந்து, அவர் சித்தப்படி இவ்வூழியம் செய்வோமாகில் நாம் பாது காக்கப்படுவதுடன், மற்றவர்களையும் ஆதாயப்படுத்திக்கொள்வோம். கர்த்தருடைய தூதன் சுவிசேஷகனாகிய பிலிப்பை நோக்கி, "நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ" என்றான் (அப். 8 : 26). யோனாவுக்குச் சொல்லப்பட்டது போல, ஏன், எதற்காக, யாரிடம் போக வேண்டும் போன்ற விவரங்கள் எதுவும் இந்தத் தேவமனிதனுக்கு அறிவிக்கப்பட வில்லை. மனித சஞ்சாரமற்ற வனாந்தர வழியாய்ச் செல்லும்படி அவ ருக்குச் சொல்லப்பட்டபோது, அவர் எவ்விதக் கேள்வியுமின்றிக் கீழ்ப் படிந்துபோனார். அதினிமித்தம் அவர் ஒரு விலையேறப்பெற்ற ஆத்து மாவைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த முடிந்தது. அவருடைய சந்திப்பின் மூலம் எத்தியோப்பியா தேசத்து மந்திரி இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டான். அவன் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினபோது, கர்த்தருடைய ஆவியானவர் சுவிசேஷ கனாகிய பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவரைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (வச. 39). மந்திரி தன் தேசத்துக்குத் திரும்பிய பின்னர், கர்த்தராகிய இயேசுவே மெய்யான தேவன் என்று, தான் வழியில் அடைந்த அனுபவங்களைக்கொண்டு தன் தேசத்தாருக்குப் பிரசித்தப்படுத்தியிருப்பானல்லவா? சுவிசேஷக னாகிய பிலிப்பு அவனில் ஏற்றிய ஒரு தீபம் அவன் மூலமாக முழு எத்தியோப்பியாவையும் பிரகாசிக்கச் செய்தது என்ற உண்மை நம்மையும் ஊக்குவிக்கும் ஒரு சரித்திரமாய்த் திகழ்கின்றது. நாமும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வழிநடத்துதலின்படியே ஆத்தும ஆதாயம் செய்வோமாக.

**'கர்த்தருக்குள்' பிரயாசப்படுதல்:**

"காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்" என்று பிரசங்கி கூறுகிறான் (பிர. 11 : 4). ராஜ்யத்தின் சுவிசேஷம் நல்ல விதைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை மனுஷருடைய இருதயங்களில் விதைப்பது தேவராஜ்யத்தின் பிரஜைகள் ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமை யாகும் (I கொரி. 9 : 16). இவ்வேலையைச் செய்வதில் பல இன்னல்களும் இடையூறுகளும் உண்டு. சாத்தானுடைய ராஜ்யத்தின் ஒரு பிரஜையைத்

தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜையாக மாற்றுவதில், ஒருவன் சத்துருவின் தாக்குதல்களையும் எதிர்ப்புகளையும் சந்திக்க நேரிடும். இத்துன்பங் களையே 'காற்றுகள்' என் மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் ஞானி குறிப்பிடுகிறான். நாம் அவற்றை மேற்கொண்டு, நம் உத்தரவாதத்தை நிறைவேற்ற வேண்டுமென தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அவை அமர்ந்த பின் கர்த்தருக்காகக் கிரியை செய்யலாம் என நினைக்கிறவர்கள், 'அலைகள் ஓய்ந்தபின் மீன்பிடிக்கச் செல்லலாம்' என எண்ணுபவனுக்குச் சமம். அலைகள் ஒருக்காலும் ஓய்வதும் இல்லை; அவன் மீன்பிடிக்கப் போகிறதும் இல்லை ! எருசலேமில் உண்டான உபத்திரவங்களினிமித்தம் சிதறிப்போன ஆதி நூற்றாண்டின் கிறிஸ்தவர்கள், அத்துடன் அமைதி யாயிருந்துவிடாமல், தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தை அறிவித்ததினாலன்றோ ஆசியாவின் பல இடங்களிலும் சபைகள் உருவாயின!

'விதைத்தல்' விடுதலையின் ஊழியத்தைக் குறிக்கும். விதைக்கிற வன் நிலத்தில் விதைகளை விதைக்குமுன் எடுத்துக்கொள்ள வேண்டிய பிரயாசங்கள் அநேகம்! முதலாவதாக, அந்நிலம் விதையை முளைக்கச் செய்வதற்கேற்றவாறு பண்படுத்தப்பட வேண்டும். "முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்" என்றும், "விதையானது மண்கட்டிகளின் கீழ் மக்கிப்போயிற்று" என்றும் நாம் வாசிக்கிறோம் (எரே. 4 : 3 ; யோவேல் 1 : 17). ஆகவே விதைக்கும் முன் நிலம் செவ்வனே பண்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். பண் படுத்தப்பட்ட 'நல்ல நிலத்தில்' விதைக்கப்படும் விதைகளே முப்பதும் அறுபதும் நூறுமாகப் பலன் தரும். கர்த்தர் தம்முடைய வசனத்தைக் குறித்து, "அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" என்று கூறுகிறார் (ஏசாயா 55 : 11). பிரயாசப்பட்டு நிலத்தைப் பண்படுத்தி விதைக்கிற ஒருவன், விதைத்தவுடன்தானே பலனைக் காணும்படி எதிர்பார்க்கிறதில்லை. அது ஏற்ற வேளையில் பலன் தரும்படி அவன் நம்பிக்கையோடு காத்திருக்கிறான். அவ்வாறே, நாமும் நம் கிரியைகளுக்கு நிச்சயமாகவே பலன் உண்டு என்ற விசுவாசத்துடன் பொறுமையாகக் காத்திருப்போமாக. "உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்" என திருவசனம் கூறுகிறது (பிர. 11 : 1). நாம் சோர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆத்தும பாரத்துடனும், ஜெபத்துடனும் **கர்த்தருக்குள்** நாம் படுகிற பிரயாசங்கள் ஒருக்காலும் வீணாய்ப் போவதில்லை. "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு

கெம்பீரத்தோடே திரும்பிவருவான்" (சங். 126 : 5, 6). பயிரிடுகிறவன் அறுவடையைக் குறித்த தூரதரிசனமுள்ளவனாயிருந்தால் மட்டுமே, அவனால் இளைப்படையாமல் விடாமுயற்சியுடன் பிரயாசப்படவும், பொறுமையுடன் காத்திருக்கவும் கூடும். இவ்விதம் விசுவாசத்துடனும் ஜெபத்துடனும் பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவர்கள் மெய்யாகவே பலனில் முந்திப் பங்கடைவார்கள் (II தீமோ. 2 : 6). பலனுள்ளதோர் ஊழியம் செய்ய விரும்பும் கிறிஸ்தவ நண்பனே ! நீ அதற்கேற்ற கிரயம் செலுத்த முன்வருவாயா? 'கர்த்தருக்குள்' படுகிற பிரயாசங்கள் மாத்திரமே விருதாவாயிராது என்பதை நீ அறிந்துகொள்வாயாக. "பிரியமான சகோதரரே, **கர்த்தருக்குள்** நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, ... கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" என அப். பவுல் எழுதுகிறார் (I கொரி. 15 : 58). பேதுரு தன் சுய முயற்சிகளினால் இராமுழுதும் பிரயாசப்பட்டும், அது வீணும் வியர்த்தமுமாயிருந்தது போல, கர்த்தருடைய ஆலோசனையின்படியும் வழிநடத்துதலின்படியும் அல்லாது நீ படுகிற பிரயாசங்களின் முடிவு, ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணுவதைப் போன்றே இருக்கும் ! அவற்றினால் ஒரு பலனுமிராது; உன் பிரயாசங்களின் முடிவில் நீயும் விடாய்த்துப்போவாய். ஆனால், கர்த்தருடைய ஆலோசனையின்படி, கர்த்தருடன் சேர்ந்து பிரயாசப்படுகிறவர்களோ மிகுந்த பலனை அடைவார்கள். ஆகையால் பலனுள்ளதொரு சேவையைச் செய்யும்படி 'கர்த்தருக்குள்' பிரயாசப்படுவாயாக. உன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுவதாக (யோவான் 3 : 21). நீ அவருக்குள் மறைந்திருந்து செய்யும் சேவை நிறைவான பலனுள்ளதாயும், அவருக்கு மகிமையாகவும் விளங்கும்.

***மீன் வாசலைக் கட்டியவர்கள்:***

"*மீன்வாசலை அசெனாவின் குமாரர் கட்டினார்கள்*" (நெகே. 3 : 3).

ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. நம்முடைய சுயவிருப்பத்தின்படி, மனதின் எழுச்சிக்கேற்ப நாம் ஊழியம் செய்வோமாகில் நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்திற்கு நஷ்டத்தை வருவித்துக்கொள்வோம். ***'அசெனா'*** ஒருவித முள் மரத்தைக் குறிக்கும். முட்கள் அம்மரத்திற்குத் தற்காப்பாக அமைந்துள்ளன. அதுபோல ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும்போது, நம் தனிப்பட்ட ஜீவியத்தை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஒருவன் தான் செத்து மீன் பிடிப்பதினால் பயன் யாது? ஆகவே தேவனுடைய ஆலோசனையின்படியும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்திற்குட்பட்டும் மட்டுமே நாம் இவ்வேலையைச் செய்யக் கவனமாயிருக்க வேண்டும். முட்களையுடைய ஒரு மரமானது எவரையும் தன்பால்

கவர்ந்திழுத்துக்கொள்வதில்லை. அவ்வாறே நாம் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும் ஆத்துமாக்களை நம் மீது சாரப்பண்ணாமல், கிறிஸ்துவின் அன்புக்கும் அப்போஸ்தல ஐக்கியத்துக்கும் நேராக வழிநடத்தக் கவனமாயிருக்க வேண்டும். மேலும், அம்மரத்தின் பட்டையை உரித்தால் பிசின் வரும். அந்த மரப்பட்டையினுள் உள்ள பிசின் 'மனதுருக்கத்தைக்' குறிக்கிறது. ஆத்துமாக்களுக்காகப் பரிதபித்து, மனதுருகுகிறவர்கள் மட்டுமே ஆத்துமாக்களைக் கர்த்தருக்கென்று ஆதாயம் செய்ய முடியும். கர்த்தராகிய இயேசு வியாதியஸ்தரைக் கண்டபோது அவர்கள் மேல் மனதுருகினார். அவ்வாறே அவர், திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால் "அவர்கள் மேல் மனதுருகி" அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார் (மாற்கு 6 : 34 ; 8 : 2). பிசினானது அந்த முள் மரத்தின் பட்டையினுள் மறைந்திருப்பது போல, நாம் கிறிஸ்துவுக்குள் மறைந்திருந்து, விவேகத்துடன் நம் மனதுருக்கத்தை வெளிப்படுத்தி, இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவர்கள் தாங்கள் பாதுகாக்கப்படும்படி மறைந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

*'ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவா !*
*வெறுங்கையனாக உம்மைக் கண்டுகொள்ளல் ஆகுமோ ?'*

என ஒரு பக்தன் பாடுகிறான். "அநீதியான உலகப்பொருளால் (பரலோகத்தில்) உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" என்று கர்த்தர் கூறியிருக்கிறார் (லூக்கா 16 : 9). "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி. 11 : 30). எனவே நம் ஜீவியத்தில் 'மீன் வாசல்' சுட்டெரிக்கப்பட்டிருக்குமாயின் அதைக் கட்டியெழுப்பிக் கொண்டு, ஆதியில் செய்த நற்கிரியைகளை நாம் திரும்பச் செய்வோமாக. மற்றவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பதின் மூலமும், அவர்களுடைய பிரச்சினைகளுக்காக வேண்டுதல் செய்வதின் மூலமும், பிறருக்கு உதவி செய்வதின் மூலமும் அநேகரை நாம் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்துவோமாக ! "பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்". ஆகவே கர்த்தருக்குள் சகல நற்கிரியைகளிலும் நாம் பெருகுவோமாக (II கொரி. 9 : 6, 8). "விதைக்கிறவனுக்கு விதையை ... அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்" (வச. 10). "நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்" (ஏசாயா 43 : 4) என்ற வாக்குத்தத்தத்தை நாம் சொந்தமாக்கிக்கொள்ளுவோமாக !

## 3

# பழைய வாசல்

## (OLD GATE)

*"பழைய வாசலைப் பசெயாகின் குமாரனாகிய யோய்தாவும், பேசோதியாவின் குமாரனாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்"* (நெகே. 3 : 6).

பழைய வாசல், பழங்கால எருசலேமின் முக்கியமானதொரு நுழைவாயிலாகக் கருதப்பட்டுவந்தது. இது அலங்கத்தின் வடமேற்குப் பகுதியில் அமையப்பெற்றிருந்தது. சத்துருக்கள் இந்த நுழைவாயிலையும் தீக்கிரையாக்கினர். நெகேமியா மூன்றாவதாகப் பழுதுபார்த்துக் கட்டிய வாசல் இதுவே. 'பழைய வாசல்', பூர்வ உபதேசங்களைக் குறிக்கிறது. "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 6 : 16). இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பூர்வ பாதைகள்' என்பது, நம்முடைய இரட்சகராகிய இயேசுவும், அவருடைய அப்போஸ்தலராகிய பரிசுத்தவான்களும் போதித்ததும் கடந்துசென்றதுமான பூர்வ வழியாகும். அது இடுக்கமும் நெருக்கமுமான ஒரு பாதையே. "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று நமதாண்டவர் உரைத்திருக்கிறார் (மத். 7 : 14).

### ஜீவ பாதை:

இன்று கிறிஸ்தவ உலகில் பல நவீன உபதேசங்கள் நுழைந்திருக்கின்றன. இதைக் குறித்து, "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், ... தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங் காலம் வரும்"

என்று அப். பவுல் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக உரைத்துச் சென்றிருக்கிறார் (II தீமோ. 4 : 3, 4). இன்றைய கிறிஸ்தவ உலகம், ஒரு சொகுசான, இலகுவான மார்க்கத்தையே போதிக்கிறது. சிலுவையில் அறையப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் உபதேசங்களையும், கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தைகளையும், அவரோடுகூட பாடுகளைச் சகிப்பதையும், ஒருவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்றுவதையும் அது ஏற்றுக்கொள்கிறதில்லை. நாமோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவர்களாயிருந்து, பூர்வ பாதைகளிலேயே நம் காலடிகளை வைத்து நடக்கக் கவனமாயிருப்போமாக.

பூர்வ பாதையை விட்டு வழி விலகுவதினால் உண்டாகும் அபாயத்தை ஜாண் பனியன் தன் 'மோட்சப் பிரயாணம்' என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு சித்திரிக்கிறார்:

'பூர்வ பாதைகளிலேயே நடந்துவந்துகொண்டிருந்த கிறிஸ்தியான் மோட்ச நகரத்தைச் சமீபித்தபோது, அப்பாதையை ஒட்டி வேறொரு பாதை போடப்பட்டிருப்பதைக் கண்டான். அப்பாதை அழகானதாகவும், நடப்பதற்கு எளிதானதாகவும், கவர்ச்சிகரமானதாகவும் தென்பட்டது. ஆனால் இவன் நடந்துவந்துகொண்டிருந்த பழைய பாதையோ, கரடுமுரடானதாகவும், கல்லும் முள்ளும் நிறைந்ததாகவும், ஒவ்வொரு அடியையும் அதிக கவனத்தோடே எடுத்துவைக்க வேண்டியதும், தனிமையாக நடக்க வேண்டியதுமான, குறுகலான இடுக்கமான வழியாக இருந்தது. அவனுடைய கண்ணுக்கெட்டிய தூரம் வரை மற்றப் பாதையும் இப்பாதைக்கு இணையாகவே செல்வதாகத் தோன்றவே, கிறிஸ்தியான் சற்று நேரம் இலகுவாக, வசதியாக நடக்கலாம் என்று எண்ணி, அந்தப் பாதையில் நடக்கலானான். அப்பாதையோ வரவர திசை மாறி, அவனை அகோர இராட்சதனின் எல்லைக்குள் கொண்டுசென்றுவிட்டது. அகோர இராட்சதன் அவனை நையப் புடைத்து, விலங்கிட்டுத் தன் சிறைச் சாலையில் அடைத்துவிட்டான். நெடுநாட்கள் பட்டினியாகச் சிறையிலடைபட்டுக் கிடந்தபோது, அவன், தான் இழைத்த பெரும் தவற்றை எண்ணி அங்கலாய்த்தான். முடிவில் தேவனின் மகா இரக்கத்தினால் அவன் அவ்விடத்தினின்று தப்பினான். பூர்வ பாதைக்கு மீண்டும் வந்து, அதன் பின் அப்பாதையிலேயே அவன் மிகவும் கவனமாக நடக்கலானான்.'

"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" ; "ஆதலால் நீ நல்லவர்களின் வழியிலே நடந்து, நீதிமான்களின் பாதைகளைக் காத்துக்கொள்வாயாக" (நீதி. 14 : 12 ; 2 : 20). "கீழான பாதாளத்தை விட்டு விலகும்படி, விவேகிக்கு ஜீவவழி

யானது உன்னதத்தை நோக்கும் வழியாம்" (நீதி. 15 : 24). எனவே உன்னதத்தை நோக்கிச் செல்லும் ஜீவ வழியிலேயே நாம் கவனமாய் நடப்போமாக.

எரேமியா 6 : 16 - இல், 'வழிகளிலே நின்று' என்று கூறப்பட்டிருப்பதின் கருத்து யாது? பல வழிகள் நம்மைக் குறுக்கிடும்போது, அவற்றுள் சரியான 'பூர்வ வழி' எது என்று நாம் பகுத்தறியும்படி சற்று தரித்து நின்று, நிதானத்துடன் செயல்பட வேண்டும். "ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல; கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான்" என்றும், "விவேகத்தின் வழியை விட்டுத் தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்" என்றும் ஞானியாகிய சாலொமோன் கூறுகிறான் (நீதி. 19 : 2 ; 21 : 16). தன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம்; விவேகி தன் நடையின்மேல் கவனமாயிருக்கிறான் (நீதி. 14 : 8, 15). ஆகையால் பூர்வ பாதை எது என்று நாம் கேட்டு விசாரித்து, நல்ல வழியிலே நம் அடிகளை ஸ்திரப்படுத்திக்கொள்வோமாக.

**ராஜபாதை:**

"நீதிமானுடைய வழியோ ராஜபாதை" (நீதி. 15 : 19). கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் கடந்து செல்லும் ஒரு ராஜபாதை உண்டு. அது ஒரு பெரும்பாதை (high way) ஆகும். அப்பாதையில் இடறல் இல்லை. அது பரிசுத்த வழி என்னப்படும். அது, கேட்டுக்குப் போகிற விரிவும் விசாலமுமான வழியினின்று முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை" (ஏசாயா 35 : 8); "உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் (high ways to Zion - Eng. marg.) கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.... அவர்கள் ... சீயோனிலே தேவ சந்நிதியில் வந்து காணப்படுவார்கள்" (சங். 84 : 5 - 7). ஒரு பெரும்பாதையில், அதின் வழியே கடந்து செல்பவர்களின் கவனத்திற்கென்று பல அறிவிப்புப் பலகைகள் (Sign-boards) ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். அவர்களுக்கு முன்பாக உள்ள பாதையின் விவரங்களை அது முன்னறிவிக்கும். இதனால் அப்பாதையில் செல்பவர்கள் பாதுகாப்புடன் செல்வார்கள். அவ்வாறே தேவன் தாம் நமக்கு நியமித்திருக்கிற பூர்வ பாதையில் பல எச்சரிப்புகளையும், கவனத்திற்கான குறிப்புகளையும் ஆங்காங்கே நாட்டியிருக்கிறார். "நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை"

என தீர்க்கதரிசிக்குக் கட்டளையிடப்பட்டது (ஆப. 2 : 2). வேத வசனங்களே அந்த அறிவிப்புப் பலகைகளாகும். அவைகளைக் கவனித்து, அவைகளின்படி நடக்கிறவர்களுக்கு இடறலும் இல்லை, அபாயமும் இல்லை. "அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை" என நாம் வாசிக்கிறோமன்றோ? (சங். 37 : 31). "புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்" (நீதி. 10 : 17). "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" என திருவசனம் கூறுகிறது (ஏசாயா 30 : 21). நாம் அதைக் கவனித்து நடப்போமாகில், நம் நடைகள் ஜீவபாதையிலேயே காக்கப்பட்டிருக்கும். நீதிமான்களின் பாதையில் பாவமாகிய இருள் இல்லை. அப்பாதை நடுப்பகல் வரை அதிகமதிகமாகப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும் (நீதி. 4 : 18). நாம் ஒளியில் நடக்கிறபடியினால் நமக்கு இடறுதல் இல்லை (யோவான் 11 : 9).

"பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" (ஏசாயா 48 : 17) என்றுரைத்தவர் இப்பாதையில் நம்முடனேகூட வருகிறார். தன் ஆடுகளுக்கு முன் செல்லுகிற ஒரு மேய்ப்பனைப் போல அவர் நம் முன் செல்லுவதால், நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு மாத்திரம் நாம் கவனமாயிருப்போமாக.

நண்பனே ! நீ இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் பூர்வ பாதைகளாகிய அப்போஸ்தல உபதேசத்தில் கவனமாக நடந்துவந்தாய். ஆனாலும் நாட்கள் செல்லச் செல்ல, நீ மனுஷருடைய ஆலோசனைகளுக்கும் சுயவிருப்பங்களுக்கும் இடங்கொடுத்து, மனுஷரையும் மாம்சத்தையும் பிரியப்படுத்தத் துணிந்திருப்பாயாகில், உன் ஜீவியத்தின் 'பழைய வாசல்' நிர்மூலமாக்கப்பட்டுள்ளது என்பதை உணருவாயாக. பூர்வ பாதைகளில் பாதி தூரமோ, பெரும்பான்மையான தூரமோ கடந்துவிட்டபடியினால் நீ புதிய எருசலேமைச் சென்றடைய முடியாது. சரியான வழியை அறிந்துகொண்ட பின், தங்கள் ஜீவிய காலத்தின் முடிவுபரியந்தம் முழு தூரமும் அப்பாதைகளிலேயே தவறாமல் நடந்தவர்களே அதற்குள் பிரவேசிப்பார்கள். "ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22 : 14). பின்மாற்றக்காரரோ புறம்பேயிருப்பார்கள் ! ஆகவே உன் ஜீவியத்தின் 'பழைய வாசல்' எந்த நிலையிலுள்ளது என்பதை நீ உணர்ந்து, அதைச் செப்பனிடத் துரிதப்படுவாயாக.

### ஆதி அனுபவங்கள்:

பழைய வாசல், அப்போஸ்தல உபதேசங்களாகிய பூர்வ பாதையை மாத்திரமல்ல, நம் தனிப்பட்ட ஜீவியத்தில் ஆதியில் நாம் தேவன்பேரில் கொண்டிருந்த அன்பு, விசுவாசம், நம்பிக்கை போன்றவற்றையும் குறிக்கும். "நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 2 : 2). எபேசு சபையார் கர்த்தருக்காக அதிகமான நற்கிரியைகளைச் செய்துவந்த போதிலும், "ஆனாலும், நீ **ஆதியில் கொண்டிருந்த அன்பை** விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என ஆவியானவர் அவர்களிலிருந்த ஒரு குறையைச் சுட்டிக்காட்டுகிறார் (வெளி. 2 : 4). மற்ற எல்லா நற்பண்புகளும் நற்கிரியைகளும் அவர்களில் இருந்ததில் அவர் திருப்தியடைந்துவிடவில்லை. மேலும், "நாம் **ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை** முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி. 3 : 14) என்றும், "அவர்கள் ... **முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை** விடுவதினாலே, ஆக்கினைக்குட்படுவார்கள்" (I தீமோ. 5 : 11, 12) என்றும் எழுதப்பட்டுள்ளது. நாம் நமது ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டத் துவங்கிப் பல வருடங்கள் கடந்து சென்றுவிட்டமையால் நம்முடைய ஆதி அனல் குன்றி, நம் ஆதி அனுபவங்களாகிய 'பழைய வாசல்' பாழடைந்து போயிருக்குமென்றால், அதைத் தீவிரமாகச் செப்பனிடுவோமாக. கிறிஸ்து என்னும் அஸ்திபாரத்தின் மேல் நாம் ஒரு மாளிகையாகக் கட்டியெழுப்பப் பட்டுவருகிறோம். ஒரு கட்டடத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட சில பகுதிகள் பாழடைந்து போயிருக்க, அவற்றைப் பொருட்படுத்தாமல், அவற்றின் மேல் புதியவைகளைச் சேர்த்து இணைத்துக் கட்ட ஒருவன் முற்பட்டால் முழுக் கட்டடமும் விழுந்துபோகும். முதலாவதாகப் பழையவைகளைச் சீர்ப்படுத்திவிட்டு, புதியவைகளை அவற்றின் மேல் சேர்த்துக் கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறே நம் ஜீவியத்திலும் நாம் ஆதி அனுபவங்களைப் புதுப்பித்துக்கொண்டு, அவற்றின் மேல் புதிய ஆவிக்குரிய அனுபவங்களைக் கூட்டிக் கட்டியெழுப்பிக்கொண்டு வளருவோமாக! "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" என நாம் வாசிக்கிறோமே! (எபே. 2 : 22).

### பழைய வாசலைக் கட்டியவர்கள்:

'*பழைய வாசலை யோய்தாவும் மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்*' (நெகே. 3 : 6).

***யோய்தா*** – 'யோய்தா' என்னும் பதத்திற்கு, 'தேவன் அறிவார்' என்று அர்த்தமாம். கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் (II தீமோ. 2 : 19).

“நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்” என்றும், “நான் அவைகளை அறிந்திருக் கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது” என்றும் நம்முடைய நல்ல மேய்ப்பர் கூறுகிறார் (யோவான் 10 : 15, 27). “கர்த்தர் என் மேய்ப்பரா யிருக்கிறார்; ... அவர் ... என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்” என நாம் வாசிக்கிறோம் (சங். 23 : 1, 3). தேவனால் அறியப்பட்டவர்கள் அல்லது தேவனுக்குச் சொந்தமானவர்கள் மட்டுமே பூர்வ பாதையில் வழிநடக்க இயலும். மற்றவர்களுக்கோ அப்பாதையும் அப்போஸ்தல உபதேசங்களும் மறைபொருளாயிருக்கும். மேலும், கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார் என்று நாம் வாசிக்கிறோம் (சங். 11 : 5). கர்த்தரால் சோதித்தறியப்பட்டவர்களான நீதிமான்களே இப்பூர்வ பாதையில் வழி நடக்க இயலும். ஆபிரகாமைத் தேவன் சோதித்து, “நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்” என்றார் (ஆதி. 22 : 12). அவனுடைய வாழ்நாளெல்லாம் தேவன் அவனை விசுவாசப் பாதையில் வழிநடத்தினார். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு அவர் தம் வழியைப் போதிக்கிறார் (சங். 25 : 12). “நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; ... உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், ... உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக” என்று தாவீது உத்தம இருதயத்தோடு ஜெபம் பண்ணுகிறான் (சங். 143 : 8, 10). “நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்” என வாக்குப்பண்ணின தேவன் (சங். 32 : 8), அவனுடைய உத்தம இருதயத்தையும் உண்மையான வாஞ்சையையும் அறிந்தவராய், அவனை முடிவுபரியந்தம் செம்மையான பாதையில் வழிநடத்தினார். தன் வாழ்நாளெல்லாம் அவன் தேவனுடைய சித்தம் செய்கிறவனாயிருந்தான். நாம் பூர்வ பாதைகளில் தேவனால் வழிநடத்தப்படும்படி, தேவனால் அறியப்பட்டவர்களாயும் அவருக்குச் சொந்தமானவர்களாயும் இருப்போமாக. “இந்தத் தேவன் என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்” (சங். 48 : 14).

*மெசுல்லாம்* – ‘மெசுல்லாம்’ என்னும் பதத்திற்கு, ‘சிநேகிதன்’ என்று பொருள். தேவனுக்குச் சிநேகிதராய் இருக்கிறவர்கள் மட்டுமே தங்களைப் பூர்வ பாதையிலும் ஆதி அனுபவங்களிலும் காத்துக்கொண்டு, மற்றவர்களையும் பூர்வ வழியில் நடத்த இயலும். எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றும் ஊழியர்களைக் கர்த்தர் தம் சிநேகிதர் என உரிமைபாராட்டுகிறார் (லூக்கா 12 : 1, 4 ; யோவான் 15 : 15). ஆதிமுதல் மறைக்கப்பட்டிருந்த தேவ இரகசியங்களைத் தேவன் தமது பரிசுத்த அப்போஸ்தலருக்கும் அவர்கள் மூலமாகச் சபைக்கும்

வெளிப்படுத்துகிறார் (எபே. 3 : 11). கர்த்தராகிய ஆண்டவர் தமது ஊழியக் காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் (ஆமோஸ் 3 : 7). கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களை நோக்கி, "நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என்கிறார் (யோவான் 15 : 15). நாம் இப்படிப்பட்ட தேவஊழியர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளும்போது (I யோவான் 1 : 3), அவர்கள் மூல மாகத் தேவன் நம்மைப் பூர்வ பாதையில் நடத்துவார். மேலும், சிநேகிதர் ஒருவரோடொருவர் நெருங்கிய ஐக்கியமுள்ளவர்கள்; திறந்த மனமுள்ள வர்கள்; ஒருவர்மேல் ஒருவர் நம்பிக்கையுள்ளவர்கள். எல்லாச் சந்தர்ப்பங் களிலும் தேவனை விசுவாசித்த ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டான் (யாக். 2 : 23 ; ஏசாயா 41 : 8). "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" என்று கர்த்தர் கேட்கிறார் (ஆதி. 18 : 18). "சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையான வைகள்; ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான்" என்றும் நாம் வாசிக் கிறோம் (நீதி. 22 : 11). தேவன் சிநேகிக்கிற பரிசுத்தத்தை நாமும் சிநேகிப் போமாயின், நாம் சுத்த இருதயமுள்ளவர்களாயிருந்து ராஜாதிராஜாவாகிய அவருக்குச் சிநேகிதராகலாம். இவ்விதம் தேவனுக்குச் சிநேகிதராய் இருக்கும்படி, அவர் பிரியங்கொள்ளுகிற மேன்மையான சுபாவங்களை நாம் நாடுவோமாக. அப்போது, அவரால் நாம் சரியான பாதையில் வழிநடத்தப்படுவோம்.

சிநேகிதர் இருவர் வழிநடந்து போகும்போது அவர்கள் ஒருவரோ டொருவர் திறந்த மனதுடன் உரையாடிக்கொண்டுபோவது போல, நாமும் இவ்வனாந்தரப் பாதையில் நம் கர்த்தரோடு உரையாடிக்கொண்டும், அவர் சத்தம் கேட்டுக்கொண்டும் செல்ல வேண்டும். ஆபிரகாமைக் கர்த்தர் அழைத்தது முதல் அவன் பரதேசியாய் நடந்துகொண்டிருந்த அவ னுடைய வாழ்நாளெல்லாம் அவனுக்கு இந்த அனுபவம் இருந்தது. 'உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போல் திரளாயிருக்கும்' என்று கர்த்தர் தம் சிநேகிதனான அவனுக்கு உரைத்துப் பல ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், அவருடைய வார்த்தைகளின் மேல் அவனுக்குச் சற்றும் சந்தேகம் வரவில்லை. அவனுக்குச் சொந்தமென்று வாக்குப் பண்ணப்பட்ட தேசத்தில் அவன் தன் ஜீவிய காலமெல்லாம் பரதேசி யாகவே சஞ்சரித்து வந்தான். என்றாலும், கர்த்தரின் வார்த்தைகள் அவனுக்கு உண்மைப்பொருளாகவே இருந்தன. ஈசாக்கைப் பலியிடும்படி கர்த்தர் அவனிடம் சொன்னபோது - அவன் நினைத்திராத மிகக் கடினமான காரியத்தைச் செய்யும்படி அவர் அவனிடத்தில் எதிர்பார்த்த அவ்வேளையிலுங்கூட - அவன் மனம் பதறவில்லை; அது வரை

கர்த்தருக்கும் அவனுக்குமிடையே இருந்துவந்த உறவும் மாறிப்போக வில்லை. எப்போதும் கர்த்தரோடு அவனுடைய மனம் இசைந்தே இருந்தது. தன் சிநேகிதரான கர்த்தரின் சொல் கேட்டு, தன் ஒரேபேறான நேசகுமாரனைக் கொல்லவும் அவன் கத்தியை ஓங்கிவிட்டான்! ஆகவே அவர் அவனைத் தம் சிநேகிதன் என்று உரிமைபாராட்டத் தயங்கவில்லை. அருமையானவர்களே! ஒரு சிநேகிதன் போல நம்மோடு நடக்கிற கர்த்தரை நாம் கடந்த நாட்களில் எத்தனை முறை சந்தேகித்து, கேள்வி கேட்டு, அவருக்கு விரோதமாக முறுமுறுத்து, அவரோடுள்ள இனிய உறவை முறித்துக்கொண்டிருக்கிறோம்! பூர்வ பாதையில் அவர் நம்மை நடத்த விரும்பியபோது, 'இவ்வழி வேண்டாம்' என்று கூறி, நாம் எத்தனை முறை நமக்கு இலகுவானவையாய்த் தோன்றிய சுயவழிகளைத் தெரிந்துகொண்டிருக்கிறோம்! "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப் பான்" என்றல்லவா ஞானி கூறுகிறான்? (நீதி. 17 : 17). நமக்கு விருப்பமான பாதைகளில் அவர் நம்மை நடத்தும்போது அவரை நண்பராகவும், நம் விருப்பத்திற்கு மாறான பாதைகளில் அவர் நம்மை நடத்தும்போது அவரை நம் விரோதி போலவும் நாம் பாவித்து நடந்துகொண்ட சந்தர்ப் பங்கள் எத்தனை! அவற்றுக்காக மனஸ்தாபப்பட்டு, கர்த்தரோடு நல்மனம் பொருந்தி, பூர்வ வழிகளில் அவரோடு நடக்க நாம் தீர்மானிப்போமாக. நாம் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிற வர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்து, நம்மில் அன்புகூர்ந்தது போல, அன்பிலே நடந்துகொள்ளுவோமாக (எபே. 5 : 1, 2). நம்முடைய ஜீவியத்தின் 'பழைய வாசல்' பாழாக்கப்பட்டுக் கிடக்குமாயின், அதை மீண்டும் கட்டியெழுப்பும்படி நாம் விழித் தெழும்புவோமாக.

(4)

# எப்பிராயீம் வாசல்

## (GATE OF EPHRAIM)

*“துதிசெய்கிற இரண்டாம் கூட்டத்தார் ... அலங்கத்தின்மேல் சூளை களின் கொம்மையைக் கடந்து, அகழ் மதில்மட்டும் நெடுகப் போய், எப்பிராயீம் வாசலையும், பழைய வாசலையும், மீன் வாசலையும், ... கடந்து, ஆட்டுவாசல்மட்டும் புறப்பட்டுக் காவல்வீட்டு வாசலிலே நின்றார்கள்”* (நெகே. 12 : 38, 39).

எப்பிராயீம் வாசல், அலங்கத்தின் வடமேற்குப் பகுதியில் இருந்தது. எருசலேமிலிருந்து எப்பிராயீமின் எல்லைகளுக்கு அல்லது சமாரியாவுக்குச் செல்வதற்கான வழியாக இவ்வாசல் கட்டப்பட்டிருந்தது. இது நான்காவதாகப் பழுதுபார்த்துக் கட்டப்பட்ட வாசலாகும். இது ‘நடுவாசல்’ என்றும் அழைக்கப்பட்டது (எரே. 39 : 3). சூளைகளின் கொம்மையை அடுத்து, அலங்கத்தின் வட மேற்கு முனையில், மூலை வாசல் அல்லது கோடி வாசல் (Corner gate) என்ற ஒரு வாசல் இருந் திருக்கிறது (சக. 14 : 10). எருசலேமின் பழைய அலங்கத்தில், மூலை வாசலுக்கும் பழைய வாசலுக்குமிடையே, மூலைவாசலிலிருந்து நானூறு முழ தூரத்தில் ‘எப்பிராயீம் வாசல்’ கட்டப்பட்டிருந்தது. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல் தொடங்கி, மூலைவாசல் மட்டும் நானூறு முழ நீளம் இடித்துப்போட்டு, அதன் வழியாக நகரத்தினுள் பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்திலும் அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட யாவையும் எடுத்துக் கொண்டுபோனான் என்று இராஜாக்களின் புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம் (II இராஜா. 14 : 13, 14). இந்த மூலைவாசலைக் குறித்து நெகேமியாவின் புஸ்தகத்தில் யாதொரு விவரமும் இல்லை. அதையொட்டியிருந்த சூளை களின் கொம்மையைப் பழுதுபார்த்துக் கட்டினவர்கள் இப்பகுதியையும் கட்டியிருக்கக் கூடும் (நெகே. 3 : 11). பழைய வாசலுக்கும் பள்ளத்தாக்கின் வாசலுக்குமிடையே இருந்த நீண்ட பகுதியை எட்டு பிரிவினர் தனித் தனியே பழுதுபார்த்துக் கட்டியிருக்கின்றனர். எனவே நான்காவது

வாசலாகிய எப்பிராயீம் வாசலைப் பழுதுபார்த்துக் கட்டியவர்கள் இன்னாரென்று குறிப்பாகக் கூற இயலாது. இருப்பினும், எப்பிராயீம் வாசலின் ஆவிக்குரிய கருத்தினை மாத்திரம் நாம் இங்கு தியானிப்போமாக.

**(i) சிறுமையைத் தொடரும் உயர்வு :**

யோசேப்புக்கு எகிப்திலே இரண்டு குமாரர் பிறந்தார்கள். அவர்களில் இளையவனே எப்பிராயீம் ஆவான். யோசேப்பு, "நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்" (ஆதி. 41 : 52). யோசேப்பு அந்நிய தேசமாகிய எகிப்திலிருந்த ஆரம்ப நாட்களில் அனுபவித்த சிறுமையை நாம் அறிவோம். அங்கே தன்னை அறிந்திருந்தவர்களாலும் அவன் பிழையாக விளங்கிக்கொள்ளப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். அவனுடைய நியாயத்திற்காக அவன் சார்பில் நின்று பரிந்துரை செய்ய ஒருவரும் இருக்கவில்லை. தனிமையும் சிறுமையுமே அவனுடைய பங்காயிருந்தன. அவை அனைத்தையும் அவன் பொறுமையுடன் சகித்தபடியினால் கர்த்தர் அவனுக்குத் துணை நின்றார். கர்த்தருடைய குறித்த வேளை வந்தபோது, அவர் அவனை மகா மேன்மையாய் உயர்த்திவிட்டார் ! "எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார். உத்தமர்கள் அதைக் கண்டு மகிழுவார்கள்; நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும்" (சங். 107 : 41, 42); "சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்" (சங். 9 : 9); அவர் "சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்" (வச. 12) போன்ற வசனங்கள் அவனில் நிறைவேறின. "என்மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்; நான் தனித்தவனும் சிறுமைப்படுகிறவனுமாயிருக்கிறேன்" (சங். 25 : 16) என்றும், "நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்; ... என் தேவனே, தாமதியாதேயும்" (சங். 40 : 17) என்றும் தாவீது தான் சிறுமைப்பட்டிருந்த காலத்தில் தேவனை நோக்கி மன்றாடுகிறான். ஆம் ! உயர்ந்தவரும் உன்னதத்தில் வாசம்பண்ணுகிறவருமான நம் தேவன், சிறுமைப்பட்டவர்கள் மேல் எப்போதும் சிந்தையுள்ளவராயிருக்கிறார். அவர்களுக்காக, அவர்களுடைய சத்துருக்களோடு அவர் வழக்காடுகிறார். "மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால், கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால், அவர்கள் ... நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள். ... நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ... நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது" (சங். 124 : 1 - 3, 6, 8). அல்லேலூயா !

'சிறுமைப்பட்டிருந்த தேசத்தில்' யோசேப்பைத் தேவன் பலுகப் பண்ணினார். அவர் அவனை மேன்மையாய் உயர்த்திவிட்டார். அவனுடைய முந்தின சிறுமையும் தாழ்வுகளுமெல்லாம் முற்றிலும் மறக்கப் பட்டுப்போயின. எகிப்து தேசம் முழுவதும், கானான் தேசம் உட்பட, சுற்றிலுமிருந்த தேசங்களைச் சேர்ந்த பலரும், தாங்கள் உயிர்பிழைக்கும் படியாக அவனுடைய உதவியை நாடி, அவன் முன் வந்து பணியும்படி தேவன் செய்தார். ஆம்! "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்" (I சாமு. 2 : 8).

## (ii) மிகுந்த கனி கொடுத்தல்:

யோசேப்பு, "தேவன் என்னைப் பலுகப்பண்ணினார்" என்று கூறி, தன் இளைய குமாரனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான். யாக்கோபும் எப்பிராயீமை ஆசீர்வதிக்கையில், இவன் அதிகமாய்ப் பெருகுவான் என்றும், இவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்றும் கூறினான் (ஆதி. 48 : 19). எப்பிராயீம் என்றால், 'இரட்டிப்பாகக் கனி கொடுத்தல்' (doubly fruitful) என்று பொருள். நாம் இரட்சிக்கப்பட்டது முதல் ஜெயங்கொண்ட ஆண்பிள்ளையாக வெளிப்படும் வரை கர்த்தருக்காகக் கனிகொடுக்கிற அனுபவத்தில் பெருகிக்கொண்டேயிருக்க வேண்டும். நம்முடைய கனிகொடுக்கும் ஜீவியம் எவ்வாறிருக்கிறது என்று நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போமாக. "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; ... நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது" என நம் கர்த்தர் கூறுகிறார் (மத். 7 : 16 - 18).

யோவான் 15 - ஆம் அதிகாரத்தில், மூன்று நிலைகளிலுள்ள திராட்சக் கொடிகளைக் குறித்துக் கர்த்தர் உரைத்திருக்கிறார். அவை, கனிகொடாதிருக்கிற கொடி, கனிகொடுக்கிற கொடி, மிகுந்த கனிகளைக் கொடுக்கிற கொடி என்பவையாகும். இவற்றுள் கனிகொடாதிருக்கிற கொடி அறுப்புண்டு, அக்கினியிலே போடப்படும். கனி கொடுக்கிற கொடியானது, தோட்டக்காரராகிய பிதாவானவர் எதிர்பார்க்கிற அளவுக்குக் கனி கொடாமல், தன்னிலுள்ள ஒருசில கனிகளில் திருப்தியுற்று, கனிகொடுத்தலில் பெருகாமல் இருக்குமாயின், நாளடைவில் அது கனியற்ற கொடியாக மாறிப்போகும். எனவே அது அதிக கனிகளைக் கொடுக்கத்தக்கதாக அவர் அதைக் கிளை நறுக்கிச் (pruning) சுத்தம்பண்ணுகிறார். கிறிஸ்தவ ஜீவியத்தில், நாம் அனுதினமும் முன் நோக்கிச் சென்றுகொண்டிருக்க

வேண்டும். மாறாக, நாம் வளர்ச்சியற்றவர்களாய் இடையில் நின்றுவிடுவோமாகில், நாளடைவில் பின்நோக்கிச் செல்லுகிறவர்களாய் மாறிவிடுவோம். நமக்கு இந்நிலைமை உண்டாகாதிருக்கும்படி, தேவனுடைய சுத்திகரிப்பின் கிரியைக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுப்போமாக. மூன்றாவது வகையான கொடியோ மிகுந்த கனிகளைக் கொடுக்கிறது. "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார் (யோவான் 15 : 5). கிறிஸ்துவினிமித்தம் நமக்கு வருகிற எல்லாச் சோதனைகளின் மத்தியிலும் நாம் அவரில் உறுதியாக நிலைத்திருப்போமாகில், மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாயிருப்போம். நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் பிதா மகிமைப்படுவார் (வச. 8). அப்போது, "எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே" என்று கர்த்தர் நம்மைக் குறித்துச் சாட்சியுங்கொடுப்பார் (லூக்கா 22 : 28).

ஆவிக்குரிய ஜனங்களாகிய நம்மிடத்திலிருந்து தேவன் எதிர்பார்க்கிற சில நல்ல கனிகளைக் குறித்து நாம் கீழே காண்போம்:

### மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகள்:

"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" என்று யோவான்ஸ்நானன் தன்னிடத்தில் வந்து பாவ அறிக்கை செய்தவர்களை நோக்கிக் கூறுகிறான் (மத். 3 : 6, 8). மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகள் ஒவ்வொருவரினின்றும் இக்கனிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நாம் ஒரு காலத்தில் காட்டொலிவ மரக் கிளைகளாயிருந்து, கசப்பான, கெட்ட கனிகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்தோம். சுட்டெரிக்கப்படுவதற்கு ஏதுவாயிருந்த நம்மேல் தேவன் இரக்கம் வைத்து, நல்ல ஒலிவ மரமாகிய ஆண்டவராகிய இயேசுவோடு நம்மை இணைத்திருக்கிறார். நல்ல ஒலிவ மரத்துடன் ஒட்ட வைக்கப்பட்டுள்ள நாம் அதன் வேருக்கும் சாரத்துக்கும் பங்குள்ளவர்களாயிருக்கிறோம் (ரோமர் 11 : 17). எனவே, கர்த்தராகிய இயேசுவின் சுபாவங்களும் வல்லமையுமே நம் மூலம் வெளிப்பட வேண்டுமேயன்றி, காட்டொலிவ மரத்தின் கனிகள் நம்மிலிருந்து வெளிப்படலாகாது. ஒருவன் மனந்திரும்புதலின் அனுபவத்தை அடைந்துகொண்டது முதல் படிப்படியாகக் கர்த்தருக்காகக் கனிகொடுத்தலில் வளர்ந்துவருகிறான்.

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகள் யாவை? இரண்டு அங்கிகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுத்தலும், ஆகாரத்தை உடையவன் பசியாயிருக்கிறவனுக்கு அதைப் பகிர்ந்தளித்தலும், பரிதானம் வாங்கா

திருத்தலும், இடுக்கண் செய்தலை வெறுத்தலும், பொய்க்குற்றஞ்சாட்டா திருத்தலும் போன்ற இவைகளை மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகள் என யோவான்ஸ்நானன் குறிப்பிடுகிறான் (லூக்கா 3 : 10 - 14). மேலும், மனந் திரும்பிய ஒருவனில் காணப்படும் அடையாளங்களைக் குறித்து அப். பவுல், "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்கு கிறது; ... பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தை யும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று" என்று எழுதுகிறார் (II கொரி. 7 : 10, 11). இவைகள் இல்லாதவர்கள் தங்களை மனந்திரும்பியவர்கள் என்றோ, இரட்சிக்கப்பட்டவர்கள் என்றோ உரிமைபாராட்ட இயலாது. உலகம் நம்முடைய கனிகளினாலே நம்மை அறிந்துகொள்ளும். மெய்யாகவே மனந்திரும்பிய ஒருவன், தன் முந்தின ஜீவியத்தினின்று திசைதிருப்பப்பட்டவனாய், இருளினின்று வெளிச்சத்திற்குள் பிரவேசித்த வனாய் இருப்பதால், பழைய இருளின் கிரியைகள், பழைய பாவப் பழக்கங்கள் போன்றவற்றின் ஒரு சுவடும் அற்றவனாய், அவற்றினின்று முற்றிலும் எதிர்த்திசை நோக்கித் தன் பிரயாணத்தை மேற்கொள்ளுகிறான். பாவத்தின் மேல் வெறுப்பும், பரிசுத்தத்தின் மேல் பேராவலும் அவனில் உண்டாகியிருப்பதால், "நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது" என்ற வசனத்திற்கிணங்க (மத். 7 : 18), அவனில் அந்தகாரத்தின் கிரியைகள் அல்லது மாம்சத்தின் கிரியைகள் வெளிப்பட முடியாது (ரோமர் 13 : 12 ; கலா. 5 : 19 - 21).

**நீதியின் கனிகள்:**

இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் வளர்ந்துவருவதின் மூலமாக நாம் படிப்படியாக தேவ நீதியை நிறைவேற்றுகிறோம். கர்த்தராகிய இயேசு தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி தம்மை ஒப்புக்கொடுத்த வேளையில், "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத். 3 : 15) என்று இதனையே குறிப்பிட்டார். நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசித்து பாவமன்னிப்பாகிய இரட்சிப்பின் அனுபவத்தை அடைந்த நாம், தண்ணீர் ஞானஸ்நானத்திலும் தேவநீதியை நிறைவேற்றுகிறோம். தண்ணீர் ஞானஸ்நானத்தில் நம்முடைய அவயவங் களை நாம் நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறோம் (ரோமர் 6 : 13, 18). இவ்விதம் நாம் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால் பரிசுத்த

மாகுதல் என்னும் பலன் அல்லது கனி நம்மில் உண்டாகிறது (வச. 22). மேலும், "தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி" என்று அப். பவுல் எழுதுகிறார் (பிலி. 1 : 10). இந்த நீதியின் கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது (யாக். 3 : 18). நாம் சமாதானத்தில் நம் ஜீவியத்தை காத்துக்கொண்டு, சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பிறருக்கு அறிவிப்பதினால் அவர்களையும் தேவ நீதிக்குள் வழிநடத்தலாம். அதினிமித்தம் தேவனுடைய நாமம் நம் மூலமாக மகிமைப்படுகிறது. இங்ஙனம் தேவனுடைய மகிமைக்கென்று ஜீவிப்பதே நீதியின் கனிகளால் நிறைந்ததொரு ஜீவியமாகும். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாம் கிறிஸ்துவின் நற்கந்தமாய்த் திகழ வேண்டும். நம் நிமித்தமாக அநேகர் கர்த்தரை நன்றியுடன் துதிக்கத்தக்கதாக, நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாகவும், பிறருக்கு ஆசீர்வாதமாகவும் துலங்க வேண்டும். நம் இருதயத்தினின்று புறப்படுகிற உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியும் தேவனுடைய மகிமைக்கேதுவாயிருப்பதால், எல்லா வேளைகளிலும் கர்த்தரை உயர்த்தும் துதி நம்மிலிருந்து புறப்பட வேண்டும் (எபி. 13 : 15). நாம் அவரில் மறைந்திருந்து, அவரையே உலகிற்கு உயர்த்திக் காட்டுவோமாக.

### தேவனுக்கென்று கனிகொடுத்தல்:

"நீங்கள் ... கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" என அப். பவுல் எழுதுகிறார் (ரோமர் 7 : 4). நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் மரணத்தோடு நம்மை இணைத்துக்கொள்வதின் மூலம் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாகிறோம். இவ்விதம் ஞானஸ்நானத்தில் பாவத்திற்கு மரித்த நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் கிறிஸ்துவினுடையவர்களாகி, அவருக்கென்று கனிகொடுக்கிறவர்களாகிறோம். நம் மூலமாக ஒரு ஆவிக்குரிய சந்ததியும் உருவாக்கப்படுகிறது. இதனையே "புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக ... விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" (வச. 6) என்று அவர் குறிப்பிடுகிறார். "இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது" என்று திருவசனம் கூறுகிறது (ஓசியா 10 : 1). தேவன் இஸ்ரவேலை மகா செழிப்பான மேட்டிலே, நற்கனி தரும் உயர்குலத் திராட்சச்செடியாக நட்டு, கனிகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார். அதுவோ அவருக்குக் கசப்பான கனிகளைத் தந்தது (ஏசாயா 5 : 1 - 4). பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் கர்த்தருடைய

வர்களாய் மாறியிருக்கிற நாம் அவரில் நிலைத்திராவிடில் அவருக்கென்று கனிகொடுக்க இயலாது. அவரில் நாட்டப்பட்டவர்களாய், அவரில் வேர்கொள்ளாதவர்கள் கனியற்றவர்களாகிறார்கள். இஸ்ரவேலரைக் குறித்து, "அவர்கள் வேர் உலர்ந்துபோயிற்று, கனிகொடுக்கமாட்டார்கள்" என்று கூறப்பட்டுள்ளது (ஓசியா 9 : 16). தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்களான அவர்கள் அவரில் நிலைத்திராமற் போனபோது, கனியற்றவர்களாயினர். நமக்கும் இந்த நிலை வராதிருக்கும் படி நாம் எச்சரிக்கையாயிருப்போமாக. நாம் தேவனுக்கென்று கனி கொடுக்கத்தக்கதாக, பாவத்திற்கு மரித்தவர்களாகவும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் அவருக்கே சொந்தமானவர்களாகவும் என்றென்றும் அவரில் நிலைத்திருப்போமாக.

**ஆவியின் கனி:**

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவரிலும் இக்கனி எதிர்பார்க்கப்படுகிறது. "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" ஆகியவையாகும் (கலா. 5 : 22, 23). அருமையானவர்களே ! இந்த நற்சுபாவங்களில் நாம் நாளுக்கு நாள் பெருகிவருகிறோமா? அல்லது குறைந்துகொண்டிருக்கிறோமா? "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்" (எபே. 5 : 9).

*அன்பு* – பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தெய்வீக அன்பின் அம்சங்களை I கொரிந்தியர் 13 - ஆம் அதிகாரத்தில் அப். பவுல் குறிப்பிடுகிறார். மேலும், "நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும்" செய்வாராக என்று அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதுகிறார் (I தெச. 3 : 12 ; 4 : 10). இந்த அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் (Judgment) அதிகமதிகமாய்ப் பெருக வேண்டும் (பிலி. 1 : 9). பகுத்தறிவோடு கூடிய பரிசுத்தமான அன்பையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருக்கும்படி உலகத்தோற்றத்துக்கு முன்பே கிறிஸ்துவுக்குள் அவர் நம்மைத் தெரிந்து கொண்டார்.

*சந்தோஷம்* – தெசலோனிக்கேய சபையார் மிகுந்த உபத்திரவத்திலே, 'பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே' கர்த்தரைப் பின்

பற்றினார்கள் (I தெச. 1 : 6). "அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்" என தாவீது கூறுகிறான் (சங். 4 : 7). "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், ... நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" என்று ஆபகூக் கூறுகிறான் (ஆப. 3 : 17, 18). "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது ... பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" (ரோமர் 14 : 17). எந்த விபரீதமான, இடுக்கமான சூழ்நிலைகளும் கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒரு தேவபிள்ளையின் மகிழ்ச்சியைப் பாதிக்க முடியாது. கர்த்தரில் மாத்திரம் நம் சந்தோஷம் தங்கியிருக்குமாயின், எந்தச் சூழ்நிலையிலும் நம்முடைய சந்தோஷம் குறையாமல், பெருகிக் கொண்டேயிருக்கும். இதையே அப். பவுல், "எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்" என்று எழுதுகிறார் (II கொரி. 7 : 4).

*சமாதானம்* – "ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" (ரோமர் 8 : 6). "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 119 : 165). "ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும் ... இருக்கும்" என்பது தேவனின் வாக்குத்தத்தம் ஆகும் (ஏசாயா 48 : 18). ஆகவே சமாதானத்தில் பெருகும்படி நாம் ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட சிந்தையுள்ளவர்களாயும், கர்த்தரின் வேதத்தை நேசித்து, அதன்படி ஜீவிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். மேலும், கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, அவரையே நம்பியிருத்தல் (ஏசாயா 26 : 3), ஜெப ஜீவியம் (பிலி. 4 : 6, 7), நேர்மையாய் நடத்தல் (ஏசாயா 57 : 2), நன்மை செய்தல் (ரோமர் 2 : 10) போன்றவையும் நாம் பூரண சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இன்றியமையாதவையாகும்.

*நீடியபொறுமை* – சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் மகிமையான தேவ வல்லமையினால் (அபிஷேகத்தினால்) நம்மில் உருவாக்கப்படுகிறது (கொலோ. 1 : 11). மேலும், உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது என்றும் நாம் வாசிக்கிறோம் (ரோமர் 5 : 3). எனவே நாம் பொறுமையில் பெருக வாஞ்சிப்போமாயின், கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவங்களையும் பாடுகளையும் வரவேற்கிறவர்களாயிருக்க வேண்டும். அத்துடன், கர்த்தருடைய இரகசிய வருகையின் நம்பிக்கையினால் நாம் நிறைந்திருப்போமாயின், தற்காலத்துப் பாடுகளில் நம்மால் பொறுமையாயிருக்க இயலும் (I தெச. 1 : 2, 10). இவ்வாறு கர்த்தருடைய இரகசிய

வருகையின் நம்பிக்கையால் நிறைந்து ஜீவிப்பதினாலும் பாடுகளுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதினாலும் பொறுமை என்னும் ஆவியின் கனி நம்மில் பெருகும்.

*தயவு* – கிறிஸ்து நம்முடைய பாவங்களை எண்ணாமல், நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்டது போல, நாமும் நமக்கு விரோதமாய்ப் பிறர் செய்யும் குற்றங்களை எண்ணாமல், அவர்களை மன்னிப்பதினால் தயவு என்னும் ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறோம். தேவனின் திரளான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டதின் மூலம் நாம் தேவ தயவை ருசிபார்த்திருக்கிறோம். ஆகவே நாமும் பிறருக்கு மன்னித்து, அவர்களுக்குத் தயை பாராட்டக் கடனாளிகளாயிருக்கிறோம். இதையே அப். பவுல், "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4 : 32) என்றும், "நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், ... தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி,... ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோ. 3 : 12, 13) என்றும் கூறுகிறார். மேலும், நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே தயை என ஞானி கூறுகிறான் (நீதி. 19 : 22). ஆகவே நன்மைசெய்யும்படி நமக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்து, நாம் நம்மைத் தயவுள்ளவர்களாய் வெளிப்படுத்துவோமாக (நீதி. 3 : 27).

*நற்குணம்* – ரோமாபுரியிலிருந்த விசுவாசிகள் நற்குணம் என்னும் ஆவியின் கனியினால் நிறைந்தவர்களாயிருந்தனர் (ரோமர் 15 : 14). பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப். 17 : 10, 11). கர்த்தருடைய வசனங்களைத் தியானிப்பதின் மூலம் நாம் நற்குணத்தில் விருத்தியடையலாம். மேலும், மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் முடிவுபரியந்தம் நகோமியை உத்தமமாய்ப் பின்பற்றி, அவளுடைய ஆலோசனைப்படியே கீழ்ப்படிந்து நடந்ததினிமித்தம் நற்குணமுள்ளவள் என சாட்சி பெற்றாள் (ரூத் 3 : 10). அவ்வாறே நாமும் திருவசனத்தைத் தியானிப்பதின் மூலமும் பரிசுத்தவான்களுக்குக் கீழ்ப்படிவதின் மூலமும் நற்குணத்தில் வளருவோமாக.

*விசுவாசம்* – தேவனை ஸ்தோத்திரிப்பதின் மூலம் நாம் விசுவாசத்தில் பெருகலாம் (கொலோ. 2 : 7). ஆபிரகாம், நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்த சூழ்நிலைகளிலும், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை

மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4 : 18, 21). இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிற தேவன் மேல் அவன் உறுதியான விசுவாசமுள்ளவனாயிருந்தான். மேலும் அவன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டது (யாக். 2 : 22). இவ்வாறு நாம் தேவனைத் துதிப்பதினாலும் விசுவாசத்தின் கிரியைகளினாலும் விசுவாசத்தில் பெருகிப் பூரண மடைவோமாக.

***சாந்தம்*** – சாந்தம் என்னும் கனி நம்மில் உண்டாகிப் பெருகும் படிக்கு நாம் தேவனுடைய மகிமையான வல்லமையினால் (அபிஷேகத் தினால்) பலப்படுத்தப்பட வேண்டும் (கொலோ. 1 : 11). அத்துடன் நாம் தேவ சித்தம் செய்தலாகிய கர்த்தருடைய நுகத்தை ஏற்றுக்கொண்டு, அவரோடு சேர்ந்து அதைச் சுமப்பதின் மூலமும் அவரிடத்திலிருந்து இச்சுபாவத்தைக் கற்றுக்கொள்ளலாம் (மத். 11 : 29). இந்நூலின் 54 - 56 பக்கங்களில் இச் சுபாவம் குறித்து நாம் விவரமாய்க் கண்டோம்.

***இச்சையடக்கம்*** – கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத் தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக் கிறார்கள் (கலா. 5 : 24). துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாம லிருந்து, கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள் என்று அப். பவுலும், ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகுங்கள் என்று அப். பேதுருவும் நமக்கு அறிவுறுத்துகின்றனர் (ரோமர் 13 : 14 ; I பேதுரு 2 : 11). நாம் பாவத்துக்கு மரித்தவர்களாய் ஆவிக் கேற்றபடி நடந்துகொள்வோமாயின், இச்சையடக்கம் என்னும் ஆவியின் கனி நம்மில் நிலைத்திருக்கும் (கலா. 5 : 16).

"நீயோ, தேவனுடைய மனுஷனே, ... நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு" என்று அப். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (I தீமோ. 6 : 11). அருமையானவர்களே, இன்று நாம் எதை அடைந்து கொள்ளும்படியாய் நாடி ஓடிக்கொண்டிருக்கிறோம்? மேலானவைகளையே நாம் நாடுவோமாக.

**நற்கனிகள்:**

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும்

நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயு மிருக்கிறது" (யாக். 3 : 17). நற்கனிகளால் நிறைந்தவர்களாயிருக்கும்படி நாம் பரத்திலிருந்து வருகிற ஞானத்தினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். பரத்திலிருந்து வருகிற ஞானத்தை அடைந்துகொள்ளும்படி நாம் லௌகீக ஞானத்திற்கும் மனுஷ ஞானத்திற்கும் மரித்தவர்களாயிருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், மனுஷ ஞானமானது, "பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" (வச. 15). இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது (I கொரி. 3 : 19). ஆனால் சிலுவையைப் பற்றிய உபதேசமோ கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது (I கொரி. 1 : 18). ஆம் ! இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையே. ஒருவன் உலக ஞானத்தைக்கொண்டு தெய்வீக ஞானத்தை அடைந்துகொள்ள இயலாது. இப்பிரபஞ்சத்து ஞானிகளுக்கு மறைக்கப்பட்டிருக்கும் இந்த இரகசியமான தேவ ஞானத்தைக் குறித்து, "தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; ... அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை" என அப். பவுல் எழுதுகிறார் (I கொரி. 2 : 6 - 8). "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்" (நீதி. 2 : 6, 7). அதின் விலை மனுஷனுக்குத் தெரியாது; அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை. முத்துக்களைப் பார்க்கிலும் அதின் விலை உயர்ந்தது என யோபு கூறுகிறான் (யோபு 28 : 12 - 23). அவன் ஞானத்தின் விலை மதிப்பை அழகாக விவரித்துவிட்டு, "இதோ, ஆண்டவருக்குப் பயப்படு வதே ஞானம்" என்று கூறி முடிக்கிறான் (வச. 28). ஆம் ! கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1 : 7 ; 15 : 33). பரத்திலிருந்து வருகிற இந்த ஞானத்தினால் நாம் நற்கனிகளால் நிறைந்தவர்களாகிறோம். உலக ஞானத்தைச் சார்ந்திருக்கிறவர்களோ, பேய்த்தனமான ஜென்ம சுபாவத்தையே வெளிப்படுத்துகிறார்கள்.

**அருமையான கனிகள்:**

மேற்கூறப்பட்டுள்ள கனிகள் யாவும் அருமையும் இனிமையுமான கனிகளே. இத்தகைய, நம் நேசருக்கேற்ற அருமையான கனிகளை நம்மில் உருவாக்குவது யாது? தன் இனிய கனிகளால் நேசரை மகிழ்விக்க விரும்பும் மணவாட்டி, "வாடையே ! எழும்பு; தென்றலே ! வா; கந்தப் பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு; என் நேசர் தம்முடைய தோட்டத் துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என்கிறாள்

(உன். 4 : 16). அவளுடைய கனிகள் சுவை மிகுந்தவையும், வாசனை பரிமளிப்பவையுமாயிருக்கும்படி அவள் வாடையையும் தென்றலையும் வரவேற்கிறாள். வடகாற்று மழையைப் பிறப்பிக்கும் (நீதி. 25 : 23); தென்றல் உஷ்ணத்தை உண்டாக்கும் (லூக்கா 12 : 55). இது பரிசுத்த ஆவியானவரின் இரு விதமான கிரியைகளைக் காண்பிக்கிறது. வடகாற்று குளிர்ச்சி யாகவும் புத்துணர்வூட்டுவதாகவும் இருப்பதைப் போல, அவர் விடாய்த்த ஆத்துமாவைக் குளிரப்பண்ணி, தொடர்ச்சியாக ஆசீர்வாதத்தின் மழையை வருஷிக்கப்பண்ணுகிறார் (எபி. 6 : 7). இது, நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர உறுதுணையாயிருக்கிறது. மறுபக்கத்தில், நாம் வளர்ந்து பக்குவமடைகையில், நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற சோதனைகளையும் பரீட்சைகளையும், அவர் நம் ஜீவியத்தில் அனுமதிக்கிறார். தென்றலின் உஷ்ணத்தினால் கனிகள் பழுத்துச் சுவை மிகுந்தவையாவது போல, இப்பாதைகளினால் நாம் தேவனோடு நெருங்கிச் சஞ்சரிக்கக் கற்றுக் கொண்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நம் நேசருக்கேற்ற அருமையான கனிகளைப் பிறப்பிக்கத்தக்கவர்களாகிறோம். வாடையும் தென்றலும், நற்சுவையும் சதைப்பற்றும் நற்கந்தமுமுள்ள கனிகள் உருவாகக் காரண மாயிருப்பது போல, ஆவியானவர் நம் ஜீவியத்தில் வித்தியாசமான விதங்களில் செயல்பட்டு, நம்மைக் கர்த்தருக்கு உகந்தவர்களாக்குகிறார். பூமியின் நற்பலனைச் சேர்க்க அவர் வெளிப்படும் நாளில், நாம் அவருடைய அருமையான கனிகளாக - அவரது ஆத்தும வருத்தத்தின் பலனாக - அவரண்டை சேர்க்கப்படும்படி கனி கொடுத்தலின் அனு பவத்தில் நாடோறும் வளருவோமாக.

### (iii) சிறப்பான சுதந்தரம் :

'எப்பிராயீம் வாசல்' சிறுமையைப் பொறுமையுடன் சகிப்பதால் வரும் உயர்வையும், தேவனுக்கென்று மிகுந்த கனிகொடுக்கும் அனு பவத்தையும் மாத்திரமல்ல, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குரிய சிறப்பான ஆவிக்குரிய சுதந்தரத்தையும் குறிக்கிறது. தேவபிள்ளைகள், தேவன் தங்களுக்குத் தந்தருளியிருக்கும் சிறப்பான ஆவிக்குரிய சுதந்தரங்களைத் தங்கள் ஜீவியத்தில் பேணிக் காத்துக்கொள்ள வேண்டும். யோசேப்பின் குமாரனாகிய எப்பிராயீம் இளையவனாயிருந்தும், யாக்கோபு அவனை மனாசேக்கு முந்தினவனாக வைத்து ஆசீர்வதித்தான். அவன், "தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைத்தான்" (ஆதி. 48 : 20). எப்பிராயீமின் தகப்பனாகிய யோசேப்பு அதை மாற்ற முற்பட்டபோதிலும், அது தேவனுடைய உறுதியான தீர்மானமாக, அவனுக்கே உரிய மாறாத

ஆசீர்வாதமாக அமைந்தது. இவ்விதம் எப்பிராயீம் **சேஷ்டபுத்திரனாகி**, இரட்டிப்பான ஆசீர்வாதத்திற்குச் சுதந்தரவாளியானான்.

"எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31 : 9). எப்பிராயீம் என்ற பதம் வேதாகமத்தில் சில இடங்களில் எப்பிராயீமின் சந்ததியாரான ஒரே ஒரு கோத்திரத்தைக் குறிப்பதற்கும், வேறு சில இடங்களில் இஸ்ரவேல் வம்சம் முழுவதையும் குறிப்பதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் தேவன் சமஸ்த இஸ்ரவேலரையும் 'எப்பிராயீம்' என அழைக்கிறார். "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்" என்று கர்த்தர் பார்வோனுக்குச் சொல்லியனுப்புவதை யாத்திராகமம் 4 : 22 - இல் நாம் காண்கிறோம். யாக்கோபின் குடும்பத்தைக் குறிப்பிடும்படி, அவனுடைய பேரனும் இளையவனுமான எப்பிராயீமின் பேரைத் தேவன் தெரிந்து கொண்டது சிந்திக்கப்படத்தக்கதே.

**சேஷ்டபுத்திர பாகம்** என்பது, இஸ்ரவேலில் ஒரு குடும்பத்தின் மூத்த ஆண்பிள்ளையாய்ப் பிறந்தவனுக்கு உரிய இரட்டிப்பான சுதந்தரவீத மாகும். "தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது" (உபா. 21 : 17). இது தேவ னுடைய கட்டளையாகும். என்றாலும், முற்பிதாக்களின் நாட்களில் சேஷ்ட புத்திரராய்ப் பிறந்த சிலர், சேஷ்டபுத்திர பாகத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அபாத்திரராய்ப்போனபடியால் அவர்களுக்குரியதாயிருந்த அச்சிறப்பான சுதந்தரவீதம் தேவனால் இளையவனுக்கு மாற்றப்பட்டதாக நாம் காண் கிறோம். தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலை நிற்கிறது என்று அப். பவுல் எழுதுகிறார். பிள்ளைகள் இன்னும் பிறவா மலும் நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று ஏசா, யாக்கோபு என்பவர் களைக் குறித்துத் தேவனால் முன்னறிவிக்கப்பட்டது (ரோமர் 9 : 11, 12). அவ்வாறே யோசேப்பின் குமாரரில் இளையவனான எப்பிராயீம் சேஷ்ட புத்திரனாகத் தெரிந்துகொள்ளப்பட்டது தேவனால் உண்டானதாகும். என்றாலும் சேஷ்டபுத்திரராகப் பிறந்தவர்களில் சிலர், தங்கள் சேஷ்ட புத்திர பாகத்தை இழந்துபோனதற்குத் தகுந்த காரணங்களும் உண்டா யிருந்ததாக வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம்.

**ஈசாக்கின் சுதந்தரம்:**

ஆபிரகாமின் குடும்பத்தில், வாக்குத்தத்தத்தின் புத்திரனாகிய ஈசாக்கு பிறக்க நீண்ட காலம் சென்றது. இதற்கிடையில் சாராள் தன்

அடிமைப்பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்து, "ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும்" என்று கூறினாள் (ஆதி. 16 : 2). அடிமைப்பெண்ணின் குமாரனாகிய இஸ்மவேல், சாராளின் குமாரனாகிய ஈசாக்குக்கு மூத்தவனாயிருந்தபோதிலும், அவன் ஆபிர காமின் ஆஸ்திகளைச் சுதந்தரித்துக்கொள்ளவில்லை. அவன் அவ்வீட்டி னின்று புறம்பாக்கப்பட்டான். "ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்குக் கொடுத்தான். ஆபிரகாமுக்கு இருந்த மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுத்து, தான் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கே போகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டான்" (ஆதி. 25 : 5, 6). தேவனுடைய திட்டத்தின்படி பிறந்த ஈசாக்கு, ஆபிரகாமின் ஏகசுதனாய்க் கணிக்கப்பட்டான். தகப்பனின் ஆஸ்திகள் அனைத்தும் இளையவனான அவனைச் சேர்ந்தன.

இஸ்மவேல், ஈசாக்கு ஆகியவர்களைக் கொண்டு அப். பவுல் ஒரு ஆழமான சத்தியத்தை விளக்குகிறார்: "ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் ... ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்த வன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். ... நாம் ஈசாக்கைப்போல வாக்குத் தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம். ... அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு" என்று வேதாகமம் சொல்லுகிறது (கலா. 4 : 22, 23, 28, 30). கர்த்த ராகிய இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்குத் தேவன் அதிகாரங் கொடுத்தார். அவர்கள் மாம்சத்தின்படி அல்ல, தேவனால் பிறந்தவர்கள் (யோவான் 1 : 12, 13). பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் தேவ புத்திரராயிருக்கிற நாம், கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனுடைய சுதந்தர ராயுமிருக்கிறோம் (கலா. 4 : 6, 7 ; ரோமர் 8 : 15, 17). ஆகவே **'ஈசாக்கின் சுதந்தரம்'**, தேவனுடைய வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்கள் அனைத்தும் விசுவாச சந்ததிக்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே உரியவை என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது (ரோமர் 4 : 13 ; கலா. 3 : 14, 16).

### யாக்கோபின் சேஷ்டபுத்திர பாகம்:

ஈசாக்கின் குமாரராகிய ஏசாவும் யாக்கோபும் இரட்டைப்பிள்ளைகள் ஆவர். இவர்களில் முதற்பிறந்தவனாகிய ஏசா சேஷ்டபுத்திரனாயிருந்தும்,

தனக்கே உரியதாயிருந்த சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம்பண்ணி னான். அவன் அதன் விலைமதிப்பை உணராமல், "இந்தச் சேஷ்ட புத்திர பாகம் எனக்கு என்னத்திற்கு" என்று கூறி அதை அசட்டைபண்ணினதி னிமித்தம் அதை இழந்துபோனான் (ஆதி. 25 : 32 - 34). "ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான்" என நாம் வாசிக்கிறோம் (எபி. 12 : 16, 17). இவ்வாறு அவ னுடைய சேஷ்டபுத்திர பாகம் இளையவனாகிய யாக்கோபுடையதாயிற்று.

எபிரெய நிருபக்காரன், "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்" என்று கேட்கிறார் (எபி. 2 : 4). நமக்குக் கிடைத்திருக்கிற ஆத்தும இரட்சிப்பு மிகவும் மேன்மையானது. "ஆத்தும மீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது" (சங். 49 : 9). மிகவும் அருமை யாயிருக்கிறது என்பது, 'விலையேறப்பெற்றது' (precious) என ஆங் கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (Eng. vs. 8). அவ்வாறே தேவன் நமக்கு ஈவாக அளித்திருக்கிற அபிஷேகமும், நாம் அடைந்திருக்கிற ஆவிக்குரிய ஜெயங்களும், திவ்விய சுபாவங்களும், ஒவ்வொரு ஆவிக் குரிய அனுபவமும் விலையேறப்பெற்றவையே. அவற்றின் மேன்மை யையும் விலைமதிப்பையும் நாம் அறியாதிருப்போமாகில், அவற்றை எளிதாக இழந்துவிட நேரிடும். நம்மிடத்திலிருக்கிற ஒரு பொருளின் விலைமதிப்பையும் சிறப்பையும் நாம் அறியாதிருப்போமாயின், நாம் அதைக் குறித்துக் கவலையற்றிருந்து, நாளடைவில் நம்மையறியாமலேயே அதை இழந்துவிடுவோம். ஆகவேதான், "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை ... பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" என்று அப். பவுல் தன் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு நினைவூட்டுகிறார் (II தீமோ. 1 : 14). ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றதொரு ஜீவியமானது, கவனமாகக் காத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை உணர்த்தும் வகையில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

நமதருமை இரட்சகர் பரலோகராஜ்யத்தை நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கும், விலையுயர்ந்த ஒரு முத்துக்கும் ஒப்பிடுகிறார்: "பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக் கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, ... தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். மேலும்,

பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பா யிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக் குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத். 13 : 44 - 46). நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம் போல, பரலோக ராஜ்யமும், ராஜ்யத்தின் சுவிசேஷமும், உன்னத அனுபவங்களும், அவற் றின் மேன்மையும் மனுஷரின் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்திருக் கின்றன. ஆனால் அப்பொக்கிஷத்தைக் கண்டுகொண்ட மனுஷனோ, அதன் மேன்மையை அறிந்தவனாய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதை ஆதாயப்படுத்திக்கொள்கிறான். அவ்வாறே, ஒரு முத்துவியாபாரிக்கு மாத்திரமே முத்துக்களின் விலைமதிப்பு தெரியும். ஒரு சாதாரண மனிதனுக்கு அதன் அருமை தெரியாது. நண்பனே ! தேவன் நமக்கு அளித்திருக்கிற பரலோகராஜ்யத்தின் இரகசியங்கள் ஒவ்வொன்றும், உபதேசங்களும், உன்னத ஜீவியமும் முத்துக்களைப் போன்று விலை யேறப்பெற்றவை என்பதை நீ அறிவாயோ? இந்த வெளிப்படுத்தல் உனக்கு இருக்குமாயின் – இவ்விலையேறப்பெற்ற உபதேசங்களை அனுபவமாக்கும்படி எந்தக் கிரயத்தையும் செலுத்த நீ தயங்கமாட்டாய் ! தன் சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம்பண்ணின ஏசாவைப் போல, தேவன் இரக்கமாக உனக்களித்திருக்கும் ஜெயஜீவியத்தை, சற்று நேர உலக சிற்றின்பங்களுக்காக நீ இழந்துபோகத் துணியவும் மாட்டாய் ! தேவன் தம் பிள்ளைகளுக்கு மாத்திரம் தானமாக அளித்திருக்கும் பரிசுத்த ஆவியின் பரலோக சந்தோஷத்தை, இம்மைக்குரிய அற்ப சந்தோஷங் களுக்காக நீ தவறவிட மாட்டாய் ! மறுமையில் நித்திய கன மகிமையை உண்டாக்குகிறதான, அதிசீக்கிரத்தில் நீங்கும் இம்மையின் இலேசான உபத்திரவங்களை, வேண்டாம் என்று நீ தள்ளிவிடமாட்டாய் ! தேவ னுடைய மனுஷனாகிய மோசே, எகிப்தின் பொக்கிஷங்களைப் பார்க்கிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையையே விலையேறப்பெற்ற பொக்கிஷ மாகக் கண்டான் ! இதனால் அவன் அநித்தியமான பாவ சந்தோஷங்க ளையும், "பார்வோனுடைய குமாரத்தியின் மகன்" என்று அழைக்கப்படு வதால் தனக்குக் கிடைக்கும் மேன்மைகளையும் வெறுத்து, தேவஜனங் களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டான் (எபி. 11 : 24 - 26). யெஸ்ரயேலனாகிய நாபோத் தன் பிதாக்களின் சுதந்தரத்தை ராஜாவுக்கு விற்றுப்போட சம்மதியாததினிமித்தம் தன் ஜீவனையும் கிரயமாக்கினான் ! அவனுடைய திராட்சத்தோட்டம் - பரலோக சந்தோஷத் தையும், ராஜாவின் கீரைக் கொல்லை - அற்பமான உலக சிற்றின்பங் களையும் குறிக்கின்றன (I இராஜா. 21 : 2, 3). அப். பவுலும், நல்ல முத்துக் களைத் தேடும் ஒரு முத்து வியாபாரியைப் போல, விலையேறப்பெற்ற முத்தாகிய கிறிஸ்துவைக் கண்டுகொண்ட பின், அவரையே ஆதாயப் படுத்திக்கொள்ளும்படி, தனக்கு இலாபமாயிருந்த அனைத்தையும்

நஷ்டமென்று விட்டுவிட்டார். அவர் தன் ஜீவியகாலமெல்லாம் அந்த ஒரே குறிக்கோளையுடையவராய், தான் கிறிஸ்து இயேசுவினால் எதற்காகப் பிடிக்கப்பட்டாரோ அதைப் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்ந்தார் (பிலி. 3 : 12). ஆதிநூற்றாண்டின் தேவபிள்ளைகளும் பரலோகத்தில் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரத்தை மனதிற்கொண்டு, தங்கள் ஆஸ்திகளைச் சந்தோஷமாகக் கொள்ளையிடக் கொடுத்தார்கள் (எபி. 10 : 34).

மேற்கூறப்பட்டுள்ள அனைவரும் மேலானவைகளை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி தற்காலிகமானவைகளை இழக்கத் துணிந்தனர். நல்ல முத்துக்களைத் தேடும் யாதொருவனும், மிகவும் விலையேறப்பெற்றதென்று தான் அறிந்து நிச்சயித்திருக்கிற ஒரு முத்தை இழந்துபோக விரும்பமாட்டான். அந்த விலையுயர்ந்த முத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி அவன் தனக்குள்ள யாவற்றையும் இழந்துபோகத் தயங்கமாட்டான். ஏனெனில், தன்னிடத்திலுள்ள அனைத்தையும் விற்றுவிட்டாலும் அவற்றின் கிரயம் அந்த முத்தின் விலைமதிப்பிற்கு நிகராகாது என்பதை அவன் நன்கறிவான். அவை அனைத்தும் யாக்கோபு சமைத்துக்கொண்டிருந்த விலைமதிப்பற்ற கூழுக்கு ஒப்பானதே. சேஷ்டபுத்திர பாகத்தின் விலைமதிப்பை நன்கு அறிந்திருந்த யாக்கோபுக்கு, அதை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி தன்னிடத்திலிருந்த அற்பமான கூழைக் கொடுத்துவிடுவது ஒரு பொருட்டாயிருக்கவில்லை. "ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டைபண்ணப்படும்" (உன். 8 : 7). இவ்வசனத்தில், ஆத்தும நேசரின் விலையேறப்பெற்ற நேசத்தோடு யாதொன்றையும் ஒப்பிட இயலாது என மணவாட்டி கூறுகிறாள். ஆகையால், தன்னையே அவருக்குத் தத்தமாக அளித்து, அவரை ஆதாயப்படுத்திக்கொள்ள அவள் முன்வருகிறாள்.

ஏசா, தன் பிறப்புரிமையாயிருந்த மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாகிய சேஷ்டபுத்திர பாகத்தை, சொற்ப நேரத்திற்குள் - அற்ப காரியத்துக்காக - மிகவும் எளிதாக இழந்துவிட்டான். பிற்பாடு அவன் மனஸ்தாபத்தோடு கண்ணீர் விட்டுக் கவலையோடே தேடியும் அதை அடையக் கூடாமற்போனான்! தன்னிடத்திலிருந்ததை விற்று, அதை அடைந்துகொண்ட யாக்கோபோ அதன் மேன்மையை உணர்ந்து, அதைப் பேணிப் பாதுகாத்துக்கொண்டான். ஆகவே **'யாக்கோபின் சேஷ்டபுத்திர பாகம்'**, தேவன் நமக்குக் கிருபையாக நல்கியிருக்கும் உன்னதமான ஆவிக்குரிய அனுபவங்களின் விலைமதிப்பை நாம் உணர்ந்தவர்களாய், அவற்றை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துக்கொள்ளும்படி நமக்குக் கற்பிக்கிறது.

**யோசேப்பின் சேஷ்டபுத்திர பாகம்:**

யாக்கோபின் குமாரரில் ரூபன் முதற்பிறந்தவன் ஆவான். என்றாலும் அவன் மாம்சீகத்திற்கு இடங்கொடுத்து (ஆதி. 49 : 4), தன் பிறப்புரிமையை இழந்துபோனான். யாக்கோபின் பதினொன்றாவது குமாரனாகிய யோசேப்போ அதே விதமான பரீட்சையில் ஜெயம் பெற்று (ஆதி. 39 : 9), தன் மூத்த சகோதரன் இழந்துபோன சேஷ்டபுத்திரபாகத்தை அடைந்து கொண்டான்: "ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன்; ஆனாலும் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தின படியினால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது. ... சேஷ்ட புத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று" (I நாளா. 5 : 1, 2). யோசேப்பு மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையுமானான். "சர்வவல்லவராலே அப்படியாயிற்று" (ஆதி. 49 : 25). முதற்பிறந்தவனின் ஸ்தானத்தை மிகவும் இளையவன் அடைந்தான் ! யாக்கோபு, தன் இதர குமாரருக்குக் கொடுத் ததைப் பார்க்கிலும் அதிகமான ஒரு பங்கை யோசேப்புக்குக் கொடுத்தான் (ஆதி. 48 : 22).

மேலும், யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீமும் மனாசேயும், யாக்கோபின் குமாரராக ஏற்றுக்கொள்ளப்பட்டனர் (ஆதி. 48 : 5). பன்னிரு கோத்திரங்களின் அட்டவணையில் ரூபன், சிமியோன் என்பவர்களைப் போல இவ்விருவரும் கோத்திரப் பிதாக்களின் வரிசைக்குட்பட்டனர். இஸ்ரவேல் புத்திரருக்குக் கானான் தேசம் சுதந்தரமாகப் பங்கிடப்பட்ட போது, இவ்விருவரின் வம்சங்களும் இரு கோத்திரங்களாகக் கணிக்கப் பட்டு, அவர்கள் தங்கள் சுதந்தரவீதத்தை அடைந்தனர். இவ்வாறு, யோசேப்பின் குமாரர், யோசேப்பின் சகோதரர் நடுவே சுதந்தர வீதம் அடைந்தனர். [லேவி கோத்திரத்தார் ஆசாரிய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டமையால், கர்த்தரின் கட்டளையின்படி அவர்களுக்கு அவர்களுடைய சகோதரர் நடுவில் சுதந்தரம் இருக்கவில்லை (யோசுவா 13 : 33). ஆகவே தேசம் சுதந்தரமாகப் பங்கிடப்பட்ட பட்டியலில், யாக்கோபின் பன்னிரு குமாரரின் நாமங்களில் லேவி, யோசேப்பு என்பவர்களின் பெயர்களுக்குப் பதிலாக, எப்பிராயீம், மனாசே என்பவர் களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன]. இவ்வாறு யோசேப்பின் வம்சம், இஸ்ரவேலின் இதர குமாரரின் வம்சங்களின் மத்தியில் இரட்டிப்பான சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டது.

யோசேப்பு தன் சிறுவயதிலிருந்தே தன் மூத்த சகோதரர்களின் துன்மார்க்கமான நடக்கைகளில் அவர்களுடன் இணைந்துபோகாமல்,

வேறுபிரிந்து ஜீவித்ததுடன், தன்னைக் கண்காணிக்க எவருமில்லாத அந்நிய தேசத்திலும் தன் பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டதினிமித்தம் தேவனால் கனம்பண்ணப்பட்டான். இவ்வாறு, **'யோசேப்பின் சேஷ்டபுத்திர பாகம்'** விபரீதமான சூழ்நிலைகளிலும், பரிசுத்தத்திற்காகத் தனிமையாகப் போராட வேண்டியது வந்தாலும், யோசேப்பைப் போல நாம் பரிசுத்த ஜீவியத்தைக் காத்துக்கொள்வோமாகில், சிறப்பான ஆசீர்வாதங் களைச் சுதந்தரித்துக்கொள்ளலாம் என்ற உண்மையை நமக்கு வலி யுறுத்துகிறது.

**கிருபையினால் உண்டாகும் தெரிந்துகொள்ளுதல்:**

எழுத்தின்படியான இஸ்ரவேலரைத் தேவன் தம்முடைய சேஷ்ட புத்திரர் என குறிப்பிட்டிருப்பினும் (யாத். 4 : 22), அவர்கள் உண்மை யில்லாதவர்களாய்ப் போனபோது, அவர் அவர்களைத் தள்ளி, புறஜாதி யாராகிய நம்மைத் தெரிந்துகொண்டார். இதையே 'தேவனுடைய கிருபை யினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதல்' என அப். பவுல் குறிப்பிடு கிறார் (ரோமர் 11 : 5). "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப் படும்" என்று கர்த்தராகிய இயேசு யூதர்களை நோக்கிக் கூறினார் (மத். 21 : 43). இது, முற்பிதாக்களின் நாட்களில், மூத்தவன் தகுதியற்றவனாய்ப் போனபோது, இளையவனைக் கர்த்தர் தெரிந்துகொண்டு, சேஷ்டபுத்திர பாகத்தைச் சுதந்தரிக்கச் செய்ததற்கு ஒப்பாயிருக்கிறது. ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபும், ரூபனுக்குப் பதிலாக யோசேப்பும் தெரிந்துகொள்ளப் பட்டு, தாங்கள் சேஷ்டபுத்திர பாகத்திற்குரியவர்களாகப் பிறவாதிருந்தும் அதைச் சுதந்தரித்துக்கொண்டனரன்றோ? அப்படியே நாமும் முற்காலத் திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது யூதருடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக்கிறோம்; பிதாவாகிய தேவ னுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளாயு மிருக்கிறோம் (ரோமர் 11 : 30 ; I பேதுரு 1 : 2). பாவமன்னிப்பாகிய இரட்சிப்பின் அனுபவத்தில் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்பட்ட நாம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் வாயிலாக அவருடைய புத்திர ராக மாற்றப்பட்டிருக்கிறோம். ஆவியின் முதற்பலன்களைப் பெற்றிருக்கிற நாம், கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவரப்பட்டு, அவருடைய சந்நிதியில் அசைவாட்டப்படும் பலியாகும்படி நம்மை ஒப்புக்கொடுத் திருக்கிறோம் (ரோமர் 8 : 23 ; லேவி. 23 : 17, 20). இந்தப் புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரிய மான பலியாக (ரோமர் 15 : 15) அல்லது ஜெயங்கொண்ட சபையாக மாற்றப் படுகிறது. "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்

கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமார னாயிருப்பான்" (வெளி. 21 : 7) என்று பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவஜனங்களை நோக்கிக் கர்த்தர் சொல்லுகிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறவர்களில் 'ஜெயங்கொள்ளுகிற வர்களை' மாத்திரமே அவர் எல்லாவற்றையும் சுதந்தரிக்கச் செய்கிறார். ஆவியின் முதற்பலன்களைப் பெற்றும், ஜெயங்கொண்டவர்களாக மாற்றப் படாதவர்கள், முதற்பேறானவர்களாகப் பிறந்தும் சேஷ்டபுத்திர பாகத்தைச் சுதந்தரிக்கத் தகுதியற்றவர்களாய்ப் போனவர்களுக்கு ஒப்பானவர்களே. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள் மத்தியிலிருக்கிற ஜெயங் கொள்ளுகிற கூட்டத்தாராகிய இச்சிறுபான்மையினரை நோக்கிக் கர்த்தர், "மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" என்று கூறுவார் (லூக்கா 15 : 31). கர்த்தரோடுள்ள நிலையான ஐக்கியத்தில் நம்மைக் காத்துக்கொள்ளுதலும், ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் கிரியைக்கு ஒப்புக்கொடுத்து அமர்ந்திருத்தலும் நம்மை ஜெயங்கொண்டவர்களாக மாற்றுகின்றன. யாக்கோபு, யோசேப்பு, எப்பிராயீம் போன்றோர் சேஷ்டபுத்திரராகப் பிறவாதிருந்தும், தேவனால் இம்மேன்மையான நிலைக்கு உயர்த்தப்பட்டது போல, எவ்விதத் தகுதியு மற்ற நாமும், தேவகிருபையினால் தேவனுடைய பிள்ளைகளாகவும், புத்திரராகவும், ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும் படிப்படியாக மாற்றப்பட்டு, சரீர மீட்பை அடைந்துகொள்ளத் தகுதியாக்கப்பட்டு, எல்லாவற்றையும் சுதந்தரிக்கும் அனுபவத்திற்குக் கொண்டுவரப்படுகிறோம். "உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்" என்று தாவீது கூறுகிறான் (சங். 18 : 35). நாம் ஜெயங்கொண்டவர்களாய்த் தேவ சிங்காசனத்தைச் சுதந் தரிக்கும் நாள் வரை, தகுதியற்ற புறஜாதியாராகிய நமக்குக் கிடைத் திருக்கும் இந்த மாபெரும் தேவ தயவில் நிலைத்திருப்போமாக (ரோமர் 11 : 22). "முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவ ருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (I கொரி. 15 : 23). தேவபிள்ளை கள் எல்லாரும் அல்ல, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிற அனைவரும் அல்ல, ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களாகிய 'அவருடைய வர்கள்' அல்லது அவருக்குச் சொந்தமானவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் நாளில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் !

அருமையானவர்களே ! உங்கள் ஜீவியத்தின் 'எப்பிராயீம் வாசல்' எந்நிலையில் உள்ளது? தேவனால் வரும் உயர்வைப் பெற்றுக் கொள்ளும்படி தாழ்வின் பாதைகளில் நீங்கள் பொறுமையாயிருந்து வெற்றிசிறப்பீர்களாக; அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து, அதை நீரூற்றாக்கிக்கொள்வீர்களாக. நீங்கள் ஆதியிலிருந்த உங்கள் நற்கனிகளை இழந்திருப்பீர்களாயின், அல்லது அவற்றில் குறைவு

பட்டிருப்பீர்களாயின், மீண்டும் உங்கள் ஜீவியத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டு, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வீர்களாக (வெளி. 2 : 5). உங்கள் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளவைகளாகக் காணப்படட்டும் (வெளி. 3 : 2). "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்க ளாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" (II கொரி. 9 : 8). ஆத்தும நேசர் தமது தோட்டத்துக்கு வரும்போது, அருமையான கனிகளைப் புசிக்கத் தக்கதாக, உங்கள் ஜீவியத்தில் ஆவிக்குரிய சகலவிதமான கனிகளும் நிறைந்திருப்பதாக. நாம் 'முதல் விளைச்சல்களில் முதற்கனியாக' (யாத். 23 : 19) மாற்றப்பட்டு, ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களாய், விலையேறப் பெற்ற நித்திய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதிப்படுவோமாக.

## 5

# பள்ளத்தாக்கின் வாசல்

## (VALLEY GATE)

*"பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும், சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் ... அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, ... அலங்கத்தில் ஆயிரம் முழம் கட்டினார்கள்"* (நெகே. 3 : 13).

எருசலேம், நான்கு குன்றுகளின் மேல் கட்டப்பட்ட ஒரு பட்டண மாகும். மிகவும் அண்மையில் நெருங்கி வந்தாலொழிய பிறர் கண் களுக்குப் புலப்படாவண்ணம் இந்நகரம் மூன்று திசைகளில் மலை களால் சூழப்பட்டுள்ளது. இதையே சங்கீதக்காரன், "பர்வதங்கள் எருச லேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென் றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்" என்கிறான் (சங். 125 : 2). அம்மலைகளுக்கிடையே நகரத்திற்கு உள்ளும் புறம்புமாகப் பல பள்ளத்தாக்குகள் அமையப்பெற்றுள்ளன. நகரத்திற்குப் புறம்பே அதன் தென்மேற்குப் பகுதியிலிருக்கும் இன்னோம் பள்ளத்தாக்கு அவைகளில் ஒன்றாகும். 'பள்ளத்தாக்கின் வாசல்,' அலங்கத்தின் தென் மேற்கு முனையில், இன்னோம் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் வழியாக அமைந்திருந்தது. அலங்கத்தின் கிழக்கே அமையப்பெற்றிருந்த தண்ணீர் வாசலுக்கு எதிர்ப்புறமாக, அலங்கத்தின் மேற்குப் பகுதியில் இவ்வாசல் அமைந்திருந்தது. மலைகளிலும் அவற்றின் காடுகளிலும் பணிபுரிந்துவந்த மக்கள் இப்பகுதிகளில் குடியிருந்தார்கள். நகரத்தின் தாழ்வான பகுதியில் அமைந்திருந்த இப்பள்ளத்தாக்கின் வாசல், மனத்தாழ்மையைக் குறிக் கிறது.

'மனத்தாழ்மை' என்பது விலையேறப்பெற்ற ஒரு திவ்ய சுபாவ மாகும். கர்த்தராகிய இயேசு பெத்லகேமின் ஏழ்மையான பிறப்பு முதல் கல்வாரியின் நீச மரணம் வரை தம்மை அதிகமதிகமாகத் தாழ்த்திக் கொண்டேபோனார். பரலோக மன்னன் இவ்வுலகில் ஒரு தச்சனின்

குடும்பத்தில் அவதரித்தார். அவர் ஊழியம் செய்துவந்த நாட்களிலும் அவருக்குச் சொந்தமாக ஒரு படவோ, வீடோ இருக்கவில்லை; அவர் சீமோன் பேதுருவின் படவில் நின்று பிரசங்கித்தார். வரிப்பணம் செலுத்து வதற்குங்கூட அவரிடம் பணம் இருக்கவில்லை; ஒரு மீனின் வாயி னின்று அப்போதைய தேவையை அவர் பெற்றார். தம் சீஷர்களுடன் கடைசிப் பஸ்காவை ஆசரிக்கும்படி மற்றொருவனுடைய வீடே அவருக்கு ஆயத்தமாக்கப்பட்டது. இவ்விதம் ஒரு எளிமையான வாழ்க்கையைத் தெரிந்துகொண்ட அவர், "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று தம்முடைய தரித்திரமான நிலையைக் குறிப்பிடுகிறார் (மத். 8 : 20). நம்மைத் தேவனிடத்தில் ஐசுவரியமுள்ள வர்களாக மாற்றும்படி அவர் நம் நிமித்தம் தரித்திரரானார் (II கொரி. 8 : 9). "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப் பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி. 2 : 6 - 11). நாமும் மனத்தாழ்மையில் வளரும்படியாக அவர் நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போயிருக்கிறார்.

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார் (மத். 11 : 29). "பிதாவானவர் ... நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று அவர்தாமே உரைத்திருக்க (யோவான் 5 : 22), சர்வலோக நியாயாதிபதியாகிய அவர் தம்முடைய சிருஷ்டியாகிய பிலாத்துவின் முன் மௌனமாக நின்றார்! (மத். 27 : 13, 14). மனுஷர் அனைவரும் நியாயந்தீர்க்கப்படும் மகா நியாயத்தீர்ப்பின் நாளிலே, தாம் வெள்ளைச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்க, பிலாத்துவும் அம்மாந்தர் களில் ஒருவனாய்த் தம் முன் பணிந்து நிற்கப்போவதை அவர் நன்கு அறிந்திருந்தும், வேதவாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக, தாம் தாழ்த்தப் பட்ட அனைத்துப் பாதைகளுக்கும் தம்மை ஒப்புக்கொடுத்தார். "அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது" (அப். 8 : 33). "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் (பிதா

வாகிய தேவனுக்கு) தம்மை ஒப்புவித்தார்" (I பேதுரு 2 : 23). இதினிமித்தம் அவர் பிதாவாகிய தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டார்!

"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று கர்த்தராகிய இயேசு உரைத்திருக்கிறார் (லூக்கா 14 : 11). அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி (Lucifer) என்னும் தேவதூதன் தன்னைத் தான் உயர்த்தும்படி தன் இருதயத்தில் திட்டமிட்டுக்கொண்டிருந்தபோதுதானே அகாதமான பாதாளத்திலே தள்ளப்பட்டான் (ஏசாயா 14 : 12 - 15). மாறாக, பூமியின் தாழ்விடங்கள் வரை இறங்கும்படி தம்மைத் தாமே தாழ்த்தி வெறுமை யாக்கின தேவகுமாரனோ பிதாவினால் எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார். இறங்கினவரே எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டவருமாயிருக்கிறார் (எபே. 4 : 10). "கிறிஸ்து ... தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்" (எபி. 5 : 5).

சவுல் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகத் தெரிந்துகொள்ளப் பட்டபோது, அவன், தான் இஸ்ரவேலின் கோத்திரங்களிலே மிகவும் சிறிதான பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்றும், அதின் குடும்பங்களில் தனது குடும்பம் மிகவும் எளியது என்றும் தன்னைத் தாழ்த்தினான் (I சாமு. 9 : 21). ஜனங்கள் அவனை ராஜாவாக்கும்படி தேடினபோது, தான் அதற்குத் தகுதியற்றவன் என்ற உணர்வினால், அவன் தளவாடங்களுக்குள்ளே போய்த் தன்னை ஒளித்துக்கொண்டான். இவ்விதம் தன்னைத் தாழ்த்திய அவனைத் தேவன் உயர்த்தி, இஸ்ர வேலின் மேல் ராஜாவாக்கினார். என்றாலும் அவனுடைய ராஜ்யபாரம் ஸ்திரப்பட்ட பின்பு அவன் மனமேட்டிமையுள்ளவனாகி, தன்னை ராஜா வாக அபிஷேகம் செய்த தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் வார்த்தை களுக்குக் கீழ்ப்படியாமல் சுயமாகக் கிரியை செய்தான் (I சாமு. 13 : 9 ; 15 : 9). இதனால் சாமுவேல் மனவேதனையுடன், "நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங் களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுவித்தாரே" (I சாமு. 15 : 17) என்று கூறினான். அவ னுக்குச் சிறிது காலம் கொடுக்கப்பட்டும் அவன் தன்னைத் திருத்திக் கொள்ளாததினிமித்தம் அவனுடைய வாழ்நாளெல்லாம் ஒரு பொல்லாத ஆவி அவனை அலைக்கழித்துக்கொண்டிருந்தது. கர்த்தரும் அவனை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார்.

மாறாக, தாவீதோ தன்னுடைய தாழ்வின் காலங்களில் மட்டுமல்ல, தான் உயர்த்தப்பட்டு, சமஸ்த இஸ்ரவேலின் மேலும் ராஜாவாயிருந்த நாட்களிலும், கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த தன்னைத் தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை மேய்ப்பதற்காகத் தெரிந்துகொண்டதை எப்போதும் நினைவுகூர்ந்தான். “தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?” என்று அவன் கூறுகிறான் (I நாளா. 17 : 16). கடைசிவரை தாழ்மையில் தன்னைக் காத்துக்கொண்ட அவனைத் தேவன் கனப்படுத்தி, அவனுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தி, தம்முடைய இருதயத்துக்கு ஏற்றவன் என்று அவனைக் குறித்துச் சாட்சியும் கொடுத்தார். தேவ குமாரனாகிய இயேசு, ‘தாவீதின் குமாரன்’ என்றழைக்கப்படும் அளவிற்கு, அற்பமான இடைச்சிறுவனாயிருந்த அவனைத் தேவன் மேன்மைப்படுத்தினார்.

இஸ்ரவேலின் ராஜாக்களில், “தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை” என வேதாகமம் கூறுகிறது (I இராஜா. 21 : 25). என்றாலும் தன்னுடைய அக்கிரமங்களினிமித்தம் தனக்கு நியமிக்கப்பட்ட தேவநியாயத்தீர்ப்பைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, அவன் உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொண்டான். ஆகவே தேவன் அவனுக்கு வரவிருந்த நியாயத்தீர்ப்பைத் தள்ளிவைத்தார். “ஆகாப் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதைக் கண்டாயா? அவன் எனக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறபடியினால், நான் அவன் நாட்களில் அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில் அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன்” என்று கர்த்தர் தீர்க்கதரிசியிடம் கூறுகிறார் (வச. 29). எப்படிப்பட்ட பாவியும் தன்னைத் தாழ்த்தும்போது, தேவனிடத்தில் அவனுக்கு இரக்கம் கிடைக்கிறது. என்றாலும், தன்னைத் தாழ்த்தி தேவனிடத்தில் திரும்பிய அவன், அந்நிலைமையில் நிலைத்திராமல், தேவனைவிட்டு விலகி மீண்டும் பாகாலைப் பின்பற்றி, கர்த்தரின் தீர்க்கதரிசியைத் துன்புறுத்தினான். இதனால் தேவன் சொல்லியிருந்த நியாயத்தீர்ப்பு அவன்மேல் வந்தது (I இராஜா. 22 : 27, 38). மாறாக, நினிவேயின் மக்கள் தங்கள் பாவங்களின் நிமித்தம் தங்களுக்குத் தேவனால் நிர்ணயிக்கப்பட்டிருந்த கொடும் நியாயத்தீர்ப்பைக் குறித்து அறிந்தபோது, தங்களைத் தாழ்த்தித் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினபடியினால் தங்களுக்கு வரவிருந்த கடும் தண்டனைக்குத் தப்பினர்!

உசியா தன் பதினாறாவது வயதில் ராஜாவாகி, கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்துவந்தான். அவனுடைய சத்துருக்களைத் தேவன் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார். அவன் பலப்படு மட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அநுகூலமுண்டாயிற்று. ஆனால், "அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து", பரிசுத்தமாக்கப்பட்டவர்களான கர்த்தருடைய ஆசாரியர் மாத்திரமே செய்ய வேண்டிய தூபங்காட்டும் ஊழியத்தைச் செய்யத் துணிந்தான் (II நாளா. 26 : 16). அவனைத் தடுத்த ஆசாரியர் மேலும் அவன் கோபமடைந்தான். இதினிமித்தம் அவன் தன் மரண நாள் வரை குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்கு விலக்கப் பட்டவனாய், ஒரு தனித்த வீட்டிலே வாசம்பண்ணினான். பிதாக்களின் கல்லறைகளில் அவன் வைக்கப்படவில்லை. "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை", "அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்", "மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்" என்ற வேதவாக்கியங்கள் எவ்வளவு உண்மையானவை! (நீதி. 16 : 18 ; 18 : 12 ; 29 : 23).

அருமை நண்பனே ! இவ்விதமாக மனமேட்டிமையினால் அழிந்து போன எத்தனையோ திருஷ்டாந்தங்கள் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில், 'நான் ஒரு தகுதியற்ற பாவி' என்ற ஆழ்ந்த உணர்வுடன் நாம் கல்வாரியண்டை வந்ததினிமித்தம் தேவன் நம்மை ஏற்றுக்கொண்டு, நம் பாவங்களற நம்மைக் கழுவி, "இவ்வளவு பெரிதான இரட்சிப்பை" நமக்குக் கட்டளை யிட்டார். அபிஷேகத்தினால் அவர் நம்மை ராஜாக்களாக்கி, உன்னதங் களில் அவரோடுகூட உட்காரவும் செய்திருக்கிறார். நாம் எவ்வளவு உயர்த்தப்பட்டாலும், ஆரம்பத்தில் இருந்த தாழ்மையின் சிந்தையை இழந்துவிடக்கூடாது. 'கிறிஸ்துவின் தாழ்மையை' அடைந்துகொள்ளும் வரை நாம் நாளுக்கு நாள் மனத்தாழ்மையில் வளர்ந்துவர வேண்டும். "நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்" (ஏசாயா 51 : 1). "பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கி யெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்" என்று சங்கீதக்காரன் பாடுகிறான் (சங். 40 : 2, 3). நம்முடைய முந்தின நிலைமையை நாம் ஒருபோதும் மறந்துபோகக் கூடாது. தேவனுடைய இரக்கமும் கிருபையும் நம்மைச் சந்தித்திராவிடில், நாம் இன்னும் பாவங்களிலும் சாபங்களிலும் அமிழ்ந்தே இருந்திருப்போம்

அல்லவா? அப். பவுல் ஒரு பெரிய அப்போஸ்தலனான பின்பும், தான் பாவிகளில் பிரதான பாவி என்று தன்னைக் குறித்துக் கூறுகிறார் (I தீமோ. 1 : 15). ஆபிரகாம், "தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன்" என்றும் (ஆதி. 18 : 27), தாவீது தன்னை ஒரு "தெள்ளுப்பூச்சி" என்றும் (I சாமு. 24 : 14), யோபு தன்னைக் 'காற்றடித்த சருகு' என்றும், "நீசன்" என்றும் (யோபு 13 : 25 ; 40 : 4) அறிக்கையிடுகின்றனர். இவ்விதம் தேவ னுக்குப் பிரியமான தேவதாசர்கள் தங்கள் தகுதியின்மையை எப்போதும் நினைவுகூர்ந்தபடியினால் தேவனால் கனம் பெற்றனர். ஆம்! 'மனத் தாழ்மையுள்ளவனே கனமடைவான்' (நீதி. 29 : 23).

மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக் குறித்துக் கர்த்த ராகிய இயேசு ஒரு உவமையைச் சொன்னார்: ஜெபம்பண்ணும்படி இருவர் தேவாலயத்துக்குப் போனார்கள். அவர்களில் ஒருவன் தன்னுடைய சுயநீதியையும் நற்கிரியைகளையும் தேவனுக்கு வரிசையாக எடுத்துரைத் தான். மற்றவனைக் காட்டிலும் தான் மேன்மையானவன் என்பதையே அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுட்டிக்காட்டின. மற்றவனோ, தூரத்திலே நின்று, தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கவும் துணியாமல், தன் மார்பில் அடித்துக்கொண்டு, "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான் (லூக்கா 18 : 13). இருவருமே மெய்யான தேவனிடத்திற்கு - அவருடைய பரிசுத்த ஆலயத்திற்கு - ஜெபம்பண்ணு வதற்குத்தான் சென்றார்கள். இருப்பினும் தன்னைத் தாழ்த்தினவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் திரும்பிப் போனான். "மனமேட்டிமையுள்ளவ னெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்" (நீதி. 16 : 5). 'தேவன் பெருமை யுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்' (யாக். 4 : 6). "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (வச. 10). "மனத்தாழ்மை யினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி. 2 : 3).

தாழ்மையில் ஆவிக்குரிய ஜீவியத்தை ஆரம்பித்த நண்பனே! நாளடைவில் தேவன் உனக்குத் தானமாய் அளித்த கிருபைகள், தாலந்துகள், ஜெபஜீவியம், பரிசுத்தம், ஜெயஜீவியம் இவற்றைக் குறித்து நீ பெருமையடைந்திருப்பாயானால், அழிவு வருமுன்னே சீக்கிரமாய் உன்னைத் தாழ்த்துவாயாக. உன்னிடத்தில் நன்மையான ஏதாகிலும் உண்டாயிருக்குமாயின் அது உன்னுடைய சொந்த நற்பண்போ, அல்லது உன்னில் இயற்கையாய் அமையப்பெற்றதோ அல்ல. அது தேவனுடைய ஈவு என்பதை உணருவாயாக. இதையே அப். பவுல், "உன்னை

விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" என்று கேட்கிறார் (I கொரி. 4 : 7). உன் ஜீவியத்தில் 'பள்ளத்தாக்கின் வாசல்' சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்குமாயின், அதைக் குறித்து நீ கவலையீனமாயிராதே ! நெகேமியா எருசலேமுக்கு வந்தவுடன், பாழாக்கப்பட்டுப் போயிருந்த அலங்கத்தைப் பார்வையிடும்படியாகச் சென்றபோது, பள்ளத்தாக்கின் வாசல் வழியாகப் புறப்பட்டு, அவ்வாசல் வழியாகவே திரும்பி வந்தான் (நெகே. 2 : 13, 15). நீயும் மற்ற பல ஆசீர்வாதங்களைத் தேவனிடத்தில் கேட்குமுன்னதாக, மனத்தாழ்மை என்னும் திவ்யசுபாவத்தில் வளர்ந்து வருகிறாயா என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து, கர்த்தரண்டை திரும்பு. மனத்தாழ்மை இன்றி, நீ கர்த்தரிடத்திலிருந்து எந்த ஆசீர்வாதத்தையும், உயர்வையும் பெற்றுக்கொள்ளவே இயலாது. "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ... திரும்பினால், ... தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" என்று கர்த்தர் உரைத்திருக்கிறார் (II நாளா. 7 : 14). இவ்வசனத்தில் தேவன் தாழ்மையையே முதலாவதாக வலியுறுத்துகிறார். உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய இயேசு, நித்தியத்தில் சீயோன் மலையிலும் ஆட்டுக்குட்டியானவராகவே நிற்கிறார் ! (வெளி. 13 : 8 ; 14 : 1). நாமும் நம் ஜீவியத்தின் ஆரம்பம் முதல் இறுதி வ்ரை மனத்தாழ்மையில் வளரக் கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

"இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவ்னாயிருப்பான்" என்று கர்த்தராகிய இயேசு மொழிந்தருளியிருக்கிறார் (மத். 18 : 4). தேவனுக்காக அரும் பெரும் சாதனைகளைப் புரிந்தோரும், அல்லும் பகலும் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் அயராது உழைத்தோரும், அவர் நாமத்தினிமித்தம் இரத்தம் சிந்தி மரித்தோரும் ஏராளம்பேர் இருக்க, அவரோ பரலோக ராஜ்யத்தில் பெரியவனாய் முக்கியமான இடத்தில் வைக்கும்படி, சிறுபிள்ளையைப் போல் தன்னைத் தாழ்த்துகிறவனையே தேடிக்கொண்டிருக்கிறார் ! "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது" என்பதே மலைப் பிரசங்கத்தில் அவர் முதலாவதாக உரைத்த வாக்கியமாகும் (மத். 5 : 2, 3). எனவே, பரலோக ராஜ்யத்தில் மிகவும் மேன்மையான இடத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் போகிறோம் என்ற எதிர்பார்ப்புடன் ஜீவித்துக்கொண்டிருக்கிற தேவஜனங்களாகிய நாம், மனத்தாழ்மைக்கு முதலிடம் கொடுக்கிறோமா என்பதைச் சற்று சிந்தித்துப்பார்ப்போமாக.

**பள்ளத்தாக்கின் வாசலைக் கட்டியவர்கள்:**

"*பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும், சானோவாகின் குடிகளும் பழுது பார்த்துக் கட்டினார்கள்*" (நெகே. 3 : 13).

***ஆனூன்*** - ஆனூன் என்பதற்கு, 'தயவுள்ளவன்' என்று பொருள். "நன்மைசெய்ய மனுஷன் கொண்டிருக்கும் ஆசையே தயை" (நீதி. 19 : 22). இங்கு கூறப்படும் நன்மை யாது? "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் (தேவன்) உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6 : 8). "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்" என இவ்வசனம் ஆரம்பித்து, நியாயமும் இரக்கமும் செய்து, மனத்தாழ்மையாய் நடப்பதே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் நன்மை என்பதை வலியுறுத்துகிறது. ஆகவே மெய்யான மனத்தாழ்மை தங்களில் உருவாக்கப்படும்படி ஆசித்து, அதற்காகத் தங்களைத் தேவன் நடத்தும் பாதைகளுக்கு ஒப்புக்கொடுக்கிறவர்களே தங்கள் ஜீவியத்தில் 'பள்ளத்தாக்கின் வாசலைக்' கட்டியெழுப்ப முடியும். அப்படிப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் தங்களை மன்னித்தது போல, மற்றவர்களையும் மன்னிப்பார்கள் (எபே. 4 : 32). "நீதிமான்களுக்குள்ளே தயை உண்டு" (நீதி. 14 : 9). தயை என்பது, நமக்கு விரோதமாய்த் தவறு இழைத்தவர்களை மனப்பூர்வமாக மன்னிக்கும் ஒரு தெய்வீகப் பண்பாகும். "அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்" என்று நாம் தேவனைக் குறித்து வாசிக்கிறோமன்றோ? (ஏசாயா 55 : 7). இந்த வெளிப்படுத்தல் நம்மையும் அவரைப் போல தயவுள்ளவர்களாக்குகிறது. இதையே, "நற்புத்தி தயையை உண்டாக்கும்" என ஞானி கூறுகிறான் (நீதி. 13 : 15). தயவுள்ளவனுக்குத் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு உத்தமராகவும் தம்மை வெளிப்படுத்துகிற கர்த்தர் (சங். 18 : 25), அப்படிப்பட்டவர்கள் மேல் தயவுள்ளவராயிருந்து அவர்கள் தங்கள் ஜீவியத்தில் இழந்துபோன பகுதிகளைச் சீர்ப்படுத்திக்கொள்ளவும், மனத்தாழ்மையில் வளரவும், மேலும் பல உன்னத அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு அனுக்கிரகம் செய்வார்.

***சானோவாகின் குடிகள்*** - சானோவாகு (Zanoah) என்பதற்கு 'நொறுங்குண்ட பட்டணம்' என்று பொருள். அப்பட்டணம் யூதாவின் சமபூமிகளுக்கு மேற்கிலிருந்தது. அப்பட்டணத்தின் குடிகள் மனப்பூர்வமாகப் பள்ளத்தாக்கின் வாசலைக் கட்டியெழுப்ப முன்வந்தனர். "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட

ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" (சங். 34 : 18). "உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக் கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (ஏசாயா 57 : 15). "சிறுமைப் பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்" என்பதும் அவரது திருவாய்மொழியாகும் (ஏசாயா 66 : 2). நொறுங்குண்ட இருதயமுள்ளவர்கள் மட்டுமே பிறரால் தாழ்த்தப் படும்போதும், தாழ்வான நிலையில் வைக்கப்படும்போதும் மனதில் இளைப்பாறுதலைப் பாதுகாத்து, தாழ்மையில் வளர்ந்து பூரணப்பட இயலும். ஆகவே நொறுங்குண்ட இருதயத்துடனும், கிறிஸ்துவின் தாழ்மையைத் தரித்துக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையுடனும் நம் ஜீவியத்தின் 'பள்ளத்தாக்கின் வாசலை' நாம் கட்டியெழுப்பி, அதைக் காத்துக்கொள்வோமாக !

6

# குப்பைமேட்டு வாசல்
## (DUNG GATE)

*"குப்பைமேட்டு வாசலைப் பெத்கேரேமின் மாகாணத்துப் பிரபுவாகிய ரெக்காவின் குமாரன் மல்கியா பழுதுபார்த்து, அதைக் கட்டி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டான்"* (நெகே. 3 : 14).

குப்பைமேட்டு வாசல், பட்டண அலங்கத்தின் தென்கோடியில் இருந்த ஒரு சிறிய வாசல் ஆகும். நெகேமியாவும் யூத ஜனங்களும் இச்சிறிய வாசலையும் பழுதுபார்த்துக் கட்டினர். ஸீலோவாம் என்னும் குளத்திற்கு அருகிலிருந்த இவ்வாசல், இன்னோம் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் வழியாகவும் அமைந்திருந்தது. நகரத்தின் குப்பை இன்னோம் பள்ளத்தாக்கிற்கு வண்டிகள் மூலம் அனுப்பப்பட்டு, அங்கே சுட்டெரிக்கப் படுவது வழக்கம். இதனால் இது, 'சாம்பல் குவியலின் வாசல்' என்றும் அழைக்கப்பட்டது. இது எப்போதும் திறந்திராமல், சில சமயங்களில் மாத்திரம் அவசியத்திற்கேற்ப திறக்கப்படும். இக்குப்பைமேட்டு வாசலும் சத்துருக்களினால் தீக்கிரையாக்கப்பட்டது.

'குப்பைமேட்டு வாசல்' என்பது, நமக்கு லாபமாயிருப்பவைகளை நாம் கிறிஸ்துவுக்காகக் குப்பையாக எண்ணுவதைக் குறிக்கிறது. அப். பவுல், "அவருக்காக (கிறிஸ்துவுக்காக) எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்று பிலிப்பியர் 3 : 11 - இல் கூறுகிறார். 'எல்லாவற்றையும்' என்பதில் அவர், முன்பு தனக்கு லாபமாயிருந்தவைகளை, முன்பு அவருக்கிருந்த மாம்சீகமான மேன்மை பாராட்டல்களையே குறிப்பிடுகிறார் (வச. 4 - 6). தன் முற்பிதாக்கள், தன் வம்சம், தன் குலம், தன் கல்வி, தன் மாம்சத்தின் மேலுள்ள நம்பிக்கை, மனுஷரிடையே தனக்கிருந்த புகழ், தன் சன்மார்க்க ஜீவியம் - என்று இப்படியாகப் பல மேன்மைபாராட்டல்களை அவர் ஒருகாலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தார். ஆனால் கிறிஸ்து அவரைச் சந்தித்த பின், அவர் அவை அனைத்தையும் நஷ்டமென்றும் குப்பையென்றும் எண்ணிப் புறம்பே தள்ளிவிட்டார்.

அப். பவுலின் சொந்த ஊராகிய தர்சு பட்டணம் சிலிசியாவின் தலைநகரமாகும். அது, வாணிபத்திலும் மற்றும் பல துறைகளிலும் சிறந்து விளங்கியதால், கீர்த்தி பெற்ற அப்பட்டணத்தைக் குறித்த பெருமை அவருக்கிருந்தது (அப். 21 : 39). அவருடைய குடும்பத்தினர் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த பரிசேயராயிருந்தனர் (அப். 23 : 6 ; பிலி. 3 : 5). இதினிமித்தம் அவருடைய தகப்பனார், தங்கள் கோத்திரத்தைச் சார்ந்த இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலின் பெயரை அவருக்குச் சூட்டியிருந்தார். ஒரு பக்திக்குரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தமையால், நியாயப்பிரமாணத்திலும், எபிரெய மொழியிலும் அவர் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் தன் இளம் வயதில், எருசலேமிலிருந்த பிரசித்தி பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேலின் பாதத்தில் இருந்து வேதப் பிரமாணங்களைக் கற்றுத் தேர்ந்தவர் (அப். 22 : 3). அந்நாட்களில் ரோம வல்லரசு தலையோங்கி நிற்கவே, தன் தகப்பன் வழியாகத் தான் பெற்றிருந்த ரோமப் பிரஜா உரிமையைக் குறித்தும் அதிகப் பெருமை அவருக்கிருந்தது. மேலும் தர்சு பட்டணத்தின் வீதிகளில் சாதாரணமாக வழங்கி வந்த கிரேக்க மொழியும் தனக்கு நன்கு தெரியும் என்ற மேன்மை பாராட்டலும் அவரில் இருந்துவந்தது. ஸ்தேவான் கொலைசெய்யப் பட்டபோது அவரைக் கல்லெறிந்தவர்களோடு வாலிபனான அவரும் ஒத்துழைத்து, தன் யூத மார்க்கத்திற்காக வைராக்கியம் காண்பித்தபடியினால் பிரதான ஆசாரியரிடத்திலும் அவருக்கு நன்மதிப்பு உண்டாயிருந்தது. இவ்விதமாக எல்லாப் பக்கங்களிலும் பெருமை ஒரு சரப் பணியைப் போல அவரைச் சுற்றிக்கொண்டிருந்தது.

இவை யாவும் - தமஸ்குவுக்குப் போகும் வழியில் - அந்த மணல் நிறைந்த சாலையில் - நடுப்பகலில் - வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போன்ற முகத்தையுடைய ஆண்டவராகிய இயேசுவின் நேரடிச் சந்திப்பில் - பரலோகப் பேரொளி அவரைச் சந்தித்த அவ்வேளையில் - தெறிப்புண்டு போயின. சற்று நேர இடைவெளிக்குள் அவை அனைத்தும் அவருக்கு விலையற்றவையாய் மாறிப்போயின ! அவரது வாழ்க்கையே முற்றிலும் திசை திருப்பப்பட்டுவிட்டது. சற்று முன்பு வரை லாபமாய்த் தோன்றியவைகள் சிறிது நேரத்திற்குள்ளாக பயனற்றவையாய், வெறுமையானவையாய் அவருக்குத் தோற்றமளித்தன ! அனைவரிடத்திலும் தனக்கிருந்த செல்வாக்கோடும் பெருமிதத்தோடும் மத வைராக்கியத்தோடும், ஒரு பெரிய உத்தரவாதத்தை நிறைவேற்றப் போவதாகத் தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் வீரநடைபோட்டுக் கொண்டிருந்த அவ்வாலிபன், சர்வவல்லவரின் சந்திப்பில் அவர்முன் நிற்கக் கூடாதவனாய் நடுங்கித் திகைத்துப்போனான். கர்த்தராகிய

இயேசுவின் கல்வாரியின் முன் தன் அனைத்துப் பெருமைகளையும் இறக்கிவைத்து, முற்றிலும் அவர் பாதம் சரணடைந்துவிட்டான், சவுல் என்னும் வாலிபன்! ஆம்! அதுமுதல் சவுல் பவுலாக மாறினார்.

பவுல் என்னும் பதத்திற்கு 'மிகவும் சிறியவன்' என்று பொருள். அது வரை தன் பெயரும் ஊரும் கல்வியும் ஸ்தானமும் வம்சமும் தன்னைப் பெரியவன் என்று சுட்டிக்காட்டிக் கொண்டிருக்க, பெருமிதமாய் நடந்துவந்த அவ்வாலிபன் அவற்றையெல்லாம் குப்பையென உதறித் தள்ளிவிட்டு, தனக்காகப் பரலோக மேன்மைகள் யாவையும் துறந்தவரும், தலை சாய்க்க ஸ்தலமில்லாதவராய்த் தரணியில் சஞ்சரித்தவருமான கிறிஸ்துவைப் பின்பற்றலானார். பிலிப்பிய சபையாருக்கு எழுதிய நிருபத்தில், இதையே அவர், "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். ... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்று குறிப்பிடுகிறார் (பிலி. 3 : 7 - 11). இங்கு "குப்பையுமாக எண்ணுகிறேன்" என அவர் நிகழ்காலத்தில் கூறுவதைக் கவனிக்கவும். தமஸ்குவின் சாலையில் அவர்தம் ஆண்டவராகிய இயேசுவோடுள்ள சந்திப்பு அவரது வாழ்வின் திருப்புமுனையாக அமைந்துவிட்டது. அன்றுமுதல் ரோம இராயனின் வாளுக்கு இரையாகும் கடைசி நிமிடம் வரை அவர், முன்பு தனக்கு மேன்மையானவைகளாயிருந்தவைகளைக் குப்பையாகவே எண்ணிக்கொண்டிருந்தார். அருமை நண்பனே! உன் ஜீவியத்தில் நீ கர்த்தரிடத்தில் திரும்பியபோது குப்பையாக எண்ணியவைகளை இன்றும் குப்பையாகவே எண்ணிக்கொண்டிருக்கிறாயா? அல்லது அவற்றை மேன்மையானவைகளாக எண்ணி, அவற்றைத் திரும்பிப் பார்க்கிறாயா? ஆரம்பத்தில் நீ விட்டுவிட்டவைகளைக் குறித்த இப்போதைய உன் மதிப்பீடு என்ன?

"இரத்தாம்பரம் உடுத்தி வளர்ந்தவர்கள் குப்பைமேடுகளை அணைத்துக்கொள்ளுகிறார்கள்" என சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியின் நிலையை எண்ணித் தீர்க்கதரிசி புலம்புகிறான் (புல. 4 : 5). ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரத்தாம்பர ஆடை அணிவது வழக்கம். ஆகவே ராஜ வஸ்திரமாகிய இரத்தாம்பரம், தேவ நீதியையும் ராஜரீகத்தையும் குறிக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்குத் தேவன் இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் ராஜரீக வஸ்திரங்களை உடுத்துவிக்கிறார் - அதாவது, தேவ நீதியால் நாம் தரிப்பிக்கப்படுகிறோம். ஆனால் நாமோ நாளடைவில் அந்த மேன்மையான அனுபவங்களை இழந்து, நாம் விட்டுவிட்ட காரியங்களை மீண்டும் பற்றிக்கொள்வோமாகில், குப்பைமேடுகளை அணைத்துக்கொள்ளும் பரிதாப நிலையில்

காணப்படுகிறவர்களாயிருப்போம். ஒரு காலத்தில் ராஜ வஸ்திரம் தரித்து, அரமனையில் வாழ்ந்த ஒருவன், இப்போது குப்பைமேடுகளை அணைத்துக்கொண்டு கிடப்பானென்றால் அது எவ்வளவு பரிதாபமான காட்சியாயிருக்கும் !

இரத்தாம்பரம், சிவப்பும் நீலமும் கலந்த விலையுயர்ந்ததொரு வஸ்திரமாகும். இது, கிறிஸ்துவின் மேலுள்ள அன்பினால் பாடுபடுதலைக் குறிக்கிறது. ராஜகுமாரத்தி அணிந்திருக்கும் சித்திரத்தையலாடையும் இவ்வனுபவத்தையே குறிக்கும் (சங். 45 : 14). நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற ஆதி நாட்களில் நமக்கிருந்த இந்த அனுபவம், இன்றும் நம்மில் நிலைத்திருக்கிறதா என்று சற்று நிதானித்துப் பார்ப்போமாக. அப். பவுல் தன் ஜீவியகாலமெல்லாம், “கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே” என்று சவால் விடுக்கிறவராயிருந்தார் (ரோமர் 8 : 36, 37). ஆரம்பத்தில் அவர் எவைகளைக் குப்பையாகக் கணித்தாரோ, அவை யாவும் முடிவுபரியந்தம் அவருடைய பார்வையில் குப்பையாகவே தென்பட்டன. “மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது” (லூக்கா 16 : 15). நண்பரே ! மனுஷரின் மதிப்பீட்டினால் மயங்கிப்போகாதீர் ! தேவனுடைய பார்வையில் மேன்மையாய்க் காணப்படுகிறவைகளையே அணைத்துக் கொள்வீராக ! “உங்கள் பேரை நினைக்கப்பண்ணும் அடையாளங்கள் சாம்பலுக்குச் சரி; உங்கள் மேட்டிமைகள் சேற்றுக் குவியல்களுக்குச் சமானம்” (யோபு 13 : 12). மனுஷரின் புகழ்ச்சியை அணைத்துக்கொள்வீராயின், அது சேற்றுக்குவியல்களை அணைத்துக்கொள்வதற்குச் சமம் ! சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது (I பேதுரு 3 : 4). அதுவே நம்முடைய பார்வையிலும் விலையேறப்பெற்றதாய்க் காணப்படட்டும் !

இரத்தாம்பர நூல், சாலொமோனின் ஆலயத் திரைகளிலும், அவனுடைய இரதத்திலும், ராஜ வஸ்திரங்களிலும், ஆசரிப்புக் கூடாரத் திரைகளிலும், ஆசாரியனின் ஏபோத்திலும், விசித்திரமான கச்சையிலும், நியாயவிதி மார்ப்பதக்கத்திலும், ஏபோத்தின் கீழங்கியின் தொங்கல்களிலும் உபயோகிக்கப்பட்டது. நண்பனே ! தேவன் உன்னை ஆவிக்குரிய பிரகாரமாக மேன்மையான, உன்னத நிலையில் வைக்கச் சித்தங்கொண்டிருக்கும்போது, நீ அற்ப காரியங்களின் மேல் நாட்டம்

கொண்டிருப்பதென்ன? நீ மேன்மையாக எண்ணுகிற இப்பூமிக்குரிய அந்தஸ்துகளும் புறம்பான அலங்கரிப்பும் பரலோகத்தின் மேன்மைகளுக்கு ஈடாகுமோ? இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. பரலோக மேன்மையையும் பூவுலகப் பெருமைகளையும் ஒன்றாக அணைத்துக்கொள்வது சாத்தியமானதல்ல. ஒன்றில், சாலொமோனின் ஆலயத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் மகிமையான திரையாக நீ காணப்பட வேண்டும். அல்லது, குப்பைமேடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்! ஒன்றில், ராஜ அரமனையின் உன்னத அனுபவங்களில் நீ காணப்பட வேண்டும்; இல்லையேல், சேற்றுக் குவியல்களைச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். தன் தகப்பன் வீட்டில் செல்வாக்காய் வாழ்ந்துவந்த இளைய குமாரன், உலகச் சிற்றின்பங்களைத் தெரிந்துகொண்டபடியினால் பன்றிகளோடு சுற்றித் திரிய வேண்டியதாயிற்று! தன் தகப்பன் வீட்டின் மேன்மைகளையும், உலக சிற்றின்பங்களையும் அவன் ஒருமித்து அனுபவிக்க இயலாதே! தேவபிள்ளைகளாகிய நாம் நம்முடைய அழைப்பின் மேன்மையை உணர்ந்து, மேலானவைகளிலேயே நம் கண்களைப் பதித்திருப்போமாக. பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக நாம் இலக்கை நோக்கித் தொடருவோமாக.

"தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங் கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்" என்று, வெற்றிகரமாகத் தங்கள் ஓட்டத்தை ஓடி முடித்த விசுவாச வீரர்களைக் குறித்து வேதாகமம் கூறுகிறது (எபி. 11 : 15, 16). "ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே" என்ற தேவகட்டளையைப் பெற்று, சற்று நேரத்திற்குள் அக்கினிக்கு இரையாகவிருந்த சோதோமை விட்டு ஓடிக்கொண்டிருந்த லோத்தின் மனைவி, தான் விட்டு வந்தவைகளை நினைத்தபோது தன்னையும் அறியாமலே ஒரு கணம் பின்னிட்டுப் பார்த்துவிட்டாள். அதன் விளைவாக அவள், அங்கேயே உப்புத்தூணாக மாறி நின்றுபோனாள்! இவ்வுலகம் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது என்ற வெளிப்படுத்தலுடன், ஜீவபாதையில் ஓடிக்கொண்டிருக்கிற நமக்கு எச்சரிப்புண்டாக்கும் வகையில், "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" என்ற வாசகம் வேதாகமத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ளது (லூக்கா 17 : 32). மேலும், உலக மேன்மைகளை வெறுத்து, தேவதாசனாகிய எலிசாவோடு சேர்ந்து கர்த்தருக்கு ஊழியம் செய்வதைத் தெரிந்துகொண்ட கேயாசி, ஒரு சந்தர்ப்பத்தில் உலகப் பொருட்களை நாடி அவற்றை அணைத்துக்கொண்டமையால்,

சபிக்கப்பட்டு, தன் ஊழியத்தையும் இழந்து, தன் வாழ்நாளெல்லாம் குஷ்டரோகியாய் மாறிப்போனான் (II இராஜா. 5 : 26, 27). புதிய ஏற்பாட்டிலும் யூதாஸ், தேமா போன்றோர் மேன்மையான அழைப்பைப் பெற்றிருந்தும், பணத்தின் மேலும், இப்பிரபஞ்சத்தின் மேலும் ஆசைவைத்து அவற்றைத் தெரிந்துகொண்டமையால் கர்த்தரையும் பரிசுத்தவான்களையும் விட்டுப் பிரிந்து, கிடைத்தற்கரிய தங்கள் மேன்மையான அழைப்பை இழந்துபோயினர் (அப். 1 : 18, 24 ; II தீமோ. 4 : 10). ஆகவே நம் ஆவிக்குரிய பயணத்தில் கடந்த நாட்களில் பின்னானவைகளைத் திரும்பிப் பார்த்திருப்போமாயின், இன்றே மெய்மனஸ்தாபத்துடனும் கண்ணீருடனும் கர்த்தரிடம் திரும்பி, நம் வாழ்வில் இடிந்துகிடக்கிற 'குப்பைமேட்டு வாசலை' நாம் கட்டியெழுப்புவோமாக.

நம் ஜீவியத்தில் நாம் இக்குப்பைகளைப் புறம்பே தள்ளிவிடும்போது, பிலிப்பியர் 3 : 8 - 10 வசனங்களின்படி (i) கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மை, (ii) கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளுதல், (iii) தேவ நீதியை அடைந்து கிறிஸ்துவுக்குள் ஜீவித்தல், (iv) அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவித்தறிதல், (v) அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிந்துகொள்ளுதல், (vi) அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகுதல், (vii) மரித்தோரினின்று உயிர்த்தெழுவதற்குத் (மகிமையான உயிர்த்தெழுதலுக்கு) தகுதியாகுதல் முதலிய பல ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறோம்.

'குப்பைமேட்டு வாசல்' மற்றுமொரு எச்சரிப்பையும் நமக்கு நல்குகிறது. இவ்வாசல், நகரத்தின் குப்பைகளை வெளியே கொண்டுபோய்க் கொட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாசல் தகர்க்கப்பட்டுப் போனதால் நகரத்தினுள் குப்பை சேர்ந்துபோய், பரிசுத்த நகரம் தீட்டுப்பட்டுப்போயிருந்தது. பிறருடைய ஜீவியத்தின் குறைகளையும் பெலவீனங்களையும் தோல்விகளையும் மனதில் சேகரித்துவைத்து, அவர்களை அற்பமாக எண்ணுவதும், தூற்றித்திரிவதும் குப்பையைச் சேகரித்து வைப்பதைப் போன்றதே. நாம் பிறருடைய பெலவீனங்களாகிய குப்பைகளை நம் மனதில் சேகரித்து வைக்கிறவர்களாகக் காணப்படுவோமாயின், நாமும் அதே பாவங்களுக்கு அடிமைப்பட நேரிடும். ஆகவேதான், தன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொண்டு, கர்த்தரின் பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ண விரும்புகிறவன், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காதேபோகிறான்; அவன் தன் நாவினால் புறங்கூறுகிறதில்லை என்று கூறப்பட்டுள்ளது (சங். 15 : 3). பிறருக்காகத் தேவசமுகத்தில் பரிந்துபேசும்படியாகவே சிலசமயங்களில் நாம்

அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலுள்ள குறைகளை அறிய வரும்படி தேவன் அனுமதிக்கிறார். பிறருடைய தோல்விகளில் அவர் களுக்காகப் பரிதபித்து, அவர்களை நாம் ஜெபத்தில் தாங்குவோமாக. அப்பொழுது நம்முடைய மனது தூய்மையாகக் காக்கப்பட்டு, ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டிக்குள் காக்கப்பட்டிருந்த 'மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம்' போல விலையேறப்பெற்ற தெய்வீக வெளிப்படுத்தல்களால் நிறைந்திருக்கும்.

## குப்பைமேட்டு வாசலைக் கட்டியவன்:

*'குப்பைமேட்டு வாசலை மல்கியா பழுதுபார்த்து, அதைக் கட்டினான்'* (நெகே. 3 : 14).

***மல்கியா*** (Malchiah) என்ற பெயரின் கருத்து, 'யேகோவாவே ராஜா' (Jehovah is King) என்பதாகும். கர்த்தரையே தங்கள் ஜீவியத்தில் பிரதான மானவராகக் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே தங்கள் ஜீவியத்தில் 'குப்பைமேட்டு வாசலைக்' கட்டியெழுப்பக் கூடும். கர்த்தரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு நடத்தப்பட விரும்புகிறவர்கள், வேறொன்றும் தங்கள் ஜீவியத்தை ஆட்கொள்ள இடமளிக்கமாட்டார்கள். "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப் பட்டிருக்கிறானே" என அப். பேதுரு எழுதுகிறார் (II பேதுரு 2 : 19). கிறிஸ்துவே நம் ஜீவியத்தின் மையப்பொருளாய் இருப்பாராயின், இவ்வுலக மேன்மைகள் நம்முடைய பார்வையில் குப்பையைப் போல விலையற்றவையாகத் தென்படும். மாறாக, உலகமும் அதிலுள்ளவைகளும் நமக்கு மேன்மையானவையாகத் தோன்றுகிறதென்றால், கிறிஸ்து நம் ஜீவியத்தில் பிரதானமானவராக - ராஜாவாக - கனப்படுத்தப்படவில்லை என்றே பொருள். ஒரு சந்தர்ப்பத்தில் அப்சலோம், இஸ்ரவேலின் ராஜா வாகிய தாவீதின் சிங்காசனத்தைக் கைப்பற்றிக்கொள்ள முயற்சித்தபோது, தாவீது காடுகளுக்குச் சென்றுவிட நேர்ந்தது. அப்சலோமின் புறத்தோற்றத் தினாலும் வசீகரிக்கும் வார்த்தைகளாலும் அந்த அளவுக்கு ஜனங்கள் இழுப்புண்டுபோயிருந்தனர்! (II சாமு. 15 : 5, 6, 12, 13). அவன் ராஜாவானது முதல் தேசத்தில் எங்கும் சமாதானமோ, இளைப்பாறுதலோ இல்லை. ஆனால் ராஜாவாகிய தாவீது மீண்டும் சிங்காசனத்திற்கு அழைக்கப் பட்டபோதோ, தேசத்தில் மீண்டும் அமைதி நிலவியது. நண்பனே! உன் ஜீவியத்தை ஆளுகை செய்யும்படி நீ எந்த வல்லமைக்கு இடமளித் திருக்கிறாய்? "தேவன் பூர்வகாலமுதல் என்னுடைய ராஜா" (சங். 74 : 12) என்று உன்னால் கூற இயலுமா? கடந்த நாட்களில் நீ அவரை உன் ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளியிருந்திருப்பாயென்றால், உன் இருதயமாகிய சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி உன் ராஜாவை

மீண்டும் வருந்தி அழைப்பாயாக (II சாமு. 19 : 9 - 14). அவர் உன்னில் ராஜாவாக வீற்றிருக்கும்போது மாத்திரமே, உன்னை வசீகரிக்கும் உலகச் சிற்றின்பங்களை உன்னால் குப்பையென வெறுத்துத் தள்ளவும், உன் ஜீவியத்தில் தகர்க்கப்பட்டுப்போயிருக்கும் 'குப்பைமேட்டு வாசலை' மீண்டும் கட்டியெழுப்பவும் கூடும். உன் ஜீவியத்தின் கர்த்தத்துவம் என்றென்றைக்கும் அவருடைய தோளின்மேலேயே இருப்பதாக (ஏசாயா 9 : 6). அப்படியானால் அவருடைய ஆளுகையின் கீழ் உன் ஜீவியம் அமரிக்கையும் சமாதானமும் நிறைந்ததாயிருக்கும். அப்பொழுது எல்லாத் தீட்டுகளும் அருவருப்புகளும் அகற்றப்பட்டு, உன் ஜீவியமாகிய எருசலேம், பரிசுத்த நகரமாகத் துலங்கும் ! (யோவேல் 3 : 17); கர்த்தர்தாமே உன்னில் ராஜாவாக வீற்றிருந்து ஆளுகை செய்வார் ! (எரே. 3 : 17).

7

# ஊருணி வாசல்
## (FOUNTAIN GATE)

"***ஊருணிவாசலை மிஸ்பாவின் மாகாணத்துப் பிரபுவாகிய கொல்லோசேயின் குமாரன் சல்லூம் பழுதுபார்த்து, அதைக் கட்டி, மச்சுப் பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, ... சீலோவாவின் குளத்து மதிலையும் ... கட்டினான்***" (நெகே. 3 : 15).

**ஊ**ருணி வாசல் எருசலேமின் அலங்கத்தின் தென்கிழக்குப் பகுதியில், தாவீதின் நகரத்தின் கீழ் முனையிலிருந்த ஒரு வாசலாகும். எருசலேமின் மதிலுக்கு வெளியே என்ரொகேல் (En-rogel) என்னும் ஒரு ஊற்று இருந்தது (யோசுவா 18 : 16). தாவீதின் நகரத்து ஜனங்கள் தண்ணீர் கொண்டுவரும்படி ஊருணி வாசலின் வழியே அவ்வூற்றுக்குச் செல்வார்கள். அவ்வூற்று, கீதரோன் பள்ளத்தாக்கும் இன்னோம் பள்ளத்தாக்கும் இணையுமிடத்தில் இருந்தது. ராஜாவின் தோட்டமும், சீலோவாவின் குளமும் நகரத்தினுள் இவ்வாசலின் அருகில் அமைந்திருந்தன. 'இரண்டு மதில்களுக்கு நடுவான வாசல்' என்றும் இது அழைக்கப்பட்டது (எரே. 52 : 7). இவ்வாசலும் சத்துருக்களால் தீக்கிரையாக்கப்பட்டுப்போனபடியினால் தேவஜனங்கள் இதையும் பழுதுபார்த்துக் கட்டினர்.

"நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வீர்கள்" என்று ஏசாயாவின் புஸ்தகத்தில் நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 12 : 3). 'இரட்சிப்பின் ஊற்றுகள்' என்று இங்கு பன்மையில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். 'ஊருணிவாசல்', இரட்சிப்பின் பல படிகளில் நாம் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சியையும் தாகந்தீர்க்கப்படுதலையும் குறிக்கும். அவ்வனுபவங்களைக் குறித்து நாம் இங்கு காண்போம்.

**1. பாவமன்னிப்பாகிய இரட்சிப்பின் ஊற்று:**

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக் குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" என்று கர்த்தராகிய இயேசு சமாரிய ஸ்திரீயிடம் கூறினார் (யோவான் 4 : 14). இன்று மனுஷர் தங்கள் ஆத்துமாவின் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி பலவிதங்களிலும் முயற்சிக்கிறார்கள். அவர்கள் பல சிற்றின்பங்களை அனுபவித்து, உலகத்தின் ஐசுவரியங்களும், பேரும் புகழும் உடையவர் களாயிருப்பினும் தங்கள் உள்ளில் எப்போதும் பூர்த்தி செய்யப்படாத ஒரு வெறுமையுணர்வையும், தீர்க்கப்படாத தாகத்தையுமே கொண்டிருக் கின்றனர். கர்த்தராகிய இயேசு மாத்திரமே நம் உள்ளான தாகத்தைத் தீர்க்கும் ஜீவத்தண்ணீர் ஊற்றாயிருக்கிறார். அவரில் தாகந்தீர்க்கப்பட்ட வர்கள் இனி ஒருக்காலும் தாகமடையார்கள். ஏனெனில் அது அவர் களுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்றும், "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணு கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" என்றும் கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார் (யோவான் 6 : 35, 54, 55).

நகரத்துக்குப் புறம்பேயிருந்த ஊற்றண்டைக்கு ஜனங்கள் புறப் பட்டுச் சென்றது போல, நாம் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, நம் ஆத்துமாவின் தாகம் தீர்க்கப்படும்படியாகவும், பரிசுத்தமாக்கப்படும்படியாகவும் பாளயத்திற்குப் புறம்பே அவரிடத் திற்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டும். "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம்" (எபி. 13 : 12, 13). இது, மனுஷரால் புறக்கணிக்கப்படுகிறதும் புறம்பாக்கப்படுகிறதுமான ஒரு அனுபவமாகும். அவரிடத்தில் நெருங்கிச் சேருகிறவர்களை உலகம் பகைக்கிறது. "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்று கர்த்தர் தம் சீஷர்களுக்கு முன்னதாகவே அறிவித்தி ருந்தார் (யோவான் 15 : 18). ஆகவே நாம் மனுஷரால் வருகிற உபத்திரவங் களைப் பொருட்படுத்தாமல், ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போவோமாயின், அவர் நம் தாகத்தைத் தீர்த்து, மெய்யான

சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நமக்கு நல்குவார். இது இரட்சிக்கப் படுகிற ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளும் அனுபவமாகும். கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல், பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பின் அனுபவத்தில் ஆரம்பமாகிறது.

## 2. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்னும் ஊற்று:

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நம் உள்ளான தாகத்தைத் தீர்க்கும் மற்றொரு ஜீவ ஊற்றாயிருக்கிறது. பரிசுத்த ஆவியினால் பரிசுத்த மாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்வதில் ஆரம்பமாகிறது. "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று நமதாண்டவர் கூறியிருக்கிறார் (யோவான் 7 : 37). தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து அவர் இப்படிச் சொன்னார் (வச. 39). "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" என்று தேவன் நம்மை அழைக்கிறார் (ஏசாயா 55 : 1). தாகமாயிருக்கிற எவருக்கும் யாதொரு வித்தியாசமுமின்றி இலவசமாய் அவர் பொழிந்தருளுகிற பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையே இவ்வசனம் குறிப்பிடுகிறது. இதையே சங்கீதக்காரன், "உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது" என்கிறான் (சங். 36 : 8, 9). "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும். சுயாதீனரா யினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞான ஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந் தீர்க்கப்பட்டோம்" (I கொரி. 12 : 13) என்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தினால் தாகந்தீர்க்கப்படுகிற அனுபவத்தைக் குறித்து அப். பவுல் எழுது கிறார். "தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறு களையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 44 : 3). ஒரு வறண்ட நிலம், தன் மேல் ஊற்றப்படும் தண்ணீரை உடனடியாக இழுத்துக்கொள்ளும், இன்னும் அதிகமான தண்ணீர் ஊற்றப்படும்படி அது காத்துக்கொண்டிருக்கும். அவ்வாறே நாமும் ஒரு வறண்ட நிலம் போல அபிஷேகம் நம்மில் பொழிந்தருளப் படும்படி வாஞ்சையுடன் காத்திருப்போமாகில், தேவன் நம் மேல் தமது அளவில்லாத அபிஷேகத்தைப் பொழிந்தருளுவார். "தேவன் அவருக்குத்

தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" என்று கர்த்தராகிய இயேசுவைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது (யோவான் 3 : 34). ஒரு பெரும் ஊற்றிலிருந்து அளவின்றிப் பாய்ந்துவரும் தண்ணீர் பல ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவதுபோல, இந்த அளவில்லாத அபிஷேகம் நமக்குள் தங்கியிருந்து, பல கிரியைகளை நம்மில் செய்கிறது. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்போம்:

பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது –

(i) சோதனை வேளைகளில் ஆறுதலையும், ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாக எழும்பும் போராட்டங்களிலிருந்து இளைப்பாறுதலையும் அளிக்கிறது (ஏசாயா 28 : 11, 12 ; யோவான் 16 : 7 ; ரோமர் 8 : 13);

(ii) கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் ஜீவிக்க நமக்கு உன்னத பெலனை அளிக்கிறது (அப். 1 : 8);

(iii) அனுதினமும் நம்மைச் செம்மையான வழியில் நடத்துகிறது (சங். 143 : 10 ; ரோமர் 8 : 14);

(iv) நம் சாவுக்கேதுவான சரீரத்தை உயிர்ப்பிக்கிறது (ரோமர் 8 : 11);

(v) சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிறது (யோவான் 16 : 13 ; I யோவான் 2 : 27);

(vi) நம் ஜீவியத்தை ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாக்கி, மறுரூபப்படுத்துகிறது (ரோமர் 15 : 15 ; மத். 13 : 33);

(vii) கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு நம்மை ஆயத்தமாக்குகிறது (வெளி. 22 : 17 ; II கொரி. 5 : 4, 5).

ஆகவே அனுதினமும் புதிய அபிஷேகத்தினால் நாம் தாகந் தீர்க்கப்படும்படி தேவசமுகத்தில் ஆவலுடன் காத்திருப்போமாக.

### 3. ஜெயஜீவியமளிக்கும் ஊற்று:

"தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்" என்று தேவன் உரைத்திருக்கிறார் (வெளி. 21 : 6, 7). இது ஜெயஜீவியத்தை அளிக்கும் ஊற்றாகும். நண்பனே, நீ உண்மையாய்ப் பரிசுத்தத்தில் வளரவும் ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும் வாஞ்சிப்பாயாகில், தேவன் எவருக்கும் கிருபையினால் இலவசமாக, தானமாக நல்கும் இந்த ஜெயஜீவியத்தின் ஊற்றில் நிச்சயமாகவே நீ தாகந்தீர்க்கப்படுவாய். இதற்கு நீ செலுத்த வேண்டிய விலைக்கிரயம்,

உன்னை முற்றிலுமாய்த் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் மாத்திரமே. கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் ஜீவித்த வண்ணம் மாசற்றதொரு ஜெயஜீவியம் செய்யும்படி மிகுந்த தாகமுள்ளவர்களாய் ஏங்கித் தவிக்கும் ஒவ்வொருவரையும் தேவன் இவ்வூற்றண்டை அழைக்கிறார். வாஞ்சிக்கிற யாவருக்கும், பட்சபாதமின்றி, இலவசமாக ஜெயஜீவியம் செய்வதற்கான கிருபையும் அபிஷேகமும் அளிக்கப்படுகிறது. நாம் ஜெயங்கொண்டவர்களாய் மாற்றப்படுவதற்குத் தேவன் இவ்வளவு எளிதானதொரு புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைத் திறந்துவைத்திருக்கும்போது, மானிடர் அறியாமையினால் தங்கள் உடலை வதைத்துத் துன்புறுத்தியும், மலைகளில் சென்று விரதங்காத்துத் தவமிருந்து மெய் வருத்தியும் அதை அடைய முயற்சித்து, முடிவில் ஏமாற்றமடைவது பரிதாபமே ! "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" என திருவசனம் கூறுகிறது (வெளி. 22 : 17). ஜெயங்கொண்டவர்கள் மாத்திரமே கர்த்தரின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட இயலும் என்ற சத்தியத்தை இவ்வசனம் வலியுறுத்துகிறது. இந்த உன்னத அனுபவத்தை அடைந்து அதில் நிலைத்திருக்கிறவர்கள் மாத்திரமே கிறிஸ்துவின் நாளுக்கென்று பாவமில்லாமல் ஆவலோடு காத்திருக்க இயலும் ! அவர்களுக்கே கிறிஸ்துவின் இரகசிய வருகையின் நாள் ஆர்ப்பரிப்பின் நாளாயிருக்கும் !

அருமையானவர்களே, மேற்கூறப்பட்டுள்ள மூன்று ஊற்றுகளிலும் தாகந்தீர்க்கப்பட்டவர்களாய், அவரைச் சந்திக்கும்படி ஆயத்தத்துடன் நாம் காத்திருப்போமாக !

**கலங்கின ஊற்று:**

ஊருணி வாசலுக்கு எதிரே இருந்த என்ரொகேல் ஊற்றானது, நகரத்தின் பிரதான ஊற்றாகிய கீகோன் என்னும் வற்றாத ஊற்றினின்று பிரியும் கிளை ஒன்றிலிருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்வதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனிடத்தில் தாகந்தீர்க்கப்பட்ட நாம், மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்கும் கிளை ஊற்றுகளாக விளங்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். அவ்விதம் பிறருக்கு ஆசீர்வாதமாகத் திகழும்படி, நாம் நம்முடைய பிரதான ஊற்றாகிய தேவனோடு நிரந்தரமான ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இல்லையேல், நம் சொந்த ஜீவியமும் வறட்சியடைந்துபோகும்; நம் உதவியை நாடி வரும் பிறரும் நம் மூலமாக எந்த ஆசீர்வாதத்தையும் அடைந்துகொள்ளக் கூடாமற்போவார்கள். நம் சத்துருக்களுக்கு முன்பாக நாம் தோல்வியடைந்து கலங்க வேண்டியதாகும்.

ஒரு காலத்தில் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனால் தாகந் தீர்க்கப்பட்டும், இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம், ஜெயஜீவியம் போன்ற பல ஆவிக்குரிய அனுபவங்களை அடைந்திருந்தும், இப்போது வறண்ட நிலையில் காணப்படும் ஆத்துமாவே, உனக்குச் சம்பவித்தது என்ன? உன் மேன்மையான அனுபவங்களை நீ எங்கே தவறவிட்டாய் என ஆராய்ந்து பார்ப்பாயாக. உன்னுடைய ஜீவியத்தில் இந்த ஊற்றுக ளண்டைக்குச் செல்லும் வாசல் இடிபட்டுக் கிடக்கிறதோ? சுயதிருப்தி உன் ஆவிக்குரிய ஜீவியத்தை வறண்ட நிலைக்குள்ளாக்கியிருக்கிறதோ? நீ இந்நிலையில் தொடருவது தேவனுக்கு விருப்பமில்லை. "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" என்று அவர் மன வேதனையுடன் கூறுகிறார் (எரே. 2 : 13). நீ கர்த்தரை விட்டுவிட்டாயோ? இப்போதுள்ள உன் வறண்ட நிலையிலும் சுய நீதியினால் உன்னை நீயே திருப்தி செய்துகொள்ளப்பார்க்கிறாயோ? உன் பல வருட அனுபவம், ஆத்தும நேசர் மேல் ஆரம்பத்தில் உனக்கிருந்த தீரா வாஞ்சையையும், அவரோடுள்ள ஐக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்ற அளவற்ற தாகத்தையும் தணித்துவிட்டதோ? மணவாட்டி ஒரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய அசதியினாலும் நிர்விசாரத்தினாலும், சுயநீதியினால் உண்டான திருப்தியினாலும் தன் ஆத்தும நேசரோடுள்ள ஐக்கியத்தை இழந்து போனாள் (உன். 5 : 3, 6). இதினிமித்தம் அவள் பல உபத்திரவங்களுக் குள்ளாக நேர்ந்தது. நகரத்தில் அவள் தனிமையாக அவரைத் தேடிக் கொண்டு அங்குமிங்குமாக அலைந்துகொண்டிருந்தாள். அதற்கு முன் அவரோடு தனக்கிருந்த நெருங்கிய ஐக்கியத்தை யாவருக்கும் வெளிப் படுத்தும் வகையில், அவள் எங்கு சென்றாலும் தன் நேசருடன் இணைந்து செல்வதே வழக்கம். ஆனால் இப்போது அவள் கலக்கத்துடனும் தடுமாற்றத்துடனும் பதற்றத்துடனும் அவரைத் தேடிக்கொண்டு நகர வீதிகளில் தனிமையாக அலைகிறாள் ! என்ன பரிதாபக் காட்சி ! முன்பு அவள் தன் நேசரோடு மிகவும் ஐக்கியமாய் இருந்தாள் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். "அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது; அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளுகிறது" என்றெல்லாம் அவள் ஒரு காலத்தில் பெருமிதத்துடன் கூறி நடந்தாள் (உன். 2 : 6). ஆகவே அவள் இப்போது தன் நேசரைப் பிரிந்த விஷயம் அவளுக்கு மாத்திரம் தெரிந்த ஒரு இரகசியமாக இருக்கவில்லை. அவள் அவரைத் தேடி வீதிகளில் அலைந்து அவதிப்படுவது யாவரும் காணக் கூடியதாயிருந்தமையால், 'இவளுக்கு என்ன சம்பவித்தது?' என வீதிகளில் பலரும் அவளை வியப்புடன் நோக்கியிருக்கக் கூடும்.

ஒரு தேவபிள்ளையின் ஜீவியத்தை யாவரும் நுட்பமாகக் கவனிக்கின்றனர். ஊற்று நீர் பாய்வதினால் வளம் பொருந்திய ஒரு நிலம் பசுமையாகத் தோற்றமளிக்கும். அது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துக்கொள்ளும். ஆனால் அதே நிலம் திடீரென தண்ணீரற்று, உலர்ந்து, வறண்டுபோகுமாகில், அனைவரும் அந்நிலத்தைப் பரிதாபத்துடன் நோக்குவர். அவ்வாறே ஒரு காலத்தில் கர்த்தரோடு நெருங்கி ஜீவித்த ஒருவர், இப்போது அவரை விட்டுப் பிரிந்து ஜீவித்துக்கொண்டிருப் பாராகில், அவருடைய ஜீவியத்தில் உண்டாயிருக்கும் வித்தியாசத்தை யாவரும் எளிதாகக் கணித்துவிடுவர்.

"துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது கலங்கின கிணற்றுக்கும் (troubled fountain) கெட்டுப்போன சுனைக்கும் (corrupted spring) ஒப்பாகும்" என திருவசனம் கூறுகிறது (நீதி. 25 : 26). ஒரு ஊற்றானது அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியாகவே சிருஷ்டிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் அது கெட்டுப் போய், கலங்கிய ஊற்றாக மாறி விட்டால் அதினால் ஒருவருக்கும் யாதொரு பயனுமிராது. "நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" என்பதும், "உன் காலைத் தள்ளாட வொட்டார்" என்பதும் தேவன் தம் பிள்ளைகளுக்கு அருளிச் செய்தி ருக்கும் வாக்குத்தத்தங்களாகும் (சங். 55 : 22 ; 121 : 3). ஆனால் துன்மார்க் கரின் முன்பாகத் தள்ளாடும் ஒரு நீதிமானைப் பற்றி மேற்கண்ட வசனத்தில் ஞானி கூறுகிறான். அவனுக்கு இந்நிலை வரக் காரணம் என்ன ? அவ னுடைய பின்மாற்றமே இதற்குக் காரணமாகும்.

"நான் உன்னை அவர்களுக்கு முன்பாகக் கலங்கப்பண்ணாத படிக்கு, நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு" என்று கர்த்தர் நீதிமானாகிய எரேமியாவிடம் கூறினார் (எரே. 1 : 17). மனுஷருக்குப் பயப்படும் பயம் நம்மைத் துன்மார்க்கருக்கு முன்பாகத் தள்ளாடப்பண்ணும் அல்லது கலங்கப்பண்ணும் என இதிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். மேலும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் கட்டளையை மீறினதினிமித்தம் ஆயி பட்டணத்தாருக்கு முன்பாகத் தோல்வியுற்றுக் கலங்கிப்போயினர் (யோசுவா 7 : 11, 12, 25). யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவனான ஆகான், பொரு ளாசைக்கு இடங்கொடுத்து தான் கண்டுபிடிக்கப்படும் வரை தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளாமல் அதை மறைத்துவைத்திருந்தபடியால், கர்த்தர் அவனைக் கலங்கப்பண்ணினார் (வச. 25). பல தீரச் செயல்களைப் புரிந்த நியாயாதிபதியாகிய சிம்சோன் தன் பிரதிஷ்டையை இழந்துபோனதினி மித்தம் தோல்வியுற்றவனாய், தன் கண்கள் பிடுங்கப்பட்டு, சத்துருக்களின் தேசத்தில் விலங்கிடப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டவனாய்த் தள்ளாடிக் கொண்டிருந்தான் (நியா. 16 : 21). பெலிஸ்தர் தங்களுக்கு விரோதமாக

வந்தபோது சவுலும் அவனுடைய சேனையும் கோலியாத்துக்கு முன்பாகக் கலங்கி, மிகவும் பயந்தார்கள் (I சாமு. 17 : 11). "கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல ... யுத்தம் கர்த்தருடையது" என்ற வெளிப்படுத்தல் அவர்களுக்கு இல்லாமற்போனதே அதன் காரணமாகும் (வச. 47). கர்த்தர் தன்னோடு இல்லை என்பதை உணர்ந்த சவுல் பெலிஸ்த ரோடுள்ள தன் கடைசி யுத்தத்தில் செய்வதறியாது மிகவும் கலங்கிப் போனான் (I சாமு. 28 : 21). தன் சத்துருக்களின் முன் அவனால் தைரியமாய் நிற்கவோ, அவர்களை ஜெயிக்கவோ கூடாமற்போயிற்று. இவ்வாறு தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலர், யூதா கோத்திரத்தானாகிய ஆகான், தன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னதாகவே கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவனாயிருந்த சிம்சோன், இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் - இவர்கள் அனைவரும் தங்கள் தவறுகளினிமித்தம் தங்கள் சத்து ருக்களுக்கு முன்பாகக் கலங்கிப்போயினர். மேன்மையடைய வேண்டிய அவர்கள் தாழ்ந்துபோயினர் ! இவ்விதமாக, துன்மார்க்கருக்கு முன்பாகத் தள்ளாடின நீதிமான்களின் பட்டியலுக்குட்பட்ட பலரின் சரித்திரங்களை வேதாகமம் நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எடுத்தியம்புகிறது !

"நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதி ... செய்வானே யாகில், ... அவன் செய்த அவனுடைய எல்லா நீதிகளும் நினைக்கப் படுவதில்லை; அவன் செய்த தன் துரோகத்திலேயும் அவன் செய்த தன் பாவத்திலேயும் சாவான்" என்று கர்த்தர் உரைக்கிறார் (எசே. 18 : 24). மேலும், தன் சுயநீதியில் திருப்தியடைந்திருக்கிற ஒருவனைக் குறித்து, "தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமானுமுண்டு" என்று நாம் வாசிக்கிறோம் (பிர. 7 : 15). இவ்விரு கூட்டத்தினரும் 'கெட்டுப்போன சுனைக்கு' ஒப்பான வர்களே. கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவோம் என்ற எதிர்பார்ப்புடனும் வாஞ்சையுடனும், கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததியின் மத்தியில் ஜீவித்துக்கொண்டிருக்கும் தேவஜனங்களாகிய நாம், மேற்கூறப்பட்டுள்ளவர்களைப் போல் காணப்படுவோமாகில், கிறிஸ்துவின் நாளில் கைவிடப்பட்டுப்போனவர்களாய், கலங்க நேரிடும்! அப்போது உலக மனுஷர், "நாங்கள்தான் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து, துன்மார்க்கராய் ஜீவித்து, கைவிடப்பட்டுப் போனோம். நீயோ எப்போதும் 'கர்த்தர் வருகிறார், நான் பறந்து போவேன்' என எதிர்பார்த்துக்கொண்டும், பாடிக்கொண்டும், சொல்லிக்கொண்டுமிருந்தாயே ! நீ கைவிடப்பட்டது ஏன்?" என்று நம்மைக் கேட்கும்போது, நாம் அவர்களுக்கு முன்பாகக் கலங்கித் தலை கவிழ்ந்து நிற்க வேண்டியதாகும் ! ஆகவே அந்நாளில் உலக மனுஷரின் முன் கலங்கி நிற்கும் நிலை நமக்கு வராதபடிக்கு, நமக்குக் கிருபையாய்க் கொடுக்கப்பட்டுள்ள இந்நாட்களில் "மெய்யான

நீதியிலும் பரிசுத்தத்திலும்" நாம் வளருவோமாக! அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாள் ஒன்று உண்டு! ஆகவேதான், "நீதி யுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்;... இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார் (வெளி. 22 : 11, 12). நண்பனே, நீ ஒரு கலங்கிய ஊற்றாக, கெட்டுப்போன சுனையாக இருக்கிறாயா? அல்லது தெளிந்த தண்ணீருள்ள நல்ல ஊற்றாகக் காணப்படுகிறாயா? "நீ நீர்ப் பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்" என்பதன்றோ தேவனுடைய வாக்குத்தத்தம்! (ஏசாயா 58 : 11).

உன்னதப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மணவாட்டி தன் ஆத்தும நேசரோடு ஐக்கியமாயிருந்த நாட்களில், ஓர் ஆசீர்வாதத்தின் ஊற்றாகக் காணப்பட்டாள். அப்போது மணவாளன் அவளை மறைவு கட்டப்பட்ட தொரு நீரூற்றுக்கு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார் (உன். 4 : 12). மறைவு கட்டப்பட்ட ஒரு நீரூற்றின் தண்ணீர், அசுசிகளுக்கு மறைக்கப்பட்டு, தெளிவாகவும் சுத்தமாகவும் காணப்படும். பரிசுத்த ஆவியின் அபிஷே கத்தின் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்படுகிறோம். அதைத் தொடர்ந்து நாம் எப்போதும் கிறிஸ்துவுக்குள் மறைந்து ஜீவிப்போமாயின், இவ்வுலகின் அசுத்தங்கள் நமக்குள் பிரவேசித்து நம்மைக் கலக்கிப் போடவோ, கெடுக்கவோ இயலாது. மேலும் அந்நீரூற்றைச் சுற்றிலும், பலவிதமான கனிமரங்களும் வாசனையுள்ள பூச்செடிகளுமுள்ள செழிப் பான சிங்காரவனம் இருந்தது போல (வச. 13 - 15), நம் ஜீவியத்தின் மூலம் அநேகர் ஆசீர்வாதமும் செழிப்பும் பெறுவர். இவ்விதம் நாம் மற்றவர் களுக்கு ஆசீர்வாதத்தின் ஊற்றாயிருப்போம். வெளிப்படுத்தின விசேஷம் 22 : 1 -இல் பளிங்கைப் போன்ற தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான ஒரு நதியை நாம் காண்கிறோம். அது தேவனும் ஆட்டுக்குட்டியான வரும் வீற்றிருக்கிற சிங்காசனத்தினின்று புறப்படுகிறது. "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என நாம் வாசிக்கிறோம் (நீதி. 4 : 23). தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் உன் இருதயத்தில் வீற்றிருந்து உன் ஜீவியத்தை ஆளுகை செய்தால், அதினின்று ஜீவ வார்த்தைகள் ஊற்றாகப் பெருக் கெடுத்து, அநேகரைப் போஷிக்கும். "ஞானவான்களுடைய போதகம் ஜீவஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்" (நீதி. 13 : 14). ஆகவே ஒரு கலங்கிய ஊற்றாக அல்ல, மறைவு கட்டப்பட்ட தெளிந்த நீரூற்றாக நாம் காணப்படும்படி மீண்டும் நம்மை ஆவியானவரின் கிரியைக்கும், அவரால் காக்கப்படுதலுக்கும் ஒப்புக்கொடுப்போமாக. அப்பொழுது நம்முடைய 'ஊருணி வாசல்' மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு, நாம் அநேகருக்கு ஆசீர்வாதமாய்த் திகழுவோம்.

**ஊருணி வாசலைக் கட்டியவன் :**

"*ஊருணிவாசலை ... சல்லூம் பழுதுபார்த்து, அதைக் கட்டி, மச்சுப் பாவி, ... படிகள்மட்டாக இருக்கிறதையும் கட்டினான்*" (நெகே. 3 : 15).

***சல்லூம்*** என்ற பதத்திற்கு, 'பிரதிபலன்' என்று பொருள். 'மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டு' என வேதாகமம் கூறுகிறது (சங். 58 : 11). தேவனுக்காகப் பல நிந்தைகள், உபத்திரவங்கள், போராட்டங்கள், அவமானங்கள் ஆகியவற்றைச் சகித்த எபிரெய சபையாருக்கு அப். பவுல், "மிகுந்த பலனுக்கேதுவான (great recompense of reward - மிகுந்த பிரதிபலனுக் கேதுவான) உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" என்று எழுதுகிறார். பரலோகத்தில் அவர்களுக்கு உண்டாயிருக்கிற அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரத்தையே அவர் இங்கு பிரதிபலன் என்று குறிப்பிடுகிறார் (எபி. 10 : 33 - 35). "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் (reward) கர்த்தராலே பெறுவீர்க ளென்று அறிந்து, எதைச் செய்தாலும், ... கர்த்தருக்கென்றே மனப்பூர்வ மாய்ச் செய்யுங்கள்" என்று அவர் கொலோசெய சபையாருக்கு எழுது கிறார் (கொலோ. 3 : 23, 24). நம் ஆண்டவர், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்று உரைத்திருக்கிறார் (வெளி. 22 : 12). "உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ள வரல்லவே" என திருவசனம் கூறுகிறது (எபி. 6 : 10). உபத்திரவப்படுகிற வர்களுக்கு இளைப்பாறுதலைப் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறது (II தெச. 1 : 6). ஆகவே நாம் நற்கிரியைகள் செய்கிற திலும் கர்த்தர் நிமித்தம் பாடுபடுகிறதிலும் சோர்ந்துபோகாதிருப்போமாக. "நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" (கலா. 6 : 9).

நம் கிரியைகள் ஒவ்வொன்றிற்கும் பிரதிபலன் உண்டு என்ற வெளிப்படுத்தலே நாம் நற்கிரியைகளில் பெருகவும், தீமையை விட்டு விலகவும் நம்மை ஊக்குவிக்கிறது. அலங்கத்தையும் வாசல்களையும் கட்டும்போது தேவஜனங்களுக்கு எல்லாச் சூழ்நிலைகளும் சாதகமாய் இருக்கவில்லை. அக்கடினமான வேலைகளைச் செய்யும்படி மனமுவந்து முன்வந்த ஜனங்களையும் நெகேமியாவையும் ஊக்குவிப்போர் யாரு மிருக்கவில்லை. மாறாக, எப்பக்கத்திலும் நெருக்கங்களும் நிந்தைகளும் அவமானங்களும் பயமுறுத்தல்களும் தடைகளுமே சூழ்ந்திருந்தன. என்றாலும் தேவஜனங்கள் தைரியத்தோடே அவ்வேலையைச் செய்து முடித்தனர். ஊருணி வாசலைக் கட்டின சல்லூம் அதைக் கட்டி முடித்து,

அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்ட துடன், அதற்கு மச்சுப் பாவினான் என்றும், அவன் ராஜாவின் சிங்காரத் தோட்டத்தண்டையிலிருக்கிற சீலோவாவின் குளத்து மதிலையும் தாவீதின் நகரத்திலிருந்து இறங்குகிற படிகள்மட்டாகவும் கட்டினான் என்றும் நாம் வாசிக்கிறோம் (நெகே. 3 : 15). மற்றவர்களைப் பார்க்கிலும் அவன் அதிகமாகப் பிரயாசப்பட்டான். இது, அவனுடைய மனப்பூர்வமான இருத யத்தையும், கர்த்தருடைய கிரியைகளில் பெருகுகிற அனுபவத்தையும் குறிக்கிறது. "மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப் பழுதாகும்; கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்" என ஞானி கூறுகிறான் (பிர. 10 : 18). சல்லூமோ தன்னிலிருந்த ஜாக்கிரதையுள்ள ஆவியினால் ஊருணி வாசலைக் கட்டியெழுப்பி, உற்சாகமுள்ள ஆவியினாலே அதற்கு மச்சுப் பாவினான். இனிவரும் பலனைப் பற்றிய வெளிப்படுத்தல் நமக்கிருக்கு மாயின் நாமும் அவனைப் போல ஜாக்கிரதையோடும் உற்சாக மன தோடும் கர்த்தருக்காக அதிகமாகப் பிரயாசப்படுகிறவர்களாயிருப்போம். 'மச்சு' நம் சிந்தனை மண்டலத்தைக் குறிக்கிறது. 'சோம்பேறியின் மனது பிசாசின் தொழிற்சாலையாயிருக்கும்' என்பது முதுமொழி. நாமோ 'இனிவரும் பலன்மேல்' நோக்கமாயிருந்து, சல்லூமைப் போல கர்த்தரின் வேலையில் ஜாக்கிரதையுள்ளவர்களாய், நற்கிரியைகளில் பெருகுவோமாக. அப்பொழுது நம்முடைய சிந்தனைகள் பரிசுத்தத்தில் காக்கப்பட்டிருக்கும்; நம்முடைய வாழ்க்கை அநேக ஆயிரங்களுக்குப் பிரயோஜனமுள்ள ஊற்றாயிருக்கும். நம்முடைய ஜீவியத்தில் இந்த 'ஊருணி வாசல்' பழுதடைந்திருக்குமாயின், அதைப் பழுதுபார்த்துக் கட்டவும், அதற்கு மச்சுப் பாவவும் நாம் எழும்புவோமாக. பரலோகத்தில் நமக்கு வைக்கப் பட்டுள்ள பிரதிபலன் மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் நாம் கர்த்தருடைய கிரியையில் எப்போதும் பெருகுகிறவர்களாயிருப்போமாக!

8

# தண்ணீர் வாசல்

## (WATER GATE)

***"ஓபேலிலே குடியிருக்கிற நிதனீமியரைச் சேர்ந்த மனிதரும் கிழக்கே யிருக்கிற தண்ணீர் வாசலுக்கு வெளிப்புறமான கொம்மைக்கு எதிரே யிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்"*** (நெகே. 3 : 26).

**த**ண்ணீர் வாசல், அலங்கத்தின் கிழக்குப் பகுதியில், கீகோன் ஊற்றுக்கு எதிர்ப்புறத்தில் அமைந்திருந்தது. எருசலேம் நகரத்தின் தண்ணீர் விநியோகத்திற்காக இவ்வூற்று முக்கியமாகப் பயன்படுத்தப் பட்டுவந்தது. கீகோன் ஊற்று, இன்றும் யூதர்களால் ஒரு புனிதமான ஊற்றாகக் கருதப்பட்டுவருகிறது. இதினிமித்தமே தாவீது தன் குமார னாகிய சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணும்படி கீகோனைத் தெரிந்துகொண்டிருக்கக் கூடும் என வேதபண்டிதர்கள் கருதுகின்றனர் (I இராஜா. 1 : 38). தூய்மையின் சின்னமாகிய இவ்வூற்று பொதுவாகக் 'கன்னிகையின் ஊற்று' (The Virgin's Fount) என அழைக்கப்படுகிறது. மழைநீர்த் தேக்கங்களும் இவ்வாசலின் அருகே காணப்பட்டன. சத்து ருக்கள் இவ்வாசலையும் சுட்டெரித்துப்போட்டனர். தண்ணீர் வாசல், நாம் தேவவசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலைக் குறிக்கிறது. இவ்வாசலுக்கு இப்பெயர் வரக் காரணமாயிருந்த கீகோன் ஊற்று, பரிசுத்தமாக்கப் பட்டவர்கள் அநேகருக்கு ஆசீர்வாதத்தின் ஊற்றாயிருப்பார்கள் என்ற சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

நம்மைப் பரிசுத்தமாக்கும்படி தேவன் பல ஏதுக்களை வைத் திருக்கிறார். அவையாவன:

முதலாவதாக, ***கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம்*** சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது (I யோவான் 1 : 7). அவர் "தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும் படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்" (எபி. 13 : 12).

இரண்டாவதாக, ***தேவவசனத்தினால்*** நாம் பரிசுத்தமாக்கப்படு கிறோம். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்;

உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17 : 17) என்று கர்த்தராகிய இயேசு பிதாவிடம் வேண்டுதல் செய்தார். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் யோசேப்பைப் புடமிட்டது என நாம் வாசிக்கிறோம் (சங். 105 : 19). இவ்வசனங்களிலிருந்து, தேவ வசனத்தினால் ஒரு புடமிடப்படுதல் அல்லது சுத்திகரிப்பு உண்டு என நாம் அறிந்துகொள்கிறோம்.

மூன்றாவதாக, *பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின்* மூலம் தேவன் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார் (II தெச. 2 : 13). புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறது (ரோமர் 15 : 15).

மேலும், ***'விசுவாசத்தினாலே'*** தேவன் நம்முடைய இருதயங்களைப் பரிசுத்தமாக்குகிறார் என்று அப். பேதுருவின் கூற்றிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம் (அப். 15 : 9).

மற்றும், நம்முடைய இரட்சகராகிய இயேசு உபத்திரவங்களினாலே பூரணமாக்கப்பட்டது போல, *பாடுகளின் வாயிலாகவும்* தேவன் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார் (எபி. 2 : 10 ; 5 : 8, 9 ; பிலி. 1 : 28, 29). புடமிடுகிறவனுடைய அக்கினி, உலோகத்திலுள்ள களிம்பை அகற்றி, அதை விலையேறப்பெற்றதாக மாற்றுவது போல, நம்மிலுள்ள குறைகள் அகற்றப்பட்டு நாம் தேவனுடைய சாயலை அடைய, அக்கினி சோதனைகள் நமக்கு உறுதுணையாயிருக்கின்றன (மல். 3 : 3).

கடைசியாக, ***கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றிய நம்பிக்கை,*** நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள நமக்கு உதவி செய்கிறது. "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (I யோவான் 3 : 2, 3).

"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (லேவி. 20 : 26). நாம் ஒருவேளை நம்முடைய பார்வையிலோ, மற்ற மனுஷரின் கணிப்பிலோ பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கக் கூடும். தேவனோ, நாம் 'அவருக்கேற்ற' பரிசுத்தவான்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். இதற்காக நாம் தேவனுக்கு அந்நியமான யாவற்றினின்றும் வேறுபிரிந்து ஜீவிக்க

வேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். பரிசுத்தம் என்னும் பதம், 'வேறுபிரிதல்' என்று பொருள்படும். இவ்விதம் நம் அனுதின ஜீவியத்தில் நாம் தேவனுக்கென்று வேறுபிரிந்தவர்களாய், அவருக்கு அடிமைகளாய் ஜீவிக்கும்போது 'பரிசுத்தமாகுதல்' நமக்குப் பலனாகக் கிடைக்கிறது.

தேவன் பிரியங்கொள்ளும் பல குணசீலங்களில் 'பரிசுத்தம்' ஒன்றாகும். அவர் பரிசுத்தத்தைச் சிநேகிக்கிறார் (மல். 2 : 11). ஆகவே நாம் "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (II கொரி. 7 : 1). "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலே யும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என அப். பேதுரு தேவ ஜனங்களுக்கு அறிவுறுத்துகிறார் (I பேதுரு 1 : 15, 16).

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்ப தில்லையே" (எபி. 12 : 14). கர்த்தருடைய வருகையில் நாம் அவரை முகாமுகமாய்த் தரிசிக்கும்படி நம் ஆவி, ஆத்துமா, சரீரம் இவற்றில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட வேண்டியது அவசியமாகும் (I தெச. 5 : 23). "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத். 5 : 8). நம்முடைய பரிசுத்தமாகுதலுக்கென்று அவர் தம்முடைய பகுதியில் செய்ய வேண்டிய அனைத்தையும் நிறைவேற்றி முடித்துவிட்டார். "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபி. 10 : 14). அவர் கிரயம் செலுத்தி நம்மைத் தமக்குச் சொந்தமாக வாங்கியிருக்கிறார். அவருடைய பரிசுத்தத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படி அவர் நம்மை உருவாக்குகிற வேலைக்கு நாம் நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுப்போமாக. நாம் ஒப்புக்கொடுக்காத பட்சத்தில், அவர் தாமாக நம்மைப் பலவந்தம்பண்ணி, பரிசுத்தத்தின் வேலையை நம்மில் நடப்பிக்க இயலாது.

**தேவவசனத்தினால் பரிசுத்தமாகுதல் :**

தேவாலயப் பணிவிடைக்கு நாள்தோறும் தேவையாயிருந்த மிகுதியான தண்ணீரானது, தண்ணீர் வாசலினருகே குடியிருந்த நிதனீமியரால் அங்கு கொண்டுசெல்லப்பட்டது. ஆலயத்திற்குத் தண்ணீர் எடுப்பது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணிகளில் ஒன்றாகும். அவர்கள் லேவியருக்கு உதவியாக, ஆலயப் பணிவிடைக்காரராய்

நியமிக்கப்பட்டிருந்தனர். யூத ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின், செருபாபேலினால் தேவாலயம் கட்டப்பட்டிருந்தபோதிலும், அவர்களோடு வந்த லேவியரும், அவர்களுக்கு உதவியாகக் கொடுக்கப் பட்டிருந்த நிதனீமியரும் கொஞ்சம் பேராயிருந்தார்கள் (எஸ்றா 2 : 40, 58, 70). எனவே எஸ்றா எருசலேமுக்கு வந்தபோது, இப்பெருங் குறையை உணர்ந்து, ஆலயப் பணிகள் கிரமமாய் நடைபெறத்தக்கதாக, சிறையிருப்பிலிருந்த லேவியரையும், நிதனீமியரையும் இரண்டாம் விசையாக எருசலேமுக்கு அழைப்பித்தான் (எஸ்றா 8 : 15, 17, 20). நிதனீமியர் மீண்டும் வந்து தங்கள் இடங்களில் குடியேறிய பின்னர், ஆலயப் பணிவிடைக்கு மிகவும் அத்தியாவசியமாயிருந்த தண்ணீர் கொண்டுவரப்படும் வழியாகிய 'தண்ணீர் வாசலைத்' தீவிரமாகப் பழுது பார்த்துக் கட்டினர்.

தண்ணீர் வாசல், தேவவசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலைக் குறிக்கிறது என நாம் மேலே கண்டோம். தேவன் மனிதனைப் பரிசுத்த மாக்கும் பல விதங்களில், 'தேவவசனத்தினால் பரிசுத்தமாக்குதல்' ஒன்றா கும். தேவவசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல், நாம் தண்ணீர் ஞான ஸ்நானத்தில் தேவனுடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து, பாவ சுபாவத் திற்கு மரிக்கும்போது ஆரம்பமாகிறது (எபே. 2 : 2, 3). "தாம் அதைத் (சபையை) திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என்று நாம் வாசிக்கிறோம் (எபே. 5 : 26, 27). தேவன் கற்பித்திருந்தபடியே ஆசரிப்புக் கூடாரத்திலும் பின்னாட்களில் ஆலயத்திலும், பலிபீடத்தி னருகே ஒரு வெண்கலத் தொட்டி வைக்கப்பட்டு, அதில் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது. இந்தத் தொட்டி ஞானஸ்நானத்தையும், அதில் நிரப்பப்பட்டிருந்த தண்ணீர் தேவ வசனத்தையும் குறிக்கிறது. ஆரோனும் அவன் குமாரரும் ஊழியஞ்செய்யும்படி ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே பிரவேசிக்கும்போதும், பலிபீடத்தண்டையில் சேருகிறபோதும், ஒவ்வொரு முறையும் தங்கள் கைகளையும் கால்களையும் அத்தண்ணீரில் கழுவ வேண்டும் (யாத். 30 : 17 - 21). இது, தேவனுடைய வசனத்தின் வெளிச் சத்தில் நம்முடைய கிரியைகளையும் நடக்கைகளையும் நாம் சுத்தி கரித்துக்கொள்வதைக் காண்பிக்கிறது. இவ்விதம் தொடர்ந்து செய்ததின் மூலம், ஆரோன் வருடத்தில் ஒரு நாள் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடிந்தது. அதுபோலவே நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு அல்லது கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு, நம் ஜீவிய காலம் முழுவதும் இந்த ஞானஸ்நான சத்தியத்தின்படி ஜீவித்து, தேவவசனத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட வர்களாய்க் காக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் தம் ஜனங்களுக்கு, அவர்கள் புசிக்கத் தகுந்தவைகளை நியமிக்கையில், மிருகங்களில் - விரிகுளம்புள்ளவைகளாயிருந்து அசைபோடுகிறவைகளையும், நீரில் வாழும் ஜந்துக்களில் - சிறகும் செதிளுமுள்ள யாவையும், பறவை இனங் களில் - புறா போன்ற சுத்தமான பறவைகளையும் குறிப்பிட்டு, அவற்றைப் புசிக்கலாம் என்று கட்டளையிட்டார் (லேவி. 11 : 1 - 23). இவை முறையே நம் சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவை தேவவசனத் தினால் பரிசுத்தமாக்கப்படுதலுக்கு நிழலாட்டமாயிருக்கின்றன.

**மிருகங்களில்** 'விரிகுளம்புள்ளவை' என்பது, ஒரு தேவபிள்ளையில் எதிர்பார்க்கப்படுகிற வேறுபிரிதலின் ஜீவியத்தையும், 'அசைபோடுகிறவை' என்பது, கர்த்தருடைய வசனத்தைத் தியானிப்பதையும் குறிக்கின்றன. "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" என்று தாவீது கூறுகிறான் (சங். 119 : 11). நம்முடைய தேவன் அருளிய வேதம் நம் இருதயத்தில் இருக்குமானால் நம்முடைய நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை (சங். 37 : 31).

**நீரில் வாழும் ஜந்துக்களின்** 'சிறகுகள்' விசுவாசத்தையும், 'செதிள்கள்' நம்பிக்கையையும் குறிக்கின்றன. விசுவாசத்தினாலும் நம்பிக்கை யினாலும் நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் என நாம் ஏற்கனவே கண் டோம் (அப். 15 : 9 ; I யோவான் 3 : 3). சுவிசேஷ வசனத்தில் இவ் விரண்டும் அடங்கியுள்ளன: "நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண் டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்" என நாம் வாசிக்கிறோம் (கொலோ. 1 : 22). விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் உண்டாகிறது (ரோமர் 10 : 17). ஒரு மீனின் சிறகுகள், அது நீரோட்டத்தை எதிர்த்துச் செல்ல அதற்கு உதவுகின்றன. அதன் செதிள்கள், நீரினுள்ளேயே காலம் கழிக்கும் அதன் உடலைப் பாதுகாக் கின்றன. கடல் நீரின் உப்பு அதனுள் பிரவேசியாமலும் அவை கவசம் போல அதைக் காத்துக்கொள்கின்றன. சுவிசேஷ சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதினால் நாம் பாவத்தை எதிர்த்து முன்செல்கிறோம்; அதாவது உலகத்தின் அசுத்தங்கள் நம் ஆத்துமாவில் பிரவேசியாதவாறு நாம் பரிசுத்தமாகப் பாதுகாக்கப்படுகிறோம்.

**சுத்தமான பறவைகள்,** தேவவசனத்தின் மூலம் ஆவியில் பரிசுத்தமாக்கப்பட்ட, தூய்மையான ஜீவியத்தைக் குறிக்கின்றன. சத்தியம் என்னும் கச்சையினால் நம் மனதின் அரை கட்டப்பட்டிருக்க வேண்டும் என நாம் வாசிக்கிறோம் (எபே. 6 : 14 ; I பேதுரு 1 : 13).

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாய் ஜீவிக்க அழைக்கப்பட்டிருக்கிற நாம், ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, அதன்படி நடந்தால் மாத்திரமே, நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் உன்னத மண்டலங்களில் இருக்கிறவர்களாய், அந்தகாரத்திலிருக்கிற உலக ஜனங்களின் மத்தியில் சுடர்களைப் போல பிரகாசிக்க இயலும் (பிலி. 2 : 14, 15). ஆகவே அருமையானவர்களே ! கர்த்தரின் வேதத்தை நாம் அனுதினமும் நேசித்து வாசிப்போமாக ! நாம் அதை வாசித்துத் தியானிப்போமாக ! நாம் அதைத் தியானித்துக் கைக்கொள்வோமாக ! அப்பொழுது கர்த்தர் நம்மில் பிரியமாயிருப்பார். "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்" என்று எழுதப்பட்டுள்ளது (வெளி. 1 : 3). தன் வேறுபிரிதலின் ஜீவியத்தைக் காத்துக்கொண்டு, "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங். 1 : 1, 2). "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்றும், "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை" என்றும் சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 119 : 105, 165).

நண்பனே, உன்னுடைய வாழ்வில் 'தண்ணீர் வாசல்' எந்நிலையில் உள்ளது? வேத வாசிப்பை நீ அலட்சியம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை உன் முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டிருக்கிறாயோ? அல்லது கடமைக்காக மாத்திரம் வேதத்தை வாசிக்கிறாயோ? "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" என நாம் வாசிக்கிறோம் (நீதி. 28 : 9). "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்" என்று கர்த்தர் தம் ஜனங்களைக் குறித்து வேதனையுடன் கூறுகிறார் (ஓசியா 8 : 12). "நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்" என்று கர்த்தர் கூறுவது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! (ஓசியா 4 : 6). ஒருவனைக் கர்த்தர் மறந்துவிடுவாரானால் அவனுடைய நிலை எவ்வளவு நிர்ப்பந்தமானதாயிருக்கும்! "என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்" என்றல்லவோ கர்த்தர் உரைத்திருக்கிறார்? (ஏசாயா 66 : 2). எனவே நம் ஜீவியத்தில் 'தண்ணீர் வாசல்' பழுதடைந்திருக்குமாயின் அதைக் கட்டியெழுப்பும்படி நாம் இன்றே தீவிரித்து எழும்புவோமாக ! நம் பிள்ளைகளையும் குடும்பத்தையும் வேதவசன சத்தியங்களில் நாம் ஒழுங்காக வளர்ப்போமாக. வேதத்தைத் தியானிப்பவர்களை அவர் ஒருக்காலும் மறப்பதில்லை!

**ஆசீர்வாதத்தின் ஊற்று:**

நகரத்தின் மதிலுக்கு வெளியே அமையப்பெற்றுள்ள கீகோன் (Gihon) என்னும் ஊற்று, எருசலேம் நகரம் முழுவதையும் ஆதரிக்கும் ஓர் ஊற்றாயிருக்கிறது. எருசலேமைச் செழிப்பாக்கும்படி தேவன் இவ்வூற்றை அங்கே வைத்திருக்கிறார். இது ஆலயத்தின் தென்புறமாக, ஓபேல் மலையின் கிழக்கே, கீதரோன் பள்ளத்தாக்கில் அமையப் பெற்றிருக்கிறது. 'கீகோன்' (Gihon) என்பதற்கு 'பெருக்கெடுத்துப் பாய்தல்' (gushing) என்று பொருள். அவ்வூற்றின் தண்ணீர் மிகுதியாகப் பெருக் கெடுத்துப் பாய்ந்து வந்தமையால் அது வீணாகாதவாறு அதைச் சேமித்து வைத்து உபயோகிக்க வேண்டியதாயிருந்தது. நீர்ப்பாசனத்திற்கும் மற்ற எல்லாத் தேவைகளுக்கும் இவ்வூற்று பயன்படுத்தப்பட்டுவந்தது. இதற்கு அடுத்தபடியாகவே நகரத்தின் தெற்கே சற்று தொலைவில் அமைந்திருந்த என்ரொகேல் என்னும் ஊற்று பயன்படுத்தப்பட்டது. எருசலேமின் முக்கியத்துவம் வாய்ந்த இவ்விரு ஊற்றுகளில், 'கீகோன்' ஊற்றானது, நகரத்துக்குச் சமீபமாயும், பெருக்கெடுத்துப் பாய்வதாயும் இருந்தது. ஆகவே எருசலேமுக்குக் கீகோன் ஊற்றின் இன்றியமையாமை எவரும் எடுத்துரைக்காமலே விளங்கும்.

கீகோன் ஊற்று நகரததுக்கு வெளியே அமைந்திருந்தமையால், நகரம் முற்றிகை போடப்படும் நாட்களிலும், யுத்த நாட்களிலும் ஜனங்கள் அவ்வூற்றைப் பயன்படுத்தக் கூடாதிருந்தது. எருசலேம் எபூசியரின் கைகளிலிருந்தபோது, அவர்கள் போர்க் காலங்களில் பயன்படுத்தும்படி அவ்வூற்றுக்குச் செல்லும் அந்தரங்கமான வழிகளை உண்டாக்கியிருந் தனர். அப்படிப்பட்ட ஒரு மறைவான வழியினூடே அத்தண்ணீர் ஓரள வில் நகரத்தினுள் வரவும் அவர்கள் வழிவகுத்திருந்தனர். பிற்காலத்தில் எசேக்கியா ராஜா தன் ராஜ்யபாரத்தின் நாட்களில், கீகோன் ஊற்றையும் எருசலேமின் தென்கோடியிலுள்ள சீலோவாம் குளத்தையும் இணைக்கத் தக்கதாக 1,777 அடி நீளமுள்ள ஒரு நீண்ட சாலகத்தைப் பூமிக்கடியில் உண்டாக்கினான். இது 'சீலோவாம் சாலகம்' (Siloam Tunnel or Aqueduct) என அழைக்கப்படுகிறது. இவ்விதம் கீகோனின் தண்ணீர் எருசலேமின் தெற்கே, தாவீதின் நகரத்திற்குள் கொண்டுவரப்பட்டது (II நாளா. 32 : 30 ; II இராஜா. 20 : 20). என்றாலும் ஆலயமானது வடக்கேயும், தண்ணீர் வாசலுக்குச் சமீபமாயும் இருந்ததால், கீகோனின் தண்ணீர் நேரடியாகவே தண்ணீர் வாசலின் வழியே தேவாலயத்திற்குச் சுமந்துசெல்லப்பட்டது. ஆலய வளாகத்தில் பூமிக்கடியில் சாலொமோன் சில நீர்த்தேக்கத் தொட்டி களைக் கட்டிவைத்திருந்தான். அவற்றில் இவ்வூற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீர் சேகரித்துவைக்கப்பட்டு, உபயோகிக்கப்பட்டுவந்தது.

தண்ணீர் வாசலினருகே இருந்த இவ்வூற்று முழு நகரத்திற்கும், எந்த நற்கிரியைக்கும் உபயோகமாயிருந்தது போல, நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளும்போது, தேவன் நம்மை அநேகமாயிரங்களுக்கு ஆசீர்வாதமாக்குகிறார். நாம் அநேகருக்கு ஆசீர்வாதத்தின் ஊற்றுகளாகவும், ஆசீர்வாதத்தின் வாய்க்கால்களாகவும் இருக்கும்படி தேவன் நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். "நான் ... உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். ... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணினார் (ஆதி. 12 : 2, 3). விசுவாசத்தினாலே ஆபிரகாமின் சந்ததியாரான நமக்கும் இவ்வாக்குத்தத்தம் உரியதே. என்றாலும், நாம் பிறருக்கு ஆசீர்வாதமாகத் திகழும்படி, நகர வாசலுக்குப் புறம்பேயிருந்த இவ்வூற்றைப் போல, நாமும் உலகத்தினின்று தேவனுக்கென்று நம்மை முற்றிலும் வேறுபிரித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆபிரகாம் இவ்விதம் தன்னைக் கர்த்தருக்கென்று வேறுபிரித்துக்கொண்டு, அவருடைய சொற்கேட்டு நடந்துவந்தமையால், ராஜாக்களும் அவனுக்குப் பயந்து, அவனைக் கனம்பண்ணினர். அவன் செய்த சகல காரியங்களிலும் தேவன் அவனுடனேகூட இருந்ததை அவர்கள் விளங்கிக்கொண்டனர் (ஆதி. 21 : 22). கர்த்தர் அவனை மிகவும் ஆசீர்வதித்துச் சீமானாக்கினார் (ஆதி. 24 : 35). "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" என நாம் வாசிக்கிறோமே! (நீதி. 10 : 22).

தேவன் நம்மையும், நம் மூலமாக அநேகரையும் ஆசீர்வதிக்கும்படியாகவும், நம்மைக் கனத்துக்குரியவர்களாக்கும்படியாகவும் பரிசுத்தமாகுதல் இன்றியமையாதது என்ற உண்மையை அப். பவுலும் வலியுறுத்துகிறார்: "ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்" (II தீமோ. 2 : 21). நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி தேவனுக்கு அந்நியமான யாவற்றினின்றும் நம்மை வேறுபிரித்துக்கொள்வோமாக. மேலும், "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்" என்று யோசுவா தேவஜனங்களை நோக்கிக் கூறுகிறான் (யோசுவா 3 : 5). தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களையும் அற்புதங்களையும் எதிர்பார்க்கிறவர்கள் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ள வேண்டும் என்பது இவ்வசனங்களிலிருந்து புலனாகிறது.

பள்ளத்தாக்கில் அமையப்பெற்றிருந்த கீகோன் ஊற்றின் ஊற்றுக்கண்கள், அவ்வூற்றை நீர்வளமுள்ளவையாக்கினது மட்டுமல்ல, அதன்

ஒரு பகுதி பூமியின் அடியில் கடினமான சுண்ணாம்புப் பாறைகளினூடாகச் சென்று, தெற்கேயிருந்த என்ரொகேல் ஊற்றையும் திறந்திருக்கிறது என்று தற்காலக் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. கர்த்தருக்குள் நாம் செழித்தோங்குவதற்கும், நம் மூலமாகப் பலருடைய ஜீவியங்களும் செழிப்படைவதற்கும் தாழ்மை மிகவும் அவசியம் என்ற உண்மையைப் 'பள்ளத்தாக்கின் ஆழங்களில் அமைந்திருக்கும் கீகோன் ஊற்று' நமக்குக் கற்பிக்கிறது. "தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்" (நீதி. 22 : 4). "தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு" (நீதி. 11 : 2). ஆபிரகாமைத் தேவன் மிக அதிகமாக ஆசீர்வதித்து, உயர்த்தி, மேன்மைப்படுத்தியிருந்த போதிலும், அவன் மனமேட்டிமையடையாமல், கர்த்தருக்குப் பயந்து, மனத்தாழ்மையுடன் அவருக்குக் கீழ்ப்படிந்து ஜீவித்துவந்தான். அவன் தனக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களைச் சார்ந்துகொள்ளாமல், அவற்றைத் தனக்கு அளித்த தேவன் மேலேயே சார்ந்துகொண்டான். இதினிமித்தம் அவன் மென்மேலும் ஆசீர்வதிக்கப்பட்டான். அருமையானவர்களே ! நாமும் பள்ளத்தாக்கின் ஆழத்தில் மறைந்திருந்த இந்தக் கீகோன் ஊற்றைப் போல, அநேகருக்கு ஆசீர்வாதத்தின் ஊற்றாய்த் திகழும்படி, மனத்தாழ்மையோடும் பரிசுத்தத்தோடும் கர்த்தரில் மறைந்திருப்போமாக.

**தண்ணீர் வாசலைக் கட்டியவர்கள்:**

"*ஓபேலிலே குடியிருக்கிற நிதனீமியரைச் சேர்ந்த மனிதரும் ... தண்ணீர் வாசலுக்கு ... எதிரேயிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்*" (நெகே. 3 : 26).

*நிதனீமியர்* — இஸ்ரவேலர் தாங்கள் கைப்பற்றிய தேசங்களிலிருந்து சிறைகளாக அல்லது அடிமைகளாகத் தங்கள் தேசத்திற்குக் கொண்டு வந்தவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக வேலைகொண்டனர். யோசுவாவின் நாட்களில் கிபியோனின் குடிகள் இஸ்ரவேலரோடு தந்திரமாகச் சமாதானம் பண்ணிக்கொண்டனர் என நாம் வாசிக்கிறோம். இதினிமித்தம் அவன், "நீங்கள் ... என் தேவனுடைய ஆலயத்துக்கு விறகுவெட்டுகிறவர்களும், தண்ணீர் எடுக்கிறவர்களுமான பணிவிடைக்காரராயிருப்பீர்கள்; இந்த ஊழியம் உங்களைவிட்டு நீங்கமாட்டாது" என்றான் (யோசுவா 9 : 23). தாவீதின் காலம் முதற்கொண்டே கூடாரத்திலும், பின்பு தேவாலயத்திலும், தண்ணீர் எடுத்தல், விறகு வெட்டுதல், கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல், ஆலயத்தைச் சுத்திகரித்தல் போன்ற பணிவிடைகளுக்கென்று நிதனீமியர் நியமிக்கப்பட்டிருந்தனர் (எஸ்றா 8 : 20). இவ்வேலைகள் ஆலயப் பணிகளாயிருப்பினும், அவை அந்நாட்களில் யூதரால் அற்பமானவைகளாய்க் கணிக்கப்பட்டிருந்தன. இவர்களைப் போலவே, இஸ்ர

வேலரல்லாத அந்நிய ஜாதியாரான ஒரு கூட்டத்தாரை அமஞ்சி வேலை செய்யும்படி (bondservice) சாலொமோன் தனக்கு அடிமைகளாக்கிக் கொண்டான் (I இராஜா. 9 : 20, 21). இவர்களும் இவர்களுடைய சந்ததி யாரும் 'சாலொமோனின் வேலையாட்கள்' என அழைக்கப்பட்டு, பெரும் பாலும் கட்டட வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். எஸ்றாவின் புஸ்தகத்திலும் நெகேமியாவின் புஸ்தகத்திலும், நிதனீமியர், சாலொமோனின் வேலை யாட்களோடு சேர்த்தே குறிப்பிடப்பட்டுள்ளனர் (எஸ்றா 2 : 58). அவ் வேலையாட்களுக்குக் குறிக்கப்பட்டிருந்த வேலைகள், நிதனீமியரின் பணிகளுக்கு ஒப்பானவையாகவும், அவற்றை விட இன்னும் தாழ்வானவை யாகவுமிருந்தன.

கிபியோனின் குடிகளும், அவர்களைப் போல மற்ற பல தேசங் களிலிருந்து கொண்டுவரப்பட்டு, ஆலயப் பணிவிடை செய்வதற்கென்று குறிக்கப்பட்டவர்களுங்கூட இஸ்ரவேலரால் 'ஆலய அடிமைகள்' (Temple Servants) என்றே அழைக்கப்பட்டனர். ஆனால் பின்னாட்களில் இஸ்ரவேலர் தாங்களே சிறைப்பட்டுப் போனதினிமித்தம், தாங்கள் மீண்டும் திரும்பி வந்தபின் இக்கூட்டத்தினரை அடிமைகளாகக் கருதாமல், 'நிதனீமியர்' அல்லது 'ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள்' (the given ones) என அழைக்கலாயினர். இஸ்ரவேல் புத்திரரின் சார்பாக ஆசரிப்புக் கூடாரத்தில் பணிவிடை செய்யும்படி லேவியர் பிரித்தெடுக்கப்பட்டு, ஆரோனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தனர் என்று நாம் அறிவோம் (எண். 3 : 9 ; 8 : 16, 19 ; I நாளா. 23 : 28). அவ்வாறே நிதனீமியர் ஆலயப் பணிவிடைகளுக்கென்று யோசுவா, தாவீது, சாலொமோன் போன்றோரால் லேவியருக்கு உதவியாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு ஆலயப் பணிவிடைக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்த இவ்விரு சாராருக்கும் 'ஆலயப் பணிவிடைக்காரர்' என்ற பெயரே வழங்கி வந்துள்ளது. தங்கள் ஆலயத்தை விட்டு நீண்ட காலம் பிரிந்திருந்த துயரத்தினிமித்தம், ஆலயத்தின் எளிமையான அவ்வேலைகளைக் குறித்து யூதர்கள் முன்பு கொண்டிருந்த தாழ்வு மனப்பான்மை அவர் களினின்று நீங்கிப்போயிருந்தது. யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, நிதனீமியர் அவர்கள் நடுவில் மதிக்கப்படத்தக்கவர்களாகக் கணிக்கப்பட்டனர். சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த எஸ்றா, தன்னோடு வந்தவர்களில் லேவியரோ, நிதனீமியரோ இல்லை என்பதை அறிந்து, தங்கள் தேவனுடைய ஆலயத்தின் பணிவிடைக்காரரை அழைத்து வரும்படி ஆட்களைப் பாபிலோனுக்கு அனுப்பினான். அதன்படியே அவர்கள், தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியரில் இருநூற்றிருபது பேரை யூதா தேசத்துக்கு அழைத்து

வந்தனர் (எஸ்றா 8 : 20). சிறையிருப்பிலிருந்து வந்த ஆசாரியர், லேவியர், பாடகர், வாசல் காவலாளர் ஆகிய இவர்களுடன் நிதனீமியரும் அட்ட வணைக்குட்படுத்தப்பட்டு, தங்கள் தங்கள் பட்டணங்களில் குடியேறினர் (எஸ்றா 2 : 70). அவர்களுடைய பணிவிடைக்கு ஏற்றதாக, தண்ணீர் வாசலின் அருகே, ஓபேல் மலைச் சரிவில், நகரத்தின் நல்லதொரு பகுதி அவர்களது குடியிருப்புக்காகக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் மேல் விசாரிப்புக்காரரும் நியமிக்கப்பட்டிருந்தனர் (நெகே. 11 : 21). ஆசாரியர், லேவியர் என்பவர்களைப் போலவே இவர்கள் மேலும் வரியோ, ஆயமோ, தீர்வையோ சுமத்தப்படவில்லை (எஸ்றா 7 : 24). மற்றவர்களுடன் சேர்ந்து இவர்களும் தேவனோடு புதிய உடன்படிக்கை செய்துகொண்டனர் (நெகே. 10 : 28, 31). இவ்வாறு நாளடைவில் இவர்கள் 'புறதேசத்தார்' என்ற பெயரே மறக்கப்பட்டு, லேவியரைப் போலவே 'ஆலயப் பணிவிடைக்காரர்' என்று பெயர் பெற்றார்கள் (I நாளா. 23 : 24 ; எஸ்றா 8 : 17, 20).

இந்த நிதனீமியர், ஓபேலில் கீகோன் ஊற்றண்டையில் இருந்த தண்ணீர் வாசலுக்கு அருகாமையில் குடியிருந்தனர் (நெகே. 11 : 21). அவர்கள் புறதேசத்தாராயிருந்தும் தண்ணீர் வாசலையும் எருசலேமின் அலங்கத்தின் ஒரு பகுதியையும் கட்டுவதில் ஆர்வம் மிக்கவர்களா யிருந்தனர். அவர்கள் விரும்பியிருந்தால் யூதரின் சிறையிருப்பின் நாட்களிலேயே அவர்களை விட்டுப் பிரிந்து, சுயாதீனராய்ச் சென்றி ருந்திருக்கலாம். அவர்களோ அப்படிச் செய்ய விரும்பவில்லை. அவர்கள், "நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத் 1 : 16) என்று நகோமி யிடம் கூறிய மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தைப் போல கர்த்தரைப் பின்பற்றுவதில் உறுதியாயிருந்தார்கள் ! யோசுவாவின் நாட்கள் முதற் கொண்டு தேவன் தம் ஜனங்களுக்குச் செய்துவந்த மாபெரும் அற்புதங் களைக் கண்கூடாகக் கண்டிருந்தமையால் அவர்கள் மெய்யான தேவ னோடும் தேவஜனங்களோடும் ஒன்றாகிவிட்டனர். ஆகவேதான் சுயதேசத் தாரான யூதரைப் போலவே அவர்களும் எருசலேமுக்குத் திரும்பி வந்து, அதைத் திரும்பக் கட்டியெழுப்புவதிலும் ஆலயப் பணிவிடை களிலும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் கவனம் செலுத்தினர்.

நிதனீமியர் என்பதற்கு 'ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள்' என்று பொருள். ஆம் ! ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள் மாத்திரமே தண்ணீர் வாசலைக் கட்டியெழுப்ப முடியும். நாம் நம்முடைய அவயவங்களைத் தேவனுக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கும்போது, பரிசுத்தமாகுதலின்

வேலை நம்மில் நடந்தேறும். "நீங்கள் ... தேவனுக்கு அடிமைகளான தினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்" என்று திருவசனம் கூறுகிறது (ரோமர் 6 : 22). அருமை யானவர்களே ! "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ர வேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ் வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள் ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே. 2 : 12, 13). "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாரு மாயிருந்து, ... ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்"(வச. 19, 22). "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்பு கிறது" (வச. 21). தேவனுக்குப் 'பரிசுத்த ஆலயமாகக்' கட்டியெழுப்பப் படும்படி எந்த அளவுக்கு நம் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றை ஒப்புக்கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு அவர் தம் பரிசுத்தமாக்கு தலின் வேலையை நம்மில் நிறைவேற்றுவார். நிதனீமியரைப் போல அவருக்கு 'அடிமைகளாக' நாம் நம்மை அர்ப்பணித்திருப்போமாயின், நம்மைப் பரிசுத்தத்தில் கட்டியெழுப்பும்படி அவர் என்னென்ன முறைமைகளைக் கையாண்டாலும் அவரைக் கேள்வி கேட்காமலும், அவருக்கு விரோதமாய் முறையிடாமலும், அவ்வேலை நம்மில் நிறை வேறித் தீருமளவும் நாம் அவருடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கப் பட்டவர்களாகவே அமர்ந்திருப்போம். அவர் தம்முடைய வேலையை நம்மில் பூரணப்படுத்தும்படி, நிதனீமியரைப் போல நாம் நம்மை மனப் பூர்வமாய் சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் அவருக்கு அடிமை களாக ஒப்புக்கொடுப்போமாக ! மேலும் அவர்கள் ஆசாரியரின் நடத்திப் பின் கீழ், லேவியருக்குப் பணிவிடைக்காரராக ஒப்புக்கொடுக்கப்பட்டி ருந்தது போல, நாமும் கர்த்தருக்கு மட்டுமல்ல, பரிசுத்தவான்களுக்கும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். "தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத் தார்கள்" என மக்கெதோனியா சபையாரின் மனப்பூர்வமான ஒப்புக் கொடுத்தலைக் குறித்து அப். பவுல் எழுதுகிறார் (II கொரி. 8 : 5). எனவே அருமை நண்பனே ! உன்னில் இந்தப் பரிசுத்தமாக்குதலின் நற்கிரி யையை ஆரம்பித்தவர், அதைக் கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவரும்படி உன்னை முற்றிலும் அவருக்குத் தத்தம் செய்வா யாக. "பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" என்றுரைத்தவர்,

இதோ, சீக்கிரமாய் வருகிறார்! நாம் நம்மைக் கர்த்தருக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்திருக்கிறபடியினால், இனி ஒருக்காலும் அந்நியர்களல்ல; என்றென்றுமாய் அவருக்குச் சொந்தமானவர்களாக, அவரைச் சதாகாலமும் சேவிக்கிறவர்களாயிருப்போம்! அல்லேலூயா!

நிதனீமியர் ஒரு காலத்தில் அந்நியராயிருந்து, பின்பு யூதரோடு சமாதானம்பண்ணி, அவர்களோடு வாசம்பண்ணி, தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சிறுசிறு ஆலயப் பணிகளில் உண்மையாயிருந்து, தங்கள் உண்மையினிமித்தம் நாளடைவில் என்றைக்கும் கர்த்தருடைய ஆலயத்தில் லேவியருக்கு உதவியாகப் பணிவிடை செய்யும் சிலாக்கியம் பெற்றனர். "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று அப். பவுல் புறஜாதியாராகிய கொலோசெயருக்கு எழுதுகிறார் (கொலோ. 1 : 21). இதையே அப். பேதுரு, "விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்" (அப். 15 : 9) என்று புறஜாதியாரில் இரட்சிக்கப்பட்டவர்களைக் குறித்து, யூதர்களான விசுவாசிகளுக்கு எடுத்துரைக்கிறார்.

முற்காலங்களில் புறஜாதியாரும், தேவனற்றவர்களும், தேவனுக்குச் சத்துருக்களுமாயிருந்து, கிறிஸ்துவின் கல்வாரி மரணத்தினால் இப்போது தேவனுக்குச் சமீபமாய்க் கொண்டுவரப்பட்டு, அவருடைய பிள்ளைகளாகும் சிலாக்கியம் பெற்று, அவரால் யாதொரு வித்தியாசமுமின்றி நேசிக்கப்பட்டு, அவரைச் சேவித்துவருகிற நமக்கு, நிதனீமியர் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர்! அவர்கள் தேவஜனங்களை விட்டுப் பிரிந்துபோகத் தருணம் கிடைத்தும், அப்படிச் செய்யாமல், 'அடிமைக்கு அடிமையாகத்' தங்களைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்து, தேவாலயத்தின் பணிகளை மனப்பூர்வமாகவும் உத்தரவாதத்துடனும் செய்துவந்ததுடன், எருசலேமைத் தங்கள் சொந்த நகரமாகக் கருதி, அதன் இடிந்துபோன அலங்கத்தைக் கட்டவும் உற்சாகத்துடன் தோள் கொடுத்தனர்! அவர்கள் தங்கள் பணிவிடைகள் அனைத்திலும் உண்மையுள்ளவர்களாய் இருந்ததைத் தேவன் கண்டார்! ஆகவே அவர்களைத் தம்முடைய ஜனங்களின் மத்தியில் - தம்முடைய ஆலயத்தின் சேவையில் - லேவியருக்கு உதவியாக அவர் நிலைப்படுத்தினார். "தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்"

என நாம் வாசிக்கிறோமல்லவா? (சங். 101 : 6). ஆம்! "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதி. 28 : 20). தேவபிள்ளையே ! "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25 : 21) என்ற சத்தம் நம் செவிகளில் தொனிக்கும் நாள் நெருங்கியிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாம் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கும்படி (I தெச. 3 : 13), நம் ஜீவியத்தின் 'தண்ணீர் வாசலை' நாம் கட்டியெழுப்பிக்கொண்டு, உண்மையோடும் உத்தமத்தோடும் கர்த்தரின் கிரியையில் எப்பொழுதும் பெருகுகிறவர்களாயிருக்கக் கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

9

# காவல்வீட்டு வாசல்

## (PRISON GATE)

*"ஊசாயின் குமாரன் பாலால் ... காவல் வீட்டின் முற்றத்துக்கடுத்த ராஜாவின் உயரமான அரமனைக்கு வெளிப்புறமாயிருக்கிற கொம்மைக்கு எதிரேயும் இருக்கிறதைக் கட்டினான்"; "துதிசெய்கிற இரண்டாம் கூட்டத்தார்... காவல்வீட்டு வாசலிலே நின்றார்கள்"* (நெகே. 3 : 25 ; 12 : 38, 39).

எருசலேமின் அலங்கத்திலிருந்த காவல்வீட்டு வாசல், ராஜாவின் அரமனைக்கு அருகாமையிலிருந்த காவல்வீட்டிற்குச் (சிறைச்சாலை) சிறைக்கைதிகளைக் கொண்டுசெல்லும்படி உபயோகிக்கப்பட்டுவந்தது. பண்டைக்காலத்தில், இயற்கையாய் அமையப் பெற்ற வெறுங்குழிகளும், உளையான குழிகளும், வெளிச்சமற்ற குகைகளும் குற்றம்புரிந்தோரை அடைத்துவைக்கும் சிறைகளாகப் பயன்படுத்தப்பட்டன. பின்னாட்களில், காவற்கிடங்குகளும் நிலவறைகளும் அதற்கென்று பிரத்தியேகமாகக் கட்டப்பட்டு உபயோகிக்கப்பட்டன. "எரேமியா காவற்கிடங்கின் நிலவறைகளில் பிரவேசித்து, அங்கே அநேகநாள் இருந்தான்" என நாம் வாசிக்கிறோம் (எரே. 37 : 16). புதிய ஏற்பாட்டின் காலத்தில், சிறைச்சாலைகளும் பலமான காவல் பிரிவுகளும் உண்டாயிருந்தன. அப்போஸ்தலராகிய பேதுரு, பவுல் போன்றோர் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைகள் இத்தகைய அமைப்புகளை உடையவையாகும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் சில பரிசுத்தவான்கள் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு அல்லது கர்த்தருடைய நாமத்தினிமித்தம் தண்டிக்கப்பட்டு, சிறையில் வைக்கப்பட்ட சம்பவங்களை வேதாகமத்தில் நாம் காண்கிறோம். யோசேப்பு, மிகாயா, எரேமியா, கர்த்தராகிய இயேசுவின் சீஷராயிருந்த பேதுருவும் இதர அப்போஸ்தலரும், மற்றும் அப். பவுல், சீலா போன்றோர் இவ்விதம் சிறைவாசம் செய்தனர். அவர்களில் அப். பவுல், தான் அநேகந்தரம் காவலில் இருந்ததாகத் தன்னைக் குறித்து எழுதுகிறார் (II கொரி. 11 : 23).

இந்தச் சிறைவாசங்களில் அவர்கள் சோர்ந்துபோகவுமில்லை; பதட்ட மடையவுமில்லை. நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவிக்கப்பட்டு, இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்டு, இரண்டு சேவகருக்கு நடுவே காவல் பண்ணப்பட்டிருந்த அப். பேதுரு, மிகுந்த இளைப்பாறுதலுடன் நித்திரை பண்ணிக்கொண்டிருந்தார். அவரை விடுதலையாக்கும்படி வந்த தேவ தூதன், அவரை விலாவிலே தட்டி எழுப்ப வேண்டியதாயிருந்தது. ஏரோது அவரைக் கொலை செய்யும் நோக்குடன் காவலுக்குட்படுத்தியிருந்தான் என்பதை அவர் அறிந்திருந்தபோதிலும், தான் கர்த்தருடைய கைகளில் இருக்கிறார் என்ற விசுவாசமே அவரை அவ்வேளையில் அவ்விதம் இளைப்பாறச் செய்தது. தம்மேல் விசுவாசம் வைத்து, தம்மில் இளைப் பாறிக்கொண்டிருந்த தம் தாசனைக் கர்த்தர் ஆச்சரியமான விதத்தில் விடுதலையாக்கினார்! அவர் கைகளிலிருந்த சங்கிலிகள் கழன்று விழுந் தன; நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவு தானாகத் திறவுண்டது (அப். 12 : 7, 10). பரத்திலிருந்து அனுமதி கொடுக்கப்பட்டாலொழிய பரலோக வாசிகள் மேல் பூலோக அரசாங்கத்திற்கு ஒரு அதிகாரமுமிராது என் பதைப் பரலோக மன்னர் ஏரோதுக்கு நிரூபித்துவிட்டார்! ஒரு தேவ தூதனின் முன்னிலையில் சிறைச்சாலையின் பெலம்வாய்ந்த இருப்புக் கதவு தானாகத் திறவுண்டு போகுமாயின், தடைகளை நீக்குகிறவராய் நம் முன்னணியில் நடந்துபோகிற நம்முடைய மகா ராஜாவின் முன்பாக, மனுஷரின் தடைகளும் பலத்த காவல்களும் தெறிப்புண்டு தகர்ந்து போவது எவ்வளவு நிச்சயம்! (மீகா. 2 : 13). இதையே சங்கீதக்காரன், “கடலே, நீ விலகியோடுகிறதற்கும்; யோர்தானே, நீ பின்னிட்டுத் திரும்பு கிறதற்கும்; மலைகளே, நீங்கள் ஆட்டுக்கடாக்களைப்போலவும்; குன்று களே, நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப்போலவும் துள்ளுகிறதற்கும், உங் களுக்கு என்ன வந்தது? பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாகவும், யாக்கோபுடைய தேவனுக்கு முன்பாகவும் அதிரு” என்று கூறுகிறான் (சங். 114 : 5 - 7).

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், அப்போஸ்தலர் பொதுவான சிறைச் சாலையில் காவல் செய்யப்பட்டிருந்தனர். மறுநாள் காலையில் அவர்களை வெளியே கொண்டுவரும்படி சேவகர் சிறைச்சாலைக்கு அனுப்பப் பட்டபோது, அவர்கள் பிரமிப்படைந்தவர்களாய்த் திரும்பிவந்து, “சிறைச் சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்தபொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள்” (அப். 5 : 23). இதைக் கேட்டவர்கள், “இதென்னமாய் முடியுமோ” என்று அவர்களைக் குறித்துக் கலக்கமடைந்தனர் (வச. 24). சம்பவித்தது யாது? முந்தின இரவிலே கர்த்தருடைய தூதன் சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை

வெளியே கொண்டுவந்து விட்டு, ஜீவவார்த்தைகளை ஜனங்களுக்குப் போதிக்கும்படி அவர்களுக்குச் சொல்லி மறைந்தான். காவலில் வைக்கப் பட்டிருந்தவர்கள் தேவாலயத்திலே நின்று பிரசங்கம்பண்ணிக்கொண் டிருந்தனர் ! தம்முடைய பிள்ளைகளுக்காகக் கர்த்தர் குறுக்கிட்டு, மனு ஷரின் யோசனைகளைக் குலைத்துப்போட்டார். அல்லேலூயா !

அப். பவுலும் சீலாவும் மக்கெதோனியா தேசத்துக்குப் போகும்படி தரிசனத்தில் உணர்த்தப்பட்டு, அங்கு சென்று, அத்தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையாயிருந்த பிலிப்பி பட்டணத்தில் ஊழியம் செய்துவந்தனர். அப்போது, அவர்களுக்கு விரோதமாக ஜனங்கள் எழும்பி, அவர்களை அடித்து, சிறையிலடைத்தனர். பிலிப்பி பட்டணத்துச் சிறையின் உட்காவலறையிலே, கால்கள் தொழுமரத்தில் மாட்டிவைக்கப் பட்ட நிலையில் அவர்கள் காவல்செய்யப்பட்டிருந்தபோது, நள்ளிரவில் அவர்கள் கர்த்தரைப் பாடித் துதித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் சந்தோஷமாகப் பாடுவதை மற்றக் கைதிகள் தங்கள் அறைகளிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தனர். 'கடுங்காவலிலும் மகிழ்கொண்டாடும் இவர்கள் யார்?' என அவர்கள் வியந்திருக்கக் கூடும். சடுதியாகச் சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையத்தக்கதாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுக ளெல்லாம் திறவுண்டன; எல்லாருடைய கட்டுகளும் கழன்று விழுந்தன. சிறைச்சாலைக்காரனும் அவனுடைய வீட்டார் அனைவரும் அன்றிரவே இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 16 : 24 - 33). அடிகளும் கட்டுகளும் சிறைவாசமும், தேவதாசர்களின் ஆவியின் அனலைத் தணிக்க இயலவில்லை. சிறைவாசம் அவர்களை அசைக்க முடியவில்லை; மாறாக, அவர்களுடைய துதிகளால் சிறைச்சாலைதான் அசைந்துவிட்டது ! இவைகளில் ஒன்றும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாது என்று அப். பவுல் முழங்குகிறார் ! ஆம் ! "நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது" (உன். 8 : 6, 7).

## புடமிடும் சிறை:

தேவபிள்ளைகள் அனுபவித்த மற்றுமொரு சிறையிருப்பைக் குறித்து வேதாகமம் கூறுகிறது. இது எழுத்தின்படியான ஒரு சிறைவாசம் அல்ல. யோபு உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்பை விட்டு விலகுகிறவனுமாய் இருந்தபோதிலும் அவன் சிலகாலம் பல பாடுகளின் வாயிலாகப் புடமிடப்பட வேண்டியதா யிருந்தது. அவன் தனக்கிருந்த எல்லாவற்றையும் இழந்து, முடிவில் தன் சரீர சுகத்தையும் இழந்தவனாய் உபத்திரவத்தின் குகையில் அல்லது

சிறையிருப்பில் இருந்தான் (யோபு 42 : 10). தேவனுடைய கிரியையை அவனால் விளங்கிக்கொள்ள இயலவில்லை. அவனுடைய கேள்வி களுக்குத் தேவனிடத்திலிருந்து பதில் கிடைக்கவில்லை. ஏன் தனக்கு இவ்விதமாக ஒன்றன் பின் ஒன்றாக விபரீதங்கள் சம்பவிக்கின்றன என்பதும் அவனுக்கு மறைக்கப்பட்டிருந்தது. "நான் கடந்துபோகக் கூடாதபடிக்கு அவர் என் பாதையை வேலியடைத்து, என் வழிகளை இருளாக்கிவிட்டார்" என்று ஒரு சிறைச்சாலையின் இருட்டறைக்குள் அடைக்கப்பட்ட ஒருவனைப் போல அவன் புலம்பினான் (யோபு 19 : 8). "இதோ, நான் முன்னாகப்போனாலும் அவர் இல்லை; பின்னாகப் போனாலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன்; வலதுபுறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்" என அவன் அங்கலாய்த்தான் (யோபு 23 : 8, 9). அவனுடைய ஏக்கமும் தவிப்பும் வியாகுலமும் வேதனையும் அதி கரித்துக்கொண்டேயிருந்தபோதிலும், கர்த்தர் தம்முடைய குறித்த வேளை வரும் வரை அவனுக்குத் தம்மை வெளிப்படுத்தாமல் மறைந்திருந்தார். அவனுடைய எல்லா இழப்பையும் வியாதியையும் பார்க்கிலும் இதுவே அவனுக்குத் தாங்க முடியாத வேதனையளிப்பதாயிருந்தது.

கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றும் ஒருவனுடைய வாழ்வில் கர்த்தர் தம்மை மறைத்துக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் வரும்போது, அவை அவனுக்குத் தாங்கொணா சஞ்சலத்தை வருவிக்கின்றன. "இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக் கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்" என ஏசாயா கூறுகிறான் (ஏசாயா 45 : 15). "அவர் என்னை வெளிச்சத்திலே அல்ல, இருளிலே அழைத்து நடத்திவந்தார். ... என் விலங்கைப் பாரமாக்கினார்" என்று எரேமியா புலம்புகிறான் (புல. 3 : 2, 7). எரேமியா கர்த்தரின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைக்கத் துவங்கியது முதல் அவனுக்கு உபத்திரவம் ஆரம்பமாயிற்று. பலமுறை அவன் காவற்கிடங்கிலும், நிலவறையிலும், காவற்சாலையின் முற்றத்திலும், தண்ணீரில்லாத வெறுங்குழியிலும் அடைக்கப்பட்டிருந்தான் (எரே. 32 : 2, 8, 12 ; 33 : 1 ; 37 : 16, 21 ; 38 : 6, 13, 28 ; 39 : 14, 15). தேவ பிள்ளையே ! கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவரைச் சேவிக் கிறதினிமித்தம் நீ கட்டுகளுக்குள் இருக்கிறாயா ? கலங்காதே; அவர் உன் இருளை வெளிச்சமாக்குவார்! (சங். 18 : 28); அல்லது யோபுக்கு நேரிட்டது போல சாத்தான் உன்மேல் கவனம் வைத்து, உன்னைப் பாடு களாம் சிறையினுள் அடைத்திருக்கிறானோ? கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போல உன்னையும் புடைத்துக்கொண்டிருக்கிறானோ? பதறாதே. உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி உனக்காக ஒருவர் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார் ! (லூக்கா 22 : 32). "அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்

படும்; (என்றாலும்) இடைவிடாமல் அவன் அதைப் போரடிக்கிறதில்லை; ... அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவ மானவர்" (ஏசாயா 28 : 28, 29). மெய்யாகவே கர்த்தருடைய செயலின் முடிவை நீ காண்பாய் (யாக். 5 : 11). நீ போகும் வழியை அவர் அறிவார். நீ விலையேறப்பெற்ற பொன்னாக மாற்றப்படும்படியாகவே உன்னைப் புடமிடும் அச்சோதனைகளை உன் வாழ்வில் அவர் அனுமதித் திருக்கிறார். அவர் உன்னைப் புடமிட்டபின் நீ பொன்னாக விளங்குவாய் (யோபு 23 : 10). "இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளி யைப்போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண் டேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (ஏசாயா 48 : 10). இந்தப் புடமிடுதல் உன்னை அழித்துப்போடும்படியாக அல்ல, உன் களிம்புகள் நீங்க உன்னைச் சுத்திகரித்து, முன்னிலும் அதிகமாகப் பிரகாசிக்கச் செய்யும் படியாகவே தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவர் அறிவாளி களைப் புடமிட்டுச் சுத்திகரித்து, வெண்மையாக்குகிறார் (தானி. 12 : 35). தேவபிள்ளையே, நீயும் இக்கூட்டத்தில் காணப்பட விரும்புகிறாயா ? அப்படியானால் அவர் உன் வாழ்வில் அனுமதிக்கும் புடமிடும் பாதை களில், அவர் உன்னில் செய்ய விரும்பும் வேலையை நிறைவேற்றும் வரை பொறுமையாய் அவர் கரத்தில் அமர்ந்திரு. புடமிடுகிறவன், தன் முகச் சாயலை அந்த உலோகத்தில் காணும் வரை அதைப் புடமிடுகிறான். அவ்வாறே நீ கடந்து செல்லும் இந்த உபத்திரவத்தின் குகையிலே, பெரிதான ஒரு வேலை உன் ஜீவியத்தில் நடந்தேறுகிறது என்பதை நினைவிற்கொள்ளுவாயாக. தம் சாயலை உன்னில் காணவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், தேவன் தம் முழுக் கவனத்தையும் உன்னில் செலுத்தி, உன்னை உருவாக்கிக்கொண்டிருக்கிறார். அவர் உட்கார்ந்து லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களா யிருக்கும்படிக்கு அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார் என நாம் வாசிக்கிறோமே (மல். 3 : 3). புடமிடு தலின் வேலை உன்னில் நிறைவேறும் சரியான வேளையில் அவர் உன்னை அந்த அக்கினியினின்று - உபத்திரவத்தின் குகையினின்று - வெளியே எடுப்பார். அதற்கு ஒரு நிமிடம் முன்போ, பின்போ அல்ல, சரியான வேளையில் அவர் செயல்படுவார். இதற்காக அவர் உட்கார்ந்து அக்கினிக்குள் புடமிடப்பட்டுக்கொண்டிருக்கும் உன்னை நிதானமாக, கவனமாக, நுட்பமாகக் கவனித்துக்கொண்டேயிருக்கிறார். வேலை நிறைவேற்றப்பட்ட பின் நீ அதில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப் படுவதில்லை.

"யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடை

பட்டிருந்தது. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது" (சங். 105 : 17 - 19). என்றாலும், அவனில் புடமிடுதலின் வேலை நிறைவேறியபோதோ, உடனடியாக அவன் அதினின்று வெளியே கொண்டுவரப்பட்டான். "ராஜா ஆள் அனுப்பி, அவனைக் கட்டவிழ்க்கச்சொன்னான்; ஜனங்களின் அதிபதி அவனை விடுதலைபண்ணினான்" (வச. 20). "அவனைத் தீவிரமாய்க் காவல் கிடங்கிலிருந்து கொண்டுவந்தார்கள்" (ஆதி. 41 : 14). வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு - பெரியதொரு வேலையை அவன் மூலம் நிறைவேற்றும்படிக்கு - காவற்கிடங்கில் வைத்து கர்த்தர் அவனைப் புடமிட்டு உருவாக்கினார். "அரசாளச் சிறைச்சாலையிலிருந்து புறப்படு வாருமுண்டு" (பிர. 4 : 14) என்ற வேதவசனம் யோசேப்பின் வாழ்க்கைக்குச் சாலப் பொருந்தும்.

"அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" என்று விசுவாசித்திருந்த யோபின் சிறையிருப்பை ஏற்றவேளையில் தேவன் மாற்றினார். அவன் இரட்டிப்பான ஆசீர்வாதங்களைச் சுதந் தரித்துக்கொண்டான்! (யோபு 42 : 10). அவனுடைய முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையைக் கர்த்தர் ஆசீர்வதித்தார் (யோபு 42 : 10 - 12). காவற்கிடங்கிலிருந்த யோசேப்பும் ஏற்ற வேளையில் அந்த உபத்திர வத்தின் குகையினின்று விடுதலையாக்கப்பட்டு, ராஜாவுக்கு அடுத்தவனாக உயர்த்தப்பட்டான். அவனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை பன்மடங்கு மேன்மையுள்ளதாயிற்று! அவ்வாறாயின், ஆழ்ந்து சிந்திக்குங் கால், முன்னிலைமையிலும் பின்னிலைமையை ஆசீர்வாதமாக்கும் இச்சிறைவாசமும் வரவேற்கப்படத்தக்கதன்றோ !

**கிறிஸ்துவின் சிறைக்கைதி:**

அப். பவுல் தன்னைக் 'கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவன்' என அறிமுகப்படுத்துகிறார் (எபே. 4 : 1). தான் கிறிஸ்துவின் சிறைக்கைதி (Prisoner of Christ) என்ற வெளிப்படுத்தல் எப்போதும் அவருக்கிருந்தது. ஒரு சிறைக்கைதியின் அனுபவம் என்ன? அவனுக்குத் தன் சுய விருப்பப்படி நடக்கவோ, கிரியை செய்யவோ, இளைப்பாறவோ, புசிக்கவோ யாதொரு உரிமையும் இல்லை. அப். பவுல், தான் கிறிஸ்து வினிமித்தம் அடிக்கடி சிறைச்சாலைகளில் இருந்ததினால் மாத்திரமல்ல, அவருடைய அன்புக்கு அடிமையாய், ஒரு கைதியைப் போல, தன் வாழ்நாளெல்லாம் சுயசித்தம் ஏதும் செய்யக்கூடாதவராய், கிறிஸ்துவின் சித்தமே செய்யத் தன்னை அர்ப்பணித்துவிட்டமையால், தன்னைக் 'கிறிஸ்துவின் சிறைக்கைதி' என அழைத்துக்கொண்டார்.

கிறிஸ்துவின் சிறைக்கைதியாய் இருக்கும் அனுபவம், ஆவிக்குரிய ஜீவியத்தில் முதிர்ச்சியடைந்த அல்லது தேறின ஒரு தேவபிள்ளையின் அனுபவமாகும். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றது முதல் ஆவியானவரால் நடத்தப்பட்டுப் பயிற்சிக்கப்பட்டுவருகிற ஒருவர், நாளடைவில் இந்த ஆழமான அனுபவத்திற்குள் கடந்துவருகிறார். உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு பேதுருவை நோக்கி, "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்துதிரிந்தாய்; நீ முதிர்வயதுள்ள வனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" என்றார் (யோவான் 21 : 18). இதன் பொருள் யாது? நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் இளவயதுள்ளவர்களாய், வளர்ச்சியடையாத நிலையிலிருக்கும்போது, நாம் செய்ய நினைக்கிற பல நற்கிரியை களையும் நாமே திட்டமிட்டு, ஆவியானவரின் உதவியை நாடி, அவற்றைச் செய்து நிறைவேற்றுகிறோம். ஆனால், நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து, முதிர்ச்சியடைந்த நிலையை அடையும்போது, நாம் செய்ய வேண்டியவைகளையும், நாம் நடக்க வேண்டிய வழி களையும் நாம் அல்ல, ஆவியானவரே தீர்மானிக்கிறார்; அவரே நம்மை வழிநடத்தும் முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொள்கிறார். இவ்வாறு நம்மை அவரது கரத்தில் ஒப்படைத்துவிட்டு, அவருடைய சித்தத்தில் நாம் இளைப்பாறுவதே ஆவிக்குரிய ஜீவியத்தின் முதிர்ச்சியடைந்த நிலையாகும். அது, அவர் நம்மைக் கொண்டுபோகும்படி யோசிக்கும் இடத்திற்கு, அவர் விரும்புகிற பாதைகளினூடாக நம்மை நடத்திச் செல்லும்படி, நம் விசுவாசக் கப்பலின் சுக்கானை அவர் கரங்களில் விட்டுவிட்டு, நாம் அமர்ந்திருக்கும் அனுபவமாகும். கப்பல்கள், "அவை களை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத் திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்" என நாம் வாசிக்கிறோமல்லவா? (யாக். 3 : 4). அவ்வாறு நம் ஜீவியம் அவரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு நடத்தப்படும்போது, "சும்மாயிருப்பதே அவர்களுக்குப் பெலன்" என்று கூறப்பட்டுள்ளபடி (ஏசாயா 30 : 7), கர்த்தருக்குள் அமர்ந்திருந்து, அவருடைய சித்தத்தில் இளைப்பாறுவதே நம்முடைய பெலனாயிருக்கும். நாம் நாடின துறைமுகத்தில் அவரே நம்மைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார் (சங். 107 : 30).

எசேக்கியேல் முதலாம் அதிகாரத்தில், "ஆவி போகவேண்டு மென்றிருந்த எவ்விடத்துக்கும் அவைகள் போயின" என்று ஜீவன்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம். ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது.

சக்கரங்களின் ரூபமும் அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாப்போல் இருந்தது (எசே. 1 : 12, 16, 20). இந்த ஜீவன்கள், ஆவியானவரால் நடத்தப்படுகிற தேவபிள்ளைகளைக் குறிக்கிறது. உள்ளே யிருக்கிற சக்கரம், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிற சுயசித்தத்தை வெளிப்படுத்துகிறது. சக்கரத்துக்குள் சக்கரம் இருப்பது போல, தேவ பிள்ளைகளாகிய நம்முடைய சுயசித்தம், தேவசித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டதாய், அவருடைய சித்தத்திற்குள் அடங்கி நிற்க வேண்டும். அப்படியானால் மட்டுமே, ஆவியானவர் தம்முடைய விருப்பப்படி நம்மை வழிநடத்த இயலும்.

ஒரு தேவபிள்ளை தன் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தி லேயே பரிசுத்த ஆவியானவரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு நடத்தப் படுகிற நிலையை அடைந்துகொள்ளுகிறதில்லை. ஆவியானவரோடு பழகி, அவருடைய மனதை விளங்கிக்கொண்ட ஒருவன் மாத்திரமே, அவர் தன்னை நடத்தும்படி அவருடைய் கரங்களில் நிபந்தனையின்றி முற்றிலும் ஒப்புக்கொடுத்துவிட்டு, இவ்விதம் அமர்ந்திருக்க இயலும். இதையே, "வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்ட மில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" என நமதாண்டவர் குறிப்பிடுகிறார். இங்கு, 'வேறொருவன்' என்பது பரிசுத்தஆவியான வரையும், 'உனக்கு இஷ்டமில்லாத இடம்' என்பது சுயசித்தத்திற்கும் சுயவிருப்பங்களுக்கும் மாறான தேவனுடைய வழிகளையும் குறிக் கின்றன. "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 55 : 8). அவருடைய வழிகளில் அவர் நம்மை நடத்தும்படி நாம் அவருக்கு முற்றிலும் இணங்கிக்கொடுப்போமாயின், அவர் நம்மைப் பத்திரமாய் வழிநடத்திச் சென்று, க்ஷேமமாய்ப் பரமராஜ்யத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார். இப்பாதையில் அவரோடு இசைந்திருப்பது, வளர்ச்சியடையாத தேவபிள்ளைகளுக்குக் கடினமானதே. நம்மை நடத்தும்படி நம்மில் வந்து தங்கியிருக்கும் ஆவியானவரை நாம் முறுமுறுப்பினாலும் கேள்விகளி னாலும் எதிர்த்துநிற்பதினாலும் விசனப்படுத்தாமல், அவரை முழுவதுமாக விசுவாசித்து ஒப்புக்கொடுப்போமாக. ஒரு குருடன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிறவனை முற்றிலும் நம்பி, அவன் கரங்களில் தன்னைக் கையளித்துவிட்டு, எவ்விதக் கேள்வியுமின்றி, நன்றியுடன் அவனைப் பின்பற்றுவது போல, நாம் திசைகெட்டுப் போகாதவாறு நம்மைச் செவ்வையான வழிகளில் நடத்தும்படி மனமுவந்து முன்வந்திருக்கிற ஆவியானவருக்குச் சந்தோஷத்துடன் நம்மைக் கையளித்துவிட்டு, அவரையும் அவர் நடத்தும் வழிகளையும் சந்தேகியாமல், அவரோடு சமாதானமாய் வழிநடப்போமாக. அப்போது, "குருடரை அவர்கள்

அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்" என்று ரைத்தவர் நம்மை ஆழங்களிலும் இடறாதபடிக்கு ஜெயத்துடன் நடக்கப் பண்ணி, அவரில் இளைப்பாறச் செய்வார் (ஏசாயா 42 : 16 ; 63 : 13, 14). மாறாக, நாமோ வழியில் அவரோடு வாதாடிக்கொண்டும், அவரிடம் ஓயாமல் கேள்வி கேட்டுக்கொண்டும், முறுமுறுத்துக்கொண்டும் நடப்போ மாகில், அவருக்கு நம்மை நடத்துவது வருத்தமாயிருக்கும்; தாம் நினைத்த இடத்திற்கு நம்மைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதும் அவருக்குக் கடினமாயிருக்கும். அப். பவுல் தன்னை ஒரு சிறைக்கைதியைப் போல பரிசுத்த ஆவியானவருக்குக் கையளித்திருந்தமையால் அவரை நடத்துவது ஆவியானவருக்கு எளிதாயிருந்தது. சுவிசேஷத்தை அறிவிக்கும்படி சில இடங்களுக்குச் செல்ல அப். பவுல் விரும்பியும், ஆவியானவர் அவரை அனுமதிக்கவில்லை (அப். 16 : 6, 7). என்றாலும், எல்லாவற்றுக்கும் அவர் தன்னை ஒப்புக்கொடுத்து, அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிந்திருந்தார். கட்டுகளும் உபத்திரவங்களும் அவருக்கு வைக்கப் பட்டிருக்கிறதென்று பரிசுத்தஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவித்துக் கொண்டிருந்தார் (அப். 20 : 23). முற்றிலும் ஒப்புக்கொடுக்கப்பட்ட பாத்திர மாயிருந்த அவரை ஆவியானவர் தொடர்ந்து வழிநடத்தினார்.

**'என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவரும்':**

அபாயம் நிறைந்ததொரு கப்பற்பயணத்தில், கைதிகளில் ஒருவராய்க் கொண்டுசெல்லப்பட்ட அப். பவுல், கடும் புயலில் கப்பல் அலைவு பட்டு, அனைவரும் கலங்கித் தவித்த வேளையில், அவர்கள் மத்தியில் நின்று அவர்களைத் தைரியப்படுத்தி, "என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரி யிலே என்னிடத்தில் வந்துநின்று : பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். ... என்றான்" என கூறுகிறார் (அப். 27 : 23, 24). 'என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவன்' என்று அவர் கூறுவதிலிருந்து, அவர் எவ்வளவாகத் தேவனால் ஆண்டு நடத்தப் பட்டு, அவரது உண்மையுள்ள சேவகனாய்த் திகழ்ந்திருக்கிறார் என்பது புலனாகிறது. அவரை ஆட்கொண்ட தேவன், அதுவரை அவர் கடந்து வந்த எல்லாப் பாதைகளிலும் அவரோடிருந்து அவரை வழி நடத்திவந்தது மாத்திரமல்ல, அக்கடும்புயலிலும் தம் தாசனாகிய அவரி டத்தில் வந்து, அவரைத் தைரியப்படுத்தி, அவரைப் பற்றிய தமது திட்டத்தை மேலும் அவருக்கு வெளிப்படுத்துமளவிற்கு அவர் தன்

ஆண்டவருக்கு உத்தம சேவகனாய், அவரது அன்பின் அடிமையாய் விளங்கியிருக்கிறார் ! தம் உத்தம சேவகருக்குத் தம் திட்டத்தை வெளிப் படுத்துவதில் தேவன் எப்போதும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்.

**சிறை நிருபங்கள்:**

அப். பவுல் முதல் முறை ரோமாபுரியில் கைதியாயிருந்தபோது, அங்கிருந்து எபேசியருக்கும் பிலிப்பியருக்கும் கொலோசெயருக்கும் பிலேமோனுக்கும் நிருபங்களை எழுதினார். இவை, 'சிறை நிருபங்கள்' என்று பொதுவாக அறியப்படுகின்றன. "கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவ னாகிய நான்" (எபே. 4 : 1) என்றும், "சகோதரரே, எனக்குச் சம்பவித்த வைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன். அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளிய ரங்கமாகி" (பிலி. 1 : 12, 13) என்றும், "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத் திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ. 1 : 24) என்றும், "என்னோடே கூடக் காவலிலிருக்கிற அரிஸ்தர்க்கு" (கொலோ. 4 : 10) என்றும், "கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், ... எழுதுகிற தாவது", "என்னோடேகூடக் காவலில் வைக்கப்பட்டிருக்கிற எப்பாப் பிராவும், ... வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (பிலே. 1, 2, 23, 24) என்றும் இந்நிருபங்களில் அவர் குறிப்பிடுகிறார்.

அப். பவுல் கிறிஸ்துவுக்காக எங்கும் சுற்றித் திரிந்து, வைராக்கியத் துடன் சுவிசேஷத்தை அறிவிக்கத் தீரா வாஞ்சை கொண்டிருந்தும், இத்தகைய சிறைவாசங்களைத் தேவன் அவரது வாழ்வில் அனுமதித்தார். "சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதி" என்று அவர் தன்னைக் குறிப்பிடுகிறார் (எபே. 6 : 19). "இந்தச் சுவிசேஷத்தி னிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக் கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை" என்றும் அவர் கூறுகிறார் (II தீமோ. 2 : 9). "நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக் கொள்ளுங்கள்" (கொலோ. 4 : 18) என்ற அவருடைய வார்த்தைகள் நம் இருதயத்தினுள் ஊடுருவிப் பாய்கின்றன. இவ்வளவாகக் கர்த்தரையும் சுவிசேஷத்தையும் நேசித்த அந்தத் தேவதாசனுக்குத் தேவன் இச்சிறை வாசங்களை அனுமதித்ததின் நோக்கம் என்ன? அவ்வேளைகளில், தான் விரும்பிய வண்ணம் ஊழியம் செய்ய அவருக்கு வாய்ப்புகள் கிடைக்கா மற்போனதினிமித்தம், அந்நாட்கள் ஓர் இழப்பு போல் அந்த அப்போஸ் தலனுக்குத் தோன்றியிருப்பினும், அந்நாட்களே தேவன் அவரைக்

கொண்டு மிகுதியான ஊழியங்களைச் செய்வித்த நாட்களாகும். ஆம்! அநேக நூற்றாண்டுகளுக்கு - பல கோடி மக்களுக்கு - பயனளிக்கும் பலனுள்ள ஒரு சேவையைத் தேவன் அந்நாட்களில் தம் தாசனைக் கொண்டு செய்வித்தார். முதல் நூற்றாண்டில் - சிறைச்சாலையின் இருண்ட அறைகளில் - பல இன்னல்களுக்கிடையே - எழுதப்பட்ட அவருடைய நிருபங்கள், இந்த நூற்றாண்டு வரை உலகெங்கும் பரவிப் பயன் தருகின்றன. அவை ஒரு சாதாரண மனிதனின் கடிதங்களாக அல்ல, ஒரு தேவதாசனின் அறிவுரைகளாகவும் அல்ல, ஜீவனுள்ள வேத வாக்கியங்களாகவே, தேவனின் மனதை வெளிப்படுத்தும் திருமறை எழுத்துக்களாகவே துலங்குகின்றன! கர்த்தரின் இரகசிய வருகை வரை அந்த ஜீவ வார்த்தைகள் மனுக்குலத்திற்கு நேர்வழிகாட்டும்! அந்த அப்போஸ்தலன் பல வருடங்களாகச் சுற்றித்திரிந்து செய்துவந்த ஊழியங்களினாலுண்டான பலனைக் காட்டிலும், மறைவில், தனிமையில், இன்னல்களுக்கிடையில், வசதியற்ற சிறைக்கூடங்களில் எழுதிய நிருபங்களே மிகுந்த பலனுள்ளவையாய் மாறிவிட்டன! தன் நிருபங்கள் இவ்வளவு பெருமளவில் பரவிப் பயன் தரும் என்று அந்த அப்போஸ்தலன் அன்று நினைத்திருக்கவில்லை. தேவனோ அவரைக்கொண்டு ஒரு நிரந்தரமான வேலையைச் செய்விக்கவே இச்சிறைவாசங்களை அவரது வாழ்வில் அனுமதித்திருந்தார்!

அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தேவவசனத்தினிமித்தமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிற்கு நாடுகடத்தப்பட்டார். மரங்களற்று, கற்பாறைகள் நிறைந்து, எரிமலைகள் சூழ்ந்த அச்சிறிய தீவில், அடிப்படைத் தேவைகளுமின்றி, ஆற்றித் தேற்ற எவருமின்றி, தன்னந்தனிமையாய் விடப்பட்டிருந்த அச்சீஷன், இவற்றையெல்லாம் பொருட்படுத்தாவிடினும், தன்னை ஆட்கொண்ட கிறிஸ்துவின் அன்பைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்க ஜனசமூகமற்ற அத்தீவில் வாய்ப்பில்லையே என ஏங்கித் தவித்திருந்திருக்கக் கூடும். எனினும் தேவன் அங்கு வைத்து அவருக்குப் பல புதைபொருள்களை வெளிப்படுத்தி, அவற்றை எழுதும்படி கற்பித்தார். இனிச் சம்பவிக்கும் காரியங்களை உலகிற்கு அறிவிக்கும் 'வெளிப்படுத்தின விசேஷம்' என்னும் அவரது தீர்க்கதரிசன புஸ்தகம், இன்றும் உலகையும் சபையையும் எச்சரிக்கும் கருவியாகத் துலங்குகிறது. வேதாகமத்தின் வேறு எந்தப் புத்தகத்திலும் வெளிப்படுத்தப்பட்டிராத பல மறைபொருள்களைத் தேவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்தத் தனிமையான தீவில் வைத்து மிக முக்கியமானதொரு ஊழியத்தைத் தம் அன்பின் சீஷன் மூலமாகத் தேவன் நிறைவேற்றினார்!

சில சமயங்களில் நாம் விரும்புகிறபடி கர்த்தருக்காக விறுவிறுப்புடன் கிரியை செய்யக்கூடாமல், கட்டப்பட்ட நிலையில் உள்ளது போல் நாம் உணரக் கூடும். கடந்த நூற்றாண்டுகளில் பல பரிசுத்தவான்களும் இப்பாதையில் கடந்து சென்றிருக்கின்றனர். 17 - ஆம் நூற்றாண்டில் ஜாண் பனியன் (John Bunyan) என்னும் ஓர் ஏழை மனிதனைத் தேவன் தமக்கென்று தெரிந்துகொண்டார். ஆரம்பக் கல்வி மாத்திரமே பயின்றிருந்த அவர் தன் ஆவியில் அனலுள்ளவராய், கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவந்த நாட்களில், அநேகர் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டவர்களாய் மனந்திரும்பினர். இங்கிலாந்தில் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த திருச்சபைகளில் அல்லாது, மற்ற இடங்களில் அவர் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தியதினிமித்தம் கைது செய்யப்பட்டு, பதினான்கு ஆண்டுகள் சிறைவாசம் செய்ய வேண்டியதாயிற்று. அவரது சிறைவாசத்தில் பிறந்ததே 'பரதேசியின் மோட்சப் பிரயாணம்' (Pilgrim's Progress) என்னும் உலகப் பிரசித்தி பெற்ற ஆவிக்குரிய நூல்! பரம் நோக்கிச் செல்லும் ஒரு மனிதனின் பாதைகளையும், அவற்றில் அவன் சந்திக்கும் பலவித சோதனைகளையும் அழகாகச் சித்திரிக்கும் இந்நூல், உலகம் முழுவதிலுமுள்ள அனைத்து முக்கியமான மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, பாரெங்கும் பரவிப் பலன் தருகிறது. உலகிலேயே, வேதாகமத்துக்கு அடுத்தபடியாகப் பெருமளவில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ள நூல் 'மோட்சப் பிரயாணம்' ஆகும். ஆம்! அப். பவுல், அப். யோவான், ஜாண் பனியன் போன்றோரின் சிறைவாசங்கள் வீணாய்ப்போய்விடவில்லை. அவர்கள் மரித்தும், இன்னும் பேசுகின்றனர்! அவர்களுக்கு அறிமுகமில்லாத திரள் கூட்டம் பேர் - பல மொழியினரும், பல தேசத்தவரும் இன்றும் அவர்களால் பயனடைகின்றனர்! அருமை நண்பனே! நீ கர்த்தருக்காகச் செய்ய விரும்புகிறவைகளைச் செய்யக் கூடாதவாறு பல தடைகள் எழும்பக் கூடும். என்றாலும், கர்த்தர் உன்னைக்கொண்டு செய்ய விரும்புகிறவைகளைத் தடை செய்ய ஒருவராலும் கூடாது. கர்த்தர் உனக்குச் சகாயராயிருப்பதால், பல தடைகள் மத்தியிலும் அது துளிர்த்துப் பலன் தரும் என்பதை நினைவிற்கொள்வாயாக.

### *அப். பவுலின் கடைசிச் சிறைவாசம்:*

அப். பவுலின் கடைசி நாட்களைக் குறித்துச் சரித்திரம் கீழ்க் கண்டவாறு கூறுகிறது: ரோமாபுரியில் வீட்டுக் கைதியாக வைக்கப்பட்டிருந்த அப். பவுல் (அப். 28 : 16, 30), மீண்டும் விடுதலை பெற்று ஐந்து வருடங்களாகப் பல தேசங்களிலும் சுற்றித் திரிந்து ஊழியம் செய்துவந்தார் (கி. பி. 63 - 67). பிற்பாடு கி. பி. 67 - இல் அவர் கொரிந்து

பட்டணத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது அலெக்சந்தர் என்பவனால் குற்றஞ்சாட்டப்பட்டு, அங்கே கைது செய்யப்பட்டு, ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது (II தீமோ. 4 : 14). ரோமாபுரியில் காப்பிடோலின் மலைச்சரிவிலுள்ள மேமர்டைன் சிறையின் (Mamertine Prison) நிலவறை ஒன்றில் அவர் அடைக்கப்பட்டார். இதற்கு முன் பலமுறை அவர் பல சிறைகளில் இருந்து, பின்பு விடுதலையாக்கப்பட்டு வெளியே வந்திருந்தபோதிலும், இம்முறை தான் வெளியே வருவதில்லை என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார் (வச. 6).

அந்நிலவறையில், அவர் வெளி உலகத்தோடு தொடர்புகொள்ளக் கூடியதாயிருந்த ஒரே வழி, அவர் அடைக்கப்பட்டிருந்த நிலவறையின் மேற்தளத்திலிருந்த பதினெட்டு அங்குல சமசதுரமான ஒரு துவாரம் மாத்திரமே. அவருக்குக் கொடுக்கப்பட்டவைகளும், அவரிடத்திலிருந்து அனுப்பப்பட்டவைகளும் அத்துவாரத்தின் வழியாகவே சென்றன. அவரைக் காண விழைந்தோரும் அத்துவாரம் வழியாகவே அவரோடு பேச அனுமதிக்கப்பட்டனர். கி. பி. 68 - இல் அவர் ரோம இராயனால் சிரச்சேதம்பண்ணப்பட்டார்.

அவர் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் இந்நில வறையில் வைத்து அவரால் எழுதப்பட்டு, அவ்வறையின் மேலிருந்த துவாரத்தின் வழியாக அனுப்பப்பட்டதாகும். அந்த அப்போஸ்தலனின் கடைசி நிருபம் அதுவே. பொதுவாக, ஒருவரின் கடைசி வார்த்தைகள் அவரால் நேசிக்கப்பட்டவர்களால் விலைமதிப்புள்ளவையாகக் கருதப் படும். அப். பவுல் தன்னுடைய ஜீவிய நாட்களின் கடைசிக் கட்டத்தில், விசுவாசத்தில் தன் உத்தம குமாரனுக்கு இக்கடிதத்தை எழுதியிருந்த போதிலும், அதில் அவர் அச்சிறையில் தனக்கு இழைக்கப்பட்ட இன்னல் களைக் குறித்து யாதொரு விதமான புகாரோ, தன் கஷ்டங்களின் விவரமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலை அவர் எதிர்க்கவுமில்லை; சந்தேகிக்கவுமில்லை. கர்த்தராகிய இயேசுவை வனாந்தரம் துவக்கிக் கொல்கொதா வரை நடத்திய ஆவி யானவர் (மத். 4 : 1 ; அப். 10 : 38, 39), இந்த உத்தம அப்போஸ்தலனையும் பல இருண்ட பாதைகளினூடே வழிநடத்தினார். தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், “ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்” என்ற தன் உத்தமமான இருதயத்தினின்று எழுந்த கேள்வியுடன் தன்னை அர்ப்பணித்தது முதல், சுகாதாரமற்ற இந்நிலவறை வரை தான் நடத்தப் பட்ட எல்லாப் பாதைகளிலும், அவரது இருதயம் தன்னை வழி நடத்திவந்த ‘ஆண்டவரோடு’ இசைந்தே இருந்தது. இவைகளுக்கப்பால் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் மேலேயே அவரது கண்கள் பதிக்கப்

பட்டிருந்தன (II தீமோ. 4 : 8). முடிவாக, தன் சிரசைத் துண்டிக்கப் போகும் நீரோ மன்னனின் பட்டயத்தை அல்ல, சற்று நேரத்தில் தன் சிரசில் சூட்டப்படவிருக்கும் நீதியின் கிரீடத்தையே தரிசித்தவராய், அப்பட்ட யத்தின் முன் தலைகுனிந்தார், தன் ஓட்டத்தை வெற்றியோடு முடித்த அப்பரிசுத்தவான் ! உண்மையில், அவர் தன் சிரசைத் துண்டிக்கும் ஒரு கொடூர மன்னனின் பட்டயத்தின் முன் அல்ல, இலக்கை வெற்றி கரமாய் எய்திய ஒரு பந்தயவீரனைப் போல, யுத்தக்களத்தில் வெற்றி பெற்றுத் திரும்பும் ஒரு போர்வீரனைப் போல, வெற்றிவாகை சூட்டப் படும்படி, தன்னை ஆட்கொண்டவரும், தான் சேவித்துவந்தவருமான மாமன்னரின் முன்பாகவே தன் சிரம் தாழ்த்தினார் ! கிறிஸ்துவின் அன்பு அந்த அளவுக்கு அவரை வென்றிருந்தது !

நண்பரே ! நாமும் நம்முடைய ஓட்டத்தின் இறுதி வரை அப். பவுலைப் போல கிறிஸ்துவின் அன்புக்கு அடிமைகளாய், நம்மை ஆட்கொண்டு நடத்த விரும்பும் தேவனுக்கு இணங்கி ஒப்புக் கொடுப்போமாக. அதினிமித்தம் நம்முடைய பாதை கடினமாய் இருப் பினும், முடிவோ வெற்றியாயும் மகிமையாயும் இருக்கும்! இந்த ஆழமான சத்தியத்தையே, நெகேமியா புதுப்பித்துக் கட்டிய 'காவல் வீட்டு வாசல்' நமக்கு நினைவூட்டுகிறது.

**காவல்வீட்டு வாசலைக் கட்டியவன்:**

"*பாலால்* (Palal) ... *காவல்வீட்டின் முற்றத்துக்கடுத்த ... கொம்மைக்கு எதிரேயும் இருக்கிறதைக் கட்டினான்*" (நெகே. 3 : 25).

காவல் வீட்டு வாசலையும் அதையடுத்த பகுதிகளையும் பழுது பார்த்துக் கட்டியவன் 'பாலால்' என்பவனாவான். '*பாலால்*' என்பதற்கு 'நீதி செலுத்துதல்' அல்லது 'ஒரு நியாயாதிபதி' என்று பொருள். ஒரு நியாயாதிபதியின் முக்கியப் பண்பு நீதியே. "சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி" என நாம் அழைக்கப்படுகிறோம் (ஏசாயா 26 : 2). "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என நமதாண்டவர் கூறியிருக்கிறார் (மத். 5 : 6). இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் நாம் தேவ நீதியைப் பெற்று, அதில் வளருகிறோம். நீதிமான்களைக் கர்த்தர் வழிநடத்துகிறார். "நீதிமான்களும் ஞானிகளும், தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கைவசமாயிருக் கிறார்கள்" (பிர. 9 : 1). இவ்விதம் கர்த்தரின் கரங்களில் அமர்ந்திருக்கிற நீதிமான்களைக் கர்த்தர் கரம்பிடித்து வழி நடத்துகிறார். சர்வவல்லமை யுள்ள தேவனால் ஒரு மனிதன் நடத்தப்படுவது என்பது விசேஷமான ஓர் அனுபவமாகும். எல்லாரையும் அவர் வழி நடத்துகிறதில்லை. கர்த்த

ருடைய கரங்களில் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிற நீதிமான்களை மட்டுமே அவர் முழு உரிமையுடனும் வழிநடத்த இயலும். தன் தகப்பனோடு நடந்துசெல்லும் ஒரு சிறு பிள்ளை தன்னை முற்றிலுமாய்த் தன் தகப்பனின் கரங்களில் கையளித்திருக்க, தகப்பன் முழுப் பொறுப்புடனும் அதைக் கரம் பிடித்து நடத்திச் செல்வதைப் போலவே, தேவனும் தமது கைவசமாயிருக்கும் தம் பிள்ளைகளைக் கவனமாய் நடத்துகிறார். 'அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் அவருடைய கையில் இருக்கிறார்கள்' (உபா. 33 : 3). அவர்களை அவர் போதித்து நடத்துகிறார். "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" என நாம் வாசிக்கிறோமே (நீதி. 21 : 1). பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிற நாம் தேவனுக்கு முன்பாக ராஜாக்களாயிருக்கிறோம் என்று திருவசனம் கூறுகிறது (வெளி. 1 : 6). நண்பனே ! கர்த்தர் தாம் விரும்புகிற எந்தப் பாதையிலும் உன்னை நடத்த, எத்திசையில் வேண்டுமானாலும் உன்னைத் திருப்ப, அவருக்கு முழுமையாக உன்னைக் கையளித் திருக்கிறாயா? அவர் உன்னைத் தமக்கு விருப்பமான இடங்களுக்குக் கொண்டுசெல்லும்படி உன் கைகளை அவருக்கு நீட்டுவாயாக (யோவான் 21 : 18). "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல வென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல வென்றும் அறிவேன்" என்று கூறிக்கொண்டு (எரே. 10 : 23), நீ அவ ருடைய வழிகளுக்கு உன்னை முற்றிலும் அர்ப்பணித்துவிடுவாயாக. இவ்வாறு அனுதினமும் கர்த்தரால் வழிநடத்தப்படும்படி, தங்கள் ஜீவிய காலம் முழுவதும் அவருடைய கைவசமாயிருக்கும் நீதிமான்களைக் கர்த்தர் அவர்களது வலது கரம் பிடித்துத் தாங்கி, தம்முடைய ஆலோ சனையின்படியே நடத்தி, முடிவிலே மகிமையில் ஏற்றுக்கொள்ளுவார் (சங். 73 : 23, 24). அல்லேலூயா!

## 10

# குதிரை வாசல்

## (HORSE GATE)

*"குதிரைவாசல் முதற்கொண்டு ஆசாரியர்கள் அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்"* (நெகே. 3 : 28).

குதிரைவாசல், அலங்கத்தின் கிழக்குப் பகுதியில், தேவாலயத் திற்குச் சற்று அருகாமையில் அமைந்திருந்தது (எரே. 31 : 40). அலங் கத்திலிருந்த இவ்வாசலின் வழியாகக் குதிரைகள் ராஜாவின் அரமனை வளாகத்திற்குள் கொண்டுவரப்படுவதும், அங்கிருந்து வெளியே கொண்டு செல்லப்படுவதும் வழக்கம். ராஜாவின் அரமனை வளாகத்திலும் குதிரை கள் பிரவேசிப்பதற்கென்று பிரத்தியேகமான ஒரு வாசல் இருந்தது (II நாளா. 23 : 15). அலங்கத்திலிருந்த குதிரை வாசல் தீக்கிரையானபடி யினால் அதையும் யூதா மனுஷர் பழுதுபார்த்துக் கட்டினார்கள். 'குதிரை வாசல்', தன் தேவனையே சார்ந்திருக்கிற ஒரு தேவபிள்ளைக்கு அவரால் உண்டாகிற ஜெயத்தைக் குறிக்கும். "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்" என்று திருவசனம் கூறுகிறது (நீதி. 21 : 31).

பூமியிலே போராட ஒவ்வொரு மனுஷனுக்கும் குறிக்கப்பட்ட ஒரு கால அளவு உண்டு. அதுவே அவனுடைய ஆயுசின் நாட்களாகும் (யோபு 7 : 1 ; 14 : 14). அந்நாட்களில் அவன் சத்துருவுக்கு விரோதமாக நல்ல போராட்டம் போராடி ஜெயம் பெற்றால், மறுமையில் முடிசூட்டப் படுவான். மாறாக, அவன் தேவனுக்கு எதிர்த்து நின்று, தன் காலங்களை வீணாக்கினால், முடிவில் நித்திய நியாயத்தீர்ப்பை அடைவான். ஆவிக் குரியவர்கள் தங்கள் ஜீவிய காலத்தில் போராட வேண்டிய ஒரு நல்ல போராட்டம் உண்டு. அப். பவுல் தன் ஜீவிய காலத்தின் முடிவில், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், ... இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்று, யுத்தத்தில் வென்று திரும்பும் ஒரு போர்க்குதிரையைப் போல வெற்றி முழக்க மிடுகிறார் ! (II தீமோ. 4 : 7, 8).

**நம் சத்துருக்களும் அவற்றை மேற்கொள்ளும் விதங்களும்:**

நாம் ஜெயங்கொண்டவர்களாகும்படி நமக்கு யுத்தங்கள் அவசியமே. யுத்தமின்றி ஜெயம் இல்லை. யோசுவா கானான் தேசம் முழுவதையும் யுத்தம்பண்ணிக் கைப்பற்றினான். அவன் நெடுநாட்களாய் அதின் ராஜாக்களெல்லாரோடும் யுத்தம்பண்ணினான். "யுத்தம்பண்ண இஸ்ரவேலுக்கு எதிராக வரும்படிக்கு, அவர்களுடைய இருதயம் கடினமானதும், ... அவர்களை அழித்துச் சங்காரம்பண்ணினதும் கர்த்தரால் வந்த காரியமாயிருந்தது" (யோசுவா 11 : 16 - 20). பிசாசு, பாவம், உலகம், மாம்சம், சுயம், மரணம் ஆகியவை ஒரு ஆவிக்குரிய மனுஷனுக்குச் சத்துருக்களாயிருக்கின்றன. அவனுடைய வாழ்க்கையில் இவை ஒவ்வொன்றும் அவனுக்கு விரோதமாய் வந்து யுத்தம் செய்கின்றன. என்றாலும், 'யோசுவாவின் தேவன்' அவனுடைய பட்சத்தில் நின்று, அவனுக்கு மகத்தான ஜெயமளிக்கிறார். இவ்விதம் பரலோக ராஜ்யத்தின் அனைத்து ஜெயங்களும், நாம் பலவந்தம்பண்ணி, போராடி சுதந்தரித்துக் கொள்ள வேண்டியவைகளே (மத். 11 : 12). யோசுவாவைப் போல் நாம் பலவிதமான சத்துருக்களோடு தொடர்ந்து யுத்தம்பண்ண வேண்டியிருப்பினும், நமது கடைசிச் சத்துருவாகிய மரணமும் ஜெயமாக விழுங்கப்படும் வரை சோர்ந்துபோகாமல் தேவஞானத்தைப் பெற்று யுத்தம்பண்ணுவோமாக. "நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு" என ஞானி கூறுகிறான் (நீதி. 20 : 18 ; 24 : 6). ஒரு நன்னாளில் நம்முடைய யுத்தங்களெல்லாம் ஓய்ந்து, தேசம் அமைதலாகும் (யோசுவா 11 : 23). அதுவே நாம் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாய், தேவசிங்காசனத்திற்குத் தகுதியாக்கப்பட்ட ஜெயங்கொண்ட ஆண்பிள்ளையாய் வெளிப்படும் நாளாகும். அது வரை நாம் நல்ல போராட்டம் போராடி ஜெயிக்க வேண்டியவைகளைக் குறித்து வேதாகமம் நமக்கு நல்கும் ஆலோசனைகளில் சிலவற்றை இங்கு காண்போம்.

(i) **பிசாசு** - புதிய எருசலேமையும் சீயோனையும் சுதந்தரிக்கும்படி அழைக்கப்பட்டவர்களுக்குப் பிசாசானவன் மகா விரோதியாயிருக்கிறான். தேவஜனங்களாகிய நமக்கு, "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்" போராட்டம் உண்டு (எபே. 6 : 12). இப்போராட்டத்தில் ஜெயம் பெறும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கம் நமக்குத் தேவை (வச. 13 - 18). இப்போராயுதங்களில் சில நம் தற்காப்புக்காகவும், மற்றவை எதிரியைத் தாக்கும்படியாகவும் தேவனால் நமக்கு நல்கப்பட்டிருக்கின்றன. இவ்விரு விதமான ஆயுதங்களுமே நாம் கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகராயிருப்பதற்கு இன்றியமையாதவையாகும்.

நல்ல போராட்டம் போராடும்படி விசுவாசமும் நல்மனச்சாட்சியும் அவசியம் என அப். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (I தீமோ. 1 : 18). மேலும், நாம் யுத்தம்பண்ணினாலும், நமக்கு அளிக்கப்பட்டிருக்கிற உபதேச சட்டத்தின்படி யுத்தம்பண்ணாவிடில் முடிசூட்டப்பட இயலாது (II தீமோ. 2 : 5). "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என அப்போஸ்தலனாகிய யாக்கோபு எழுதுகிறார் (யாக். 4 : 7). தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருந்துகொண்டு, விசுவாசமும் சுத்த மனச்சாட்சியு மின்றி, பிசாசானவனுக்கு எதிர்த்துநின்றால் ஒருக்காலும் நாம் அவனை மேற்கொள்ள இயலாது என இவ்வசனங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

நம் தனிப்பட்ட ஜீவியத்திற்கு விரோதமாக எப்போதும் கிரியை செய்கிற நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன், கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். அவனை ஜெயிக்கும்படி தெளிந்த புத்தியும், விசுவாசத்தில் உறுதியும், ஆவிக்குரிய விழிப்பும் அவசியம் என்று அப். பேதுரு எழுதுகிறார் (I பேதுரு 5 : 8, 9). பிசாசின் தந்திரங்களை அறிந்துகொள்ளும்படி நமக்குத் தெளிந்த புத்தி அல்லது பகுத்தறிதலின் ஆவி மிகவும் அவசியமாகும் (II கொரி. 2 : 11).

"மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" என ஜெயங் கொண்டவர்களான ஒரு கூட்டத்தாரைக் குறித்து நாம் வாசிக்கிறோம் (வெளி. 12 : 11). கல்வாரியில் கர்த்தராகிய இயேசு நமக்காக நிறைவேற்றி முடித்த கிரியையை - நமக்காகச் சத்துருவின் தலையை நசுக்கி, வெற்றி சிறந்த ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தை - நாம் விசுவாசித்து அறிக்கை செய்யும்போது, அந்த ஜெயத்தை நாம் சொந்தமாக்கிக்கொள்கிறோம். மேலும், பரிசுத்த ஜீவியமும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயமும், துதித்தலும் சத்துருவைக் கீழ்ப்படுத்த நமக்கு இன்றியமையாதவை யாயிருக்கின்றன - "ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர் களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப் பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்" (சங். 149 : 6 - 9).

ஒரு ஆவிக்குரிய தேவபிள்ளை தன் தனிப்பட்ட ஜீவியத்தில் பிசாசின் தந்திரங்களோடு மட்டுமல்ல, தன் ஆவிக்குரிய ஜீவியத்திற்குத் தடையாயிருக்கிற மற்ற அனைத்துச் சத்துருக்களோடும் போராடி ஜெயம் பெற வேண்டும். இவை அனைத்தையும் வென்றவர்களே தங்கள் வாழ்க்கையின் முடிவில் அப். பவுலைப் போல, "நல்ல போராட்டத்தைப் போராடினேன்" என தைரியமாகக் கூற இயலும்.

(ii) **பாவம்** - "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே" என எபிரெய நிருபக்காரன் அச்சபையாரைக் கேட்கிறார் (எபி. 12 : 4). நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்போமானால் பாவம் நம்மை மேற்கொள்ள மாட்டாது என்று திருவசனம் கூறுகிறது (ரோமர் 6 : 14). "அவரில் நிலைத் திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை" (I யோவான் 3 : 6); "அவ ருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக் கிறான்" (வச. 24). மேலும், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்" (வச. 9) என அப். யோவான் எழுதுகிறார்.

(iii) **உலகம்** - நாம் தேவனால் பிறந்தவர்களாயிருந்து, விசுவாசத் தின் மூலம் உலகத்தையும் அதன் ஆசாபாசங்களையும் ஜெயிக்க வேண்டும். "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (I யோவான் 5 : 4). தேவனால் பிறத்தலில், பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு, தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகிய மூன்று அனு பவங்களும் அடங்கும். நாம் உலகத்தை ஜெயிக்கும்படி, நம்முடைய மறுபடியும் பிறத்தலும், ஜலத்தினால் பிறத்தலும், ஆவியினால் பிறத்தலும் வேதவசனங்களின்படி சரியானதாயிருக்க வேண்டும் (யோவான் 3 : 3, 5). பிறவியிலேயே அங்கவீனமுள்ள ஒருவன் நல்லதோர் போர் வீரனாக மாற இயலுமோ? ஒரு பிள்ளையின் ஆரம்பக் கல்வியும் ஒரு கட்டடத் தின் அஸ்திபாரமும் சரியாக இருக்க வேண்டியது எவ்வளவு இன்றியமை யாததோ, அவ்வாறே நம்முடைய ஆவிக்குரிய பிறப்பும் சரியானதாய் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நம் ஆவிக்குரிய பிறப்பு சரியானதாயிருந்தால், நாம், "உலகம் எனக்குச் சிலுவையிலறையுண் டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" (கலா. 6 : 14) என்ற உறுதியான தீர்மானமுள்ளவர்களாயிருந்து, விசுவாசத்தினால் உலகத்தை ஜெயிப்போம்.

(iv) **மாம்சம்** - "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" (கலா. 5 : 16, 17) என்றும், "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (வச. 24) என்றும், "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (ரோமர் 8 : 13) என்றும் அப். பவுல் எழுதுகிறார். இவ் வசனங்களின் மூலமாக, நாம் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுவதின் மூலமாக மாம்சத்தை மேற்கொள்ளலாம் என நாம் விளங்கிக்கொள்கிறோம்.

(v) **சுயம்** - ஒரு சர்வாங்க தகனபலியில், பலிப் பொருள் அக்கினி யினால் சுட்டெரிக்கப்படுவது போல, பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்த மாக்குதலின் கிரியைக்கு நம்மை அனுதினமும் ஒப்புக்கொடுப்பதின் மூலமாக, நம்முடைய சுயசித்தத்திற்கும், விருப்பங்களுக்கும், திட்டங் களுக்கும், வழிகளுக்கும் நாம் மரிக்கிறோம். அப்போது, "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்பது நம் அனுபவ மாகிறது (கலா. 2 : 20). இதனையே அப். பவுல், "நான் அநுதினமும் சாகிறேன்" என்று குறிப்பிடுகிறார் (I கொரி. 15 : 31). இவ்விதமாகத் தங்கள் சுயத்திற்கு அனுதினமும் மரிக்கிறவர்களால் மாத்திரமே பூரணமான தேவசித்தத்தைச் செய்து முடிக்க இயலும்.

(vi) **மரணம்** - முடிவாக, "பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்" ஆகும் (I கொரி. 15 : 26). "மரணமே ! உன் கூர் எங்கே ? பாதாளமே ! உன் ஜெயம் எங்கே ?... நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என நாம் வாசிக் கிறோம் (வச. 55 - 57). மரணமானது ஜீவனாலே விழுங்கப்படும் வரைக்கும் நாம் இந்த மாம்ச சரீரத்தில் இருக்க வேண்டியது அவசியமே. முடிவிலே, அழிவுள்ளதாகிய இந்தச் சரீரம் அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இந்தச் சரீரம் சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ள வார்த்தை நிறை வேறும் (I கொரி. 15 : 54 ; II கொரி. 5 : 4).

"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" என்று எழுதப்பட் டுள்ளபடி (ரோமர் 8 : 37), மேற்கூறப்பட்டுள்ள அனைத்தையும் ஜெயித்த வர்கள் மாத்திரமே முற்றிலும் ஜெயங்கொண்டவர்களின் கூட்டத்தில் காணப்படுவர். நம்மில் அன்புகூருகிறவரே நம்மைச் சகலத்தின்மேலும் வெற்றிசிறக்கச் செய்கிறார்.

மேலும், நாம் எதற்காகப் போராட வேண்டும் என்பதையும் வேதாகமம் நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது. சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காக நாம் பரிசுத்தவான்களோடு சேர்ந்து போராட வேண்டும் (பிலி. 1 : 27). இந்நாட்களில் கிறிஸ்தவ உலகில் பலவிதமான கலப்பான உபதேசங்கள் நுழைந்திருக்கின்றன. ஆதி நூற்றாண்டிலும் இப்பிரச்சினை இருந்துவந்தது. எபேசு சபையார் கள்ள அப்போஸ்தலரைப் பகுத்தறிந்து, அவர்களை விட்டு வேறுபிரிந்ததாகவும், தவறான போதனைகளுக்கு எதிர்த்துநின்றதாகவும் ஆவியானவர் அவர்களைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார் (வெளி. 2 : 2, 6). பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக (உபதேசத்திற்காக) நாம் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய யூதா எழுதுகிறார் (யூதா 3). அருமையானவர்களே ! நாம் அழிந்துபோகிற இம்மைக்குரிய பொருட்கள், பதவிகள், உயர்வுகள், புகழ் போன்றவற்றிற்காக வீணாகப் போராடிக்கொண்டிராமல், நம்முடைய நித்திய சுதந்தரத்திற்காக நல்ல போராட்டம் போராடுவோமாக.

### பார்வோனின் இரதக் குதிரைகள்:

மணவாளன் தம் மணவாட்டியைப் பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகளின் பவுஞ்சுக்கு ஒப்பிடுகிறார்: “என் பிரியமே ! பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன்” (உன். 1 : 9). முற்காலங்களில் எகிப்தின் குதிரைகள் மிகவும் விசேஷித்தவையாகக் கருதப்பட்டன. அவைகளிலும், பார்வோனின் இரதத்திற்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட குதிரைகள் தூய்மையான மரபைச் சார்ந்த, கலப்பற்ற, நல்ல ஜாதிக் குதிரைகளாயிருந்தன. அவை இரதத்தில் பூட்டப்படுவதற்கு மிகப் பொருத்தமான அளவுள்ளவையாயும், இணங்கிக் கற்றுக்கொள்ளக்கூடிய தன்மையுள்ளவையாயும் இருந்தன. இரதத்தை நடத்துபவனின் சித்தமேயன்றி, வேறொன்றையும் அவை நிறைவேற்ற அறியா. அவைகளின் ஒரே நோக்கம் ராஜாவைச் சுமந்து செல்வதே. பரிகளின் பவுஞ்சு, தேவபிள்ளைகளுக்கிருக்க வேண்டிய ஐக்கியத்தையும் ஏக சிந்தையையும் குறிக்கிறது. நாம் நம்மை நடத்துகிற ஆவியானவரின் சித்தம் மாத்திரம் செய்து, எங்கு சென்றாலும் நம் ராஜாதி ராஜாவைச் சுமந்து செல்லுகிறவர்களாயிருக்க வேண்டும். அவர் நம்மோடு இருப்பதே நம் ஜெயத்தின் இரகசியம் ஆகும்.

### போர்க் குதிரையின் சிறப்பு:

முன்னாட்களில் ராஜாக்கள் யுத்தத்திற்கென்று முக்கியமாகக் குதிரைகளையே உபயோகித்துவந்தனர். அவை இரதங்களில் பூட்டப்

பட்டு, ராஜாக்களைப் போர்க்களத்திற்குச் சுமந்து செல்வது வழக்கம். அவை போர்க்குதிரைகள் என அழைக்கப்பட்டன. குதிரைகளின் மேல் சவாரி செய்து யுத்தம்பண்ணும் குதிரை வீரர்களும் அந்நாட்களில் இருந்தனர்.

ஒரு போர்க்குதிரையின் சிறப்பைக் குறித்துத் தேவன் யோபுக்கு வருணிக்கிறார்: "குதிரைக்கு நீ வீரியத்தைக் கொடுத்தாயோ ? அதின் தொண்டையில் குமுறலை வைத்தாயோ ? ... அது தரையிலே தாளடித்து, தன் பலத்தில் களித்து, ஆயுதங்களைத் தரித்தவருக்கு எதிராகப் புறப்படும். அது கலங்காமலும், பட்டயத்துக்குப் பின்வாங்காமலுமிருந்து, பயப்படுதலை அலட்சியம்பண்ணும். அம்பறாத்தூணியும், மின்னுகிற ஈட்டியும், கேடகமும் அதின்மேல் கலகலக்கும்போது, கர்வமும் மூர்க்கமுங் கொண்டு தரையை விழுங்கிவிடுகிறதுபோல் அநுமானித்து, எக்காளத் தின் தொனிக்கு அஞ்சாமல் பாயும். எக்காளம் தொனிக்கும்போது அது நிகியென்று கனைக்கும்; யுத்தத்தையும், படைத்தலைவரின் ஆர்ப்பரிப்பை யும், சேனைகளின் ஆரவாரத்தையும் தூரத்திலிருந்து மோப்பம் பிடிக்கும்" (யோபு 39 : 19, 21 - 25).

ஒரு போர்க்குதிரை பயமறியாது. யுத்த நாளுக்காக அது ஆவலுடனும் வீரியத்துடனும் எதிர்நோக்கிக் காத்திருக்கும். எக்காள சத்தம் கேட்கும்போதே, யுத்தம்பண்ண தனக்குச் சமயம் வாய்த்ததை எண்ணி, தூரத்திலிருந்தே யுத்தத்தின் அறிகுறிகளைப் பகுத்தறிந்து, அது ஆயத்தமாகக் காத்திருக்கும். சத்துருவின் பட்டயம், அம்பு போன்ற ஆயுதங்களுக்கு அது கொஞ்சமும் அஞ்சுவதில்லை. அதற்கு இருக்கிற வீரியமும் பலமும் பயமின்மையும் துணிவும் - அனைத்துமே தேவனால் அதற்கு ஈவாக அளிக்கப்பட்டவையே. அதனால்தான் ஆண்டவர், "குதிரைக்கு நீ வீரியத்தைக் கொடுத்தாயோ?" என யோபைக் கேட்கிறார். அதன் அர்த்தம், 'நானல்லவா அதற்கு வீரியத்தையும் மற்ற அனைத்தை யும் அளித்திருக்கிறேன்' என்பதே. ஒரு போர்க்குதிரையின் ஜெயம், அதன்மேல் வீற்றிருக்கிற ராஜாவினாலேயே உண்டாயிருக்கிறது. யுத்தக் களத்தில் தன்மேல் வீற்றிருந்து தன்னை நடத்துகிற ராஜாவையே ஒரு போர்க்குதிரை சார்ந்துகொள்வது போல, ஒரு தேவபிள்ளையும் தன்னை நடத்துகிற ராஜாதி ராஜாவாகிய தேவனையே சார்ந்து தன் யுத்தங் களிலெல்லாம் ஜெயம் பெற வேண்டியவனாயிருக்கிறான். "உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" என்பதே அவனது அறிக்கையாயிருக்க வேண்டும் (சங். 18 : 29). "தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்" என்று கூறி, அவன் தன்

ஜெயத்திற்காக அவரையே முற்றிலும் சார்ந்துகொள்ள வேண்டும் (சங். 60 : 12). தன்னைப் பெலத்தினால் இடைகட்டுகிறவரும், எப்பொழுதும் எல்லா இடங்களிலேயும் வெற்றி சிறக்கச் செய்கிறவருமாகிய தேவனில் மாத்திரமே அவன் மேன்மை பாராட்ட வேண்டும். தன்னில்தான் மேன்மை பாராட்ட அவனுக்கு ஒன்றுமே இல்லை. அவனுடைய அனைத்து ஜெயங்களின் மகிமையும் கனமும் கீர்த்தியும் புகழ்ச்சியும் 'ஜெயங் கொடுக்கிற' தேவனையே சாரும் (I கொரி. 15 : 57 ; II கொரி. 2 : 14). நண்பனே, சத்துவமற்ற உனக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணி, உன்னை ஜெயங்கொள்ளச் செய்கிற உன் தேவனையே சார்ந்து நீ முன்செல்வாயாக.

**ஜெயத்திற்கான வழி:**

ஒரு குதிரைக்கு எவ்வளவுதான் வீரியமும் பெலனும் இருப்பினும், அது பயனுள்ள கிரியைகளுக்கென்று ஒருவரால் பழக்கப்பட்டு, நடத்தப்படாவிட்டால், அதின் பெலனும் வீரியமும் வியர்த்தமே. பரலோகம் திறந்திருக்க, அப். யோவான் கண்ட ஒரு காட்சியில், அவர் ஒரு வெள்ளைக் குதிரையையும் அதின்மேல் ஏறியிருந்தவரையும், தான் கண்டதாக எழுதுகிறார் (வெளி. 19 : 11 - 16). அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறவராயிருந்தார். 'அநேக கிரீடங்கள்', அவர் சகலத்தையும் ஜெயித்தவர் என்பதை வெளிப்படுத்துகிறது. சகலத்தையும் ஜெயித்த ராஜாதி ராஜாவை, கர்த்தாதி கர்த்தரைச் சுமந்து செல்வதே இக்குதிரையின் மேன்மையும், அதின் ஜெயத்தின் இரகசியமுமாகும். தேவனுடைய இராணுவத்தின் போர்க்குதிரைகள் என அழைக்கப்படும் நாம் ஜெயங் கொள்ள வேண்டுமாயின், நாம் யாரால் நடத்தப்படுகிறோம் என்பதைக் குறித்து அதிகக் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியமாகும். ஒரு மனிதன் தன்னுடைய சுயசித்தம், மனுஷ ஆலோசனைகள், பிசாசின் விருப்பங்கள், தேவசித்தம் போன்ற பலவற்றால் நடத்தப்படக் கூடும். இவற்றுள், தேவசித்தத்தின்படி, தேவனால் நடத்தப்படுகிறவர்கள் மாத்திரமே பாதுகாப்புடனும் ஜெயத்துடனும் முன்னேற இயலும்.

நண்பனே, நீ எதினால் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாய் ? உன் மனதும் மாம்சமும் விரும்பினவைகளைச் செய்து, உன் சுய வழிகளில் நடக்கிறாயா ? அப்படியானால், யோனாவையும் லோத்தையும் நினைத்துக் கொள். அவர்கள் தங்கள் சுயவழிகளைத் தெரிந்துகொண்டதினிமித்தம் பட்ட பாடுகளை நாம் அறிவோமே (யோனா 1 : 2 - 4 ; ஆதி. 13 : 11 ; 19 : 18, 30). தேவன் யோனாவின் மேல் இரக்கம் வைத்தபடியினால், அவன் மீனின் வயிற்றிலிருந்துகொண்டாவது மனந்திரும்பி, தேவசித்தம் செய்ய

அவனுக்கு மீண்டும் ஒரு தருணமளித்தார். ஆனால், கடைசி வரை தன் சுய வழிகளிலேயே நடந்த லோத்தோ தன் ஜீவியத்தில் தோல்வியுற்றான்.

நீ தேவனின் ஆலோசனைகளைத் தள்ளி, மனுஷரின் ஆலோசனைகளுக்குச் செவிகொடுத்து, மனுஷரைப் பிரியப்படுத்தி ஜீவித்துக் கொண்டிருக்கிறாயா ? ரெகொபெயாமையும், யூதாவிலிருந்து பெத்தேலுக்குச் சென்ற தேவ மனுஷனையும் நினைத்துக்கொள். சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம், தன் தகப்பனைப் போல, ஜனங்களை நடத்துவதற்குத் தேவையான ஞானத்தைக் கர்த்தரிடத்தில் கேளாமல், முதியோர் மூலமாய்க் கர்த்தர் தந்த ஆலோசனையையும் தள்ளிவிட்டு, தன்னோடு வளர்ந்த வாலிபரிடத்தில் ஆலோசனை கேட்டு, அதன்படி நடந்தமையால் அவனுடைய ராஜ்யம் பிரிந்துபோயிற்று (I இராஜா. 12 : 13, 16). யூதாவிலிருந்து பெத்தேலுக்குச் சென்ற தேவமனுஷன், தேவன் தன்னோடு நேரடியாகப் பேசியிருந்தும், ஒரு மனுஷனின் பொய்யான வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, தேவசித்தத்தினின்று வழி தவறியமையால், வழியிலே சிங்கத்துக்கு இரையாகி மாண்டான் (I இராஜா. 13 : 24 - 26).

நீ பிசாசானவனின் இச்சைகளின்படி செய்ய உன்னை அவனுடைய விருப்பத்துக்கு விற்றுப்போட்டிருக்கிறாயா ? சர்ப்பத்தின் வஞ்சனையான வார்த்தைகளுக்குச் செவிகொடுத்த ஏவாளையும், சாத்தானால் ஏவப்பட்டு, இஸ்ரவேல் ஜனங்களைத் தொகையிட முற்பட்ட தாவீதையும் நினைத்துக்கொள். ஏவாள், தான் வஞ்சிக்கப்பட்டதுமல்லாமல், மனுக்குலம் அனைத்திற்கும் பெரும் நஷ்டத்தை வருவித்துவிட்டாள் ! எப்போதும் தேவசித்தம் செய்துவந்த தாவீது, அந்தச் சந்தர்ப்பத்தில் இழைத்த தவற்றினிமித்தம் தன் தேசத்து மக்களில் எழுபதினாயிரம் பேர் மாண்டு போகக் காரணமானான் (I நாளா. 21 : 1, 14).

தேவபிள்ளையே, உன்னைக் குறித்த தேவனுடைய தயவுள்ள சித்தத்தைப் பகுத்தறிந்து, அனுதினமும் அதை நீ முழுமையாகச் செய்து நிறைவேற்றுகிறாயா? நாம் ஜெயங்கொண்டவர்களாகும்படி, ஒவ்வொரு நாளும் தேவ ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, நற்கிரியைகளைச் செய்ய அவரால் பயிற்சிக்கப்பட வேண்டும். "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" என திருவசனம் கூறுகிறது (ரோமர் 8 : 14). "என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என தாவீது கூறுகிறான் (சங். 144 : 1). "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், ... உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்து

வாராக" என்பது அவனது விண்ணப்பமாயிருந்தது (சங். 143 : 10). "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" என ஆசாப் நம்பிக்கையுடன் அறிக்கையிடுகிறான் (சங். 73 : 24). ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்களின் முடிவு ஜெயமும் மகிமையுமாயிருக்கும்.

**ஆவியானவரால் நடத்தப்படுதல் :**

ஆவியானவரால் நடத்தப்பட்டு, பிதாவின் சித்தத்தைத் தம் ஜீவிய நாட்களில் நிறைவேற்றி முடித்த நமதருமை ஆண்டவராகிய இயேசுவும், அவர்தம் உத்தம ஊழியனாகிய அப். பவுலும் நமக்குச் சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ்கின்றனர்.

**கர்த்தராகிய இயேசு:**

"தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்" என்ற அறிக்கையுடன் இவ்வுலகிற்கு வந்த நம் இரட்சகர், கல்வாரிச் சிலுவையில் "எல்லாம் முடிந்தது" என்றுரைத்துத் தம் தலையைச் சாய்க்கும் வரை தேவசித்தமே செய்துவந்தார். அவர், தாம் சுயமாக ஒன்றும் செய்யவில்லை என்றும், சுயமாக வரவில்லை என்றும், சுயமாக ஒன்றும் பேசவில்லை என்றும், தம்மைக் குறித்துக் கூறியிருக்கிறார் (யோவான் 5 : 30 ; 7 : 28 ; 12 : 49). அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறினபோது, தேவ ஆவியானவர் புறாவைப் போல் அவர் மீது இறங்கினார். அது முதல் அவர் இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களெல்லாம் ஆவியானவரே அவரை வழிநடத்தினார். பிதாவாகிய தேவனிடத்திலிருந்து 'நேசகுமாரன்' என சாட்சி பெற்ற கர்த்தராகிய இயேசுவின் மேல் புறாவைப் போல் வந்தமர்ந்த பரிசுத்த ஆவியானவர், முதலாவதாக அவரை மறுரூப மலைக்கோ, அற்புத சுகமளிக்கும் ஊழிய ஸ்தலங்களுக்கோ கொண்டுசெல்லவில்லை. மாறாக, அவர் "பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்"! (மத். 4 : 1 ; மாற்கு 1 : 12). அச்சோதனைகளில் ஜெயம்பெற்ற பின்பு அவர் ஆவியானவருடைய பலத்தினாலே, அவருடைய வழிநடத்துதலின்படியே கலிலேயாவுக்குப் போனார் (லூக்கா 4 : 14). ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இருட்டோடே எழுந்து, வனாந்தரமான ஓரிடத்திற்குச் சென்று, தனிமையாகப் பிதாவின் சமுகத்தில் காத்திருந்து, அவர்தம் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதில் அவர் அதிகக் கவனமுள்ளவராயிருந்தார். சுயமாகக் கிரியை செய்யக்கூடிய வல்லமையும் அதிகாரமும் தேவகுமாரனாகிய அவருக்கிருந்தபோதிலும், அவர் தாமாக எதையும்

தம் விருப்பப்படி செய்யவில்லை. கானாவூர் கலியாணத்தில் திராட்சரசம் இல்லை என அவருக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர் உடனடியாகச் செயல்படத் துணியவில்லை. "என் வேளை இன்னும் வரவில்லை" எனக் கூறி (யோவான் 2 : 4), பிதாவின் குறித்த வேளை வரும்வரை, அல்லது பிதாவினிடத்திலிருந்து உத்தரவு வெளிப்படும் வரை அவர் காத்திருந்தார். அதுபோல, தாம் சிநேகித்த லாசரு வியாதியாயிருக்கிறான் என்று கேள்விப்பட்டதும், உடனடியாக அங்கு விரைந்து செல்லும்படி அவர் தாமாகத் திட்டமிடவில்லை. பிதாவின் வேளை வரும் வரை அவர் காத்திருந்தார். லாசரு மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, நான்கு நாட்களான பிற்பாடுதான், அங்கு செல்லும்படி பிதாவினிடத்திலிருந்து அவருக்கு உத்தரவு பிறந்தது போலும்! அப்படியே அவர் பிதா குறித்திருந்த வேளையில் அங்கு சென்று, பிதாவினால் தமக்கு நியமிக்கப்பட்டிருந்த கிரியையைச் செய்து முடித்தார். ஏரோது அவரைக் கொலைசெய்ய மனதாயிருக்கிறான் என அவருக்கு அறிவிக்கப்பட்டபோது, உடனடியாக அவர் அவ்விடத்திலிருந்து ஓடித் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. "நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ள வர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றாம் நாளில் நிறைவடைவேன். இன்றைக்கும் நாளைக்கும் மறுநாளைக்கும் நான் நடமாடவேண்டும்" என்று தம்முடைய ஊழிய நாட்களைக் குறித்த திட்டமும் தெளிவுமான வெளிப்படுத்தலுள்ளவராய் அவர் பதிலளித்தார் (லூக்கா 13 : 32, 33). தாம் 'அனுப்பப்பட்டவர்' என்றும், தம்மை அனுப்பினவருடைய சித்தத்தைச் சரியாகச் செய்து நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் எப்போதும் உணர்வுள்ளவராயிருந்தார். "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பின வருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்" என்று கூறிக்கொண்டு, பிதாவுக்குப் பிரியமானவைகளையே எப்போதும் செய்துவந்த அவர், 'குறித்த காலத்தில்' அக்கிரமக்காரருக்காக மரித்தார் (யோவான் 6 : 38 ; 8 : 29 ; ரோமர் 5 : 6). தேவசித்தத்தை முழுமையாய்ச் செய்து நிறைவேற்றிய தேவகுமாரனின் ஜீவியம் எவ்வளவு அருமை யானது !

**அப்போஸ்தலனாகிய பவுல்:**

அப்போஸ்தலனாகிய பவுலின் ஜீவியத்தையும் சற்று கவனித்துப் பாருங்கள் ! "ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்ற உத்தமமான கேள்வியுடன் தன் வாழ்க்கையைத் தேவனுக்கு அர்ப்பணித்த அவர், அது முதல் தன் வாழ்நாள் முழுவதும், ஆவியானவரால் நடத்தப் பட்ட அழகியதொரு வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ்ந்து முடித்தார். அவர் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும்

கிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்காகத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாயிருந்தார். "தேவன், தம்முடைய குமாரனை நான் புறஜாதி களிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும்; எனக்கு முன்னே அப்போஸ்தல ரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும்" அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போனேன் என்று அவர் எழுதுகிறார் (கலா. 1 : 15 - 17). அரேபியாவில் சில வருடங்கள் தனிமையாக அவர் தேவ சமுகத்தில் காத்திருந்ததாகவும், அப்போது அவருடைய ஜீவியத்தைக் குறித்த தமது திட்டத்தைத் தேவன் அவருக்குத் தெளிவாகக் காண்பித்து, ஆழமான உபதேசங்களைப் பற்றிய வெளிப்படுத்தல்களை அவருக்களித்ததாகவும் சில வேதபண்டிதர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். என்றாலும், அப்போஸ் தலரோடுள்ள ஐக்கியமின்றி பலனுள்ளதொரு ஊழியம் செய்ய இயலாது என்பதை உணர்ந்துகொண்ட அவர், எருசலேமுக்குச் சென்று அங்கிருந்த அப்போஸ்தலரோடு ஐக்கியங்கொண்டார்.

சில நாட்களுக்குள் எருசலேமில் அவர் பலத்த எதிர்ப்புகளைச் சந்திக்க நேர்ந்தமையால், அங்கிருந்த சீஷர்களுடனே தரித்திருக்கக் கூடாமல், தன் சொந்த ஊராகிய தர்சு பட்டணத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டார். அவர் மனந்திரும்பியது முதற்கொண்டு, தனது முதலாம் சுவிசேஷப் பயணத்தைத் துவங்கியது வரை கடந்து சென்ற சுமார் பதின்மூன்று ஆண்டுகள், அவரது பிற்கால வல்லமையான ஊழியத் திற்கான ஆயத்த நாட்களாயிருந்தன. தேவனுடைய சேனையைச் சேர்ந்த ஒரு 'போர்க்குதிரை' யுத்தநாட்களுக்கென்று அவருடைய சமுகத்தின் மறைவினில் ஆயத்தமாக்கப்பட்டுக்கொண்டிருந்தது ! ஆம் ! தேவன் அவரைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள ஒரு யந்தரமாக, துலக்க மான ஒரு அம்பாக, கருக்குள்ள மகத்துவமான ஒரு பட்டயமாக உருவாக்கிக்கொண்டிருந்தார் (ஏசாயா 41 : 15 ; 49 : 2 ; சங். 45 : 3, 5). தம் முடைய மகிமையின் ஐசுவரியத்தை விளங்கச்செய்யும்படி தாம் தெரிந்து கொண்ட பாத்திரத்தை அவர் மறைவிடங்களில் செவ்வனே வனைந்து கொண்டிருந்தார். ஏற்றவேளை வந்தபோது, "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்" (அப். 13 : 2). அப்பொழுது பரிசுத்தவான்கள் உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். அது முதல் அப். பவுலின் வல்லமையான ஊழியம் ஆரம்பமாயிற்று. தேவன் முன் நிர்ணயித் திருந்தபடியே அவர் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் அதிகாரி

களுக்கும் சுவிசேஷத்தைப் பலத்த செய்கைகளோடும் அடையாளங்களோடும் அறிவித்தார். ஆவியானவரின் நடத்துதலின்படி அவர் ஊழியம் செய்தபடியினால், மிகுந்த எதிர்ப்புகளின் மத்தியிலும் சுவிசேஷம் பல தேசங்களில் பரவி மிகுந்த வல்லமைகொண்டது.

சுவிசேஷ ஊழியம் செய்யும் நண்பரே! தேவனால் உருவாக்கப்பட்டு, ஆவியானவரின் நடத்துதலின்படி, பரிசுத்தவான்களால் அனுப்பப்பட்டு நீர் ஊழியம் செய்கிறீரா? இல்லையேல், தேவனுடைய இராணுவத்தின் நல்ல போர்க்குதிரையாகும்படி இன்றே உம் வழிகளைத் திருத்திக்கொள்வீராக! பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி ஊழியம் செய்யாமல், தங்கள் விருப்பப்படி ஊழியம் செய்பவர்களை நோக்கிக் கர்த்தர் அந்நாளில், "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்" என்பாரே! (மத். 7 : 21 - 23). எனவே தேவகுமாரனைப் போலவும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிய அருமைச் சீஷனாகிய அப். பவுலைப் போலவும் தேவசித்தத்தை நிறைவேற்ற நீர் கவனமாயிருப்பீராக!

"ஒரு குதிரை வனாந்தரவெளியிலே நடக்கிறதுபோல, அவர்கள் இடறாதபடிக்கு அவர்களை ஆழங்களில் நடக்கப் பண்ணினவர் எங்கே? கர்த்தருடைய ஆவியானவர் அவர்களைப் பள்ளத்தாக்கிலே போய் இறங்குகிற மிருகஜீவன்களைப்போல இளைப்பாறப்பண்ணினார்" என ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறான் (ஏசாயா 63 : 13, 14). வெட்டாந்தரையில் நடக்கிறது போல இஸ்ரவேல் ஜனங்களை ஆழங்களில் நடந்துபோகச் செய்தவர் (சங். 106 : 9), ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம்மையும், இயற்கைக்கப்பாற்பட்ட பாதைகளில் இடறாமல் நடக்கச் செய்கிறார். யோசுவா, காலேப் என்பவர்களைப் போல நாம் முழு தூரமும் உத்தமமாய் அவரைப் பின்பற்றுவோமாகில், முடிவில் அவர்களைக் கானானில் இளைப்பாறச் செய்தவர் நம்மையும் பரம கானானில் இளைப்பாறச் செய்வார். ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்கள், பள்ளத்தாக்குகளில் இறங்கி இளைப்பாறுகிற மிருக ஜீவன்களைப் போல முடிவில் சமாதானத்துக்குள் பிரவேசித்து, நித்திய இளைப்பாறுதலை அடைவார்கள். பிசாசினால் நடத்தப்படுகிறவர்களோ லேகியோன் உட்புகுந்த மிருக ஜீவன்கள் உயர்ந்த மேட்டிலிருந்து உருண்டு கடலில் பாய்ந்து மாண்டது போல, இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைந்து, சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள். தேவபிள்ளையே, நீ எந்தக் கூட்டத்தில் காணப்பட விரும்புகிறாய்?

**ஜெயங்கொள்ளுகிறவர்கள் :**

ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குரிய ஆசீர்வாதங்களைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 2, 3 அதிகாரங்களில் ஆவியானவர் கூறு கிறார். ஆசியாவிலிருந்த ஒவ்வொரு சபையிலும், ஜெயங்கொள்ளுகிற ஒரு கூட்டத்தினர் இருந்தனர். அவர்களுக்கு மட்டுமே பிரத்தியேகமான வாக்குத்தத்தங்கள் அளிக்கப்படுவதை நாம் காண்கிறோம் (வெளி. 2 : 7, 11, 17, 26 - 28 ; 3 : 5, 12, 21). எல்லாரும் போராட்டங்களைச் சந்திக் கிறார்கள். என்றாலும் அனைவரும் ஜெயம் பெறுகிறதில்லை. வனாந் தரத்தில் இஸ்ரவேலர் எல்லாரும் ஒரே விதமான பாதைகளில் நடத்தப் பட்டபோதிலும் எல்லாரிடத்திலும் தேவன் பிரியமாயிருக்கவில்லை என I கொரிந்தியர் 10 : 1 - 5 - இல் நாம் வாசிக்கிறோம். இவ்வேதபகுதியில் 'எல்லாரும்' என்ற பதம் ஐந்து முறை உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் முடிவில், எகிப்திலிருந்து புறப்பட்டவர்களில் இருவர் மாத்தி ரமே கானானுக்குள் பிரவேசித்தனர். அவ்வாறே ஒவ்வொரு காலத்திலும் ஜெயங்கொள்வோர் சிறுபான்மையினரே! நாமும் அந்த ஜெயங்கொள் வோரின் கூட்டத்தில் காணப்படுவோமாக. யோசுவாவும் காலேபும் ஆவிக்குரிய தரிசனமுடையவர்களாயிருந்ததே அவர்கள் ஜெயங் கொள்ளக் காரணம் ஆகும். யாவரும் மூன்று நாட்களாகத் தண்ணீரின்றி வனாந்தரத்தில் நடந்துகொண்டிருக்கையில், மற்றவர்களைப் போல இவர்கள் முறுமுறுக்கவில்லை. கானானை வேவுபார்க்கும்படி அனுப்பப் பட்ட பன்னிருவரில் இவர்கள் இருவர். மற்ற பத்துப் பேரைப் போல இவர்களும் அதே தேசத்தைத்தான் சுற்றிப்பார்த்து வந்தார்கள். அங்கிருந்த இராட்சதரான ஏனாக்கின் புத்திரர் இவர்கள் கண்களுக்கும் தென்படாமற் போகவில்லை. என்றாலும் இவர்களுக்குள்ளே வேறே ஆவி இருந்தது. எல்லாவற்றிலும் ஓர் ஆவிக்குரிய கண்ணோட்டம் இவர்களுக்கிருந்தது. மற்றவர்கள், "அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, இவர்களோ, "அந்தத் தேசத்தின் ஜனங் களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை ; அவர்கள் நமக்கு இரை யாவார்கள்" என்கிறார்கள் (எண். 13 : 31 ; 14 : 9). ஒரு போர்க்குதிரையின் வீரியத்தையும் தைரியத்தையும் துணிவையும் அஞ்சா நெஞ்சத்தையும் நாம் இவர்களில் காண்கிறோம். இதுவே சபையில் ஜெயங்கொள்ளு கிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் ! யோசுவாவும் காலேபும் தாங்கள் விசுவாசித்திருந்தபடியே ஜெயம்பெற்று, தேசத்தைச் சுதந்தரித்தார்கள். யோசுவா பின்சந்ததிக்குத் தேசத்தைப் பங்கிட்டான். முடிவில், கானான் தேசத்தில் தன் சுதந்தரத்தின் எல்லைக் குள்ளேயே அவன் அடக்கம்பண்ணப்பட்டான் (யோசுவா 24 : 30). "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (வெளி. 21 : 7). அல்லேலூயா !

அருமை நண்பனே ! உன் ஜீவியத்தின் 'குதிரை வாசல்' எந்நிலையில் உள்ளது ? ஆரம்ப நாட்களில் களங்கமற்ற ஜீவியமும் சுத்த மனச் சாட்சியும் உன்னில் இருந்ததால் உனக்குள் யாதொரு பயமுமின்றி நீ தைரியமுள்ளவனாயிருந்தாய். அந்தத் தைரியமும் திடநம்பிக்கையும் இப்போது உனக்குண்டா ? முன்பு உன்னிலிருந்து புறப்பட்ட இரட்சிப்பின் ஜெய கெம்பீர தொனி இப்போதும் உன்னிலிருக்கிறதா ? அல்லது தோல்வியின் கூக்குரலும் முறையிடுதலுமே உன்னிலிருந்து பிறக்கிறதா? உன் மனதை அடக்கி ஆளும் அனுபவம் உனக்குண்டா? "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்" (நீதி. 25 : 28). தேவ ஆவியின் வல்லமையினால் உன் சரீரத்தை நீ கீழ்ப்படுத்தி ஜீவிக்கிறாயா? "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" என்று திருவசனம் கூறுகிறது (ரோமர் 8 : 13). "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (I கொரி. 9 : 27) என அப். பவுல் வீர முழக்கமிடுகிறாரே ! தேவ பிள்ளையே, உனக்கு நாவடக்கம் உண்டா? "ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" (யாக். 3 : 2). குதிரைகள் கடிவாளத் தினால் அடக்கி ஆளப்படுகின்றனவே ! (வச. 3). நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. என்றாலும் மனுஷரால் கூடாதது தேவனால் கூடும். ஆவியானவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாவு கடிவாள மிடப்பட்ட குதிரைக்கு ஒப்பானது. அவர் நம் நாவை மட்டுமல்ல, முழு ஜீவியத்தையுமே ஆட்கொள்ளுவார். அவர் நம்மை முற்றிலும் ஆளுகை செய்து நடத்துவாராயின், நாம் 'ஜெயங்கொள்ளும் பார்வோனின் இரதக் குதிரைகளைப்' போலிருப்போம். எனவே நம் ஜீவியத்தில் 'குதிரை வாசல்' பாழாக்கப்பட்டுக் கிடக்குமாயின், தீவிரமாக நாம் அதைப் பழுதுபார்த்துக் கட்டுவோமாக.

**குதிரை வாசலைக் கட்டியவர்கள்:**

"*குதிரைவாசல் முதற்கொண்டு ஆசாரியர்கள் ... பழுதுபார்த்துக் கட்டினார்கள்*" (நெகே. 3 : 28).

***ஆசாரியர்*** – ஜெய ஜீவியத்தைப் புதுப்பிக்கும்படி தேவ ஊழியர்கள் முன் நிற்க வேண்டும். மந்தைக்கு முன் செல்லும் கடாக்களைப் போல அவர்கள் சபைக்கு முன்மாதிரிகளாக ஜீவிக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் வெற்றியுடன் கானானில் அடியெடுத்து வைக்குமுன் அவர்கள் யோர்தானைக் கடக்க வேண்டிய கட்டத்தில், உடன்படிக்கைப்

பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரே முன்பாகச் செல்ல வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். யோர்தான் கரைபுரண்டு ஓடும் சமயம் அது! அச்சமயத்தில், கர்த்தரின் கட்டளைப்படியே உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர் முன் சென்று, கரைபுரண்டோடிக் கொண்டிருந்த யோர்தானில் கால் வைத்தனர். ஆசாரியரின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே தண்ணீர் ஒரு குவியலாகக் குவிந்து நின்றது! இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரை வழியாய்க் கடந்து போனார்கள் (யோசுவா 3 : 15 - 17). தேவ ஜனங்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்து தீரும்வரை யோர்தானின் நடுவிலே ஆசாரியரின் கால்கள் நிலையாய் நின்றன (யோசுவா 4 : 1, 3). தேவஜனங்களைக் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாய் - முற்றும் ஜெயங்கொண்டவர்களாய் - நிறுத்தும் வரை தேவஊழியர் பல சோதனைகளின் மத்தியிலும் அசை யாமல் நிற்கிறார்கள். அவ்விதம் தங்கள் ஜீவனைப் பணயம் வைத்து தேவவைராக்கியத்துடன் நிற்கிற ஊழியக்காரர் இன்றி, சபையானது தேவசந்நிதியில் ஜெயங்கொண்டதாய், பூரணமாக்கப்பட்டதாய் நிறுத்தப்பட இயலாது. "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்" என அப். பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதுகிறார் (II கொரி. 11 : 2). எந்த மனுஷனை யும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்துவது தேவ ஊழியரின் உத்தரவாதமாயிருக்கிறது. "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப் படுகிறேன்" என அப். பவுல் கூறுகிறார் (கொலோ. 1 : 29).

எல்லாராலும் தேவஜனங்களை ஜெயங்கொண்ட சபையாய் உரு வாக்க இயலாது. அதற்குத் தேவனுக்கென்று தங்களை முற்றிலும் வேறு பிரித்துக்கொண்ட தேவ ஊழியர்கள் தேவை. தேவஜனங்களை ஜெயங் கொண்ட சபையாய் நிறுத்தும் உத்தரவாதம் மெல்கிசேதேக்கின் முறைமை யின்படி அழைக்கப்பட்ட ஆசாரியர்களுக்கே அளிக்கப்பட்டுள்ளது. தங்கள் தனிப்பட்ட ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொண்டு, தங்கள் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள ஆத்துமாக்களையும் ஜெயங்கொண்ட பரிசுத்த வான்களாக தேவ சந்நிதியில் கொண்டுபோய் நிறுத்தும் மிகப் பெரிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு (I தீமோ. 4 : 16); அவர்கள் மாம்சத் தின்படி எந்த உறவும் அற்றவர்கள் (II கொரி. 5 : 16); பரலோக ராஜ்யத் தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்கள் (மத். 19 : 12); தியாகமும் பிரதிஷ்டையும் உள்ளவர்கள் (மத். 8 : 20 ; லூக்கா 14 : 33); தேவனால் அழைக்கப்பட்டவர்கள் (எபி. 5 : 4); தாயைப் போல் போஷிக் கிறவர்கள் (I தெச. 2 : 7, 8); தகப்பனைப் போல் கண்டித்து நடத்து

கிறவர்கள் (I தெச. 2 : 12 ; தீத்து 1 : 14); ஆசாரியர்களைப் போல் சுமக்கிற வர்கள் (யாத். 28 : 29 ; பிலி. 1 : 7); ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள் (எபி. 13 : 17); ஜெபத்தில் போராடுகிறவர்கள் (கலா. 4 : 19 ; கொலோ. 4 : 12); தேவனுடைய மனதை அறிந்தவர்கள் (I கொரி. 2 : 16); தேவனோடு ஐக்கியமுள்ளவர்கள் (I யோவான் 1 : 3); மந்தைக்கு மாதிரிகளாய் ஜீவிப்பவர்கள் (எபி. 13 : 7); தேவனுடைய இருதயத்துக்கேற்ற மேய்ப்பர்கள்! (எரே. 3 : 15). இவர்களே சபையைப் பூரணத்திற்கு வழிநடத்த இயலும். நண்பனே ! நீ கர்த்தருடைய இரகசிய வருகையில் ஜெயங்கொண்டவனாய் நிறுத்தப்படும்படி, இப்படிப்பட்ட பரிசுத்தவான்களோடு ஐக்கியம் வைத்திருக்கிறாயா? உனக்காகவே தேவன் தம் சபையில் இப்படிப்பட்ட தியாகமும் பிரதிஷ்டையுமுள்ள ஊழியர் களை ஈவாகத் தந்தருளியிருக்கிறார். அவர்கள் இன்றி நீ ஜெயங்கொண்ட ஆண்பிள்ளையாக மாற்றப்பட இயலாது. ஆகவே உன் ஜீவியத்தின் 'குதிரை வாசல்' கட்டியெழுப்பப்படும்படி, தேவனால் நியமிக்கப்பட் டிருக்கும் பரிசுத்தவான்களோடு ஐக்கியங்கொள்வாயாக.

(11)

# கிழக்கு வாசல்

## (EAST GATE)

*"அவனுக்குப் பின்னாகக் கிழக்கு வாசலைக் காக்கிற செக்கனியாவின் குமாரன் செமாயா பழுதுபார்த்துக் கட்டினான்"* (நெகே. 3 : 29).

கிழக்கு வாசல், எருசலேமின் அலங்கத்தின் வடகிழக்குப் பகுதியில் அமையப்பெற்றிருந்தது. மிப்காத் என்னும் வாசலுக்கும் குதிரை வாசலுக்குமிடையே இவ்வாசல் அமையப்பெற்றிருந்ததென சில வேத ஆராய்ச்சியாளர்கள் கணித்திருக்கின்றனர். அலங்கத்திலிருந்த கிழக்கு வாசலும், ஆலயத்தின் கிழக்கு வாசலும் ஒன்றல்ல. பாபிலோனியச் சேனையால் சுட்டெரிக்கப்பட்டுப்போயிருந்த இவ்வாசலும் நெகேமியாவின் நாட்களில் பழுதுபார்த்துக் கட்டப்பட்டது. அதைக் கட்டியவர்கள் இன்னாரென்று திட்டமாகக் கூறுவதற்கில்லை.

கிழக்கு என்பது சூரியன் உதிக்கும் திசையாகும். கடைசி நாட்களில் ஜீவிக்கிற நாம், நம்முடைய நீதியின் சூரியனாகிய இயேசு வெளிப்படும்படியாக எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறோம். கிழக்கு வாசல், ஒரு தேவபிள்ளையில் இருக்கவேண்டிய கர்த்தருடைய இரகசிய வருகையின் நம்பிக்கையைக் குறிக்கிறது.

கிறிஸ்து தமக்காகப் பாவமில்லாமல் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் தரிசனமாவார் (எபி. 9 : 28 - Gk.). அவர் முதல் முறையாக மனுஷனாக இப்பூமியில் அவதரித்தது, அவரது முதலாவது பிரசன்னமாகுதல் என அழைக்கப்படுகிறது: "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" (I தீமோ. 1 : 15). ஆனால் இரண்டாந்தரமோ அவர் பூமிக்கு இறங்கி வராமல், மத்திய ஆகாயத்தில் வெளிப்படுவார். இது கிறிஸ்துவின் இரகசிய வருகையாகும். கறை திரை பிழை முதலான யாதும் அற்றவர்களாய், தமக்காகப் பாவமின்றி ஆவலோடு காத்திருக்கும் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்

களைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளும்படியாகவே அவர் இரண்டாம் விசை வெளிப்படுவார். கிருபையின் காலத்தின் கடைமுனைக்கு வந்திருக்கிற நம்மை வெகு விரைவில் சந்திக்கப்போவது, கிறிஸ்துவின் இரகசிய வருகையே ஆகும்.

"அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான்" என கர்த்தராகிய இயேசுதாமே திருவாய்மொழிந்தருளியிருக்கிறார் (லூக்கா 17 : 34 - 36). நாம் மேற்கொள்ளும் எல்லாப் பிரயாசங்களும், நாம் சகிக்கிற எல்லா இன்னல்களும், நம்முடைய எல்லா முயற்சிகளும், நம்முடைய எல்லாத் தவிப்பும் ஏக்கமும் - அந்த ஒரு இமைப்பொழுதிற்காகவே ! அந்தக் கண்ணிமைப் பொழுதினை நாம் தவறவிட்டுவிடுவோமாகில், அதுவரை நாம் மேற்கொள்ளும் அனைத்துப் பிரயாசங்களும் வீணும் வியர்த்தமுமாய் இருக்குமே !

**கிறிஸ்துவின் இரகசிய வருகையின் நம்பிக்கை:**

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று அப். பவுல் எழுதுகிறார் (I கொரி. 15 : 51, 52). அவரது நாட்களில்தானே, முதலாம் நூற்றாண்டின் சபையாரே, தாங்கள் நித்திரையடையாமல் மறுரூபமாகப்போவதாக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். தங்கள் நாட்களிலேயே கிறிஸ்து வானில் வெளிப்படுவார் என அவர்கள் நம்பியிருந்தனர். இந்த நம்பிக்கையினால் அவர்கள் தங்கள் ஜீவியத்தைப் பரிசுத்தமாய்ப் பாதுகாத்து, தங்கள் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தனர். அவர்கள் கிறிஸ்துவின் நிமித்தம் சொல்லொண்ணா உபத்திரவங்களைச் சகிக்க நேர்ந்தபோதிலும், அவற்றிற்குப் பின் வரும் மகிமையை எண்ணி, அவற்றை முற்றிலும் அசட்டை பண்ணினர். அவருடைய மகிமையின் பிரசன்னமாகுதலே அவர்களுடைய ஏக குறிக்கோளும் நோக்கமும் வாஞ்சையும் தவிப்பும் ஏக்கமுமாயிருந்தது! இந்தத் தீரா வாஞ்சையினால் அவர்கள் அடிக்கடி வெளியே வந்து வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தார்களாம்.

அவர்கள் கொடிய உபத்திரவங்களினூடே செல்லும்போதும், தங்களைச் சேர்ந்தவர்களில் யாராகிலும் கிறிஸ்துவினிமித்தம் இரத்தசாட்சியாய் மரிக்கும்போதும், இந்த நம்பிக்கையே அவர்களைத் தேற்றியது. எழுத்தின்படியான இஸ்ரவேலர் ஒருவரையொருவர் சந்திக்கையில், 'உங்களுக்குச் சமாதானம்' என்று கூறி வாழ்த்துவது வழக்கம். ஆனால் ஆதிக் கிறிஸ்தவர்களோ, ஒருவரையொருவர் சந்திக்கும்போது 'மாரநாதா' (கர்த்தர் வருகிறார்) என்று சொல்லி ஒருவரையொருவர் வாழ்த்தினர்! 'நம்முடைய துன்பங்கள், துயரங்கள், பிரிவுகள் யாவற்றுக்கும் சீக்கிரமாக முடிவு வரப்போகிறது; கர்த்தர் வெகுவிரைவில் வெளிப்பட்டு, நம் கண்ணீர் யாவையும் துடைப்பார் !' என்பதே இவ்வாழ்த்துதலின் உட்கருத் தாகும்.

"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக் கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" என்று அப். யோவான் எழுதுகிறார் (I யோவான் 3 : 2, 3). கர்த்தருடைய இரகசிய வருகையின் நம்பிக்கை யானது, நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளவும், அந்த நொடிப்பொழுதுக் கென்று எப்போதும் ஆயத்தமாயிருக்கவும் நம்மை ஊக்குவிக்கிறது. ஆகவே நாம் இந்த நம்பிக்கையில் பெருக வேண்டும். "சர்வ சிருஷ்டி யும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். ... நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்" (ரோமர் 8 : 22 - 25). "சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக். 5 : 7, 8). "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (லூக்கா 21 : 19). ஆம் ! "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்" (எபி. 10 : 36, 37).

**ஓர் இரகசியம் !**

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என அப்போஸ்தலன் எழுதுகிறார் ! கர்த்தரின் இரகசிய வருகையானது மெய்யாகவே அநேகருக்கு மறைபொருளாயிருக்கிறது. அது சாதாரண ஜனங்கள் விளங்கிக்கொள்ள முடியாததும், அவர்கள் அறிவுக்கு அப்பாற்பட்டதுமான ஒரு உண்மையாக இருப்பதால் அது ஒரு இரக சியமே ! ஆம் ! தேவன் தம்முடைய இரகசியங்களைத் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தியிருக்கிறார் (மத். 13 : 11). அதை நம்பி விசுவாசிக்கத்தக்கதாகத் தேவன் நம்முடைய மனக்கண்களைத் திறந்தருளியிருக்கிறார். கிழக்கு வாசல், அலங்கத்தின் வடகிழக்குப் பகுதியில் குறிப்பாக எந்த இடத்தில் அமையப்பெற்றி ருந்தது என்பதைக் குறித்துப் பல கருத்து வேறுபாடுகள் வேதபண்டி தர்கள் மத்தியில் நிலவுகின்றன. அதைப் போன்றே அதன் உண்மைப் பொருளாகிய கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையைக் குறித்தும் கிறிஸ்தவ உலகிலும், ஆவிக்குரியவர்கள் மத்தியிலும், பல வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஆதி நூற்றாண்டிலேயே, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று வதந்தி பரப்பிக்கொண்டிருந்த ஒரு கூட்டம் கள்ளச் சகோதரர் இருந்திருக்கின்றனர் (II தீமோ. 2 : 18). அப்படியே, இன்றும் கர்த்தரின் இரகசிய வருகை நடந்து முடிந்துவிட்டது என்று போதிக்கும் துர் உபதேசக்காரர் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கிறார்கள். வேறு சிலர், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பல பிரிவுகள் இல்லை என்றும், அவர் இப்பூமியை நியாயந்தீர்க்க மாத்திரம் ஒரே விசை வருகிறாரென்றும் தவறாக எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் தேவஜனங்களாகிய நாம், சரியான உண்மையை அறிந்துகொள்ளும்படி தெளிந்த புத்தியுள்ள வர்களாயிருக்க வேண்டியது அவசியமாகும். இந்த இரகசியத்தை நாம் அறிந்துகொள்வது மாத்திரமல்ல, அந்நாளுக்கென்று ஆயத்தமாகும் படியும் கவனமாயிருப்போமாக.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், இரகசிய வருகை, அறுவடை, பகிரங்க வருகை என மூன்று பிரிவுகள் உள்ளன. கிறிஸ்து தம் மணவாட்டியாகிய ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களைச் சேர்க்கும்படி, நினையாத நேரத்தில் மத்திய ஆகாயத்தில் வெளிப்படுவது அவருடைய 'இரகசிய வருகை'யாகும் (I தெச. 4 : 16, 17). அதற்குப் பின், ஏழு வருட உபத்திரவ காலத்தின் மத்தியில், உபத்திரவ கால இரத்தசாட்சிகளைச் சேர்க்கும்படி அவர் நடுவானில் வெளிப்படுவது 'அறுவடை' என அழைக்கப்படுகிறது (வெளி. 14 : 16 ; 1 : 7). ஏழு வருட உபத்திரவத்தின் முடிவில், அர்மகெதோன் யுத்தத்திற்காக அவர் தம் பரிசுத்தவான்களுடன்

ஒலிவமலையில் வந்து இறங்குவது பகிரங்க வருகையாகும் (அப். 1 : 11; சக. 14 : 4). அதைத் தொடர்ந்து இப்பூமியில் அவரது ஆயிர வருட அரசாட்சி ஸ்தாபிக்கப்படும். நாமோ இனிச் சம்பவிக்கப் போகிறவைகளுக்கெல்லாம் தப்பி, கிறிஸ்துவின் இரகசிய வருகையில் அவருக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருப்போமாக (லூக்கா 21 : 36).

**எல்லாரும் அல்ல:**

'நாமெல்லாரும்' மறுரூபமாக்கப்படுவோம் என்று அப். பவுல் I கொரிந்தியர் 15 : 51 - இல் குறிப்பிட்டிருப்பதால், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட யாவரும், அவர்கள் எப்படிப்பட்ட ஆவிக்குரிய நிலைமையில் இருப்பினும் மறுரூபமாக்கப்படுவார்கள் என்றும், நம் ஜீவிய காலத்தில் நம்முடைய பகுதியில் நாம் பிரயாசப்பட வேண்டியது ஒன்றுமே இல்லை என்றும், அவரே நம்மைச் சடுதியாக மறுரூபமாக்கிவிடுவார் என்றும் சிலர் போதித்து, தேவ ஜனங்கள் துணிகரமாக நடக்கும்படி அவர்களைத் திசைமாற்றப் பிரயாசப்படுகிறார்கள். இது சாத்தானின் மிகப் பெரிய வஞ்சனையே ! அவர்களின் கூற்று உண்மையாயிருக்குமாயின், இருவரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என மும்முறை கர்த்தராகிய இயேசு குறிப்பிட்டிருப்பதற்கு அவர்கள் என்ன பதிலளிப்பார்கள்? பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்வார்களென்றால், "நீங்கள் **பெற்றுக்கொள்ளத் தக்கதாக** ஓடுங்கள்" என்று அப். பவுல் சபையாரை எச்சரிக்க அவசியமில்லையே! கிறிஸ்தவ ஜீவியமாகிய பந்தயத்தில் ஓடுகிற யாவரும் அல்ல, எப்படி வேண்டுமாகிலும் ஓடிக்கொண்டிருக்கிறவர்களும் அல்ல, பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடி, வெற்றியுடன் இலக்கை அடைந்தவர்களே பந்தயப் பொருளைப் பெறுவார்கள். ஆகவேதான் மேன்மையான பரிசுத்தவானாகிய அவரே தன்னைக் குறித்து, "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்று, தான் அதிக பயத்துடன் தன் ஓட்டத்தைத் தொடருவதாக எழுதுகிறார் (I கொரி. 9 : 27). "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்ற அறிக்கை

யுடன் முடிவு வரை அவர் தன் ஓட்டத்தைத் தொடர்ந்தார் (பிலி. 3 : 12 - 14). இறுதியில், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (II தீமோ. 4 : 7) என்ற அறிக்கையுடன், வெற்றியோடு அவர் தன் ஓட்டத்தை முடித்தார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட எல்லாரும் அல்ல, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுச் சபையின் அங்கத்தினராயிருக்கிற எல்லாரும் அல்ல, தங்களுக்கு அளிக்கப்பட்ட ஜீவிய காலத்தில் தேவ கிருபையினால் தங்களைக் கவனமாக ஆயத்தப்படுத்திக்கொண்டவர்களே அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட முடியும் ! இவர் களைக் குறித்தே, "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" என்று கூறப் பட்டுள்ளது (வெளி. 19 : 7). பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களாய், எகிப்திலிருந்து புறப்பட்ட எல்லாரும் அல்ல; செங்கடலை வெற்றி முழக்கத்துடன் கடந்த எல்லாரும் அல்ல; சீனாய் மலையில் தேவபிரமாணங்களைப் பெற்ற எல்லாரும் அல்ல - ஆறு இலட்சத்துக்கும் அதிகமான புருஷர்களில் இருவரே கானானில் பிரவேசித் தார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கவில்லை; ஆதலால் வனாந்தரத் திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள் என நாம் வாசிக்கிறோம் (I கொரி. 10 : 5). உலகத்தின் முடிவு காலத்தில் உள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாக்கும்படியாகவே இவைகளெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகவே, பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களாய், இமைப்பொழுதினில் மறுரூபமாக்கப்படத்தக்கதாக நாம் ஆயத்தமாயிருப்போமாக.

**"என் ஆண்டவன் வர நாள் செல்லும்" !**

தன் எஜமான் வர நாள் செல்லும் என்று நினைத்த ஒரு ஊழியக் காரனைப் பற்றிக் கர்த்தராகிய இயேசு மத்தேயு 24 : 48 - 51 - இல் கூறி யிருக்கிறார்: "அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டு, தன் உடன்வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்". அவன் பிறரோடு கடினமாகச் செயல்படவும், தன் வேறுபிரிதலின் ஜீவியத்தைக் காத்துக்கொள்ளாமல் வெறியரோடு சகவாசம் கொள்ளவும், புசித்துக் குடிப்பதிலேயே நாட்டம் கொள்ளவும் காரணம், அவனி

லிருந்த "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்ற எண்ணமே! "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்" என இப்படிப்பட்டவர்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம் (II பேதுரு 3 : 4). இவர்கள் கடைசி நாட்களில் ஜீவிப்பவர்கள் என்றும், தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கிற பரியாசக் காரர் என்றும் வேதவசனம் கூறுகிறது (வச. 3). கிறிஸ்தவ நண்பனே, இவர்கள் வேத வசனங்களை அறியாதவர்களல்லர்; வாக்குத்தத்தங் களையெல்லாம் நன்றாக அறிந்தவர்களே! இவர்கள் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் நடந்த சகலத்தையும் நன்கு அறிந்தவர்களே! இவர்கள், நோவாவின் நாட்களில் தேவனுடைய எச்சரிப்பை விசுவாசியாமற் போனவர்களுக்கும், லோத்தின் நாட்களில் நிர்விசாரமும் சாங்கோபாங்கமு மாய் நடந்து, அவபக்தியாய் ஜீவித்தவர்களுக்கும் உண்டான தேவநியாயத் தீர்ப்பையும் நன்கு அறிந்தவர்களே! இவற்றையெல்லாம் நன்கு அறிந்தி ருந்தும் இவர்கள் தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கவே விரும்பு கிறபடியினால், பரியாசக்காரராயிருந்து தேவனுடைய மகத்துவங்களையும் பரிகசித்து, நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாகிறார்கள். மகத்துவமுள்ள தேவ னுடைய வாக்குத்தத்தங்களையே பரியாசம்பண்ணும் அளவுக்கு இவர்கள் துணிகரக்காரராயிருக்கிறார்கள்! "கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக் கிறார்" (வச. 9). இவர்களும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பியே கர்த்தர் தமது வருகையைத் தாமதிக்கிறார் என்பதை இவர்கள் உணராமல், அவரைப் பரியாசம்பண்ணத் துணிகிறபடியினால் இவர்களது முடிவு பயங்கரமாயிருக்கும்! கர்த்தரின் இரகசிய வருகைக்காகக் காத்திருக்கிற நாமோ, "கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத் தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி" ஜாக்கிரதையாயிருப்போமாக (வச. 14). அருமையானவர்களே! கர்த்தருடைய இரகசிய வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டு கிருபையின் காலத்தின் கடைமுனையில் ஜீவிக்கும் நாம் "எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (வச. 11).

எஜமான் ஒருவன் தன் பெரிய தோட்டத்தை ஒரு தோட்டக்காரன் வசமாக விட்டு, தூர தேசத்திற்குச் சென்றிருந்தான். அவன், தான் திரும்பி வரும் நாளை அவனுக்கு அறிவிக்கவில்லை. 'தோட்டத்தைக் கண் காணித்துக்கொள்' என்ற கட்டளையினை மாத்திரமே அத்தோட்டக்காரன் பெற்றிருந்தான். இவனோ ஒவ்வொரு நாளும் தோட்டத்தைச் சுத்தம்

செய்து, தண்ணீர் வார்த்து, மிகவும் நல்ல முறையில் அதைப் பராமரித்துக்கொண்டிருந்தான். எப்போதும் அத்தோட்டம் மிகவும் நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்ததை அவ்வழியே செல்வோர் யாவரும் கவனித்தனர். ஒரு நாள் அவர்களில் ஒருவன் அத்தோட்டக்காரனை அணுகி, 'நீ எப்போதும் இந்தத் தோட்டத்தை இவ்வளவு அருமையாக வைத்திருக்கிறாயே; உன் எஜமான் வர நாள் செல்லும் என்று உனக்குத் தெரியாதா?' என்று கேட்டான். அதற்கு அவன், 'இல்லை ஐயா ! நான் அப்படி எண்ணுகிறதில்லை; ஒவ்வொரு நாளும், இன்றைக்கு என் எஜமான் வந்துவிடுவார் என்ற எதிர்பார்ப்புடனேயே நான் என் கடமைகளைச் செய்துவருகிறேன்' என்று பதிலளித்தான். பல ஆண்டுகள் கழித்து அவனுடைய எஜமான் திடீரென வந்தபோது, தன் தோட்டம் அவ்வளவு நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டிருந்ததைக் கண்டு, தோட்டக்காரனைப் பாராட்டி, தனக்குப் பின் அவனையே அத்தோட்டத்தின் உரிமையாளனாக்கினான். இச்சிறுகதை குறிப்பிடும் தோட்டக்காரனைப் போல நாமும் எப்போதும் ஆயத்தமாயிருப்போம்; அசதியை விட்டு எழும்புவோம். ஏனெனில் நம் ஆண்டவர் நினையாத நேரத்தில் வருவார் !

கர்த்தராகிய இயேசு கூறிய உவமையில் 'என் ஆண்டவன் வர நாள் செல்லும்' என்று நினைத்தவனுக்கும், மேற்காணும் சிறுகதையில் 'என் எஜமான் இன்று வருவார்' என்று நினைத்தவனுக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு பெரிதென்று பாருங்கள் ! ஒருவன் கடும் நியாயத்தீர்ப்பைப் பெற்றான்; மற்றவனோ எஜமானால் மிகுதியாகக் கனப்படுத்தப்பட்டான். அப்படியே, நினையாத நாழிகையிலே வெளிப்பட இருக்கும் மனுஷகுமாரனைச் சந்திக்க ஆயத்தத்துடன் காத்திருக்கும் ஒரு சாராரைக் குறித்து நமதாண்டவர், 'எஜமான் வரும்போது தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான்' என்றும், அவரைச் சந்திக்க ஆயத்தமின்றி, துணிகரமாய் நடக்கும் மற்றவர்களைக் குறித்தோ, "அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்" என்றும் தமது உவமையின் மூலம் விளக்குகிறார் (மத். 24 : 47, 50, 51). கிறிஸ்தவ நண்பனே ! உன் எஜமான் நினையாத நேரத்தில் வரும்போது நீ அவரிடத்திலிருந்து இவற்றில் எதைப் பெற்றுக்கொள்ளப் போகிறாய்? "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்றுரைத்தவர் வரும் நாள் நெருங்கிவிட்டது ! (வெளி. 22 : 11, 12).

"ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற் போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், கர்த்தர் வருகிறார்" (I கொரி. 16 : 22); "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந் திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (பிலி. 4 : 5) - இவ்விரு வசனங் களும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற சுபாவங்களை நம்மில் கட்டி யெழுப்பிக்கொண்டு, அவரையே நேசித்து, அவர் வரும் நாளுக்காக ஆவலுடன் காத்திருக்கும்படி நம்மை உணர்த்துகின்றன. அவர் தம் முடைய சம்பத்தைச் சேர்க்கும் நாளில் நாம் அவருடைய விலையேறப் பெற்ற பொக்கிஷமாகக் காணப்படுவோமாக (மல். 3 : 17). நண்பனே ! உன் வாழ்வில் 'கிழக்கு வாசல்' பழுதடைந்து காணப்படுமாயின், உன் ஜீவியம் முற்றிலும் சீர்குலைந்து போகுமுன்னே, சீக்கிரமாக அதைச் செப்பனிடுவாயாக. கர்த்தருடைய இரகசிய வருகையின் நம்பிக்கையை இழந்த ஒருவனின் வாழ்க்கை எவ்வளவு பரிதாபமானதாகவும், அவ னுடைய முடிவு எவ்வளவு வேதனையுள்ளதாகவும் இருக்கும் என நாம் கண்டோம் அல்லவா? 'தேவமகிமையை அடைவோம்' என்ற நம்பிக்கை யோடு நீ பரிசுத்த ஆவியானவரின் புதிதாக்குதலுக்கு உன்னை ஒப்புக் கொடுத்து, நாளுக்கு நாள் அந்த நம்பிக்கையில் பெருகுவாயாக (ரோமர் 5 : 2, 5 ; 15 : 13). "நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந் ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்" (ரோமர் 13 : 11, 12). நம் ஆவிக்குரிய நித்திரையை விட்டு எழும்புவோம்; நீதியின் சூரியன் உதிக்கும் நேரம் வந்துவிட்டது !

**காலத்தை அறிவீர் !**

நாம் கடைசி நாட்களில் வந்திருக்கிறோம் என்ற உண்மையை வேதாகமம் மட்டுமல்ல, விஞ்ஞானிகள் யாவரும் ஏகமாக ஒத்துக்கொள் கின்றனர். உலகம் ஒரு பயங்கரமான உபத்திரவ காலத்தையும், தேவ னுடைய தொடர்ச்சியான நியாயத்தீர்ப்புகளையும் அதிசீக்கிரத்தில் சந்திக் கப்போகிறது. அதற்கு முன்னதாக, ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள் இப்பூமியினின்று சடுதியாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள். "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்" என்று திருவசனம் கூறுகிறது (ஏசாயா 60 : 2).

இவ்வசனத்தில் 'இருள்' என்பது உபத்திரவ காலத்தையும், 'காரிருள்' என்பது மகா உபத்திரவ காலத்தையும் குறிக்கின்றன. உலகம் இக்கொடிய நாட்களைச் சந்திக்குமுன் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய பூரணமாக்கப் பட்ட பரிசுத்தவான்கள் இப்பூமியினின்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அந்நாளே நம்முடைய நீதியின் சூரியனாகிய கிறிஸ்து வானில் உதிக்கும் அவரது இரகசிய வருகையின் நாள் !

வேதாகமத்தில், கடைசி காலத்தின் சில சம்பவங்களும், கிறிஸ்து வின் வருகைக்கான அடையாளங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏறக் குறைய அவை யாவும் நம்முடைய நாட்களில் நிறைவேறிவிட்டன. உலக ஜனங்களிலும், இயற்கையிலும், சபையிலும் நிலவும் இந்த அடை யாளங்கள் வேதாகமத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே முன்னறி விக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை நாம் கீழே காண்போம்:

1. யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும் உண்டாகும் (மத். 24 : 6, 7 ; மாற்கு 13 : 7, 8 ; லூக்கா 21 : 9, 10).
2. கடைசி நாட்களின் சந்ததி, நோவா லோத்து இவர்களின் நாட்களில் இருந்தது போல் கொடிய துன்மார்க்கமுள்ளதாகவும், ஒழுக்கமற்ற இழிவான நடத்தையுள்ளதாகவும் இருக்கும் (II தீமோ. 3 : 1 - 5 ; லூக்கா 17 : 26 - 29).
3. உலகில் கொடிய பஞ்சம் உண்டாகும் (மத். 24 : 7).
4. மனிதரையும் மிருகங்களையும் தாவர வர்க்கங்களையும் அழிக்கும் கொடிய கொள்ளைநோய்கள் உண்டாகும் (மத். 24 : 7).
5. பயங்கரமான பூமியதிர்ச்சிகள் உண்டாகும் (மத். 24 : 7).
6. வானத்தில் பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங் களும் காணப்படும். சமுத்திரமும் அலைகளும் முழக்கமா யிருக்கும் (லூக்கா 21 : 11, 25, 26).
7. யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவார்கள் - அத்தி மரம் துளிர்விடுதல் (மத். 24 : 32 ; சக. 8 : 7, 8).
8. உலக ஜனங்களின் அறிவு பெருகிப்போம் (தானி. 12 : 4).
9. புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதி யாரால் மிதிக்கப்படும் (லூக்கா 21 : 24).
10. பாவம், துன்மார்க்கம், தீவிரவாதிகளின் தொல்லைகள் போன்றவை பெருகும் (II தீமோ. 3 : 3 - 5 ; சங். 55 : 10, 11 ; நாகூம் 3 : 1).

11. ராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும் (மத். 24 : 14 ; மாற்கு 13 : 10).

12. பொய்யான அற்புத அடையாளங்களினால் ஜனங்கள் வஞ்சிக்கப் படுவர் (வெளி. 12 : 4 ; ஏசாயா 9 : 15 ; மத். 24 : 23, 24).

13. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் ஆரம்பமாகும் (I பேதுரு 4 : 17).

14. சபையில் தேவஜனங்களுக்கிடையே 'விசுவாச துரோகம்' (Eng.- a falling away - விழுகை) நேரிடும் (II தெச. 2 : 3).

15. கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளக்கிறிஸ்துக்களும் பெருகுவர் (மத். 24 : 24 ; மாற்கு 13 : 22).

16. தேவ ஜனங்கள் கிறிஸ்துவினிமித்தம் பகைக்கப்படுவர்; காவலில் வைக்கப்படுவர்; கொலை செய்யப்படுவர் (மத். 24 : 9 ; மாற்கு 13 : 9, 11).

17. அக்கிரமம் மிகுதியாகும்; அநேகருடைய அன்பு தணிந்துபோம் (மத். 24 : 12).

18. சபையில் ஒரு கூட்டத்தார் அசதியாயும் நிர்விசாரமாயும் இருப்பர்; மற்றொரு கூட்டத்தாரோ ஜெபத்தில் போராடிக்கொண்டிருப்பர் (ரோமர் 13 : 11 ; 8 : 23 ; வெளி. 12 : 2).

19. சபையில் ஒரு சாரார் புடமிடப்பட்டு வெண்மையாக்கப்படுவர்; சிலரில் விழுகை சம்பவிக்கும் (தானி. 11 : 35 ; 12 : 10 ; சக. 13 : 8, 9).

20. சபையில் ஒரு கூட்டத்தார்மேல் மகிமையான எழுப்புதலைத் தேவன் அனுப்புவார்; சீயோன் கட்டி முடிக்கப்படும் (சக. 10 : 1 ; ஆகாய் 2 : 9 ; சங். 102 : 15).

கர்த்தராகிய இயேசு தம்மிடத்தில் வந்த பரிசேயரையும் சதுசேயரையும் நோக்கி, "வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?" என்று கேட்டார் (மத். 16 : 3). கடைசிக் காலத்தின் கடைசிப் பகுதியில் வந்திருக்கும் நாம், ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்வோமாக (எபே. 5 : 15, 16). நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய் கவனமாய் நடப்போமாக (ரோமர் 13 : 11). "ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த்

தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள்" என்று கர்த்தர் வேதனையுடன் கூறுகிறார் (எரே. 8 : 7). "குருவிகள் பாடுங்காலம் வந்தது, காட்டுப்புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது" என மணவாளன் கூறுகிறார் (உன். 2 : 12). தனித்துவிடப்பட்ட ஒரு காட்டுப்புறா தன் இணைப் புறாவுக்காக ஏங்கிக் கூவிக்கொண்டிருப்பது போல, தங்கள் மணவாளனை உண்மையாய் நேசித்து, அவரைக் காணும்படி ஏங்கித் தவிக்கும் பரிசுத்தவான்கள், "என் நேசரே! தீவிரியும்" என அழைத்துக்கொண்டிருக் கிறார்கள் (உன். 8 : 14). "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக" (வெளி. 22 : 17). தங்கள் பலகணித் துவாரங்களுக்குத் தீவிரிக்கிற புறாக்களைப் போல, நாம் நம் நேசரைச் சந்திக்கத் துரிதப்படுவோமாக (ஏசாயா 60 : 8). "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்பதே நம் தவிப்பாயிருக்கட்டும்! (வெளி. 22 : 20).

இஸ்ரவேல் புத்திரரின் பிரயாணத்தில், மோசேயும், ஆரோனும், அவனுடைய குமாரரும் சூரியன் உதிக்கும் கீழ்த்திசையில் கூடாரம் போட்டு, ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தைக் காத்துவந்தனர் (எண். 3 : 38). ஆசாரியர் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கும்போது, கிழக்குத் திசையில் பாளயமிறங்கியிருந்தவர்களே அச்சத்தத்தைக் கேட்ட வுடன் முதலாவதாகப் பிரயாணம் புறப்பட்டார்கள் (எண். 10 : 5). "யூதாவின் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்கவேண்டும்" என்று கர்த்தர் கற்பித்திருந்தார் (எண். 2 : 3). யூதா முதற்பிறந்தவனாயிராதிருந்தும், இஸ்ரவேலின் பாளயம் புறப்படு வதற்கும், யுத்தத்தின் முன்னணியில் நிற்பதற்கும் தேவன் அவனது கோத்திரத்தையே தெரிந்துகொண்டார் (நியா. 1 : 1, 2). யூதா எதற்கும் பின்னிடையாத சிங்கம் போல ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்று முன் னேறுகிறவனாயிருந்தான் (ஆதி. 49 : 9 ; நீதி. 30 : 30). நாமும் கர்த்தர் வருமளவும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருந்து, நம் சத்துருவின் மேல் வெற்றி சிறந்து, கடைசி எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாகி, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி ஆயத்தமாயிருப்போமாக.

'கிழக்குத் திசையில் பாளயமிறங்கியிருத்தல்' என்பது, கர்த்தரின் இரகசிய வருகையின் நம்பிக்கையோடு அவரது பிரசன்னமாகுதலை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் அனுபவமாகும். "எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது" என்ற மெய்யான அறிக்கையுடன் (சங். 130 : 6), நாம் கர்த்தருடைய

இரகசிய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். தங்கள் அனுதின ஜீவியத்தில் ஜெயங்கொள்ளுகிறவர்களாய், முன்னான வைகளையே நாடி முன் செல்லுகிறவர்களே எக்காள சத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்க இயலும். அவ்விதம் இப்போது தங்கள் வனாந்தரப் பயணத்தில் அனுதினமும் தேவசத்தம் கேட்டு வழிநடந்து வந்தவர்களே, முடிவிலே பிரதான தூதனின் சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் கர்த்தர் வெளிப்படும்போது, இமைப்பொழுதினில் மறுரூபமாக்கப்பட்டு, பரம கானானில் பிரவேசிப்பார்கள். இஸ்ரவேலின் குமாரரில் பிந்தினவனான யூதா முந்தினவனானது போல, அந்நாளிலே பிந்தினோர் அநேகர் முந்தினோராவார்கள்! முந்தினோர் அநேகர் பிந்தினோராவார்கள் (மத். 19 : 30).

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக் கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" என கர்த்தர் உரைத்துச் சென்றிருக்கிறார் (மத். 24 : 27, 28). கர்த்தர் மேலேயே நாட்டங்கொண்டிருப் பவர்கள் மாத்திரமே அவருடைய பிரசன்னமாகுதலையும் வாஞ்சித்து ஏங்கிக் கொண்டிருக்க முடியும் என்னும் உண்மையை நமதாண்டவர் இந்த உவமையின் மூலம் வலியுறுத்துகிறார். பிணத்தின் மேலேயே நாட்டங் கொண்டிருக்கும் கழுகுகள், அது இருக்குமிடத்தை அறிந்த மாத்திரத்தில் அவ்விடத்திற்குத் தீவிரித்துச் செல்வதைப் போல, கர்த்தரையே நேசித்து அவருடைய இரகசிய வருகைக்காக ஏங்கித் தவிக்கும் பரிசுத்தவான்கள் அனைவரும் மகிமையின் நாளில் மத்திய ஆகாயத்தில் தங்கள் அருமை நேசரைச் சந்திக்கும்படி தீவிரித்துப் பறந்து போவார்கள். அந்நாளில் நாமும் அவரை முகாமுகமாய்த் தரிசிக்கும்படி, அவருடைய பிரசன்ன மாகுதலை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கக் கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக! (II தீமோ. 4 : 8 ; எபி. 9 : 28).

12

# மிப்காத் என்னும் வாசல்

## (GATE MIPHKAD)

*"தட்டானின் குமாரன் மல்கியா மிப்காத் என்னும் வாசலுக்கு எதிரே நிதனீமியரும் மளிகைக்காரரும் குடியிருக்கிற ஸ்தலமுதல் கோடியின் மேல்வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்"* (நெகே. 3 : 31).

மிப்காத் என்னும் வாசல், அலங்கத்தின் வடகிழக்குப் பகுதியில் இருந்தது. கர்த்தராகிய இயேசு கழுதையின் மேல் சவாரி செய்து எருச லேமுக்கு வந்தபோது இவ்வாசல் வழியாகவோ அல்லது கிழக்கு வாசல் வழியாகவோ நகரத்தினுள் பிரவேசித்திருக்கக் கூடும் என்று கருதப் படுகிறது (மத். 21 : 10). 'மிப்காத்' என்றால் 'நியமிக்கப்பட்ட இடம்' (appointed place) என்று பொருள். இது, ஜனங்கள் 'ஒன்றுகூடும் வாசல்' (muster gate) என்று பொதுவாக அழைக்கப்பட்டது.

### 1. ஒன்றுகூடும் வாசல்:

தேவஜனங்களாகிய நாம் கூடிவரும்படி நியமிக்கப்பட்ட இடம் தேவசமுகம் ஆகும். பழைய ஏற்பாட்டில் பல காரணங்களுக்காக இஸ்ர வேலர் தேவ சமுகத்தில் ஒன்றுகூடினர். அவற்றுள் சிலவற்றை நாம் இங்கு காண்போம்:

**முதலாவதாக,** பண்டிகைகளை ஆசரிக்கும்படியாகத் தேவ ஜனங்கள் தேவசமுகத்தில் ஒன்றாகக் கூட்டப்பட வேண்டும் என்பது தேவனுடைய பிரமாணமாயிருந்தது: "வருஷத்தில் மூன்றுதரம் ... உன் ஆண்மக்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள்" (உபா. 16 : 16 ; யாத். 23 : 14, 17). அவ்விதமாகவே அவர்கள் கர்த்தரின் சமுகத்திற்கு வந்து மகிழ்ச்சியோடே பண்டிகை கொண்டாடினர், மேலும், "உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், இஸ்ரவேலர் எல்லாரும் அவருடைய சந்நிதியில் சேர்ந்து வந்திருக்கும்போது, இந்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க அவர்களுக்கு

முன்பாக வாசிக்கக்கடவாய்" என்று கர்த்தருடைய தாசனாகிய மோசே யோசுவாவுக்குக் கற்பித்தான் (உபா. 31 : 11). மேற்கண்ட வசனங்களில், இஸ்ரவேல் புத்திரர் ஒன்றுகூடும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஸ்தானம் அல்லது நியமிக்கப்பட்ட இடம், அவருடைய சந்நிதியே என நாம் காண்கிறோம். நாம் தேவனுடைய சமுகத்தில் அவரை ஆராதித்து மகிழும்படியாகவும், அவருடைய கற்பனைகளின்படி ஜீவிப்பதற்காக அவருடைய வசனங்களைக் கேட்டுக் கற்றுக்கொள்ளும்படியாகவும் (வச. 12), அவர் நமக்குப் பரிசுத்த சபைகூடுதலை நியமித்திருக்கிறார். "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவரு கிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்" என எபிரெய நிருபக்காரன் நம்மை எச்சரிக்கிறார் (எபி. 10 : 25). சபை கூடிவருதலில், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்குத் தேவையான அனைத்து ஆசீர்வாதங்களும் உள்ளன. நம் பிரச்சினைகளை மேற் கொள்ளத் தேவையான தேவ ஆலோசனைகளையும் நமக்காகத் தேவன் அங்கே வைத்துக் காத்திருக்கிறார். நாம் அதை அசட்டைபண்ணி, விட்டுவிடுவோமாகில், அது நம்முடைய ஜீவியத்தில் பெரிதான இழப்பை உண்டாக்கிவிடும். ஆகவே கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக் குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் படியாக (எபே. 1 : 3), நாம் அவருடைய சமுகத்திற்கு உற்சாகத்துடன் செல்லுவோமாக.

தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி யாக மாத்திரமல்ல, கர்த்தருக்குக் காணிக்கைகளைச் செலுத்தும்படியாகவும் உற்சாக மனதுடன் நாம் தேவசமுகத்திற்குச் செல்ல வேண்டும். "அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத்தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன்" என்று தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்திருந்தார் (உபா. 16 : 17). தேவன் நம் துதிகளில் பிரியமாயிருக்கிறார். ஆகவே கர்த்தருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்தி, அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங் களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை நாம் ஸ்தோத்திரிப்போமாக (சங். 29 : 2 ; 100 : 4). இஸ்ரவேல் ஜனங்கள் சபைகூடிவரும்போது, முதற்கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கை யாகச் செலுத்தினது போல, நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியைக் கர்த்தருக்குச் செலுத்துவோமாக (எபி. 13 : 15). "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (II கொரி. 9 : 7). "மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே

அவர் சந்நிதிமுன் வாருங்கள்" என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 100 : 2). சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நாம் மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் தேவனைச் சேவிக்காமற்போனால், சகலமும் குறைவுபட்டு, மனவேதனையுடன் சத்துருக்களைச் சேவிக்க வேண்டியது வரும் (உபா. 28 : 47, 48). எனவே, நம்மை மீட்டுக்கொண்ட கர்த்தரை மகிழ்ச்சியுடன் ஆராதிக்கும்படி அவர் சமுகத்தில் நாம் ஒன்றுகூடுவோமாக. அத்துடன், நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலி யாக நாம் ஒப்புக்கொடுப்போமாக. இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாகும் (ரோமர் 12 : 1).

**இரண்டாவதாக,** பரிசுத்த உபவாச நாளை நியமித்து, தேவ ஜனங்களை தேவசமுகத்தில் கூட்டும்படி தேவன் கற்பித்திருந்தார்: "பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், ... ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையை யும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக" என்று தீர்க்கதரிசி உரைக்கிறான் (யோவேல் 2 : 15, 16). தேவஜனங்கள் உபவாசத்துடனும் கண்ணீருடனும் தேவசமுகத்தில் தங்கள் பாவங் களை அறிக்கை செய்யும்படியாகவே பரிசுத்த உபவாச நாளாகிய விசேஷித்த ஆசரிப்பு நியமிக்கப்பட்டிருந்தது. தேவஜனங்கள் தேவனை விட்டுப் பின்வாங்கி, அவருக்கு விரோதமான கிரியைகளைச் செய்த படியினால் தேவன் அவர்களைத் தண்டித்தார். பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான பூமியாகிய கானான், பாழும் வனாந்தரமுமாயிற்று. "பச்சைப் புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக் கிளி தின்றது; பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது. ... போஜனபலியும் பானபலியும் ... அற்றுப்போயின; ... புது திராட்சரசம் வற்றிப்போயிற்று; எண்ணெய் மாண்டுபோயிற்று . ... பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்" என்று தீர்க்கதரிசியாகிய யோவேல் கூறுகிறான் (யோவேல் 1 : 4, 9, 10, 14).

தேவசித்தம் செய்தலும், சேவையில் கர்த்தருக்காக வார்க்கப்பட்டுப் போகுதலும் அற்றுப்போய், தேவ ஜனங்களில் பலர் சுய விருப்பங்களை நிறைவேற்றுதலையும் சொகுசான ஜீவியத்தையும் தெரிந்துகொண்டிருக் கின்றனர். தேவ சமுகம் அவர்களுக்கு முன்பு போல், பரிசுத்த ஆவியினால் நிறைந்து, மகிழ்ந்து களிகூரும் இடமாயிருக்கிறதில்லை; அவர்கள் தேவகிருபையை விருதாவாக்கித் தங்கள் ஜீவியங்களில் தோல்வியைச்

சந்திக்கிறார்கள். இந்நிலைமையையே "போஜனபலியும் பானபலியும் ... அற்றுப்போயின; ... புது திராட்சரசம் வற்றிப்போயிற்று; எண்ணெய் மாண்டு போயிற்று" என்ற வார்த்தைகள் குறிக்கின்றன. இவையெல்லாவற்றி னிமித்தமும் தேவஜனங்கள் யாவரையும் தேவசமுகத்தில் கூட்டிச் சேர்த்து, உபவாசத்துடன் விண்ணப்பம்பண்ணும்படி தேவன் தம் ஜனங்களை எச்சரிக்கிறார். "என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள்" என்று தீர்க்கதரிசி கூறுகிறான் (வச. 13). தேவஜனங்களின் பின்மாற்ற நிலையினிமித்தமாக ஆசாரியராகிய ஊழியர்கள் இராக்காலங்களில் கண்ணீரோடே தேவ சமுகத்தில் நிற்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். தேவகோபம் தேவஜனங்களின்மேல் வராதபடிக்கு அவர்கள் தேவனுக்கும் தேவஜனங் களுக்குமிடையே நின்று அவர்களுக்காகப் பரிந்து பேச வேண்டியவர்கள் ஆவர். வனாந்தரத்தின் வழியே பிரயாணம் செய்துகொண்டிருந்த தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலர், ஒரு பொற்கன்றுக்குட்டியை உண்டாக்கி, அதைப் பணிந்துகொண்டு, தங்கள் துரோகத்தினால் தேவனுக்குக் கோபம் மூட்டினபோது, தேவன் அவர்களை அழிக்கச் சித்தமாயிருந்தார். அப் பொழுது தேவதாசனாகிய மோசே திறப்பின் வாயிலே நின்று, அவர் களுக்காகத் தேவனிடத்தில் பரிந்துபேசி, அவர்களை அவர் அழிக்காத படிக்குக் கெஞ்சிப் பிரார்த்தித்ததாக யாத்திராகமம் 32 : 10 - 13 - இல் நாம் காண்கிறோம். "அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்" (வச. 14). கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலி பீடத்துக்கும் நடுவே அழுது, ஜனங்களுக்காக வேண்டுதல் செய்யும்போது, "கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார்" (யோவேல் 2 : 17, 18). தேவஜனங்கள் தாங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய செழிப்பையும் மீண்டும் பெற்றுக் கொள்ளும்படியாகத் தேவனுடைய ஊழியக்காரரோடு ஒன்றுகூடி உப வாசித்து ஜெபம்பண்ண வேண்டும். இவ்வாறு தேவ ஜனங்களைத் தேவன் பக்கம் திரும்பச் செய்வதற்காக அவர்களைத் தேவசமுகத்தில் கூட்டிச் சேர்ப்பதையும் 'மிப்காத் என்னும் வாசல்' நினைவூட்டுகிறது.

**மூன்றாவதாக,** சாமுவேலின் நாட்களில், ஒரு சந்தர்ப்பத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தரால் தோற்கடிக்கப்பட்டவர்களாய்ப் புலம்பிக்கொண்டிருந்த வேளையில், தீர்க்கதரிசியாகிய சாமுவேல் அவர்களைத் தங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்பச் செய்து, அந்நிய தேவர்களை அவர்களை விட்டகற்றி, அவர்களுடைய இருதயங்களைக் கர்த்தருக்கு நேராக்கினான். இப்படி அவர்களைச் சுத்திகரித்தபின், அவன், "நான் உங்களுக்காகக் கர்த்தரை மன்றாடும்படிக்கு,

இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே கூட்டுங்கள்" என்றான் (I சாமு. 7 : 5). அவ்வாறே அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் ஒன்றுகூடி, உபவாசம் பண்ணி, பாவ அறிக்கை செய்துகொண்டிருந்தனர். அந்நேரத்தில் பெலிஸ்தர் மீண்டும் அவர்களுக்கு விரோதமாய் வந்தனர். அப்போது, "கர்த்தர் மகா பெரிய இடிமுழக்கங்களைப் பெலிஸ்தர்மேல் அந்நாளிலே முழங்கப்பண்ணி, அவர்களைக் கலங்கடித்ததினால், அவர்கள் இஸ்ர வேலுக்கு முன்பாகப் பட்டு விழுந்தார்கள்" (வச. 10). இது உபவாசத்தோடு தேவசமுகத்தில் கூடித் தங்களைச் சுத்திகரித்துக்கொள்வதினிமித்தம் தேவஜனங்களுக்குக் கிடைக்கும் ஜெயத்தைக் குறிக்கிறது. இஸ்ரவேலர் அன்று தேவசமுகத்தில் கூடிவந்தது ஒரு மாபெரும் ஜெயத்திற்கு வழிவகுத்ததுபோல, நாமும் நம் வழிகளை நேராக்கி, அவர் சமுகத்திற்குக் கடந்து செல்வோமாகில், நம்முடைய தோல்விகளையும் கர்த்தர் ஜெயமாக மாற்றுவார் என்பது திண்ணம். இவ்வாறு தேவசமுகத்தில் ஒன்றுகூடுவதால் உண்டாகும் ஜெயத்தையும் 'மிப்காத் என்னும் வாசல்' நமக்கு நினை வூட்டுகிறது.

**2. விசாரணையின் வாசல்:**

மிப்காத் என்னும் வாசல் 'விசாரணையின் வாசல்' (Inspection gate) என்றும் அழைக்கப்பட்டது. ஜனங்கள் நியாய விசாரணைக்கென்று அங்கு கூடுவது வழக்கமாயிருந்தது. நியாயாதிபதிகள் அவ்வாசலில் இருந்து ஜனங்களை நியாயம் விசாரித்துவந்தார்கள். "உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரங்கள்தோறும் உனக்குக் கொடுக்கும் வாசல்களிலெல்லாம், நியாயாதி பதிகளையும் தலைவரையும் ஏற்படுத்துவாயாக; அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்புச் செய்யக்கடவர்கள். நியாயத்தைப் புரட்டா திருப்பாயாக; முகதாட்சிணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக; பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதி மான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும். ... தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நீதியையே பின்பற்றுவாயாக" என நாம் வாசிக்கிறோம் (உபா. 16 : 18 - 20). "நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால்: அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (சக. 8 : 16).

புதிய ஏற்பாட்டுச் சபையின் தேவஜனங்கள் இனி வருங்காலத்தில் உலகத்தையும், தேவதூதர்களையும் நியாயந்தீர்க்க வேண்டியவர்களாவர் (I கொரி. 6 : 2, 3 ; வெளி. 20 : 4). நியாயாதிபதிகள் நீதியுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதைத் தேவன் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறுகிறார். நாம் மற்றவர்களைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லும் முன்னதாக, நம்மை

நாமே முதலாவதாக நிதானித்தறிய வேண்டும். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (I கொரி. 11 : 31). "நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" என்று நமதாண்டவர் உரைத்திருக்கிறார் (மத். 7 : 2). தங்களை முதலாவது நிதானித்தறியாமல், மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்க்கிறவர்களைக் குறித்து அப். பவுல், "நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்" என்று எழுதுகிறார் (ரோமர் 2 : 1). இதையே நமதருமை ஆண்டவராகிய இயேசுவும், "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிற தென்ன? ... மாயக்காரனே ! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" என்று கடிந்துரைக்கிறார் (மத். 7 : 3, 5). ஆகையால் நாம் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவர்களாயிருக்கப் பிரயாசப்படுவோமாக.

"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்" (I கொரி. 2 : 15). நாம் ஆவிக்குரியவர்களாயிருந்தால் மட்டுமே சகலத்தையும் குறித்த சரியான பகுத்தறிவும் நிதானிப்பும் உடையவர்களாயிருப்போம்; தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல் நீதியின்படி தீர்ப்புச் செய்கிறவர்களா யுமிருப்போம் (யோவான் 7 : 24). மெய்யாய்ப் பூமியிலே நியாயஞ்செய்கிற ஒருவர் உண்டு என்ற அறிவும் (சங். 58 : 11), நம்மெல்லாருக்கும் மேலாக நீதியுள்ள நியாயாதிபதி ஒருவர் வீற்றிருந்து சகலத்தையும் அறிகிறார் என்ற உணர்வும் நம்மில் இருக்குமாயின், நாம் தேவபயத்துடன் ஜீவித்து, யதார்த்தமாய், சத்தியத்தின்படி தீர்ப்புச் செய்கிறவர்களாயிருப்போம். கர்த்தர் தாமே நியாயம் விசாரிக்க உட்காருகிறவனுக்கு நியாயத்தின் ஆவியா யிருப்பார் என தீர்க்கதரிசியாகிய ஏசாயா கூறுகிறான் (ஏசாயா 28 : 6). "சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்" என்று எழுதப்பட்டுள்ளதே! (யாக். 5 : 9).

விசாரணையின் வாசல், உலகத்தின் முடிவிலே முதலாம் உயிர்த் தெழுதலில் பங்குபெறாத மாந்தர் அனைவரும் நியாய விசாரணைக்கென்று ஒன்று கூட்டப்படும் 'மகா விசாரணையின் நாளையும்' நமக்கு நினைவூட்டுகின்றது. அப். யோவான் ஆவிக்குள்ளாகி, இனி சம்பவிக்கப்

போகிற காரியங்களைத் தரிசித்தபோது கீழ்க்காணும் காட்சியைத் தான் கண்டதாக எழுதுகிறார்: "பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத் தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; ... மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங் களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியை களுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். ... ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி. 20 : 11, 12, 15). இது வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பின் நாள் ஆகும். "நான் உன்னில் நியாயஞ்செய்யும் நாட்களில் உன் இருதயம் தாங்குமோ? அப்பொழுது உன் கைகள் திடமாயிருக்குமோ?" என்று கர்த்தர் கேட்கிறார் (எசே. 22 : 14). நண்பனே ! "ஒவ்வொரு கிரியை யையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" (பிர. 12 : 14). "இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்" என ஞானி கேட்கிறான் (நீதி. 11 : 31). "சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" (பிர. 3 : 17). நம் இருதயத்தின் யோசனைகளும், நாவின் வார்த்தைகளும், செயல்கள் ஒவ்வொன்றும் சர்வலோக நியாயாதிபதியாகிய தேவனின் நியாயத்தீர்ப்புக்குத் தப்புவதில்லை! (I கொரி. 4 : 5 ; மத். 12 : 36 ; ரோமர் 2 : 16). ஆகவே, நம் ஜீவியத்தைக் குறித்து நாம் மிகவும் கவனமாயிருப்போமாக. "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" என்று கூறப்பட்டுள்ளதே! (ரோமர் 14 : 12). கிருபையின் காலத்தில் ஜீவிக்கிற தேவஜனங்களாகிய நாம், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்க்கப்படும்படியாக அல்ல, கர்த்தரின் இரகசிய வருகையில் மாசற்றவர்களாய் அவரைச் சந்திக்கும்படியாகவே ஆயத்தப்பட வேண்டியவர்களானபடியால், நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் ! ஆம் ! நாம் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருப் போமாக (II பேதுரு 3 : 11, 14).

### 3. போர்ச்சேவகர் தெரிந்துகொள்ளப்படும் வாசல் :

மிப்காத் என்னும் வாசலைக் குறித்து வேதபண்டிதர்கள் தெரிவிக்கும் மற்றொரு விவரமும் உண்டு. ஜனங்கள் ஒன்றுகூடும்படி நியமிக்கப்

பட்டிருந்த அந்த வாசல், தேசத்தின் ஆண்மக்கள் இராணுவத்தில் புதிதாகச் சேர்க்கப்படும்படி ஒன்றுகூடும் இடமாக உபயோகிக்கப்பட்டுவந்ததாக அவர்கள் கூறுகின்றனர் (Recruiting or Conscription gate).

கர்த்தருடைய இராணுவத்தில் (சேவையில்) சேவகனாகச் சேர்க்கப்படும் ஒருவனில் தேவன் முக்கியமான சில தகுதிகளை எதிர்பார்க்கிறார்: "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். ... உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்று கர்த்தராகிய இயேசு, தம் சேவையில் சேர விரும்புகிற ஒருவனுக்கிருக்க வேண்டிய தகுதியைக் குறித்துப் பேசுகிறார் (லூக்கா 14 : 26, 33). மேலும், "தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்" என அப். பவுல் கூறுகிறார் (II தீமோ. 2 : 4). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் மத்தியில், கீழ்க்காணும் **நான்கு** கூட்டத்தினரை யுத்தத்திற்குச் செல்லத் தகுதியற்றவர்கள் என்று கணித்திருந்தார் (உபா. 20 : 5 - 8) :

(i) **புதுவீட்டைக் கட்டி, அதைப் பிரதிஷ்டைபண்ணாதிருக்கிறவன்** - இவன் சொகுசான ஜீவனம் பண்ணும்படியாகவும், நிம்மதியாக இளைப்பாறும்படியாகவும் தனக்கு ஒரு வீட்டைக் கட்டியிருக்கிறான் - இது, ஒருவன் தன் ஜீவனைச் சிநேகிப்பதைக் குறிக்கிறது (லூக்கா 14 : 26 ; யோவான் 12 : 25). அவன் யுத்தத்திற்குப் போனாலும், அவனுடைய மனதெல்லாம் தன் வீட்டின் மேலேயே இருக்கும்.

(ii) **திராட்சத்தோட்டத்தை நாட்டி, அதை அனுபவியாதிருக்கிறவன்** - திராட்சரசம் உலக சந்தோஷத்தைக் குறிக்கிறது (நீதி. 20 : 1; பிர. 2 : 3, 4). உலக சந்தோஷங்களை அனுபவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இவன் திராட்சத்தோட்டத்தை நாட்டியிருக்கிறான். உலக சிற்றின்பங்களில் உல்லாசமாய் வாழ விரும்பும் ஒருவன், சிலுவையைச் சுமந்து கொண்டு கர்த்தரைப் பின்பற்றப் பாத்திரன் அல்ல (யாக். 4 : 4).

(iii) **ஒரு பெண்ணைத் தனக்கு நியமித்துக்கொண்டு, அவளை விவாகம்பண்ணாதிருக்கிறவன்** - இவன் மாம்சீக சந்தோஷத்தை நாடுகிறவன் - மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்கள் பெண் கொள்வதும் இல்லை; பெண் கொடுப்பதுமில்லை (லூக்கா 20 : 35). இவனோ பூமிக்குரிய

குடும்ப வாழ்க்கையில் பற்றுள்ளவனாயும், மாம்சீக சந்தோஷத்தில் நாட்டமுள்ளவனாயும் இருப்பதால், கர்த்தரின் யுத்தத்தில் தன் முழு மனதையும் செலுத்தி வைராக்கியமாகப் போராடக் கூடாதவனா யிருப்பான் (I கொரி. 7 : 32, 33).

(iv) **பயங்காளியும் திடனற்றவனுமாயிருக்கிறவன்** - இவன் பயமும் திகிலும் உள்ளவனாவான். இவன் தன்னிலுள்ள பயத்தினிமித்தம் யுத்தத்தில் முழுமையாய் ஈடுபடாதிருப்பது மாத்திரமல்ல, கர்த்தருடைய சேனைக்கு அவரால் யுத்தத்தில் ஜெயம் கிடைத்த பின், "என் கை என்னை ரட்சித்தது" என தன் மாம்ச பெலத்தில் மேன்மைபாராட்டிக் கொண்டிருப்பான். இப்படிப்பட்டவர்களும் கர்த்தருடைய யுத்தத் திற்குப் பாத்திரரல்லர் (நியா. 7 : 2, 3 ; I கொரி. 1 : 29).

அருமையானவர்களே ! இந்த நான்கு கூட்டத்தினரும் கர்த்த ருடைய சேனையில் சேர்ந்து யுத்தம் செய்ய முன்வந்தாலும், அவர்கள் அவரால் நிராகரிக்கப்படுகின்றனர். அவர்கள் ஒருபுறம் தேவ ஜனங் களுடன் சேர்ந்து கர்த்தருடைய யுத்தத்தைச் செய்ய விருப்பமுள்ள வர்களாயிருப்பினும், மறுபுறம் தங்கள் ஜீவனை வெறுக்காதவர்களாயும், உலக சிற்றின்பங்களையும் மாம்சீக சந்தோஷங்களையும் வெறுக்க மனமின்றி அவற்றின் மேல் நாட்டமுள்ளவர்களாயும், தங்கள் சுய பெலத்திலும் திறமைகளிலும் சார்ந்து அவற்றில் மேன்மைபாராட்டு கிறவர்களாயும் இருக்கின்றனர். "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" என திருவசனம் கூறுகிறது (யாக். 1 : 8). இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. அப்படிச் செய்தால் அவன் ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப் பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான். "தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" என்று கர்த்தராகிய இயேசு இதைத் தெளிவாக விளக்குகிறார் (லூக்கா 16 : 13). எனவே கர்த்தரின் இராணுவத்தில் சேர விரும்புகிறவர்கள் ஏக சிந்தையுள்ளவர்களாய், தேவனுடைய ராஜ்யத்திற் காகவும், அதின் உபதேச சட்டங்களுக்காகவும் போராடும்படி தங்கள் ஜீவனைப் பணயம் வைக்க முன்வர வேண்டும். கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவகராகத் தீங்கனுபவிக்கவும் அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இத்தகைய நல்ல போர்ச்சேவகரே பரமபிதாவினால் கனம் பண்ணப்படுவர். "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக் காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்

கிறாரே! (யோவான் 12 : 26). "ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன். அப்பொழுது ... தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்" (மல். 3 : 17, 18); "நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்கு முரிய இடத்தையும் கீர்த்தியையும்பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்" (ஏசாயா 56 : 5) - இவை தேவன் தம்முடைய ஊழியர்களுக்கு அளித்திருக்கும் விசேஷித்த வாக்குத்தத்தங்களாகும். தேவனுடைய இராணுவத்தின் உத்தம சேவகனொருவன் வெற்றிகரமாய்த் தன் சேவையை ஆற்றி விண்ணில் சேரும் நன்னாளில், அவனை வரவேற்கும் பரிசுத்த தூதர்களின் கூட்டம் அவனைச் சூழ்ந்துகொள்ள, அவர்களின் மத்தியில் நின்று நம் சேனையின் அதிபதி, "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, ... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25 : 21) என்று அவனை வாழ்த்தி வரவேற்கையில் அது அவனுக்கு எவ்வளவு பரவசமளிப்பதாயிருக்கும் !

**மிப்காத் என்னும் வாசலைக் கட்டியவன்:**

"*தட்டானின் குமாரன் மல்கியா மிப்காத் என்னும் வாசலுக்கு எதிரே... இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்*" (நெகே. 3 : 31).

மிப்காத் என்னும் வாசலையும் அதையடுத்த பகுதிகளையும் பழுதுபார்த்துக் கட்டினவன் ***மல்கியா*** (Malchiah) என்பவன் ஆவான். இவன் ஒரு தட்டானின் (goldsmith) குமாரனாயிருந்தும், இவ்வாசலைக் கட்டும்படி நெகேமியாவுடன் ஒன்றுபட்டது கவனிக்கப்படத்தக்கதே. அவ்வாசலி லிருந்து கோடியின் மேல்வீடுமட்டாக அவன் பழுதுபார்த்துக் கட்டி னான். ஆட்டுவாசலில் தொடங்கப்பட்ட அலங்கத்தின் கட்டட வேலை யானது, இறுதியாக இந்த வாசல் வரை பலருடைய ஒத்துழைப்பால் செவ்வையாகக் கட்டி முடிக்கப்பட்டது. மல்கியாவுக்குப் பின்னாக, கோடியின் மேல்வீட்டுக்கும் ஆட்டுவாசலுக்கும் நடுவே இருந்த மீதியான அலங்கத்தின் பகுதியைத் தட்டாரும் மளிகைக்காரரும் (merchants) சேர்ந்து கட்டி முடித்தார்கள் (நெகே. 3 : 32). இவ்விதம் அலங்கத்தைக் கட்டும் வேலை நிறைவு பெற்றது. மல்கியா, கடைசியாகக் கட்டிமுடிக்கப்பட வேண்டியதாயிருந்த இவ்வாசலைக் கட்டும்படி உற்சாகமடைந்து ஊக்கத் துடன் முன்வந்தபோது, மற்றத் தட்டார் அனைவரும் ஒன்றுகூடி, அதைத் தொடர்ந்திருந்த மதிலின் மீதிப் பகுதிகளைக் கட்டும்படி முன்வந்தனர். அவர்களுடைய உற்சாகம், கர்த்தருடைய வேலையைச் செய்யும்படி

மளிகைக்காரரையும் தட்டி எழுப்பிற்று! அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, அலங்கத்தில் கட்டப்படாமல் மீந்திருந்த பகுதியைக் கட்டி முடித்தனர். இவ்வாறு அலங்கத்தின் கட்டட வேலை முற்றுப்பெற்றது. இவ்விதம் யூதா தேசத்திலிருந்த தேவஜனங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படவே, எருசலேமின் அலங்கம் தன் ஸ்தானத்தில் முன்போல் உயர்ந்தோங்கி நின்றது! உலோகத் தொழிலில் மாத்திரமே பழக்கமுள்ளவனாயிருந்த மல்கியா இவ்வாசலைக் கட்டும்படி மனமுவந்து முன்வந்தது, அவனுடைய மன உற்சாகத்தையும், விசுவாசத்தையும், ஒத்துழைப்பையும் காண்பிக்கிறது. தேவகிருபையினால் அவன் அதைக் கட்டி முடித்தான். அருமையானவர்களே ! கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் சேவை, நம்முடைய பெலன், அறிவு, அனுபவம் இவற்றுக்கு முற்றிலும் அப்பாற்பட்டதாயிருப்பினும், அவரே நம்முடைய ஞானமும் பெலனும் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறவருமாயிருப்பதால், நாம் அவரையே சார்ந்து, அவருடைய கிருபையைப் பற்றிக்கொண்டு, அதைச் செய்யத் தைரியத்துடன் முன்வருவோமாக. தட்டானாகிய மல்கியா, தேவன் அளித்த ஏவுதலைத் தட்டாமல் ஏற்றுக்கொண்டு, விசுவாசத்துடன் கட்டட வேலை செய்யும்படி முன்வந்து, அப்பகுதியைக் கட்டி முடித்தது போல, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறதை நிறைவேற்றும்படி நாமும் தயக்கமின்றி முன்வருவோமாக. “கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக” (I கொரி. 15 : 58). “நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்” (II கொரி. 9 : 8). ஆகவே அவரது கிருபையை நம்பி, நம் ஜீவியத்தில் இவ்வாசலையும் கட்டியெழுப்பும்படி நாம் எழும்புவோமாக. அப்பொழுது நம்மைப் பின்தொடர்ந்து கர்த்தரின் வேலையைக் ‘கிருபையினால்’ செய்து நிறைவேற்றும் அநேகரைக் கர்த்தர் எழுப்புவார். அல்லேலூயா !

**அதிகாரம் VII**

# அலங்கப் பிரதிஷ்டை

*"எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுகையில், ... தேவன் தங்களுக்கு மகா சந்தோஷத்தை உண்டாக்கினதினால் மகிழ்ச்சியா யிருந்தார்கள்; ... எருசலேமின் களிப்புத் தூரத்திலே கேட்கப்பட்டது"* (நெகே. 12 : 27, 43).

எருசலேமின் அலங்கமும் அதின் பன்னிரு வாசல்களும் பல எதிர்ப்புகள், இடையூறுகள் இவற்றின் மத்தியிலும் வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்டன. அதன் பின்னர், நெகேமியாவும் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த தேவஜனங்கள் அனைவரும் சேர்ந்து அலங்கப் பிரதிஷ்டையைச் சந்தோஷத்துடனே கொண்டாடினர். "எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணுகையில், துதியினாலும் பாடலினாலும், கைத்தாளம் தம்புரு சுரமண்டலம் முதலான கீதவாத்தியங்களினாலும், பிரதிஷ்டையை மகிழ்ச்சியோடே கொண்டாட எல்லா இடங்களிலும் இருக்கிற லேவியரை எருசலேமுக்கு வரும்படி தேடினார்கள்" (நெகே. 12 : 27). அப்படியே அங்கு ஒருமித்துக் குழுமிய "ஆசாரியரும் லேவியரும் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, ஜனத்தையும் பட்டணவாசல்களையும் அலங்கத்தையும் சுத்தம்பண்ணினார்கள்" (வச. 30). இவ்வாறு எருசலேமின் அலங்கமானது, முழுவதும் பூரணமாகக் கட்டி முடிக்கப்பட்டதாய், முடிவாகச் செவ்வனே சுத்தம் செய்யப்பட்டதாய், பிரதிஷ்டையின் நாளுக்கென்று ஆயத்தமாயிருந்தது. நெகேமியா ஜனங்களை இரண்டு பெரிய கூட்டங்களாகப் பிரித்து, அவர்களை அலங்கத்தின்மேல் நிறுத்தினான். பள்ளத்தாக்கின் வாசலுக்கு அருகிலிருந்து இரு பவனிகளும் புறப்பட்டு, ஒன்றுக்கொன்று எதிர்த் திசைகளில் அலங்கத்தின் மேல் நகரத்தைச் சுற்றிச் சென்றன. முதல் பிரிவினரை வேதபாரகனாகிய எஸ்றாவும், இரண்டாம் பிரிவினரை நெகேமியாவும் வழிநடத்தினர். அவர்களுக்கு உதவியாக, பிரபுக்களும், பூரிகைகளைப் பிடிக்கிற ஆசாரியர்களும், பாடகர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

எஸ்றாவுடன் பவனியாகச் சென்ற முதல் கூட்டத்தார், அலங்கத்தின் மேல், தெற்கு நோக்கி நடந்து சென்று, முறையே பள்ளத்தாக்கின் வாசலையும், குப்பைமேட்டு வாசலையும், ஊருணி வாசலையும் கடந்து, கிழக்கே தண்ணீர் வாசலில் வந்து நின்றனர். நெகேமியாவுடன் பவனி யாகச் சென்ற துதி செய்கிற இரண்டாம் கூட்டத்தார், எதிர்த்திசையில், சூளைகளின் கொம்மையைக் கடந்து, அகலமான மதில் மட்டும் போய், அங்கிருந்து முறையே எப்பிராயீம் வாசல், பழைய வாசல், மீன் வாசல், ஆட்டு வாசல் ஆகியவற்றையும், கிழக்கே மிப்காத் என்னும் வாசல், கிழக்கு வாசல், குதிரை வாசல் ஆகிய வாசல்களையும் கிரமமாகக் கடந்து, காவல் வீட்டு வாசலிலே வந்து நின்றார்கள் (நெகே. 12 : 31 - 39). [காவல் வீட்டு வாசல், அலங்கத்தில் தண்ணீர் வாசலுக்கடுத்து இருந்தது]. அதற்குப் பின்பு, துதி செய்கிற இரண்டு கூட்டத்தாரும் ஒன்றாகச் சேர்ந்து நகரத்தினுள் பிரவேசித்து, ஒரே பவனியாகத் தேவனுடைய ஆலயத்திலே வந்து நின்றார்கள். இவ்வாறு, பள்ளத்தாக்கின் வாசலினருகேயிருந்து புறப்பட்டு, இரு பிரிவுகளாக அலங்கத்தைச் சுற்றிவந்த இரு பவனிகளும் சேர்ந்து தேவாலயத்தில் முடிவுற்றன.

தேவாலயத்தில் யாவரும் சத்தமாகப் பாடி, "அந்நாளிலே மிகுதி யான பலிகளைச் செலுத்தி, தேவன் தங்களுக்கு மகா சந்தோஷத்தை உண்டாக்கினதினால் மகிழ்ச்சியாயிருந்தார்கள்; ஸ்திரீகளும் பிள்ளைகளுங் கூடக் களிகூர்ந்தார்கள்; எருசலேமின் களிப்புத் தூரத்திலே கேட்கப் பட்டது" (வச. 42, 43). "இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்பி, அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கஞ்செய்வேன்; நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்பட்டு, அரமனை முன்போல நிலைப்படும். அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும்; அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப்போவதில்லை; அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை" என்று தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் மூலமாகத் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு உரைத்திருந்த வாக்கு அன்றையத் தினம் நிறைவேறிற்று ! (எரே. 30 : 18, 19).

### இரு பெருங்கூட்டத்தார்:

அலங்கத்தைக் கட்டி முடித்து, அதின்மேல் வலம் வருதல் என்பது, நாம் இரட்சிப்பின் ஏழு படிகளிலும் வளர்ந்து, கிறிஸ்துவினுடைய நிறை வான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகி, அவருடைய திவ்ய சுபாவங்களில் எப்பக்கமும் நிறைவுள்ளவர்களாய், முற்றும் ஜெயங் கொண்டவர்களாய், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய், கிறிஸ்துவின் நாளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அனுபவத்தைக் குறிக்கும் (எபே. 4 : 11 ; I கொரி. 1 : 5, 7 ; ரோமர் 8 : 37 ; எபே. 6 : 13). நித்திரையடைந்த

வர்களினின்றும், உயிரோடிருக்கிறவர்களினின்றும் இந்நிலையை எய்திய ஒரு கூட்டம் பரிசுத்தவான்கள், எக்காளம் தொனிக்கையில் இமைப் பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு, கிறிஸ்துவுடனே மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இதனையே, "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூப மாக்கப்படுவோம்" என்று அப். பவுல் குறிப்பிடுகிறார் (I கொரி. 15 : 52). அந்நாளில், கிறிஸ்துவுக்குள் ஜீவித்து நித்திரையடைந்தவர்களும், கிறிஸ்து வுக்குள் ஜீவிக்கிறவர்களுமான பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் நடுவானில் சந்திப்பார்கள். அதிசீக்கிரத்தில் நடைபெறவிருக்கும் இச்சம் பவத்தைக் குறித்து, "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். ... கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வ தில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூத னுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது (I தெச. 4 : 14 - 17). எருசலேமின் அலங்கமும் அதின் வாசல்களும் முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்டுப் பணிதீர்ந்த பின்னர், அதின் அலங்கப் பிரதிஷ்டையின் நாளில், அலங்கத்தின்மேல் வலம் வந்த இரு பெருங்கூட்டத்தினரும் அலங்கத்தின் மத்தியில், தண்ணீர் வாசலுக்கும் காவல் வீட்டு வாசலுக்கு மிடையே ஒன்றுகூடி, பின்னர் நகரத்தினுள் பிரவேசித்து, தேவாலயத்திற்கு ஒருமித்துச் சென்று, குதூகலத்துடனும் ஆர்ப்பரிப்புடனும் பூரிகைதொனி யுடனும் வெற்றி முழக்கத்துடனும் அதின் பிரதிஷ்டையைச் சிறப்பாகக் கொண்டாடினர். அவ்வாறே, பூரண பரிசுத்தத்தில் தங்களைக் காத்துக் கொண்டு, ஆவியானவரின் நடத்துதலுக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக் கொடுத்திருந்த, கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் உயிரோடிருக் கிறவர்களுமான பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் ஒன்றுகூடி, என்றென்றும் அவ ருடனேகூட புதிய எருசலேமில் வாசம்பண்ணும்படி நித்தியத்தில் பிரவேசிப்பார்கள். இப்பூமியில் அவருடைய கற்பனைகளின்படியே ஜீவித்தவர்கள், வாசல்கள் வழியாய் அந்த நகரத்திற்குள் பிரவேசிப்பார்கள் (வெளி. 22 : 14). அன்று பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பமும் ஒன்றாகக் கூட்டப்படும்! நாம் நித்திய நித்தியமாக என்றென்றும் கர்த்தருடனே வாசம்பண்ணுவோம்!

**மனமகிழ்ச்சியின் நாள்:**

"நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு (Eng. - building up - கட்டியெழுப்பிக்கொண்டு), பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள். ... தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக" என அப். யூதா எழுதுகிறார் (வச. 20 - 25). தேவனுடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே மாசற்றவர்களாய் நிறுத்தப்படும்படியாகவே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் கட்டியெழுப்பிவருகிறோம். நம் அனுதின ஜீவியத்தில், இரட்சிப்பின் ஒவ்வொரு படியிலும் தேவன் நம்மில் செய்யும் தொடர்ச்சியான இரட்சிப்பின் வேலைக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, அதில் நிலைத்திருந்து வளருவதின் மூலம் நம் ஜீவியத்தில் இரட்சிப்பாகிய அலங்கம் (மதில்) கட்டி முடிக்கப்பட்டு, உயர்ந்தோங்கி நிற்கும் என நாம் ஏற்கனவே கண்டோம் (அதி. II - 'எருசலேமின் அலங்கம்'). அவ்விதம் இரட்சிப்பின் படிகளில் வளர்ந்து பூரணமாக்கப்பட்டவர்களாய், கர்த்தருடைய இரகசிய வருகைக்கென்று பாவமில்லாமல் ஆவலோடு காத்திருப்பவர்களின் மண்ணான சரீரம் ஒரு இமைப்பொழுதினில் மறுரூபமாக்கப்படும். அவ்வாறு சரீரம் மறுரூபமடைவதைக் குறித்தே, "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்" என அப்போஸ்தலன் இங்கு எழுதுகிறார். இதையே, "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபை" என அப். பேதுருவும் குறிப்பிடுகிறார் (I பேதுரு 1 : 13). எருசலேமின் அலங்கம் பிரதிஷ்டை செய்யப்படுமுன், அதில் கட்டி முடிக்கப்பட வேண்டிய பகுதிகள் எதுவும் மீந்திருக்கவில்லை. அலங்கம் எப்பக்கமும் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அத்துடன், அதில் முடிவாகச் சுத்தம்பண்ணப்பட வேண்டிய பகுதி எதுவும் மீந்திருக்கவுமில்லை. அலங்கமும் அதின் வாசல்களும் பிரதிஷ்டைக்கென்று கட்டி முடிக்கப்பட்டு, சுத்தம்பண்ணப்பட்டு, செவ்வனே ஆயத்தமாக்கப்பட்டிருந்தன. அதன் பின்னரே அவர்கள் அதின் பிரதிஷ்டையைக் கொண்டாடினர். அவ்வாறே நம்முடைய ஜீவியத்தை நாம் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் கட்டியெழுப்பிக்கொண்டு, கறை, திரை, பிழை முதலானவைகள் ஒன்றுமில்லாதவர்களாய், கிறிஸ்து

வின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாய்க் காத்திருக்க வேண்டும். பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசங் களில் ஒரு சிறு பகுதியேனும் நம்மில் அனுபவமாக்கப்படாமல் மீந்தி ருக்கலாகாது. ஏதோ ஒரு உபதேசத்தின் மேல் அல்ல, பரலோகத்தின் மகா பரிசுத்த ஸ்தலமாகிய புதிய எருசலேமில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடிய கிறிஸ்துவின் பூரண உபதேசமாகிய, சரியான அஸ்தி பாரத்தின் மேலேயே, நம் ஜீவியம் கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும். சாலொமோனின் தேவாலயம், பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது என நாம் வாசிக்கிறோம் (I இராஜா. 6 : 7). புதிய எருச லேமின் ஜீவனுள்ள கற்களாக உருவாக்கப்பட்டுவருகிற நாம், நித்தியத்தில் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் இடத்தில் சரியாய்ப் பொருந்தத்தக்கதாக, இப்பூமியில்தானே பணிதீர்க்கப்படுகிறோம். நம் ஜீவியத்தின் பூரணமாகு தலில், இப்பூமியில் முற்றுப்பெறாத எந்த ஒரு வேலையையும், பரலோகத் துக்குச் சென்ற பின் நாம் பூர்த்தி செய்துகொள்ள இயலாது. இப்பூமியில் தன் ஜீவிய காலத்தில் விலையேறப்பெற்ற கல்லாக மாற்றப்பட்ட ஒருவன், அதன் முடிவிலே, தன் ஜீவியத்தில் இனி கட்டியெழுப்பப்பட வேண்டிய பகுதிகள் ஏதும் மீந்திராமல், பணிதீர்க்கப்பட்டவனாய் மகிமைக்குள் பிரவேசித்து, ஏற்கனவே பணிதீர்த்துக் கொண்டுவரப்பட்ட கற்களாகப் பரலோகத்தில் துலங்கும் பரிசுத்தவான்களுடன் ஒன்றாக இணைந்துவிடு கிறான். இப்படிப் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களாகிய பணிதீர்க்கப் பட்ட கற்களினால் இசைவிணைப்பாய்க் கட்டப்பட்ட நகரமே புதிய எருசலேமாகும். விசுவாசம், அன்பு, பரிசுத்தம், தேவசித்தம் செய்தல் ஆகிய நாற்புறத்திலும் பூரணராகி, சகல நற்பண்புகளிலும் தேறினவர் களாக்கப்பட்ட பரிசுத்தவான்களின் தொகுப்பே புதிய எருசலேமாகும். இதையே, அந்த நகரம் சதுரமாயிருந்தது என்றும், அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தன என்றும் அப். யோவான் வருணிக் கிறார் (வெளி. 21 : 16). ஆசரிப்புக் கூடாரத்தில் திரைச்சீலைக்குள்ளே இருந்த மகா பரிசுத்த ஸ்தலமும் பத்து முழ நீளமும், பத்து முழ அகலமும், பத்து முழ உயரமும் கொண்ட சமசதுரமான இடமாகும். இது, நித்தியத்திலுள்ள சமசதுரமான பட்டணமாகிய புதிய எருசலேமுக்கு நிழலாட்டமாயிருக்கிறது.

தேவபிள்ளைகளின் ஜீவியத்தில் இரட்சிப்பின் படிகள் அனைத்தும் உயர்ந்தோங்கி நிற்கும் ஒரு மதிலைப் போல கிரமமாகக் கட்டி யெழுப்பப்பட்டு, அவ்வேலை நிறைவுறும் நாள் எவ்வளவு குதூகலம் நிறைந்த நன்னாளாயிருக்கும்! பூரணமாக்கப்பட்டவர்களாய் அவர்கள் வெற்றிகரமாகக் கிறிஸ்துவைச் சந்திக்கும் அந்நாளில், அவர்கள் மகிழ்

கொண்டாடுவது மாத்திரமல்ல, அந்த நற்கிரியையை அவர்களில் தொடங்கி, அதை அவர்களது ஜீவியத்தில் முடிய நடத்திவந்த திரித்துவ தேவனும், அவர்களுக்குப் பணிவிடை ஆவிகளாயிருந்து செயல் பட்டுவந்த பரிசுத்த தூதர்களும் அவர்களோடு சேர்ந்து அந்நாளைக் கொண்டாடுவர் ! "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்" என்று நம் அருமை இரட்சகர் மொழிந்தருளினார் (லூக்கா 15 : 7). அவ்வாறாயின், பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் வெற்றியுடன் பரலோகத்தில் பிரவேசிக்கும்போது முழுப் பரலோகமும் எவ்வளவதிகமாய்க் கெம்பீரித்து மகிழும் !

இப்பூமியில் தேவஜனங்களாகிய நாம் பயத்துடனே கர்த்தரைச் சேவித்து, நடுக்கத்துடனே களிகூருகிறோம். பல பாடுகளின் மத்தியிலும், நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறோம். நாம் "மிகுந்த பொறுமை யிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், ... துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படு கிறவர்களாகவும்" இருக்கிறோம் (II கொரி. 6 : 4, 10). மறுமையைக் குறித்த வெளிப்படுத்தலே எல்லா விபரீதமான சூழ்நிலைகளிலும் நம்மை மகிழ்ச்சியடையச் செய்கிறது. 'கொஞ்சக் காலம் பாடநுபவித்தல்', 'அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம்', 'பத்து நாள் உபத்திரவம்' என்றெல்லாம் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை களில் நாம் கடந்து செல்லும்போது, இவைகளுக்கப்பால், அப்பாதைகளின் முடிவில், மறுமையில் நமக்கு வைக்கப்பட்டுள்ள அழியாத சுதந்தரம், நித்திய கன மகிமை, ஜீவகிரீடம் ஆகியவற்றை நம் விசுவாசக் கண் களால் கண்டு மகிழ்ச்சியடைகிறோம் (I பேதுரு 5 : 10 ; II கொரி. 4 : 17; வெளி. 2 : 10). நாம் 'என்றென்றும் நம் இயேசுவோடுகூட இருப்போம்' என்ற உணர்வே, பல வேதனைகள், துன்பங்களின் மத்தியிலும், சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர் களாய் நம்மைக் களிகூரச் செய்கிறது (I பேதுரு 1 : 6, 8). ஆனால் கிறிஸ்துவின் வருகையின் நாளிலோ இனி எந்தச் சஞ்சலமுமின்றி நித்திய மகிழ்ச்சியை நாம் அடைவோம்! "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடை வார்கள் ; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசாயா 51 : 11), "மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்" (ஏசாயா 62 : 5) என்ற வேதவாக்கியங்கள் அன்று எழுத்தின்படியே நம்மில் நிறைவேறும்!

கிறிஸ்துவின் சபையானது "தன் புருஷனுக்காக அலங்கரிக்கப் பட்ட மணவாட்டியைப் போல" ஆயத்தமாக்கப்பட்டதாய் அவரைச் சந்திக்கும் நாள், இதோ, நெருங்கி வந்துவிட்டது ! (வெளி. 21 : 2). "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" என்ற சத்தம் விண்ணில் தொனிக்கும் நாள் அது ! (வெளி. 19 : 7). முழுப் பரலோகமும் ஆவலுடன் எதிர்நோக்கி யிருக்கும் ஆட்டுக்குட்டியானவரின் மணநாள், பரலோகமெங்கும் மகிமையாகக் கொண்டாடப்படும்போது, புதிய எருசலேமின் களிப்பு புதிய வானத்திலும் புதிய பூமியிலும் எதிரொலிக்கும் ! எருசலேமின் களிப்பு வெகுதூரத்திலே கேட்கப்படும் ! அல்லேலூயா !

## அதிகாரம் VIII

# புதிய எருசலேமின் மதிலும் வாசல்களும்

*"யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை ... கண்டேன்"; "அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது. நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; ... பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது"* (வெளி. 21 : 2, 18 - 21).

சத்துருக்களால் இடிக்கப்பட்டுப்போன எழுத்தின்படியான எருசலேமின் மதிலையும் அதின் வாசல்களையும் நெகேமியாவின் காலத்தில் தேவஜனங்கள் மீண்டுமாகக் கட்டியெழுப்பினதைக் குறித்தும், அது பிரதிஷ்டை செய்யப்பட்டதைக் குறித்தும் நாம் இது வரை கவனித்தோம். ஆவிக்குரிய எருசலேமாகிய சபையில் அவை எவற்றைக் குறிக்கின்றன என்றும், அவை கட்டி எழுப்பப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டிய விதங்களைக் குறித்தும் நாம் தியானித்தோம். அபிஷேகம் பெற்ற தேவ ஜனங்களில் அவ்வேலை நடந்தேறி, பணிதீர்க்கப்பட்ட பின்னர், அவர்கள் நித்தியத்தில் தேவமகிமையை அடைந்த புதிய எருசலேமாக வெளிப் படுவார்கள். "பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான். அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்

களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன" என அப். யோவான் எழுதுகிறார் (வெளி. 21 : 10 - 14).

நித்திய வாசஸ்தலங்களுள் புதிய எருசலேமானது மேன்மையான ஓர் இடமாகும். தேவனும் ஆட்டுக்குட்டியானவரும், 'ஜெயங்கொண்ட ஆண்பிள்ளை' என்று அழைக்கப்படும் பூரணமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் வீற்றிருக்கும் தேவசிங்காசனம் அதுவே (வெளி. 3 : 21 ; எரே. 3 : 17). எழுத்தின்படியான எருசலேமின் மதில், பலவித எதிர்ப்புகள், நிந்தைகள் இவற்றின் மத்தியில் அற்பமான ஆரம்பமுள்ளதாய், எளிமையான விதத்தில் கட்டப்பட்டது. ஆவிக்குரிய எருசலேமாகக் கட்டப்பட்டுவருகிற நாமும், இப்பூமியில் பலவித பாடுகள், வேதனைகள் ஆகியவற்றின் மத்தியில் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் சுதந்தரிக்கப்போகும் நித்திய நகரமாகிய புதிய எருசலேமின் மதிலோ, வச்சிரக்கல்லால் கட்டப்பட்டதாய் ஜொலித்துக்கொண்டிருக்கும்! அவ்வாறே, நெகேமியாவின் காலத்தில் அலங்கத்திலிருந்த வாசல்கள், அற்பமான, எளிய பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை குறிக்கும் நற்பண்புகளில் பூரணமாக்கப்பட்டவர்களாய், நாம் சுதந்தரிக்கப்போகும் நித்தியத்திலுள்ள புதிய எருசலேமின் வாசல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்தாகப் பிரகாசிக்கும். இப்பூமியில் ஒரு உண்மையான கிறிஸ்தவனில் தேவன் செய்கிற வேலைகளும், அவன் உருவாக்கப்படும் விதங்களும் உலகத்தாரின் பார்வையில் பைத்தியமாகவும் அற்பமாகவும் மதிப்பற்றவையாகவும் தோன்றினும், பரலோகத்தின் பார்வையில் அவை விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும், முத்துக்களைப்போலவும் மிகவும் விலையேறப்பெற்றவையாய் மதிப்பிடப்படுகின்றன. ஸ்தேவான் கிறிஸ்துவினிமித்தம் கல்லெறியப்பட்டுப் பரிதாபமாய் மாண்டபோது, உலகம் அதை அவனுடைய மதியீனம் என்றே கணித்திருக்கும். என்றாலும், பரலோகமோ அவனை ஒரு விலையேறப்பெற்ற இரத்தினக் கல்லாகக் கண்டது! சற்று நேரத்துக்குள் பரலோகத்திற்கு வரவிருந்த அவனை வரவேற்கும்படியாக, அவனைக் கனப்படுத்தும் வகையில், மனுஷகுமாரன்தாமே பிதாவின் வலதுபாரிசத்தில் எழுந்து நின்ற காட்சி நமக்கு எவ்வளவு பரவசமூட்டுகின்றது ! (அப். 7 : 56).

கம்யூனிஸ தேசம் ஒன்றில், கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்த நாற்பது கிறிஸ்தவர்கள் உறைந்த தண்ணீருள்ள ஒரு குளத்தில் நிறுத்திக் கொல்லப்படும்படியாகக் கொண்டுசெல்லப்பட்டனர். அது ஒரு கடுங்குளிர் காலமாயிருந்தது. அவர்களைக் காவல்புரியும் அதிகாரி, குளக்கரையில் தன் இருக்கையில் அமர்ந்து, மரித்துக்கொண்டிருந்தவர்களின் பட்டியலைப் பதிவுசெய்துகொண்டிருந்தான். நாற்பது பேரும் சரியான வஸ்திரமின்றி, ஒவ்வொருவராகக் குளத்தினுள் நிறுத்தப்பட்டு, கடுங்குளிரினால் தாக்கப்பட்டு மரித்துக்கொண்டிருந்தனர். அக்குளத்தைச் சுற்றிலும் அநேகர் சூழ்ந்து நின்று, இக்குரூரக் காட்சியைக் கண்டு களித்துக்கொண்டிருந்தனர். இந்த அதிகாரியோ ஒரு நாஸ்திகன். அக்கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் மரித்தபோது, மேலேயிருந்து ஒவ்வொரு கிரீடம் அவர்கள் தலையின் மேல் வந்து அமருவதாக அவன் கண்டு வியப்பில் ஆழ்ந்தான். இவ்விதமாக முப்பத்தொன்பது கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சிகளாக மாண்டனர். நாற்பதாவது நபர் அக்குளத்தினுள் இறங்கியபோது, அவருக்குரிய கிரீடம் மேலேயிருந்து இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தது. சற்று நேரம் இவ்வாறு நடந்த பின், கடைசியாக அக்கிரீடம் மேலே சென்றுவிட்டது. இக்காட்சியைக் கண்டு அந்த அதிகாரி வியந்துகொண்டிருக்கையில், அந்நபர் குளிர் தாங்க முடியவில்லை என்று கூறி, தான் கிறிஸ்துவை மறுதலிப்பதாகத் தெரிவித்துவிட்டு, குளத்தினின்று வெளியே வந்து, உயிர் தப்பினான். இப்போது காரியத்தை விளங்கிக்கொண்ட அந்த நாஸ்திகனான அதிகாரி, தான் ஒரு கிறிஸ்தவன் என்று அனைவர் முன்னிலையிலும் வெளியரங்கமாகத் தெரிவித்தான். குழுமியிருந்த அனைவரும் அவனுடைய திடீர் மாற்றத்தைக் கண்டு வியந்தனர். தன் கண்களுக்கு முன்பாக முப்பத்தொன்பது பேர் பரிதாபமாக மாண்டதைக் கண்டுகொண்டிருந்த அவன் இப்படித் தெரிவித்தது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவர்கள் அவனுக்குச் சம்பவிக்கப்போகிறதை எண்ணிக் கலங்கினர். அந்த அதிகாரிக்கும் அதே தண்டனை விதிக்கப்பட்டது. அவனோ, தான் சற்றுமுன் கண்டுகொண்டிருந்த காட்சியை அவர்களுக்குத் தெரிவித்து, 'நாற்பதாவது நபர் இழந்த கிரீடத்தை நான் பெற்றுக்கொள்ளப்போகிறேன்' என்று கூறிய வண்ணம் குளத்தினுள் இறங்கினான். சில நிமிடங்களுக்குள் அவன் அக்கிரீடத்தைச் சொந்தமாக்கிக்கொண்டவனாய் வீர மரணம் எய்தினான்! "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" என்று திருவசனம் கூறுகிறது (வெளி. 3:11). உலகின் பார்வையில் இத்தகைய மரணம் மதியீனமானதாகத் தோன்றினும், பரலோகத்தின் பார்வையில் அவர்களே விலையேறப்பெற்றவர்களாயினர்! அவ்வாறே நாம் கிறிஸ்துவினிமித்தம் அனுபவிக்கிற அனைத்துப் பாடுகளும்

தாழ்வுகளும் நமக்கு நித்திய கன மகிமையை உண்டாக்குகின்றன. பாடுகளின் மத்தியில் அவர்தம் விலையேறப்பெற்ற சுபாவங்களை நாம் சொந்தமாக்கிக்கொள்வோமாகில், பரலோகத்தில் நாம் விலையுயர்ந்த கல்லைப் போல் என்றென்றும் பிரகாசிப்போம்! "சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்தி பாரமாக்கி, உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல்களை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (ஏசாயா 54 : 11, 12).

**புதிய எருசலேமின் மதில்:**

பெரிதும் உயரமுமாயிருந்த புதிய எருசலேமின் மதிலானது (வெளி. 21 : 12), இப்பூமியில் ஜீவித்த நாட்களில் தேவஜனங்களுக்காக ஜெபத்தில் போராடுகிறவர்களாயிருந்த தேவ ஊழியர்களைக் குறிக்கிறது. சபையைப் பூரண இரட்சிப்புக்கு வழிநடத்தும்படியாக இவர்கள் ஜெபத்தில் தங்கள் ஜீவனைப் பானபலியாக வார்த்திருக்கிறார்கள் (ஏசாயா 62 : 6). இவர்கள் தங்களுடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டதுடன், மற்றவர்களும் சத்தியத்தில் காக்கப்படுவதற்கு உறுதுணையாக, அவர் களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஒரு மதிலைப் போல இருந்தி ருக்கின்றனர். தாவீதின் மனுஷர் தாவீதோடு வனாந்தரத்தில் தங்கியிருந்த நாட்களில், அவர்கள் நாபாலின் மனுஷருக்குப் பாதுகாப்பான அரணாயி ருந்தார்கள். இதனை நாபாலின் வேலைக்காரர், "நாங்கள் ... அவர்களி டத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள்" என்று நன்றியோடு குறிப்பிடுகின்றனர் (I சாமு. 25 : 16). அவ்வாறே, புதிய ஏற்பாட்டுச் சபையின் தேவ ஊழியர்கள் இப்பூமியில் வாழ்ந்த காலத்தில் தாங்கள் கர்த்தரோடு வாசம்பண்ணி னதுடன், தங்களிடத்தில் ஐக்கியங்கொண்டவர்களுக்கும் மிகவும் உதவி யாயிருந்து, அவர்களது இன்ப துன்ப நேரங்களில் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழிப்புடன் ஜெபத்தில் போராடி, அவர்களைப் பாதுகாத்துவந்திருக்கின்றனர்.

புதிய எருசலேமின் மதிலின் அளவு நூற்று நாற்பத்து நான்கு முழமாயிருந்தது (வெளி. 21 : 17). இந்த அளவு, அதின் உயரத்தையோ சுற்றளவையோ அல்ல, அதின் அகலத்தை அல்லது கனத்தையே குறிக்கிறது. ஏனெனில், பன்னீராயிரம் ஸ்தாதி உயரமும் நீளமும் அகலமும் உள்ள ஒரு நகரத்திற்கு நூற்று நாற்பத்து நான்கு முழ உயரமோ, சுற்றளவோ உள்ள ஒரு சிறிய மதில் இருக்க முடியாது.

மதிலின் கனம், அதின் பெலத்தைக் காட்டுகிறது. தேவஜனங்களைப் பாதுகாத்து, அவர்களைப் பூரணராக நிறுத்தும் ஊழியத்தைச் செய்கிற தேவ ஊழியர்கள், உள்ளான மனுஷனில் மிகுந்த பெலமுள்ளவர் களாயிருக்க வேண்டியது அவசியமாகும். அவர்கள் தங்களுக்கு வருகிற போராட்டங்களில் உறுதியாய் நிற்பதுமன்றி, தங்களிடத்தில் ஒப்பு விக்கப்பட்ட ஆத்துமாக்களையும் சத்தியத்தில் ஸ்திரப்படுத்த வேண்டிய வர்களாயிருப்பதால், மிகுந்த பெலனுள்ள ஒரு மதில் போல காணப்பட வேண்டும். இல்லையேல், அவர்களும் அவர்களைச் சார்ந்துநிற்கிற சபையாரும் நஷ்டமடைய நேரிடும்.

புதிய எருசலேமின் மதில் வச்சிரக் கல்லால் (Jasper) கட்டப்பட்டி ருந்தது (வெளி. 21 : 18). இந்தக் கல் யஸ்பி என்றும் அழைக்கப்படுகிறது. பிரதான ஆசாரியனுடைய மார்ப்பதக்கத்திலிருந்த விலையேறப்பெற்ற கற்களின் மேல் இஸ்ரவேலின் கோத்திரங்களின் பெயர்கள், அவர்கள் வனாந்தரப் பிரயாணத்தின்போது பாளயமிறங்கியிருந்த வரிசையின்படியே பதிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் நப்தலியின் பெயர் யஸ்பி என்னும் கல்லின் மீது முத்திரை வெட்டாகப் பதிக்கப்பட்டிருந்தது (யாத். 28 : 20, 21; எண். 2 : 29). நப்தலி என்பதற்கு, 'போராடி மேற்கொண்டேன்' என்று பொருள் (ஆதி. 30 : 8). பாவத்தோடும் தேவநீதிக்கு அந்நியமான யாதொன்றோடும் இணங்கிப்போகாமல், அவைகளை எதிர்த்துநிற்கிற ஒரு போராட்டத்தின் ஆவி, தேவ ஊழியருக்கு மட்டுமல்ல, புதிய எருச லேமைச் சுதந்தரிக்க விரும்புகிற ஒவ்வொருவருக்கும் தேவை. அப்படிப் பட்டவர்கள் நீரோட்டத்தை எதிர்த்துச் செல்லும் உயிருள்ள ஒரு மீனைப் போல, தங்கள் ஜீவியத்தில் பாவம், உலகம், மாம்சம் போன்றவற்றால் வருகிற சோதனைகளை எதிர்த்து முன்செல்லுவார்கள். உலக ஜனங்களோ, நீரோட்டத்தோடு அடித்துச் செல்லப்படும் உயிரற்ற ஒரு மீனைப் போல, அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவர்களாயிருந்து, பாவங்களை எதிர்க்கப் பெலனின்றி, பாவிகளோடு ஒத்துப்போய், முடிவில், தங்களுக்கு நேரிடுகிற சோதனைகளில் அமிழ்ந்துபோவார்கள். பரிசுத்தவான்களின் ஜீவியங்களில், பாவத்திற்கு விரோதமான ஒரு கெர்ச்சனையும் சவாலும் உண்டாயிருக்கும்! சீயோன் மலையின் மேல் நிற்கிறவர்களின் மத்தியில் பலத்த இடிமுழக்கம் போன்ற சத்தம் உண்டாயிருந்தது என நாம் வாசிக்கிறோம் (வெளி. 14 : 2). இது, தேவ ஊழியர்கள் தாங்கள் இப்பூமியில் ஜீவித்த நாட்களில் தங்களுக்கு எதிராக வந்த பாவத்திற்கு விரோதமாக எழுப்பிய வீரமுழக்கமாகும் ! இப்படிப்பட்டவர்களே புதிய எருசலேமின் மதிலாக மாற இயலும். புதிய எருசலேமின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது மாத்திரமல்ல, அந்நகரம் முழுவதும் பளிங்கினொளி

யுள்ள வச்சிரக்கல்லைப் போல பிரகாசித்தது என்றும் அப். யோவான் எழுதுகிறார் (வெளி. 21 : 11). இது, புதிய எருசலேமைச் சுதந்தரிக்கப்போகிற தேவபிள்ளைகள் ஒவ்வொருவருங்கூட 'பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக எதிர்த்து நிற்க' வேண்டும் (எபி. 12 : 4) என்பதையும், மறைவான பாவங்கள் ஏதுமின்றி தங்கள் ஜீவியத்தைப் பளிங்குபோல் துலாம்பரமானதாக - பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளதாக - காத்துக்கொள்ள வேண்டும் (I தெச. 3 : 13) என்பதையும் வெளிப்படுத்துகிறது.

புதிய எருசலேமின் மதிலின் அஸ்திபாரங்களில் கர்த்தருடைய அப்போஸ்தலரின் நாமங்கள் எழுதப்பட்டிருந்தன (வெளி. 21 : 14). பன்னிரு அஸ்திபாரங்களும், வச்சிரக்கல், இந்திரநீலம், சந்திரகாந்தம், மரகதம், கோமேதகம், பதுமராகம், சுவர்ணரத்தினம், படிகப்பச்சை, புஷ்பராகம், வைடூரியம், சுநீரம், சுகந்தி ஆகிய வெவ்வேறு விலையேறப்பெற்ற கற்களால் உண்டாயிருந்தன. அஸ்திபாரக் கற்கள் அனைத்தும் கிறிஸ்துவின் அப்போஸ்தலரைக் குறித்தாலும், அவை அனைத்தும் விலையேறப்பெற்ற ஒரே கல்லினால் உண்டாக்கப்படாமல், ஒவ்வொன்றும் வெவ்வேறு இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்டு, வெவ்வேறு விதமாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அப்போஸ்தலர் எல்லாரும் கிறிஸ்துவின் திவ்ய சுபாவங்கள் அனைத்திலும் பூரணத்தை அடைந்திருந்தாலும், அவரவர் கடந்துசென்ற பாதைகளும், கிறிஸ்துவுக்காகப் பட்ட பாடுகளும் வித்தியாசமானவையாயிருந்து, ஒவ்வொருவரையும் தனித்தனியே வேறுபட்ட இரத்தினக்கற்களாகத் துலங்கச் செய்திருக்கின்றன. பூரணமாக்கப்பட்ட விசுவாசிகள் புதிய எருசலேமையும், அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர்கள் சீயோனையும் சுதந்தரித்துக் கொண்டாலும், அவர்கள் இப்பூமியில் ஜீவித்த நாட்களில் கர்த்தருக்காகப் பட்ட பிரயாசங்களுக்கேற்ப அவர்களுடைய பிரதிபலன்களில் வித்தியாசம் இருக்கும். ஏனெனில், "அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்றல்லவா கர்த்தர் உரைத்திருக்கிறார்! (வெளி. 22 : 12).

### பல்வேறு பிரதிபலன்கள்:

கர்த்தராகிய இயேசு கூறிய உவமை ஒன்றில் வெவ்வேறான பிரதிபலன்களைப் பற்றிய உண்மை தெளிவாக்கப்படுகிறது. பிரபுவாகிய ஒருவன் ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவரும்படி, தூர தேசத்துக்குப் போகப் புறப்பட்டான். அவன் தன் ஊழியக்காரரில் பத்துப் பேரை அழைத்து, ஒவ்வொருவருக்கும் ஒரு ராத்தல் திரவியங்கொடுத்து,

"நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம்பண்ணுங்கள்" என்று சொல்லிப் போனான். பத்துப் பேரும் இந்த ஒரே கட்டளையையே பெற்றிருந்தனர். முதல்வன் தனக்களிக்கப்பட்டிருந்த ஒரு ராத்தலைக் கொண்டு பத்து ராத்தலும், இரண்டாமவன் ஒரு ராத்தலைக் கொண்டு ஐந்து ராத்தலும் சம்பாதித்தனர். மூன்றாமவனோ, தனக்குக் கொடுக்கப் பட்டிருந்த ஒரு ராத்தலை ஒரு சீலையிலே வைத்திருந்தான். எஜமான் திரும்பிவந்து அவர்களிடம் கணக்கு கேட்டபோது, அவரவர் தங்கள் வியாபாரக் கணக்குகளை ஒப்புவித்தனர். ஒரு ராத்தலைக் கொண்டு பத்து ராத்தல் சம்பாதித்தவன் பத்து பட்டணங்களுக்கும், ஒரு ராத்தலைக் கொண்டு ஐந்து ராத்தல் சம்பாதித்தவன் ஐந்து பட்டணங்களுக்கும் அதிகாரிகளாக்கப்பட்டனர் (லூக்கா 19 : 17, 19). இதினின்று நாம் விளங்கிக் கொள்வது யாது? தேவன் நம் யாவருக்கும் வித்தியாசமின்றி ஒரே ஒரு ஜீவியத்தைக் கொடுத்திருக்கிறார். இதைப் பெற்ற நாம், நமக்கு நியமிக்கப் பட்டிருக்கும் கால அளவில் கர்த்தருக்கென்று உற்சாகமாகக் கிரியை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். எல்லாருக்கும் வாழ்க்கை ஒன்றே. இந்தக் குறுகிய கால வாழ்க்கை சீக்கிரமாகக் கடந்து போய்விடும்; ஆனால் அதில் நாம் கர்த்தருக்காகச் செய்கிறவைகளே என்றென்றும் நிலைநிற்கும். "அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்" என்று பரலோகம் பறைசாற்றுகிறது (வெளி. 14 : 13). ஆம்! இவ்வாழ்க்கை யில் நாம் கர்த்தருக்காகப் படும் பிரயாசங்களுக்கேற்ப நித்தியத்தில் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வோம். தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு ராத்தலைச் சீலையிலே வைத்திருந்தவனைப் போல, தங்கள் வாழ்க் கையைப் பயனற்றதாகவே கழித்துவிடுவோர் அநேகர்! கிறிஸ்துவுக்குள் ஜீவிப்போர் மாத்திரமே மெய்யான பயனுள்ளதொரு வாழ்க்கை வாழ இயலும். தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒரே ராத்தலைக் கொண்டு பத்து ராத்தல் சம்பாதித்தவனுக்கும், ஐந்து ராத்தல் சம்பாதித்தவனுக்கும் பிரதிபலன்களில் வித்தியாசம் இருந்தது. அவ்வாறே நம்மில் அவரவர் கர்த்தருக்காகப் படும் பாடுகளுக்கேற்ற மகிமை அவரவருக்கு உண்டு (I கொரி. 15 : 41, 42). நல்ல சமாரியன் சத்திரக்காரனிடம், "அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன்" என்று கூறுவது இப்பிரதிபலன்களைக் குறித்தேயாகும் (லூக்கா 10 : 35).

### கூலி ஒன்றே!

பிரதிபலன்களைப் பற்றிய விஷயம் இவ்வாறிருக்க, திராட்சத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களைப் பற்றிய ஒரு உவமையில் கர்த்தராகிய இயேசு, அவர்களுக்கு நாளொன்றுக்கு ஒரு

பணம் கூலி பேசப்பட்டதாகக் குறிப்பிடுகிறார் (மத். 20 : 2). அந்த நாளின் முடிவிலே, பிந்தி வந்தவர்களுக்கும் முந்தி வந்தவர்களுக்கும் ஒரே கூலி கொடுக்கப்பட்டது. “பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப் பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, ... அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள்” (வச. 9, 10). இது, கிருபையின் காலத்தில் ஜீவிக்கும் நமக்குத் தேவன் ஆயத்தமாக்கிவருகிற ஒரே வாசஸ்தலத்தைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு, “ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்” என்று தம் சீஷரிடம் கூறினார் (யோவான் 14 : 2). அது, நம்முடைய நித்திய வாசஸ்தலமாகிய புதிய எருசலேமாகும். நமக்கு நியமிக்கப்பட்டுள்ள கூலியில் வித்தியாசம் இல்லை; ஆனால் பிரதி பலன்களில் வித்தியாசம் உண்டு. தங்கள் வாழ்நாளெல்லாம் ஆட்டுக் குட்டியானவரைப் பின்பற்றினவர்களாய், பல வருடங்களாகக் கர்த்தரின் சேவையில் தங்கள் ஜீவனை ஊற்றி, வெற்றிகரமாக மகிமையில் பிரவேசிக்கிறவர்களுக்கும், சில நாட்களே ஊழியம் செய்யத் தருணங் கிடைத்து, அதை உண்மையாய்ச் செய்து நிறைவேற்றி, வெற்றியோடு இலக்கை அடைகிறவர்களுக்கும் கூலி ஒன்றே ! ஆட்டுக்குட்டியானவ ரோடுகூட அவர்கள் சீயோனில் ஆளுவார்கள். இந்தச் சீயோன் நித்தியத் திலுள்ள மிக உன்னதமான இடமாகும். அவ்வாறே, ஆதி நூற்றாண்டில் ஜீவித்த பரிசுத்தவான்களுக்கும், கிருபையின் காலத்தின் கடைமுனையில் ஜீவித்துக்கொண்டிருக்கும் நமக்கும் நியமிக்கப்பட்டுள்ள நித்திய வாசஸ்தலம் ஒன்றே. தங்கள் ஜீவியத்தின் ஆரம்பத்திலேயே இரட்சிக்கப் பட்டு, முடிவு வரை அதைப் பாதுகாத்து, பூரணமாக்கப்பட்டவர்களாய் ஜெயத்தோடு ஓடி முடித்தவர்களுக்கும், தங்கள் ஜீவிய காலத்தின் பிந்தின நாட்களில் இரட்சிக்கப்பட்டு, தேவபயத்துடன் அதைப் பூரணப்படுத்தி, தங்கள் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கும் கூலி ஒன்றே. ஜெயங்கொள்ளுகிறவர்கள் அனைவரும் ஒரே சிங்காசனத்தை - ஒரே பந்தயப் பொருளை - ஒரே புதிய எருசலேமைச் சுதந்தரித்துக்கொள்ளு வார்கள் (வெளி. 12 : 5). ஆனால் அவர்களுக்குரிய பிரதிபலன்களிலும் மகிமையிலும் வித்தியாசம் உண்டு., “இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; ... அவர் அளிக்கும் பலன் (reward) அவ ரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் (recompense - marg.) அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது” (ஏசாயா 40 : 10). “இதோ, அவர் அருளும் பலன் (reward) அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் (recompense - marg.) அவர் முன்பாகவும் வருகிறது” (ஏசாயா 62 : 11). இவ்விரு வசனங்களும் மலையாள வேதாகமத்தில், அவர் கூலியோடும் பிரதிபலனோடும் வருகிறார் என தெளிவாக மொழி

பெயர்க்கப்பட்டுள்ளன. இதிலிருந்து, கூலியும் பிரதிபலனும் ஒன்றல்ல என்பது தெளிவாகிறது. எனவே பூரணமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குரிய கூலி ஒன்றே! ஆனால் பிரதிபலன்கள் பல்வேறு !

**புதிய எருசலேமின் வாசல்கள்:**

வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்குக் கர்த்தருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் என நாம் வாசிக்கிறோம் (வெளி. 22 : 14). இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாசல்கள் புதிய எருசலேமின் வாசல்களாகும். புதிய எருசலேமின் வாசல்கள் தேவநீதியைக் குறிக்கின்றன. "நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; ... கர்த்தரின் வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்" என சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 118 : 19, 20). "சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" (ஏசாயா 26 : 2) என்று கூறப்பட்டிருப்பதால், பூரணமான சத்தியத்தைக் கைக்கொண்டு, தேவநீதியில் பூரணமடைந்தவர்கள் மாத்திரமே இவ்வாசல்களின் வழியாகப் புதிய எருசலேமில் பிரவேசிக்க இயலும்.

கர்த்தராகிய இயேசு, "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" என்று கூறுகிறார் (யோவான் 10 : 9). "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4 : 12). பரலோகத்தில் பிரவேசிப்பதற்கான ஒரே வழி கர்த்தராகிய இயேசுவே. நாம் பரலோகத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் (புதிய எருசலேம்) பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார் (எபி. 10 : 19). எனவே புதிய எருசலேமின் வாசல்கள், கிறிஸ்துவின் மூலமாக நாம் அடைந்துகொள்கிற தேவநீதியைக் குறிக்கின்றன.

**முத்து வாசல்கள்:**

நாம் தேவநீதியை அடைந்து, அதில் பூரணமாக்கப்படும்படி நம்முடைய சுயநீதிக்கு முற்றிலும் மரிக்க வேண்டும். நம்முடைய சுயநீதிக்கு மரித்தல் என்பது, வேதனையளிக்கும் ஓர் அனுபவமே. புதிய

எருசலேமின் வாசல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்தாயிருந்தது என நாம் வாசிக்கிறோம் (வெளி. 21 : 21). ஒரு விலையுயர்ந்த முத்து எவ்விதம் உண்டாகிறது? கடலினுள் கிடக்கும் முத்துச் சிப்பியானது, கடலின் மேல்மட்டத்துக்கு வந்து, தன் வாயைத் திறந்திருக்கும். அதனுள் ஒரு மழைத் துளியோ அல்லது ஏதேனும் சிறிதானதொரு அந்நிய வஸ்துவோ பிரவேசிக்குமாயின், உடனடியாக அது தன்னை இறுக மூடிக்கொண்டு, கடலின் ஆழத்திற்குச் சென்றுவிடும். சிப்பியினுள் சென்ற அந்த அந்நிய வஸ்து, அதனுள் உள்ள புழுவை அதிகமாக உறுத்திக் கொண்டேயிருக்கும். இதினிமித்தம் அப்புழுவினின்று சுரக்கும் திரவமே நாளடைவில் ஒரு விலையேறப்பெற்ற முத்தாக உருப்பெறுகிறது. சிப்பி யினுள் உருவாக்கப்படும் விலையேறப்பெற்ற அந்த முத்தினிமித்தம் முடிவில் அப்புழு மாண்டுபோகிறது! அவ்வாறே தேவன் நம்மில் தம்முடைய திவ்ய சுபாவங்களை உருவாக்கி, தேவநீதியால் நம்மை அலங்கரிக்கும்படி, நம்முடைய சுயநீதிக்கு நம்மை மரிக்கச் செய்யும் அநேக வேதனையளிக்கும் அனுபவங்களினூடே நம்மை நடத்திச் செல்கிறார். அப்புழுவானது பிறர் அறியாவண்ணம், அனைத்து வேதனை களையும் தனிமையாக அச்சிப்பியினுள்ளேயே சகித்துக்கொண்டு அமர்ந்திருப்பதால் ஒரு விலையேறப்பெற்ற முத்து உண்டாவது போல, தேவன் 'தனிமையில் நம்மை உருவாக்கும்' பாதைகளினூடே பொறுமை யாகக் கடந்து செல்வதின் மூலமாக நாம் விலையேறப்பெற்றவர் களாகிறோம். அவர் தம் பிள்ளைகளின் ஜீவியத்தில் அனுமதிக்கிற நெருக்கமான சந்தர்ப்பங்கள் யாவும், அவர்களை விலையேறப்பெற்ற சுபாவங்களுள்ளவர்களாகத் துலங்கச் செய்யும்படி, அவர்களுடைய நன்மைக்காகவே அவரால் அனுப்பப்படும் ஈவுகளாகும். எனவே அப்படிப்பட்ட பாதைகளை நாம் 'வேண்டாம்' என்று புறக்கணியாமல், அவ்வேலை நம்மில் நிறைவுறும்வரை அவர் கரத்தில் அமர்ந்திருப் போமாக. "தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது. அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனமாயிருக்கக்கடவன்" (புல. 3 : 27, 28); "தமக்குக் காத்திருக்கிற வர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்" (வச. 25).

அருமையானவர்களே, நெகேமியா கட்டிய எருசலேமின் அலங் கத்தின் பன்னிரண்டு வாசல்கள் குறிக்கும் நற்பண்புகள் அனைத்தும் நம்மில் உருவாக்கப்படும்படி நாம் செலுத்த வேண்டிய கிரயம் ஒன்று உண்டு. அதுவே நம்மை நாம் பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்தலாகும். அவ்விதம் அந்த நற்பண்புகள் நம்மில் உருவாக்கப்பட்ட பின் நாம் விலையேறப்பெற்ற முத்துக்களாகத் துலங்குவோம். அவை அனைத்தும்

க்ஷணப்பொழுதில் நம்மில் உண்டாகிவிடுகிறதில்லை. அவற்றை நம்மில் உருவாக்கும்படி தேவன் நம் ஜீவிய காலம் முழுவதிலும் நமக்குள் ஒரு நிரந்தரமான வேலையைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது. நாம் 'அவருடைய சம்பத்தாக' மாற்றப்பட்ட பின்னர், அவர் வந்து நம்மைத் தம்மண்டை சேர்த்துக்கொள்ளுவார் (மல். 3 : 17). நம்மை அவர் 'என் சம்பத்து' (my jewels) என்று உரிமைபாராட்டுவார்! அல்லேலூயா ! 'சம்பத்து' என்பது ஆங்கில வேதாகமத்தில் ஓரக்குறிப்பில் 'விசேஷமான பொக்கிஷம்' (special treasure) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் அவருடைய விசேஷமான, விலையேறப்பெற்ற பொக்கிஷமாக மாற்றப்பட்ட பின் இனி வேதனை இல்லை! துன்பம், துயரம் யாவும் மறக்கப் பட்டுப்போம்! கர்த்தர்தாமே நம் கண்ணீர் யாவையும் துடைப்பார்! புதிய எருசலேமில் நாம் என்றென்றும் ஆனந்தமாய் நம் மணவாளனோடு அரசாளுவோம்!

இன்னும் கொஞ்சக் காலத்திற்குள் நாம் அடியெடுத்து வைக்கப் போகிற புதிய எருசலேம் பட்டணத்தைப் பற்றி வேதாகமம் நல்கும் ஒருசில தகவல்கள் நம்மை எவ்வளவு பரவசமடையச் செய்கின்றன ! பரலோக மகிமையை விவரிக்க, பூலோக மொழிகளில் தகுந்த வார்த்தை களே இல்லை ! புதிய எருசலேமின் உண்மையான பிரபையையும் மகிமையையும் சிறப்பையும் இப்பூமியில் வைத்து உள்ளபடியே விளங்கிக்கொள்வது அரிது. அப். யோவான் தன் கண்கூடாகக் கண்ட அந்நகரத்தின் சொல்லொண்ணா மகிமையை வருணிக்க வார்த்தை களின்றி, இப்பூமியிலுள்ள சில விலையேறப்பெற்ற கற்களோடு அதை ஒப்பிட்டு, "அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது" என்று அதை விவரிக்கப் பிரயாசப்படுகிறார் (வெளி. 21 : 11). ஆனால் அது உண்மையில் இவ்வருணனையில் உள்ளதைக் காட்டிலும், எத்தனையோ மடங்கு மகிமைப் பிரகாசமுள்ளதாயிருக்கும் ! வெகு விரைவில் நாம் நேராகச் சென்று அந்த அற்புத நகரத்தைத் தரிசிப்போம்; அதின் பொற்தள வீதியில் 'நம் நேசரோடு' உலாவுவோம்; அதின் இன்பங் களைச் சதாகாலமும் அனுபவிப்போம். சாலொமோனின் நாட்களில் எருசலேமையும், அவனது அரமனையையும் நேரில் சென்று கண்ட சேபாவின் ராஜஸ்திரீ ஆச்சரியத்தால் பிரமைகொண்டு, "நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன்; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று,

உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள். உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உம்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத் திரிக்கப்படுவாராக" என்றாள் (I இராஜா. 10 : 7 - 9). அவ்வாறே நாமும் புதிய எருசலேமின் சொல்லொண்ணா மகிமையை, இருக்கிற வண்ண மாகவே கண்கூடாகக் காணும் நாளில் மகிழ்ச்சியால் ஆனந்தப் பரவச மடைவோம் ! சாலொமோனிலும் பெரியவரும், சமாதானப்பிரபுவுமாகிய நம்முடைய கர்த்தர் தேவசிங்காசனத்தில் பிதாவோடுகூட வீற்றிருக்க, நாம் அவரோடிருந்து, அவரது அநந்த ஞானத்தையும், அவருடைய அளவற்ற மகிமையின் ஐசுவரியங்களையும் சதாகாலமும் அறிந்து கொண்டேயிருப்போம். சீயோனின் உன்னத சிகரத்தில் அவரோடு வாசம் பண்ணும் அவரது ஊழியர்கள், எப்போதும் பிதாவின் முகத்தைத் தரிசிக்கிறவர்களாய், அவரைச் சேவிப்பார்கள். அந்த நித்திய ராஜ்யத் திற்குத் தங்களை ஆயத்தமாக்கிக்கொண்ட தேவஜனங்கள் பாக்கிய வான்களாயிருந்து, என்றென்றும் அவர் சமுகத்தில் களிகூருவார்கள். நித்திய நித்தியமாக நம் கர்த்தரையும், அவரது மகத்துவத்தையும், அவர் நமக்கு ஆயத்தமாக்கியிருக்கிற புதிய எருசலேம், சீயோன் இவற்றின் சிறப்பையும் இன்பங்களையும் நாம் அறிந்துகொண்டேயிருப்பினும், என்றும் அவை நமக்குப் புதுமையாகவும் நூதனமாகவுமே இருக்கும் ! அந்நகரத்திற்கென்று நீசரான நம்மையும் ஆயத்தமாக்கும்படி திருவுளங் கொண்ட ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய அவருக்கே சகல துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக ! ஆமென்.

# முடிவுரை

**'எருசலேமின் அலங்கமும் வாசல்களும்'** என்னும் இந்நூலை வாசித்த நேயரே! உம் ஆவிக்குரிய வாழ்க்கையானது நெகேமியா சென்று பார்வையிட்ட எருசலேமின் அலங்கம் போல முற்றிலும் தகர்க்கப்பட்டதாய், 'மண்மேடு மாத்திரமே மிச்சமாயிருக்கிறது' என்று கூறத்தக்கதான பரிதாப நிலையிலிருக்கிறதா? சீயோனுக்காகவும் எருசலேமுக்காகவும் மகா உக்கிரமான வைராக்கியங்கொண்டிருக்கும் சேனைகளின் கர்த்தர் அதை மீண்டும் கட்டியெழுப்பும்படி தீர்மானங்கொண்டிருக்கிறார்! ஆகவே, "பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்" என்ற விசுவாசத்துடன், "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று கூறிக்கொண்டு, கர்த்தரோடு இசைந்து செயல்படும்படி இந்த நல்ல வேலைக்கு உம் கைகளைத் திடப்படுத்துவீராக (நெகே. 2 : 18, 20).

உற்சாகமடைந்து, அலங்கத்தை மீண்டும் கட்டியெழுப்பத் துவங்கிய யூதா மனிதர் தங்கள் பெலனின்மையையும், தங்கள் வேலைக்கு விரோதமான சத்துருக்களின் ஆரவாரத்தையும், அவர்களின் மறைவான ஆலோசனைகளையும் அறிந்தபோது, இடையில் சற்று கலக்கமடைந்தனர். அப்போது நெகேமியா, "நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்" என்று கூறி, அவர்களைத் திடப்படுத்தினான் (நெகே. 4 : 10, 20). மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவர் சத்துருக்களின் ஆலோசனையை அபத்தமாக்கினார்! (வச. 15). ஆம்! "கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்" (நீதி. 19 : 21) என்ற வசனத்திற்கிணங்க, கர்த்தர் தீர்மானித்திருந்தபடியே நகரம் அதின் மண்மேடுகளின்மேல் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது! (எரே. 30 : 18). தரைமட்டமாகத் தகர்க்கப்பட்டிருந்த நகரம் மீண்டும் தழைத்தோங்கியது!

"மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப் படுவாய்" (எரே. 31 : 4), "கர்த்தராகிய நான் நிர்மூலமான வைகளைக் கட்டுகிறேன் என்று ... உங்களைச் சுற்றிலுமுள்ள மீதியான ஜாதிகள் அறிந்துகொள்வார்கள்; கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன்" (எசே. 36 : 36) என்று வாக்குரைத்தவர் எவ்வளவு உண்மை யுள்ளவர்! பல எதிர்ப்புகளின் மத்தியிலும் எருசலேமின் அலங்கமானது வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்பட்டது! சத்துருக்கள் அதைக் கண்டு மிகவும் முனையற்றுப் போயினர்! அந்தக் கிரியை தேவனால் கைகூடி வந்ததென்று அவர்கள் அறிந்துகொண்டனர் (நெகே. 6 : 15, 16). சர்வவல்ல வரின் அநாதி தீர்மானத்தின்படியே அவரால் உம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் வெற்றிகரமாகக் கட்டி முடிக்கப்படும் என்ற அசையாத விசுவாசத்துடன் நீர் அதை இருக்கிற வண்ணமாகவே அவர் கரங்களில் ஒப்புக்கொடுத்து, அவ ருடன் இசைந்து செயல்படுவீராக. உம்மில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதைப் பூரணமாய்ச் செய்து முடிக்குமுன் இளைப்பாறமாட்டார். "தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்" (பிர. 3 : 14). சகலத்தையும் அதின தின் காலத்தில் நேர்த்தியாகச் செய்கிறவர், தம் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்டதைத் தம்முடைய அநந்த ஞானத் தின்படியே தம் கிருபையினால் சிறப்பாகச் செய்து முடிப்பார். அல்லேலூயா!

**"பூர்வநாட்களில் நீங்கள் இருந்த நிலைமையில் நான் உங்களை ஸ்தாபித்து, உங்கள் முந்தின சீரைப்பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச்செய்வேன்; அதினால் நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்"** (எசே. 36 : 11).

# எமது வெளியீடுகள்


| A. உபதேச புத்தகங்கள் | வெளியீடு எண் |
|---|---|
| 1 தேவன், தேவ தூதர்கள், மனுஷன் | A 1 |
| 2 மீட்பு, மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல் | A 2 |
| 3 ஞானஸ்நானம் பற்றிய உபதேசம் | A 3 |
| 4 தெய்வீக சுகத்தைப் பற்றிய உபதேசம் | A 4 |
| 5 லௌகீகம் பற்றிய உபதேசம் | A 5 |
| 6 பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பற்றிய உபதேசம் | A 6 |
| 7 புதிய ஏற்பாட்டு ஊழியம் (பகுதி I ) | A 7 |
| 8 பூரண பரிசுத்தமாகுதல் (வினா - விடை) | A 8 |
| 9 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (வினா - விடை) | A 9 |
| 12 ஞானஸ்நானம் | A12 |
| 13 பரிசுத்த ஆவியின் அபிஷேகம் | A13 |
| 14 தெய்வீக சுகத்தின் தூதுகள் | A14 |
| 15 புதிய ஏற்பாட்டு ஊழியம் (பகுதி II ) | A15 |
| **B. விளக்கவுரை புத்தகங்கள்** | |
| 1 அப்போஸ்தலருடைய நடபடிகள் - விளக்கவுரை | B 1 |
| 2 எபேசிய நிருபத்தின் விளக்கவுரை | B 2 |
| **C. இதர புத்தகங்கள்** | |
| 1 மனுஷனின் நித்திய வாழ்க்கை | C 1 |
| 2 ஆசரிப்புக் கூடாரம் | C 2 |
| 3 ஜெபம் | C 3 |
| 4 வேதத்தின் மறைபொருள் விளக்கங்கள் சில | C 4 |
| 5 பிதாக்களின் கல்லறைகள் | C 5 |
| 6 சோதனை ஜீவகிரீடம் பெற இன்றியமையாதது | C 6 |
| 7 பாஸ்டர் பால் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு | C 7 |
| 8 தேவசித்தம் | C 8 |
| 9 கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவும் | C 9 |
| 10 யோசேப்பின் வாழ்க்கை - சிறந்ததோர் மாதிரி! | C10 |
| 11 எருசலேமின் அலங்கமும் வாசல்களும் | C11 |
| 12 மன்னித்தல் - பரலோகத்தின் ஒரு முன்சுவை! | C12 |
| 13 மனுஷீகப் பெருமையும் தெய்வீகத் தாழ்மையும் | C13 |
| 14 தாழ்மையும் தூய்மையும் (ரூத்தின் சரித்திரம்) | C14 |
| 15 தானியேல் - மாசற்றதோர் உத்தமன்! | C15 |
| 16 23-ஆம் சங்கீதத்தின் இனிமை | C16 |
| 17 பூரண வடிவுள்ள சீயோன் | C17 |

அலங்கங்கள் தரைமட்டமாக்கப்பட்டு, வாசல்கள் தீக்கிரையாக்கப்பட்டு, விசாரிப்பாரற்றிருந்த எருசலேம் நகரம், என்றைக்காகிலும் மீண்டும் தழைத்தெழக் கூடுமோ என்று எண்ணத்தக்க நம்பிக்கையற்றநிலையிலேயே பல ஆண்டு களாகப் பாழாய்க் கிடந்தது. சிறைப்பட்டுப்போயிருந்த தேவஜனங்களில் பலரும் நகரத்தின் அவல நிலையினிமித்தம் மனம் நொந்து, ஆங்காங்கே தனித்தனியே தேவனை நோக்கிப் புலம்பிக்கொண்டிருந்தனர். அவர்களது உள்ளக் கதறுதல் தேவசமுகத்தை எட்டிற்று! தேவன் செயல்படும் வேளை வந்தது! உருக்குலைந்த நிலையில் பரிதாப கோலமாகக் காட்சியளித்த அந்நகரத்தை மீண்டும் தழைத் தோங்கச் செய்யும்படி சர்வ வல்லவர் அதன் மேல் மனதிரங்கினார்! பல எதிர்ப்புகளின் மத்தியிலும் நகரம் அதின் மண்மேடுகளின் மேல் வெற்றிகரமாகக் கட்டி யெழுப்பப்பட்டது!

நண்பனே, உன் ஆவிக்குரிய நிலை எவ்வளவு தாழ்ந்துபோயிருப்பினும், நீ தேவனை நோக்கி அவரது இரக்கத்திற்காகக் கெஞ்சுவாயாகில், அதனை மீண்டும் உயிர்ப்பித்து, உன் முந்தின சீரைப் பார்க்கிலும் உனக்கு நற்சீர் உண்டாகச் செய்யும்படி அவர் உன் பட்சத்தில் இருக்கிறார் என்ற நற்செய்தியுடன் இந்நூல் உன்னைத் தேடி வந்திருக்கிறது. "மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்" என்ற வாக்குத்தத்தத்துடன் இந்நூலின் வாயிலாக உன் மீட்பர் உன்னைச் சந்திக்கிறார்!